Qb 4146
M78
115358

T.D.R.C. 767

R.R. 45-4-1878.

45/767

# AGENDA

என்னும்

சுவிசேஷக லுத்தரன் திருச்சபையில்

வழங்கும்

# ஞானமுறைமைகளின்

புஸ்தகம்

Tranquebar.

Printed by J. Nabis, at the Evang. Lutheran Mission Press.

1878.

115358

# அட்டவணை


பக்கம்.

முதலாம் பங்கு.

தேவாராதனை முறைமை — க – உ௱சசு

I. சாதாரண ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்டிகை நாட்களிலும் நடக்கும் பிரதான தேவாராதனையின் முறைமை.

A. பிரசங்கம் பண்ணும் வரையில்

B. பிரசங்கத்திற்குப் பின்

1. சாதாரண ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெரிய பண்டிகைகளின் இரண்டாம் நாளிலும் — ௰சு

2. பண்டிகை நாட்களில் — உச

3. பரிசுத்த இராபோசனம் பரிமாறப்படும் நாட்களில் — உஅ

II. தவசு நாட்களில் செய்யும் ஆராதனை முறைமை — சரு

III. பெரிய வெள்ளிக்கிழமையில் செய்யும் ஆராதனை — ருஉ

IV. ஞாயிற்றுக்கிழமை முதலிய திருநாட்களில் செய்யப்படும் அந்தி ஆராதனை முறைமை.

1. ஞானோபதேசம் விஸ்தரிக்கப்படும் அந்தி ஆராதனை — ரு

2. அந்திப் பிரசங்க ஆராதனை — ருசு

V. ஞாயிற்றுக்கிழமைகளல்லாத மற்ற நாட்களில் செய்யப்படும் ஆராதனை முறைமை — ருசு

VI. அறுப்புக்காக ஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள் — சுஉ

பக்கம்.

முதலாம் பங்கைச் சேர்ந்த அனுபந்தம்.

I. குறிக்கப்பட்ட திருப சுவிசேஷ வாக்கியங்களும் படி வாக்கியங்களும் ௯௰

II. ஆரம்பவாக்கியங்களும், ஆசீர்வாதத்தைக் கூறும்முன் குருவும் சபையாரும் முறைமுறையாய் ஓதுஞ் சுருக்க வேதவாக்கியங்களும்.

A. ஆரம்ப வாக்கியங்களும் தேவ துதியும் ௱௫௰

B. ஆசீர்வாதத்தைக் கூறும்முன் குருவும் சபையாரும் முறைமுறையாய் ஓதுஞ் சுருக்க வேத வாக்கியங்கள் ௱௬௧

III. கொல்லெக்தென்னுஞ் சுருக்க செபங்கள் ௱௬௪

IV. பண்டிகை நாட்களுக்குரிய செபங்கள் ௱௯௫

V. தேவாராதனை துவக்கத்திலும் முடிவிலும் உபதேசியார் செய்யுஞ் செபங்கள் ௨௱௨௯

VI. தவசு சங்கீதங்கள் ௨௱௪௰

இரண்டாம் பங்கு.

திருச்செய்கைகள் முறைமை ௨௱௪௭ – ௩௱௪௪

I. குருப்பட்டங் கொடுக்கும் முறைமை ௨௱௪௯

II. ஒரு சபையின் விண்ணப்பத்தை ஒப்புக் கொடுக்கும் முறைமை ௨௱௫௯

III. ஞானஸ்நான முறைமை.

1. சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை ௨௱௬௧

2. ஒரு பிள்ளைக்கு அவஸ்தை ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை ௨௱௭௰

3. ஒரு பிள்ளை பெற்ற அவஸ்தை ஞானஸ்நானத்தைத் தெய்வாலயத்தில் திடப்படுத்தும் முறைமை ௨௱௭௧

4. விரகறிந்தவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை ௨௱௭௪

IV. வேறு சபைகளிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை.

1. ரோமான் சபையிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை ௨௱௮௨

2. ரெபொர்மீர்த்தர் சபைகளிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை ௨௱௮௫

V. திடப்படுத்தும் முறைமை ௨௱௮௮

VI. பாவசங்கீர்த்தன முறைமை ௨௱௯௬

VII. விவாக முறைமை.

1. a. விவாக அறிக்கை கூறுதல் ௩௱௫

b. விவாகஞ் செய்விக்கும் முறைமை ௩௱௯

2. அஞ்ஞானத்தைவிட்டு, கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்த சமுசாரிகளுடைய விவாகத்தை ஆசீர்வதிக்கும் முறைமை ௩௱௰௨

VIII. பிரசவித்த இஸ்திரீக்காகத் தெய்வாலயத்தில் செலுத்தும் இஸ்தோத்திர முறைமை ௩௱௰௭

IX. வியாதிக்காரருக்குப் பரிசுத்த இராப்போசனத்தைப் பரிமாறும் முறைமை ௩௱௨௩

அனுபந்தம். நோயாளிகளும் மரண அவஸ்தைப்படுகிறவர்களும், அவர்களுக்காக மற்றவர்களும் செய்யத் தகுந்த செபங்கள். ௩௱௨௭

X. அடக்கம்பண்ணுதலின் முறைமை ௩௱௩௯

௱௰௭. சங்கீதம்.

எல்லாச் சாதிகளே, கர்த்தரைத் துதியுங்கள்; எல்லாச் சனசதளங்களே, அவரைப் புகழுங்கள்.

ஏனெனில் அவருடைய கிருபை நம்முடைய மேல் வல்லபமாயிருக்கிறது. கர்த்தரின் உண்மையும் என்றென்றைக்கும் நிற்கும். அல்லேலூயா.

# AGENDA.

## PARS PRIMA.

---

முதலாம் பங்கு.

# தேவாராதனை முறைமை.

## தேதி மாறும் பண்டிகை நாட்கள் கிறிஸ்து பி[illegible]த 1877. வருஷம் முதல் 1900. வருஷ[illegible] வரையில் சம்பவிக்குந் தேதிகளைக் காட்டிய அட்டவணை.

| கிறிஸ்து பிறந்த வருஷம். | மகிமை விளங்குதலின் ஞாயிறுகள் இத்தனை. | ஒருசந்தி நாட்களின் முதல் நாளாகிய புதன் கிழமை. | கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை. | கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை. | பெந்தெகொஸ்தே பண்டிகை. | திரித்துவத் திருநாள் பண்டிகைக்குப்பின் வரும் ஞாயிறுகள் இத்தனை. | கிறிஸ்து வருகையின் முதல் ஞாயிறு. |
|---|---|---|---|---|---|---|---|
| 1877 | 3 | பெ. 14 | ஏப். 1 | மே 10 | மே 20 | 26 | தெ. 2 |
| 1878 | 5 | மார். 6 | ,, 21 | ,, 30 | ஜூன் 9 | 23 | ,, 1 |
| 1879 | 4 | பெ. 26 | ,, 13 | ,, 22 | ,, 1 | 24 | நொ. 30 |
| 1880 | 2 | ,, [illegible] | மார். 28 | ,, 6 | மே 16 | 26 | ,, 28 |
| 1881 | 5 | மார். 2 | ஏப். 17 | ,, 26 | ஜூன் 5 | 23 | ,, 27 |
| 1882 | 4 | பெ. 22 | ,, 9 | ,, 18 | மே 28 | 25 | தெ. 3 |
| 1883 | 2 | 7 | மார். 25 | ,, 3 | ,, 13 | 27 | ,, 2 |
| 1884 | [illegible] | ,, 27 | ஏப். 13 | ,, 22 | ஜூன் 1 | 24 | நொ. 30 |
| 1885 | 3 | ,, 18 | 5 | ,, 14 | மே 24 | 25 | ,, 29 |
| 1886 | 6 | மார். 10 | ,, 25 | ஜூன் 3 | ஜூன் 13 | 22 | ,, 28 |
| 1887 | 4 | பெ. 23 | ,, 10 | மே 19 | மே 29 | 24 | ,, 27 |
| 1888 | 3 | ,, 15 | ,, 1 | ,, 10 | ,, 20 | 26 | தெ. 2 |
| 1889 | 5 | மார். 6 | ,, 21 | ,, 30 | ஜூன் 9 | 23 | ,, 1 |
| 1890 | 3 | பெ. 19 | ,, 6 | ,, 15 | மே 25 | 25 | நொ. 30 |
| 1891 | 2 | ,, 11 | மார். 29 | ,, 7 | ,, 17 | 26 | ,, 29 |
| 1892 | 5 | மார். 2 | ஏப். 17 | ,, 26 | ஜூன் 5 | 23 | ,, 27 |
| 1893 | 3 | பெ. 15 | ,, 2 | ,, 11 | மே 21 | 26 | தெ. 3 |
| 1894 | 2 | ,, 7 | மார். 25 | ,, 3 | ,, 13 | [illegible] | ,, 2 |
| 1895 | 4 | ,, 27 | ஏப். 14 | ,, 23 | ஜூன் 2 | 24 | ,, 1 |
| 1896 | 5 | ,, 19 | ,, 5 | ,, 14 | மே 24 | 25 | நொ. 29 |
| 1897 | 5 | மார். 3 | ,, 18 | ,, 27 | ஜூன் 6 | 23 | ,, 28 |
| 1898 | 4 | பெ. 23 | ,, 10 | ,, 19 | மே 29 | 24 | ,, 27 |
| 1899 | 3 | ,, 15 | ,, 2 | ,, 11 | ,, 21 | [illegible] | [illegible] |
| 1900 | 5 | ,, 28 | ,, 15 | ,, 24 | ஜூன் 3 | 24 | ,, 2 |

# I.

சாதாரண நா. ற்றுக் கிழமைகளிலும் பண்டிகை நாட்களிலும் நடக்கும் பிரதான

# தேவாராதனையின் முறைமை

---

உபதேசி செபத்தை (யும் வேண்டுமானல் சங்கீதங்களில் ஒன்றையும்) வாசித்த பின் சபை சாதாரண நாயிற்றுக்கிழமைகளில் ாம அ-ம் ஞானப்பாட்டைப் பாடும். பண்டிகை நாட்களிலோ அவைகளுக்கு அடுத்த வேறொரு ஞானப்பாட்டைப் பாடும்.

## I. INTROITUS ET GLORIA.

## ஆரம்ப வாக்கியமும் தேவ ஸ்துதியும்.

பண்டிகை நாட்களுக்கடுத்த ஆரம்ப வாக்கியங்களை இந்த முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்தின் உ-ம் பிரிவிலே காண்க. வேண்டுமானல் சாதாரண நாயிற்றுக்கிழமைகளில் சபை எழுந்து நிற்க, குருவும் சபையாரும் முறை முறையாக இந்த ஆரம்பவாக்கியத்தை ஒதிப் பாடலாம்.

குரு (பீடத்திற்குத் திரும்பி) ஓதுவது:



1. பராபரன் எங்களுக்கு இரங்கி, எங்கள்மேல் கிருபையாயிருக்கக் | கடவார்.

2. அவர் தம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணக் | கடவார்.

3. எங்கள் தேவனுகிய பராபரன் எங்களை ஆசீர்வதிக்கக் கடவார்.



சபை பாடுவது:



அவர் தமது திவ்விய ஆசீர்வாதத்தை எங்களுக்குக் கட்டளையிடு | வாராக.

2. அதினலே பூமியிலே அவருடைய வழி எங்களுக்கு அறியப்படு | வதாக.

3. பராபரன் எங்களை ஆசீர்வதித்து, தமது சமாதானத்தை எங்களுக்குக் கட்டளை | யிடக்கடவார்.

வேறு ஆரம்ப வாக்கியங்கள் இந்த முதலாம் பங்கின் அநுபந்தத்தில் அடங்கியிருக்கிறது. அங்கே உ-ம் பிரிவில் காண்க.

குரு பீடத்திற்குத் திரும்பி ஓதுவது:



பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்



டாவதாக.

சபை:



ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதா காலங்களிலும்



இருக்கிறபடியே ஆமேன்.

---

## II. CONFITEOR ET KYRIE.

## பாவ அறிக்கையும் கெஞ்சுதலும்.

குரு சபையை நோக்கிச் சொல்வது:

பிரியமானவர்களே, பராபரனுக்கு உங்கள் இருதயங்களைத் திறவுங்கள். அவருக்கு நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, ஆத்தும பசிதாகத்தோடே அவருடைய கிருபையைத் தேடுவோம், வாருங்கள்.

ரீடத்திற்குத் திரும்பின குரு சபையோடு முழங்கால்படியிட்டுச் சொல்வது:

கிருபையும் இரக்கமுமுள்ள பராபரனே, நாங்கள் பாவத்தில் பிறந்து, மனதினாலும் வாக்கினாலும் நடக்கையினாலும் மிகவும் பாவஞ் செய்து, நித்திய மோட்சபாக்கியத்துக்கு அபாத்திரராயிருக்கிறோம் என்று அறிக்கையிடுகிறோம். பராபரனே, பாவிகளாகிய எங்கள்பேரில் கிருபையுள்ளவராகும்.

கர்த்தாவே, நாங்கள் மெய் விசுவாசத்தோடுஞ் சுத்த இருதயத்தோடும் உமக்கு ஊழியஞ் செய்வதற்காக, எங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் எங்களைவிட்டு நீக்கியருளும்.

பிதாவாகிய பராபரனே, சர்வ சிருஷ்டிகரே, உமது சனத்தின்மேல் இரங்கும், இரங்கும், எங்களுக்குத் துணை செய்து கிருபையாயிரும்.

ஆ, கிறிஸ்துவே, லோகத்தின் இரட்சகரே, கெஞ்சுகிற எங்களுக்கு இரங்கும், இரங்கும்; எங்களுக்காக வேண்டுதல் செய்து கிருபையாயிரும்.

பரிசுத்த ஆவியே, ஒன்றான தேற்றரவாளனே, உமது சனத்தின்மேல் இரங்கும், இரங்கும்; எங்களுக்குத் துணைசெய்து கிருபையாயிரும்.

அல்லது

குரு சபையை நோக்கிச் சொல்வது:

பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் அபாத்திரத்தன்மையையும் பாவக்குற்றங்களையும் உணர்ந்தறிந்து, பராபரனுக்கு முன்பாக உங்களையே தாழ்த்துங்கள் அவரிடத்திலே சகாயத்தையுங் கிருபையையும் மன்னிப்பையுந் தேடி, ஆயக்காரனோடே: பராபரனே, பாவிகளாகிய எங்கள்பேரில் கிருபையுள்ளவராகுமென்று கெஞ்சிக் கேட்பீர்களாக.

முழங்கால் படியிடுகிற சபை பாடுவது:



கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.





கிறிஸ்துவே, எங்களுக்கிரங்கும்.



கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.

## III. ABSOLUTIO GENERALIS ET GLORIA IN EXCELSIS.

## பாவமன்னிப்பும் உன்னத ஸ்துதியும்.

குரு எழுந்து நின்று சபையை நோக்கிச் சொல்வது:

பராபரன் நமக்கு இரங்கினார். அவர் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார். பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை, அவர்பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாங் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடைவதற்காக, தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார்.

அவருடைய நாமத்தைப் புகழ்ந்து இஸ்தோத்திரிப்போம், வாருங்கள்.

அல்லது:

சர்வ வல்லபமும் இரக்கமுமுள்ள பராபரன் நமக்கு இரங்கினார் அவர் தமதொன்றான குமாரனை நமது பாவங்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, இவர் நிமித்தம் நமது பாவங்களை மன்னித்தார். இவருடைய நாமத்தின்பேரில் விசுவாசிக்கிற யாவருக்குந் தம்முடைய பிள்ளைகளாகிறதற்கு அதிகாரங் கொடுத்து, தமது பரிசுத்த ஆவியையும் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்.

அவருடைய நாமத்தைப் புகழ்ந்து இஸ்தோத்திரிப்போம், வாருங்கள்.

குரு பீடத்திற்குத் திரும்பி
சாதாரண நாயிற்றுக் கிழமைகளில் ஓதுவது:



உன்னதங்களில் இருக்கிற பராபரனுக்கு மகிமையும்



பூமியிலே சமாதானமும் மனிதர் பேரிலே பிரியமும் உண்டாவதாக.

சபை பாடுவது:

உம்மைத் துதிக்கிறோம் மு. (350)*

2. பண்டிகை நாட்களிலும் இராப்போசனம் பரிமாறப்படும் நாட்களிலும் பாடுவது:



தெய்வன்புக்காக உன்னத கர்த்தாவுக்குப்புகழ்ச்சி.

சபை:

என், பாவக் கேட்டை நீக்கின மு. (91)

கவனிப்பு. பண்டிகை நாட்களிலும் பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்படும் நாட்களிலும் இங்கே மெழுகுதிரிகளை கொளுத்தப்படும்.

* இந்தப்பாட்டுகளுக்குப் பதிலாக சபை அவைகளின் மூல வார்த்தைகளைச் சொல்லலாம் அல்லது பாடலாம். அதாவது:

பரம இராசாவாகிய கர்த்தாவே, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய பராபரனே, அத்தரும் ஒரேபேறான குமாரனுமாகிய இயேசுகிறிஸ்துவே, உன்னதமானவரே, பரிசுத்த ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம், உம்முடைய மகா மகிமையின் நிமித்தம் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்.

கர்த்தாவாகிய பராபரனே, தேவாட்டுக்குட்டியே, பிதாவின் சுதனே, லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும். லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள்



செபத்தை ஏற்றுக்கொள்ளும். பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவே, உம்முடைய பிதாவின் மகிமையிலே பரிசுத்த ஆவியோடே நீர் ஒருத்தர் பரிசுத்தர், நீர் ஒருத்தர் ஆண்டவர், நீர் ஒருத்தர் உன்னதமானவராயிருக்கிறீர். ஆமேன்.

---

## IV. SALUTATIO ET COLLECTA.

## வாழ்த்துதலும் சுருக்க செபமும்.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:



அவர் உம்முடைய ஆவியோடும் இருக்கக் கடவார்.

குரு:



பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.

அவர் பீடத்திற்குத் திரும்பிக் கோல்லேக்தென்னுஞ் செபம் ஓதுவது:



சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, ஒருவருஞ் சேரக்



கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவரே, தேவரீர் உம்முடைய



ஒன்றான குமாரனைக்கொண்டும் பரிசுத்த ஆவியைக்கொண்டும் உம்மை




சபை: 


* இந்தக் கொல்லெக்துக்குப் பதிலாகி வேறொரு கொல்லெக்தைப் பாடலாம். அவைகளையும் பண்டிகை நாட்களுக்கடுத்த கொல்லெக்துகளையும் இந்த முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்தின் உ-ம் பிரிவில் காண்க.



# V. PERICOPAE.

## குறிக்கப்பட்ட நிருப சுவிசேஷ வாக்கியங்கள்.

குரு சபையை நோக்கி

இன்ன நாளுக்குக் குறிக்கப்பட்ட நிருபவாக்கியம் இன்ன இடத்தில் எழுதியிருக்கிறது. அதை வாசிக்கக் கவனமாய்க் கேட்பீர்களாக

என்று சொல்லி அதை வாசிப்பார்.

அதை வாசித்த பின் அவர் சொல்வது:

நிருப வாக்கியம் வாசிக்கப்பட்டு முடிந்தது. கர்த்தர் தம்முடைய திரு வசனத்தை நமது இருதயங்களில் நித்திய சீவனுக்கென்று பலிக்கப் பண்ணுவாராக.

சபை: ஆமேன்.

பின்பு Graduale என்னும் படிவாக்கியத்தை சபை எழுந்து நிற்க, குரு [illegible] ஓதுவது:




சபை: 

ஒருசந்தி நாட்களிலுந் தவசு நாட்களிலும் குரு பீடத்திற்குத் திரும்பிப் படி வாக்கியத்தை ஓதுவது:



எங்கள் இரட்சிப்பின் பராபரனே, நீர் உமது நாமத்தினு



டைய மகிமையினிமித்தரக்ஷகளு ..கொத்தாசை செய்து, எங்களைத்



தப்புவித்து, உமது நாமத்தினிமித்தமாக எங்கள் பாவங்களை நி



வர்த்தியாக்கும்.

சபை:



ஆமேன், ஆமேன், ஆமேன்.

குரு சபையை நோக்கிச் சொல்

இன்றைக்குக் குறிக்கப்பட்ட விசேஷ வா..யம் இன்ன இடத்தில் அடங்கியிருக்கிறது. அதை வாசிக்கக் கவனமாய்க் கேட்பீர்களாக.

அதை வாசித்து முடித்தவுடனே அவர் ஓதுவது:



பராபரனுடைய நல்ல வார்த்தைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

சபை பாடுவது:



கிறிஸ்துவே, உமக்கு ஸ்தோத்திரம்.



# VI. CREDO.

## விசுவாச அறிக்கை

குரு சபையை நோக்கி அத்தோடு அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடுவார்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த | சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன். | அவருடைய ஒன ..ன குமாரனாகிய | நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக் .. | இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து | கன்னி ..ளிடத்திலிருந்து பிறந்து | பொந்தியுபிலாத்து என்கிறவன் கீழ்ப் ..டு | சிலுவையில் அறையுண்டு | மரித்தடக்கப்பட்டார் | பாடுப...பலில் இறங்கி | மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழு.. பராபரனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். | வல்ல ..திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத் ..வருவார். | பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். | ..பொதுவான ப..த்த சபையும் | பரிசுத்தவான்களுடைய ஐக்கிய மும் | பாவமன்..யும் | மாமிச உயிர்த்தெழுதலும் | நித்திய சீவனும் உண்டென்று வி..வாசிக்கிறேன்.

கவனிப்பு. ..அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்திற்குப் பதிலாகப் பெரிய பண்டிகை நாட்களில் நிசேயா விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடலாம். அதாவது:

ஒரே பராபரனை விசுவாசிக்கிறேன். இவர் வானமும் பூமியுங் காணப்படுகிறதுங் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவர்; சர்வத்திற்கும் வல்ல பிதாவுமானவர்.

ஒரே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். இவர் பராபரனுடைய ஒரே பேறான குமாரன்; இவர் சர்வ காலங்களுக்கு முன்னே பிதாவினின்று பிறந்தவர்; பராபரனினின்று பராபரனும், சோதியினின்று சோதியும், மெய்யான தேவனினின்று மெய்யான தேவனுமாய் உண்டாக்கப்பட்டவர் அல்ல, பிறந்தவரே; பிதாவோடு ஏக

வஸ்துவானவர். இவரைக்கொண்டு எல்லாம் உண்டானது. இவர் மனிதராகிய நமக்காகவும் நமது இரட்சிப்பின் நிமித்தமாகவும் பரமண்டலங்களிலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினால் கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனிதனானார்; பொந்தியு பிலாத்துவின் கீழ் நமக்காகச் சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார்; வேத எழுத்துக்களின் படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார்; பரமண்டலங்களுக்கு ஏறி, பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார்; சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய இராச்சியத்திற்கு முடிவில்லை.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். இவர் ஆண்டவரும் உயிர்ப்பிக்கிறவருமாமே. இவர் பிதாவினின்றுங் குமாரனினின்றும் புறப்படுகிறவர்; பிதாவோடுங் குமாரனோடும் ஏகமாய்த் தொழுது மகிமைப்படுத்தப்படுகிறவர்; தீர்க்கதரிசிகளைக் கொண்டு உரைத்தவருமாமே. பரிசுத்தமும் பொதுவுமான ஒரே அப்போஸ்தல சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்காக ஒரே ஞானஸ்நானம் உண்டென்று அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலையும் வரும் நித்திய சீவனையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆமென்.

வேண்டுமானால் இந்த நிசேயா விசுவாசப் பிரமாணத்தைப் பாடலாம். அதாவது தநீடத்திற்குத் திரும்பி ஓதுவது:

ஒரே பராபரனை விசுவாசிக்கிறேன்.

சபை பாடுவது: இவர் வானமும் மூ.

கவனிப்பு. அதற்குப் பின் குரு ஞானஸ்நானம், திடப்படுத்தல், ஏற்றுக்கொள்ளுதலின் முறைமைகளை எட்டிப்பிப்பார். ஞானஸ்நானத்திற்கு முன் அதற்கடுத்த ஞானப்பாட்டில் இரண்டொரு கவியைப் பாடலாம்.

---

## VII. பிரசங்கத்திற்கடுத்த ஞானப்பாட்டு.

---



## VIII. பிரசங்கம்.

குரு பிரசங்கத் தொட்டியில் நின்று சபையை வாழ்த்திச் சொல்வது:

நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக்கடவது. ஆமென்.

வேண்டுமானால் குரு இங்கே அல்லது பிரசங்கவாக்கியத்தை வாசித்த பின் இந்தச் செபத்தைச் சொல்லலாம்.

வாரும், பரிசுத்த ஆவியானவரே, உமது விசுவாசிகளின் நெஞ்சுகளை நிரப்பி, அவைகளிலே உமது அன்பின் தீயை மூட்டியருளும். பற்பல பாஷைகளின் மூலமாய்ச் சாதிகளை விசுவாசத்தின் ஒருமைக்குக் கூட்டிச் சேர்த்திருக்கிறீரே. எங்களை உம்முடைய சத்தியத்திலே பரிசுத்தமாக்கியருளும்; உம்முடைய வசனமே சத்தியம். ஆமென்.

---

பிரசங்கத்திற்குப் பின் ஆராதனை முறைமை மூன்று விதமாம்.

1. சாதாரண நாயிற்றுக் கிழமைகள்.
2. பண்டிகை நாட்கள்.
3. இராப்போசனம் பரிமாறப்படும் நாட்கள்.

---

1. சாதாரண நாயிற்றுக் கிழமைகளிலும் பெரிய பண்டிகைகளின் இரண்டாம் நாளிலும்.

## IX. இஸ்தோத்திரப் பலிக்கு ஏவுதல்.

குரு பிரசங்கத் தொட்டியில் நின்று சொல்வது:

பராபரன் இந்தச் சமயத்தில் மறுபடியுந் தமது பரிசுத்த வசனத்தை நமக்கு அருளிச்செய்தபடியால், நாம் அவருக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தி, அவர் இனிமேலுந் தமது வசனத்தை நம்மிடத்தில் சுத்தமாய்க் காத்து, அது நம்மெல்லாருக்குள்ளும் நம்மெல்லாரைக் கொண்டும் உத்தம கனிகளைத் தரும்படி செய்ய வேண்டுமென்று அவரை மன்றாடுவதுமல்லாமல், நமது சபையிலுள்ள வியாதிஸ்தர் தரித்திரரையும், தங்களுக்காக நாம் வேண்டிக்கொள்வதை விரும்புகிற மற்ற யாவரையும் பராபரனுக்கு முன்பாக நினைவுகூரக்கடவோம்.

(இங்கே ஓலைகூறுதல் முதலிய அறிவிப்புகள் வாசிக்கப்படும்.)

*கிறிஸ்துவின் முன்னிலையாகப் பராபரனுக்கு எத்தேச காலமும் அவருடைய நாமத்தை அறிக்கைபண்ணும் உதடுகளினுடைய கனியாகிய துதியின் பலியைச் செலுத்தக்கடவோம். நன்மை செய்யவுந் தர்ம ஐக்கியமாயிருக்கவும் மறவாதிருங்கள். ஏனென்றால் இப்படிக்கொத்த பலிகளுக்குப் பராபரன் இதமியப்படுகிறார்.*

பராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு இஸ்தோத்திரம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பராபரனின் சிநேகமும் பரிசுத்தாவியின் ஐக்கியமும் உங்களனைவரோடும் இருப்பதாக. ஆமேன்.

பிரா—

---

* வேண்டுமானால், குரு மேற்சொன்ன வேதவாக்கியங்களுக்குப் பதிலாய்ப் பின்வரும் வாக்கியங்களில் இரண்டொன்றைச் சொல்லலாம்.



சிறுமைப்பட்டவன் மேல் கவனிப்பான சிந்தையுள்ளவன் பாக்கியவான். கர்த்தர் அவனைத் தீங்குநாளில் விடுவிப்பார். இயேசு நாதர்: வாங்குகிறதைப் பார்க்கிலுங் கொடுக்கிறது பாக்கியம் என்றார். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவனுடைய உபகாரத்தை இவர் அவனுக்குப் பதில் கொடுப்பார்.

அல்லது:

சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். நமக்குக் காலம் இருக்கக்கொள்ள, யாவருக்கும் விசேஷமாய் விசுவாசத்தின் வீட்டாருக்கும் நன்மைசெய்யக் கடவோம்.

---

## X. OFFERTORIUM.
## இஸ்தோத்திரப் பலி.

ஞானப் பாட்டில் ஒரு கவியையாவது, பிரசங்கத்திற்கடுத்த ஞானப்பாட்டின் இரண்டொரு கவியையாவது பாடுகையில் உண்டி பிடிக்கப்படும்.

---

## XI. ORATIO.
## பொதுவான செபம்.

குரு பீடத்திற்கு முன்னின்று சபையை நோக்கி

செபம் பண்ணுவோமாக.

என்று சொல்லிப் பீடத்திற்குத் திரும்பிச் சபையோடு முழங்கால்படியிட்டுப் பின்வருஞ் செபங்களில் ஒன்றைச் செபிப்பார்.

சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, நிர்ப்பந்தம் நிறைந்த இப்பூமியிலே பிரயாணம்பண்ணுகிற உமது பிள்ளைகளாகிய நாங்கள் உமக்கு முன்பாக விண்ணப்பம்பண்ண வருகிறோம்,

கிறிஸ்தமான உமது சபையில் இரட்சிக்க வல்லமையுள்ள உமது வசனம் கலப்புங் கவடுமற்றுப் போதிக்கப்படவும், ஞான திரவியங்கள் நிதானமாய்க் கையாடப்படவும், தேவரீர் சபையையும் அதின் எல்லாப் போதகரையும், விசேஷமாய் எங்கள் பிதாக்களாகிய கொல்லேகியு சங்கத்தாரையும் பரிசுத்த ஆவியினால் ஆண்டு நடத்தியருளும். நாங்கள் எல்லாரும் மெய்விசுவாசத்தில் சுத்தமாய் நடக்கிறதினால் உமது நாமம் அர்ச்சிக்கப்பட ஒத்தாசை செய்தருளும். எல்லா அவமார்க்கங்கள் இடறல்களையுந் தடுத்து, விக்கிரகங்களுடைய பேர் முழுவதும் ஒழிந்துபோகப் பண்ணும்.

திருச்சபைக்கு இன்னம் புறம்பாயிருக்கிற சகல சாதிகளையும், விசேஷமாய் இந்தத்தேசத்து அஞ்ஞானிகளையுந் தேவரீர் சுவிசேஷத்தால் வரவழைத்து, உம்மைத் தேடி வருகிற யாவருக்கும், முக்கியமாய் எங்களிடத்தில் உபதேசிக்கப்படுகிறவர்களுக்கும் உத்தம குணப்படுதலைத் தந்து, அவர்கள் மறுசனன முழுக்கினால் உமது இராச்சியத்திக்குள் பிரவேசிக்கக் கிருபைசெய்யும். உம்முடைய ஊழியக்காரர் கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் படும் பிரயாசத்தை எல்லாம் ஆசீர்வதித்தருளும். உமது சனம் விசுவாசித்து, இம்மையிலும் மறுமையிலும் உமது ஊழியத்தில் நிலைத்திருக்கும்படி, தேவரீர் வசனத்தைக்கொண்டு பரிசுத்த ஆவியைத் தந்தருளும்.

உமது சித்தம் எங்களிடத்தில் செய்யப்படும்படிக்கு, பிசாசு லோகம் மாமிசமென்ற சத்துருக்களைத் தடுத்து, மெய்விசுவாசத்தில் எங்களைக் காப்பாற்றியருளும். நாங்கள் செய்ய வேண்டியவைகளைச் சிநேகத்தில் செய்யவும்; படவேண்டியவைகளைப் பொறுதி நம்பிக்கையில் படவும், எங்களை வெறுத்து உமக்கு ஒப்புக்கொடுக்கவும், வரம் அளிப்பீராக.

உண்மையுள்ள சிருஷ்டிகரே, நாங்கள் இந்த லோகத்திலே எல்லாத் தெய்வபத்தியிலும் இலக்கணத்திலும் அமளியற்ற அமர்ந்த சீவனம்பண்ணும்படிக்கு, எல்லா மனிதருக்காகவும் இராசாக்களுக்காகவும் மேன்மையுள்ள அனைவருக்காகவும் விண்ணப்பம் பண்ணுகிறோம். விசேஷமாய் இத்தேசத்தை ஆளுகிற மகத்துவமுள்ள இங்கி



லாந்து தேசத்து இராசாத்திக்கும் * அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் அவர்கள் ஆலோசனைக்காரர் உத்தியோகஸ்தர் யாவருக்குங் கிருபை அளிப்பீராக. அவர்களால் உமது ஏழைச் சபைக்குச் சகாயமுஞ் சகல குடிகளுக்கும் நியாயமுங் கிடைக்கப் பண்ணியருளும். சமுசாரமார்க்கத்தில் சீவனம்பண்ணுகிற எல்லாருந் தெய்வபத்தியையும் பட்சத்தையுஞ் சுறுசுறுப்பையும் போதுமென்கிற நன்றியறிந்த மனதையுங் காண்பிக்கவும் தங்கள் கைகளின் பிரயாசத்தைச் சாப்பிட்டு, தங்கள் பிள்ளைகளை உமக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்க்கவும், அவர்களை ஆசீர்வதித்தருளும். எங்கள் தேசம் முழுவதும் நற்பிரயோசனமான கல்விகளிலுந் தொழில்களிலுஞ் செழிக்கவும், பூமி தன் பலனைத் தரவும் அநுக்கிரகஞ் செய்யும். †

ஆனால் இவைகளைக் கேட்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம். நாங்கள் அநுதினமும் மிகுதியாய்ப் பாவங்களைச் செய்து, ஆக்கினைக்குமாத்திரம் பாத்திரராயிருக்கிறோம். எல்லா மனிதருக்கும், விசேஷமாய் விசுவாசிகளுக்கும் இரட்சகராயிருக்கிற தேவரீர் உமது கோபத்திலே எங்களைத் தண்டியாமல், உமது அளவற்ற இரக்கத்தின்படி எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்துவிடும். நாங்கள் எங்கள் கடன்காரருக்கு மன்னித்து, எங்கள் சத்துருக்களைச் சிநேகிக்கவும், அவர்களும் எங்களோடு சமாதானப்படவும், கிருபை செய்தருளும்.

தேவரீர் எங்கள் பலத்துக்கு மிஞ்சி நாங்கள் சோதிக்கப்படவொட்டாமல், சாத்தானின் கண்ணிகளுக்கும் உலக பயத்திற்கும் நயத்

---

* இங்கே சேர்க்கப்பட வேண்டியது:

1. தரங்கன்பாடியிலும் பொறையாற்றிலும்:

இந்த ஊரிலுள்ள எங்கள் லுத்தரன் சபையை ஆதரிக்கிற மகத்துவமுள்ள தென்மார்க்கு இராசாவுக்கும்

2. புதுக்கோட்டை, பெங்களூர் முதலிய இடங்களிலும்:

இந்த நாட்டை ஆளுகிற மகா இராசாவுக்கும்

† வறட்சிக்காலத்தில் இங்கே மழைக்காக ஒரு சுருக்க செபம் சேர்க்கப்படலாம்.

திற்கும் மாமிச இச்சைகளுக்குந் தப்பிப்போகவும், முடிவுபரியந்தம் நல்ல போராட்டத்தைப் போராடவும், பலம் அளிப்பீராக. ஆ, சகல ஆறுதலின் பராபரனே, எங்கள் ஆத்துமாக்களை ஆற்றித்தேற்றி, எல்லா மோசத்திலும் மரண அவஸ்தையிலும் எங்களைத் தாங்கி ஆதரியும்.

பரமபிதாவே, பஞ்சம் யுத்தங் கொள்ளைநோய் முதலிய துன்பங்களுக்கும், மின்னிடி அக்கத்திற்கும், அசுப்பான துன் மரணத்துக்கும், நித்திய கோபாக்கினைக்கும், எங்களை விலக்கமாய்க் காரும். அவதிப்படுகிற வியாதிஸ்தர் தரித்திரர் கர்ப்பவதிகள் விதவைகள் திக்கற்றவர்களுக்கும் சத்தியத்தினிமித்தந் துன்பப்படுகிறவர்களுக்கும் இரங்கி, உம்முடைய கிருபையினால் அவர்களைச் சந்தித்தருளும். சீக்கிரத்திலே சாத்தானை எங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போட்டு, சகல தீமையினுமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

இப்படியே நாங்கள் எல்லாரும் உம்முடைய கிருபையிலே பிழைக்கவும், உம்முடைய சமாதானத்திலே மரிக்கவும், உம்முடைய சார்பிலே இளைப்பாறவும், உம்முடைய பலத்திலே எழுந்திருக்கவும், நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளவும், உம்முடைய நேசகுமாரனாகிய எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவினிமித்தங் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னிக்கிறது போல நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதிரும். ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.



அல்லது:

சர்வத்திற்கும் வல்லமையுள்ள நித்திய பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, கிறிஸ்தமான உம்முடைய திருச்சபையும் மிசியோனுஞ் சர்வ வல்லமையுள்ள உமது நித்திய வார்த்தையின் மேய்ச்சலிலே தரித்திருக்கும்படி, தேவரீர் திருச்சபையின் எல்லாப் போதகரையும், விசேஷமாய் எங்கள் மிசியோனை விசாரிக்கிறவர்களையும் அதிலே உழைத்துவருகிற யாவரையும் உமது பரிசுத்த ஆவியினாலே ஆண்டுநடத்தவேண்டுமென்று உட்கருத்தாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இதினால் உமது சத்திய போதகம் எங்கும் பரம்பவும், உம்மைப் பற்றும் விசுவாசம் எங்களுக்குள் பலங்கொள்ளவும், எல்லா மனிதரையுஞ் சிநேகிக்கிற சிநேகம் எங்களில் உண்டாகி அதிகரிக்கவும், கிருபைசெய்தருளும்.

உலக அதிகாரிகள் எல்லாருக்கும், விசேஷமாய் மகத்துவமுள்ள இங்கிலாந்து தேசத்து இராசாத்திக்கும் * அவர்களுள் குடும்பத்தார் அனைவருக்குந் தேவரீர் நீடிய ஆயுளையும் சுகத்தையும் இச்சீவனுக்கும் வருஞ் சீவனுக்கும் வேண்டிய சகல நன்மைகளையுங் கட்டளையிட்டருளும். அவர்கள் ஆலோசனைக்காரர் உத்தியோகஸ்தருந் தேசத்தையெல்லாம் உமது சித்தத்தின்படி ஆண்டு நடத்தவும், நீதி நியாயத்தை நடப்பித்து அக்கிரமத்தைத் தடுத்துத் தண்டிக்கவும், அவர்களுக்குக் கிருபையையும் ஒருமையையுந் தந்தருளும். இப்படி நாங்கள் எல்லா

* இங்கே சேர்க்கப்படவேண்டியது:

1. தரங்கன்பாடியிலும் பொறையாற்றிலும்:

இந்த ஊரிலுள்ள எங்கள் லூத்தரன் சபையை ஆதரிக்கிற மகத்துவமுள்ள தென்மார்க்கு இராசாவுக்கும்

2. புதுக்கோட்டை, பெங்களூர் முதலிய இடங்களிலும்:

இந்த நாட்டை ஆளுகிற மகா இராசாவுக்கும்

ருங் கிறிஸ்தவர்களுக்கும்படி அமளியற்ற அமர்ந்த சீவனம்பண்ணி, நற்சமாதானத்தோடே எங்கள் நாட்களைப் பின்விட அனுக்கிரகஞ் செய்யும்.

எங்களைப் பகைத்துத் துன்பப்படுத்துகிறவர்களுந் தங்கள் பகையை விட்டு எங்களோடு சமாதானப்படுவதற்குக் கிருபைசெய்வீராக.

தரித்திரம் வியாதிமுதலிய இக்கட்டை அநுபவிக்கிறவர்களையுங் கர்ப்பவதிகளையும் மரணஅவஸ்தையிலிருக்கிறவர்களையும் ..விதசோதனையில் உட்பட்டிருக்கிறவர்களையும் உமது திரு நாமத்தின் நிமித்தந் துன்பப்படுகிற யாவரையுந் தேவரீர் பரிசுத்த ஆவியினால் ஆற்றித்தேற்றி, அவர்கள் இந்தத் துன்பங்களை எல்லாம் உமது பிதாவுடைவான சித்தத்தினால் வந்ததாக ஏற்றுக்கொள்ளப் பண்ணும்.

சரீரப் பிழைப்புக்கு வேண்டிய பூமியின் பலன்கள் செழிச்சு அடையவும், எங்கள் பிள்ளைகள் உமக்குள் வளர்க்கப்பட்டுத் தேறவும், யோக்கியமான வியாபாரங்கள் தொழில்களும் உத்தம கல்விகள் சாஸ்திரங்களும் நயவிர்த்தி அடையவும், தேவரீர் உமது ஆசீர்வாதத்தைத் தந்தருளும். *

இரக்கமும் உண்மையுமுள்ள பிதாவே, நாங்கள் எங்கள் பாவங்களினால் உமது நீதியுள்ள கோபாக்கினைக்குப் பாத்திரராயிருக்கிறோம். ஆகிலும் தேவரீர் எங்கள் இளவயதின் பாவங்களையும் மீறுதல்களையும் நினையாமல், உம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நினைத்து, எங்கள் ஆத்துமத்திற்குஞ் சரீரத்திற்கும் விக்கினமான சகல தீமைகளையும் ... விலக்கியருளும். கள்ளப்போதகத்திற்கும், யுத்தம் பஞ்சம் கொள்ளைநோய் இடிச்சேதம் பெருங்காற்று பெருவெள்ளம் முதலிய சகல வாதைகளுக்கும், அசுப்பான துன்மரணத்திற்கும், நித்திய கோபாக்கினைக்கும், எங்களை விலக்கமாய்க் காரும்.

உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்து அநுபவித்த பாடுகளின் நிமித்தமும் மரணத்தின் நிமித்தமும் எங்கள்

* வறட்சிக்காலத்தில் இங்கே மழைக்காக ஒரு சுருக்க செபம் சேர்க்கப்படலாம்.



செபத்தைக் கேட்டுக் கட்டளையிட்டருளும். அவருக்கு உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, சதாகாலம். ஆமேன்.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதிரும். ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கு என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

## XII. SALUTATIO ET BENEDICTIO.

## வாழ்த்துதலும் ஆசீர்வாதமும்.

குரு சபையை நோக்கி ஓதுவது:




சபை:




குரு:






தேசி முடிக்கிற செபத்தை வாசிப்பான்.

---

## 2. பண்டிகை நாட்கள்.

## IX. இஸ்தோத்திரப் பலிக்கு ஏவுதல்.

குரு பிரசங்கத் தொட்டியில் நின்று சொல்வது:

பிரியமானவர்களே, பராபரன் தமது திருவசனத்தை மறுபடியும் நமக்கு அருளிச்செய்தபடியால், நாம் அவருக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தி, நமது சபையிலுள்ள வியாதிஸ்தர் தரித்திரரையும் நமது மன்றாட்டை விரும்புகிற மற்ற யாவரையும் அவருக்கு முன்பாக நினைவுகூரக் கடவோம்.

(இங்கே அவசியமானவைகள் அறிவிக்கப்படும்.)



கிறிஸ்துவின் முன்னிலையாய்ப் பராபரனுக்கு எத்தேசகாலமும் அவருடைய நாமத்தை அறிக்கைபண்ணும் உதடுகளுடைய கனியாகிய துதியின்பலியைச் செலுத்தக் கடவோம். நன்மை செய்யவுந் தர்ம ஐக்கமாயிருக்கவும் மறவாதேயுங்கள். ஏனென்றால் இப்படிக்கொத்த பலிகளுக்குப் பராபரன் இதமியப்படுகிறார்.

---

## ORATIO ET BENEDICTIO APOSTOLICA.

## செபமும் அப்போஸ்தல ஆசீர்வாதமும்.

குரு:

**செபம் பண்ணுவோமாக.**

என்று சொல்லிப் பண்டிகைக்கடுத்த ஒரு செபத்தையுங் கர்த்தருடைய செபத்தையுஞ் செபிப்பார்.

கவனிப்பு. பண்டிகை நாட்களுக்கடுத்த செபங்கள் இந்த முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்தில் அடங்கும். அங்கே காண்க.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதிரும். ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கு என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமேன்.

---

## XI. TE DEUM ET OFFERTORIUM.

## இஸ்தோத்திரப் பாட்டும் இஸ்தோத்திரப் பலியும்.

TE DEUM அதாவது, பணிந்து உம்மையே என்கிற (உஅகூ-ம்) ஞானப் பாட்டு எழுந்து நிற்கிற பாடகர் கூட்டத்தாலுஞ் சபையாராலும் முறை முறையாய் விசேஷித்த பண்டிகை நாட்களில் பாடப்படும். *

---

## XII. ANTIPHONIA ET COLLECTA.

## குருவுஞ் சபையும் முறை முறையாய்ப் பாடுஞ் வாக்கியமுஞ் சுருக்க செபமும்.

அவைகளை இந்தப் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்திலே காண்க.

---

## XIII. SALUTATIO ET BENEDICTIO.

## வாழ்த்துதலும் ஆசீர்வாதமும்.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

* அந்த விசேஷித்த பண்டிகை நாட்கள் ஆவன:

கர்த்தர் பிறந்த பண்டிகையின் முதல் நாள், உயிர்த்தெழுந்தருளின பண்டிகையின் முதல் நாள், பெந்தெக்கோஸ்தே பண்டிகையின் முதல் நாள், மகிமைவிளங்கின பண்டிகை, பரத்துக் கேறின பண்டிகை, திரித்துவத்தின் பண்டிகை, மிகியோன் பண்டிகை, சபை சீர்திருத்துதலின் பண்டிகை தான்.



சபை:



அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.

குரு:



கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.



கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்



பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக்கடவார்.



கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து,



உனக்கு (†) சமாதானம் கட்டளையிடக் கடவார்.

சபை:



ஆமேன், ஆமேன், ஆ - மேன்.

உபதேசி அந்தந்தப் பண்டிகை நாளுக்குரிய முடிக்குஞ் செபத்தை வாசிப்பான்.

குறிப்பு. பெரிய பண்டிகைகளின் இரண்டாம் நாளில் சாதாரண நாயிற்றுக்கிழமைகளைப்போல் ஆராதனை நடப்பிக்கப்படும். வேண்டுமானால் பண்டிகைக்கடுத்த செபத்தைப் பீடத்தில் வாசிக்கலாம்.

## 3. பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்படும் நாட்கள்.

## IX. இஸ்தோத்திரப் பலிக்கு ஏவுதல்.

குரு பிரசங்கத் தொட்டியில் நின்று சொல்வது:

பிரியமானவர்களே, பராபரன் இவ்விடத்தில் நமது திருவசனத்தை நமக்கு அருளிச் செய்ததுமன்றி, அவர் தமது பரிசுத்த இராப்போசனத்தையும் நமக்காக ஆயத்தம்பண்ணி, அதற்கு நம்மை அழைக்கிறபடியால், நாம் அவருக்குச் செலுத்தவேண்டிய இஸ்தோத்திரப் பலியை மறவாமல், விசேஷமாய் நமது சபையிலுள்ள தரித்திரர் வியாதிஸ்தரையும் நமது மன்றாட்டை விரும்புகிற மற்ற யாவரையும் பராபரனுக்கு முன்பாக நினைவுகூரக்கடவோம்.

(இங்கே அவசியமானவைகள் அறிவிக்கப்படும்.)

அவர் நமக்காகத் தம்முடைய சீவனை விட்டுவிட்டதினால் சிநேகம் இன்னதென்று அறிந்தோம். நாமுஞ் சகோதரருக்காகச் சீவனை விட்டுவிடக் கடனாளிகளாயிருக்கிறோம். ஆனால் எவனாகிலும் லோக சீவனமுடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனை விலக அடைத்துக்கொண்டால், அவனுக்குள் பராபரனுடைய சிநேகம் எப்படி நிலைநிற்கும்.

---

## X. ORATIO ET BENEDICTIO APOSTOLICA.

## செபமும் அப்போஸ்தல ஆசீர்வாதமும்.

குரு: செபம்பண்ணுவோமாக.

சர்வலோகத்தின் ஒன்றான இரட்சகராகிய அன்புள்ள இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உம்முடைய திரு வசனத்தை மறுபடியும் எங்களுக்கு அருளிச்செய்து, அதினாலே எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தி, எங்கள் ஆத்துமங்களை ஆற்றித்தேற்றினதுமல்லாமல், இப்போது உம்முடைய பரிசுத்த விருந்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு எங்களை வரவழைக்கிறதற்காக நாங்கள் உமக்கு முழுமனதோடு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்.



கிருபையும் இரக்கமுமுள்ள கர்த்தாவே, இப்பூமியிலே பிரயாணம்பண்ணுகிற உம்முடைய திருச்சபையைக் கிருபாகடாட்சமாய் நோக்கிப்பார்த்து, அது உம்முடைய நித்திய வார்த்தையின் மெய்ச்சத்திலே தரித்திருந்து, மெய்யான விசுவாசத்திலும் அன்பான சிநேகத்திலும் வளரும்படி, அதின் மேய்ப்பரும் போதகருமாகிய உம்முடைய ஊழியக்காரர் எல்லாரையும் உம்முடைய வசனத்தின் சத்தியத்திலே காப்பாற்றி, உமது பரிசுத்த ஆவியினாலே அவர்களை ஆண்டு நடத்தியருளும்.

உலக அதிகாரிகள் எல்லாரும் உம்முடைய சித்தத்தின்படி தேசத்தை ஆண்டு, நீதிநியாயத்தை நடப்பித்து வருகிறதற்கு அவர்களை ஆசீர்வதித்தருளும்.

உம்முடைய பிள்ளைகளுக்கு வருகிற தரித்திரம் வியாதிமுதலிய இக்கட்டுகளில் தேவரீர் அவர்களோடிருந்து, அவர்களை ஆற்றித் தேற்றி, அவர்கள் இந்தத் துன்பங்களை யெல்லாம் உம்முடைய சித்தத்தின்படி பொறுமையாய்ச் சகித்திருக்க அவர்களுக்குத் துணைசெய்தருளும். இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் ஆத்துமத்திற்குஞ் சரீரத்திற்கும் விக்கினமான சகல தீமைகளையும் எங்களைவிட்டு நீக்கி, சகல வாதைகளுக்கும் அசுப்பான துன்மரணத்திற்கும் நித்திய கோபாக்கினைக்கும் எங்களை விலக்கமாய்க் காத்தருளும். *

தயவும் உண்மையுமுள்ள இரட்சகரே, இப்போது நீர் ஆயத்தம்பண்ணின விருந்துக்குச் சேர வருகிறவர்கள் எல்லாரையுங் கிருபையாய் நோக்கிப்பார்த்து, அவர்களில் ஒருவனாகிலும் உமது இராப்போசனத்தை அபாத்திரனாய் வாங்காதபடிக்கு, அவர்களைப் பாத்திரவான்களாக்கி, அவர்கள் உத்தம மனஸ்தாபத்தோடும், பாவ மன்னிப்

---

* மேற்சொல்லிய இந்தச்செபத்திற்குப் பதிலாகப் பண்டிகை நாட்களில் ஆலயகுருத்தச்செபம் செய்யப்படும்.

பின் பேரிலும் அதை உறுதிப்படுத்துகிற பரிசுத்த இராப்போசனத்தின் பேரிலும் வைக்கிற வாஞ்சையோடும், பசிதாகத்தோடும், உமது திருச்சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் புசித்துக்குடிக்க அவர்களுக்குக் கிருபைசெய்தருளும்.

தேவரீர் அனுபவித்த பாடுகளின் நிமித்தமும் மரணத்தின் நிமித்தமும் எங்கள் செபத்தைக் கேட்டுக்கொள்ளச் சித்தமாயிட்டருளும், சுவாமி. ஆமேன்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறது போல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கவொட்டாதிரும். ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கு என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமேன்.

---

## XI. OFFERTORIUM.

## இஸ்தோத்திரப்பலி.

இராப்போசனம் பரிமாறும் நாட்களில் பிரசங்கம் நடக்கிறபோது காணிக்கை எடுக்கப்படும்.

சபை உபகாரம் ஞானப்பாட்டின் இரண்டொரு கவியைப் பாடும். அதைப் பாடுகிறபோது இராப்போசன விருந்தாடிகள் பீடத்திற்கு முன் வந்து நிற்பார்கள்.

---



## XII. ADMONITIO ET ORATIO.

## இராப்போசனத்தைப் பற்றிய புத்திமதியுஞ் செபமும்.

குரு பீடத்திற்கு முன் நின்று இராப்போசன விருந்தாடிகளை நோக்கிச் சொல்வது:

கர்த்தருடைய பந்திக்குச் சேரப்போகிற பிரியமானவர்களே, நீங்கள் இப்போது கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கப்போகிறபடியால், நீங்கள் இதைப் பாத்திரமும் பிரயோசனமுமாக வாங்கும்படி விசுவாசிக்கவேண்டியதுஞ் செய்யவேண்டியதும் இன்னதென்பதைக் குறித்து உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறதென்றும், இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறதென்றும், கிறிஸ்து திருவுளம்பற்றின மரண சாதன வார்த்தைகளை நீங்கள் நிச்சயமும் நிலைவரமுமாக நம்பி, கிறிஸ்துவே இந்த ஞானதிரவியத்தில் கூட இருந்து, தமது திருச்சரீரத்தையுந் திருஇரத்தத்தையும் இத்தோடு அளிக்கிறாரென்றும், அவர் தமது திருச்சரீரமுந் திரு இரத்தமுமாகிய நிச்சயமான அச்சாரத்தினால் பாவமன்னிப்பை உங்களுக்கு உறுதிப்படுத்துகிறாரென்றும், சந்தேகப்படாமல் விசுவாசிக்கக் கடவீர்கள்.

நீங்கள் இதை வாங்கித் தின்னுங்களென்றும், இதிலே எல்லாரும் குடியுங்களென்றும், என்னை நினைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்களென்றும், கிறிஸ்து இட்ட கட்டளையின்படி செய்யக்கடவீர்கள்.

தமது திரு இரத்தத்தினால் நம்மைப் பராபரனுடைய கோபத்திற்கும் பாவம், மரணம், நரகத்திற்கும் நீங்கலாக்கி மீட்டிரட்சித்த அவரை நாம் எப்போதும் நினைத்து இஸ்தோத்திரிக்கும்படிக்கு, நாம் அடிக்கடி தமது திருச்சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் உத்தம மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் புசித்துக் குடிக்கவேண்டுமென்று பிரியசித்தமாயிருக்கிறார். இப்படி நாம் செய்வோமாகில், இந்த இராப்போசனத்தினால் நித்திய சீவனின் பலன்கள் நமக்குக்

கிடைக்கும். நாம் விசுவாசம் நேசம் பொறுமையிலும் எல்லா நம் கிரியைகளிலும் நடப்பிக்கப்பட்டுத் தேறுகிறவர்களாயிருப்போம்.

நமது அன்புள்ள இரட்சகராகிய இயேசுகிறிஸ்து இப்போது தமது சகல பரிதான ஆசீர்வாதங்களோடும் உங்களண்டைக்கு வருகிறபடியால், நீங்கள் அவருடைய கிருபையின்பேரில் பசிதாகமுள்ளவர்களாய் என்னோடு செபம்பண்ணுங்கள்.*

பிரசங்கத்துக்குப்பின் குரு சபையோடே முழங்காற்படியிட்டுச் சொல்வது:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் என் வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவான் அல்லவே. நான் பாத்திரமுள்ளவனுமிருக்கும் உம்முடைய சகாயம் எனக்குத் தேவை; உம்முடைய கிருபை என் வாழ்க்கை. இப்போதுந் தேவரீர் அபாத்திரனாகிய என்னை இப்பந்திக்கு வரவழைக்கிறீர். நான் இந்த ஞானதிரவியத்திலே தின்று குடிக்கும் உமது திருச் சரீரத்தினாலும் திரு இரத்தத்தினாலும் எனக்குப் பாவமன்னிப்பு உண்டென்று வாக்குத்தத்தம் பண்ணுகிறீர். இந்த உம்முடைய இன்பமான வார்த்தைகளைக் கேட்டேன். இவைகளை நம்பும் நம்பிக்கையைக் கொண்டேயல்லாமல் வேறெந்த நம்பிக்கையைக் கொண்டும் நான் வர இல்லை. ஆ, நேசமுள்ள கர்த்தரே, உமது வசனமும் திவ்விய வாக்குத்தத்தமும் உண்மையானதென்பதை அறிந்திருக்கிறேன். அதைக் குறித்துச் சந்தேகப்படாமல், அதையே நம்பி, உமது பந்தியில் புசித்துக்குடிப்பேன். உம்முடைய வார்த்தையின்படி எனக்காகக் கடவது. ஆமேன்.

சபை எழுந்து நின்று ஒரு ஞானப்பாட்டைப் பாடும்.

---

* இந்தப் பத்திக்குப் பதிலாக ஜெபப்புத்தகத்திலே அடங்கிய ஜெபங்களில் ஒன்றை வாசிக்கலாம்.



## XIII. PRAEFATIO ET SANCTUS.

## தோத்திரத்துதியும் பரிசுத்தமென்னும் பாட்டும்.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:



அவர் உமது ஆவியோடும் இருக்கக் கடவார்.

குரு:



உங்கள் இருதயங்களை உயர்த்துங்கள்.

சபை:



கர்த்தருக்கு நேராக உயர்த்தினோம்.

குரு:



நமது கர்த்தராகிய பராபரனை ஸ்தோத்திரிப்போம் வாருங்கள்.

சபை:



அதுவே நீதியுஞ் செம்மையுமாமே.

குரு பீடத்திருந்து திரும்பி ஓதுவது:






சபை:




## XIV. CONSECRATIO.

## ஆசீர்வதித்தல்.

1. Oratio Dominica. கர்த்தருடைய செபம்.

சபையார் முழங்காற்படியிடுகையில் குரு ஓதுவது:




தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள்

மன்னித்து விடுகிறது போல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்க

ளுக்கு மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்

ணாதிரும். அனுலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

சபை:


ஆ - மேன்.

2. AGNUS DEI. பாவத்தைச் சுமந்த என்னும் பாட்டு.

சபை பாடுவது:


க. பாவத்தைச் சுமந்த - தேவ ஆட்டுக் குட்டி, -
உ. பாவத்தைச் சுமந்த - தேவ ஆட்டுக் குட்டி, -
ங. பாவத்தைச் சுமந்த - தேவ ஆட்டுக் குட்டி, -


அடியார் மேல் இரங்கும்.
அடியார் மேல் இரங்கும்.
நீர் சமாதானந் தாரும். ஆ - மேன்.



3. VERBA INSTITUTIONIS. இராப்போசனக் கட்டளை.

குரு ஓதுவது:


நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட

அன்றிராத்திரியில் அப்பத்தை எடுத்துக்கொண்டு, ஸ்தோத்திரம்

பண்ணி, அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து,

திருவுளம் பற்றினதாவது: நீங்கள் இதை வாங்கிப் புசியுங்கள்;

இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய (†) சரீரமாயி

ருக்கிறது. என்னை நினைக்கிறதுக்காகச் செய்யுங்கள் என்று திருவுளம்

பற்றினார்.


பின்னையும் அந்தப்படியே இராப்போசனம் பண்ணின பின்பு,

அவர் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, ஸ்தோத்திரம் பண்ணி,

அவர்களுக்குக் கொடுத்து, திருவுளம் பற்றினதாவது: இதிலே எல்




சபை:




குரு விருந்தாடிகளை நோக்கி ஓதுவது:




சபை:




---



## XV. DISTRIBUTIO.

## பரிமாறுதல்.

குரு ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்தைக் கொடுக்கையில் அதை வாங்குகிற ஒவ்வொருவனுக்குஞ் சொல்வது:

இது (கர்த்தராகிய) இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான திருச் சரீரம்.

அல்லது:

இதை வாங்கித் தின்னு. இது உனக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மெய்யான திருச்சரீரமாயிருக்கிறது.

குரு ஆசீர்வதிக்கப்பட்ட இரசத்தைக் கொடுக்கையில் குடிக்கிற ஒவ்வொருவனுக்குஞ் சொல்வது:

இது (கர்த்தராகிய) இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான திரு இரத்தம்.

அல்லது:

இதிலே குடி. இது உனக்காகப் பாவமன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மெய்யான திரு இரத்தமாயிருக்கிறது.

குரு அப்பத்தையும் இரசத்தையும் பரிமாறுகையில் சபையார் பரிசுத்த இராப்போசனத்துக்கு அடுத்த ஒரு ஞானப்பாட்டைப் பாடுவார்கள். பீடத்துக்குமுன் முழங்கால்படியிட்டு, நற்கருணை வாங்குகிறவர்களின் வரிசைக்கு அப்பமும் இரசமும் பரிமாறப்பட்டு முடிந்தவுடன் ஞானப்பாட்டைப் பாடுகிறது நிறுத்தப்படும்.

குரு அவர்களை நோக்கிச் சொல்வது:

சிலுவையில் அறையுண்டு மரித்து உயிர்த்தெழுந்தருளின இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக உத்தரவாதம் பண்ணி, ஈடுசெலுத்தின திரவியங்களாகிய தம்முடைய திருச்சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் இப்போது உங்களுக்குத் தின்கவுங் குடிக்கவுங் கொடுத்தாரே. இதுகளைக் கொண்டு அவர் உங்களை மெய்யான விசுவாசத்திலே நித்திய ஜீவனுக்கென்று திடப்படுத்திக் காக்கக் கடவார்.

---

# XVI. POSTCOMMUNIO ET BENEDICTIO.

## இராப்போசனம் பரிமாறினபின் செய்யுஞ் செபமும் ஆசீர்வாதமும்.

*சன்மானமான உடனே குருவானவர் ... கடைசிக் கவியைப் பாடுவார்கள்.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரைத் துதியுங்கள், ஏனெனில் அவர் நல்லவர்.



(அல்லேலூயா.)*

சபை:



அவர் கிருபை என்றுமுள்ளது. (அல்லேலூயா.)*

குரு:



பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.

அவர் பீடத்திற்குத் திரும்பி ஓதுவது:



சர்வத்திற்கும்வல்ல அநாதி பராபரனே, உமது நேச குமாரனாயி



ருக்கிற இயேசு கிறிஸ்துவின் திருச் சரீரமுந் திரு இரத்தமுமாகிய

* ஒருசந்தியின் நாட்களில் அல்லேலூயா என்கிறதைப் பாடாமல் விடவேண்டும்.





இந்த ஆரோக்கிய தேவப்பிரசாதங்களினாலே தேவரீர் எங்கள் பசிதா



கத்தைத் தீர்த்ததற்காக உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்.



தேவரீரைப் பற்றுந் திட விசுவாசத்துக்கென்றும், நாங்கள் ஒருவரை



ஒருவர் சிநேகிக்கும் அன்பான சிநேகத்துக்கென்றும், இதை எங்க



ளுக்குப் பலிக்கப்பண்ண வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு



கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், சுவாமி.

சபை:



ஆ - மேன்.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:



அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.

தரு:




உபதேசி முடிக்கிற செபத்தை வாசிப்பான்.



# II.

## தவசு நாட்களில் செய்யும்

# ஆராதனை முறைமை.

---

கவனிப்பு. ஒருசந்தி நாட்களின் அவக்க நாளாகிய புதன் கிழமையும் உயிரோடெழுந்த பண்டிகைக்குப் பின்வரும் நாலாம் வெள்ளிக்கிழமையும் தவசு நாட்களாம்.

### I.

உபதேசி செபத்தை வாசித்தபின்பு சபையார் தவசு நாட்களுக்கான ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.

### II.

குரு பீடத்திற்குமுன் நின்று சபையை நோக்கி, தவசு சங்கீதங்களில் ஒன்றை வாசிப்பார். (அவைகள், ஆவன: ௬. ௩௨. ௩௮. ௫௧. ௱௨. ௱௩. ௱௪௩.)

### III.

தரு சபையை நோக்கிச் சொல்வது:

பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் அபாத்திரத்தன்மையையும் பாவக்குற்றங்களையும் உணர்ந்தறிந்து பராபரனுக்கு முன்பாக உங்களையே தாழ்த்துங்கள். அவரிடத்தில் சகாயத்தையுங் கிருபையையும் மன்னிப்பையுந் தேடி, ஆயக்காரனோடு: பராபரனே, பாவிகளாகிய எங்கள்பேரில் கிருபையுள்ளவராயிரும் என்று கெஞ்சிக் கேட்பீர்களாக.

சபையார் முழங்கால்படியிட, குரு பீடத்திற்குத் திரும்பிப் பாடுவது:



Ky - ri - e e - lei - son.

சபை:



கர்த்தாவே, இரங்கும்.

குரு:



Chris - te e - lei - son.

சபை:



கிறிஸ்துவே, இ - ரங் - கும்.

குரு:



Ky - ri - e e - lei - son.

சபை:



கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.

அல்லது:

இப்படிச் செய்யக் கூடாதிருந்தால் குருவுஞ் சபையாரும் பாடுவது:



கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.



கிறிஸ்துவே, எங்களுக்கிரங்கும்.



கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.



## IV.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:



அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.

குரு:



பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.

அவர் பீடத்திற்குத் திரும்பிக் கோல்லெக்தென்னுஞ் செபம் ஓதுவது:

இரக்கமுள்ள பரமபிதாவே, தேவரீர் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறதற்காக உமக்கிஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் எங்கள் பாவங்களின் நிமித்தம் அ[illegible]க்கவேண்டிய தண்டனையைத் தேவரீர் உம்முடைய இரக்கத்தினாலே எங்களை விட்டுவிலக்கி, நாங்கள் பாவவழியை விட்டுத் திரும்பும்படி எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம் சுவாமி.



ஆமேன்.

## V.

குரு சபையை நோக்கி,

இந்தத் தவசு நாளுக்குக் குறிக்கப்பட்ட திருவாக்கியம் இன்ன இடத்தில் எழுதியிருக்கிறது. அதை வாசிக்கக் கவனமாய்க் கேட்பீர்களாக

என்று சொல்லி அதை வாசிப்பார்.

அதை வாசித்த பின் அவர் சொல்வது:

நிருப வாக்கியம் வாசிக்கப்பட்டு முடிந்தது. கர்த்தர் தம்முடைய திரு வசனத்தை நமது இருதயங்களில் நித்திய சீவனுக்கென்று பலிக்கப் பண்ணுவாராக.

சபை: ஆமேன்.

குரு பீடத்திலிருந்துத் திரும்பிப் படிவாக்கியத்தை ஓதுவது:



எங்கள் இரட்சிப்பின் பராபரனே, நீர் உமது நாமத்தினு



டைய மகிமையினிமித்தமாக எங்களுக்கொத்தாசை செய்து, எங்களைத்



தப்புவித்து, உமது நாமத்தினிமித்தமாக எங்கள் பாவங்களை நி



விர்த்தியாக்கும்.

சபை:



ஆமேன், ஆமேன், ஆ - மேன.

குரு சபையை நோக்கி,

இன்றைக்குக் குறிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியம் இன்ன இடத்தில் அடங்கியிருக்கிறது. அதை வாசிக்கக் கவனமாய்க் கேட்பீர்களாக

என்று சொல்லி அதை வாசிப்பார்.

அதை வாசித்து முடித்தவுடனே அவர் ஓதுவது:



பராபரனுடைய நல்ல வார்த்தைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.



சபை பாடுவது:



கிறிஸ்துவே, உமக்கு ஸ்தோத்திரம்.

## VI.

குரு சபையை நோக்கி அத்தோடு அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடுவார்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த | சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன். | அவருடைய ஒன்றான குமாரனாகிய | நம்முடைய கர்த்தர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். | இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து | கன்னி மரியாளிடத்தினின்று பிறந்து | பொந்தியுபிலாத்து என்கிறவன் கீழ்ப் பாடுபட்டு | சிலுவையில் அறையுண்டு | மரித்து அடக்கம்பண்ணப்பட்டார். | பாதாளங்களில் இறங்கி | மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். | பரமண்டலங்களுக்கேறி | சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். | அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார். | பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். | பொதுவான பரிசுத்த சபையும் | பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் | பாவமன்னிப்பும் | சரீர உயிர்த்தெழுதலும் | நித்திய சீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

## VII.

சபை பிரசங்கத்துக்கடுத்த ஞானப் பாட்டைப் பாடுவர்.

## VIII.

குரு பிரசங்கத் தொட்டியில் நின்று சபையை வாழ்த்திச் சொல்வது:

நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக் கடவது.

முதலாம் பங்கு.

அப்போது குரு பிரசங்கவாக்கியத்தை வாசித்துப் பிரசங்கிப்பார். வேண்டுமா
னால் குரு பிரசங்கவாக்கியத்தை வாசிக்கும் முன் அல்லது வாசித்த பின் இந்தச்
செபத்தைச் சொல்லலாம்.

வாரும், பரிசுத்த ஆவியானவரே, உமது விசுவாசிகளின் நெஞ்
சுகளை நிரப்பி, அவைகளிலே உமது அன்பின் தீயை மூட்டிவிட்டரு
ளும். பற்பல பாஷைகளின் மூலமாய்ச் சாதிகளை விசுவாசத்தின் ஒரு
மைக்குக் கூட்டிச் சேர்த்திருக்கிறீரே! எங்களை உம்முடைய சத்தியத்தி
லே பரிசுத்தமாக்கியருளும்; உம்முடைய வசனமே சத்தியம், சுவாமி.
ஆமேன்.

IX.

குரு பிரசங்கத்தை முடித்தவுடன் பிரசங்கத் தொட்டியில் நின்று சொல்வது:

செபம்பண்ணுவோமாக.

இரக்கமுள்ள நித்திய பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, நிர்ப்
பாக்கியமுள்ள ஏழைப் பாவிகளாகிய நாங்கள் உம்முடைய திருச் சந்
நிதிக்கு முன்பாக வந்து: நாங்கள் எங்கள் பிதாக்களோடும் பாவஞ்
செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, அதினால்
உம்முடைய நீதியுள்ள தண்டனைக்கும் கோபாக்கினைக்கும் நரகத்துக்
கும் பாத்திரராயிருக்கிறோம் என்கிறதைத் தாழ்மையாய் அறிக்கையிடு
கிறோம். இந்த எங்களுடைய பாவங்களுக்காக நாங்கள் முழு இருத
யத்தினாலும் மனஸ்தாபப்பட்டு, தேவரீர்: நான் ஆகாதவனுடைய மர
ணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப்
பிழைப்பதையே விரும்புகிறேன் என்று சொன்னபடியால், நாங்கள்
எங்கள் அன்புள்ள பிதாவும் பராபரனுமாகிய உம்மண்டையில் ஓடி
வந்து, உம்முடைய உருக்க இரக்கத்தை நம்பி, எங்கள் இளவயதின்
பாவங்களையும் எங்கள் மீறுதல்களையும் நினையாமல், உம்முடைய அள
வற்ற கிருபையின்படியேயும் இரக்கத்தின்படியேயும் எங்களை உமது
நேச குமாரனும் எங்கள் ஒன்றான இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து
வுக்குள் தயவாய் நினைத்தருளவேண்டுமென்று மனத்தாழ்மையாய்க்
கெஞ்சி மன்றாடுகிறோம். கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் எங்களைக்



கடிந்துகொள்ளாமலும், உம்முடைய உக்கிரத்தில் எங்களைத் தண்டியா
மலுமிருந்து, எங்களுக்கு இரங்கி, உம்முடைய ஏழைப் பிள்ளைகளா
கிய எங்கள்மேல் இயேசுகிறிஸ்துவின் நிமித்தங் கிருபையாயிரும்.
உமது பேரிலுள்ள எங்கள் நம்பிக்கையின்படி எங்களுக்கு இரக்கங்
காண்பித்தருளும். நாங்கள் எங்கள் சுபாவத் துர்க்குணத்தை நன்றாய்
அறிந்து, உத்தம மனஸ்தாபத்தோடுந் தவசோடும் பாவத்தைக் களைந்
துபோட்டு, அதை அருவருத்து விட்டு விலகி, உம்முடைய பரிசுத்த
வசனத்தை எப்போதும் எங்கள் கண்களுக்கு முன்பாக வைத்து, உம்
முடைய ஆவியின் நடத்துதலாலும் பெலத்தாலும் உமது வழிகளிலே
நடந்து, உம்முடைய மகிமைக்கென்று நீதியின் கனிகளைக் கொடுக்கும்
படி, தேவரீர் எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்து, சுத்திகரித்து,
புதிதாக்கியருளும். உண்மையும் இரக்கமுமுள்ள பிதாவே, உமது நேச
குமாரனும் எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின்
அருமையான புண்ணியங்களின் நிமித்தமும் மன்றாட்டின் நிமித்தமும்
எங்கள் விண்ணப்பங்களைக் கேட்டுக் கட்டளையிட்டருளும்,
ஆமேன்.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய
நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்
முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலே
யுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்க
ளுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடு
கிறதுபோல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்து
விடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதிரும். ஆனா
லோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென
றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்
கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும்
பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் அனை
வரோடும் இருப்பதாக.

சபை: ஆமேன்.

## X.

குரு பீடத்திற்கு வந்து, சபையாருடன் முழங்கால்படியிட்டு, LITANEY என்னுஞ் சமுதாய விண்ணப்பத்தை (௩௬௩-ம் ஞானப்பாட்டை) முறை முறையாகப் பாடுவார்.

## ( * XI.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தாவே, எங்களோடு நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசியாதிரும்.

சபை:



எங்கள் அக்கிரமங்களுக்குத் தகுதியாக எங்களுக்குச் சரிக்கட்டாதிரும்.

குரு:



பிரார்த்தித்துக்கொள்ளக்கடவோம்.

குரு பீடத்திற்குத் திரும்பி ஓதுவது:

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, மன இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மகா கிருபையுமுள்ள பரம பிதாவே, அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னிக்கிற தேவரீர், உமக்கு விரோதமாகப் பாவஞ் செய்து, உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதுகளை நடப்பிக்கிற அடியார்மேல் இரங்கி, உமது குமாரன் பட்டபாடுகள் மரணத்தின் நிமித்தம் எங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்கு மன்னித்தருளவேண்டுமென்று உமது ஒன்றான நேசகுமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: 

ஆமேன். * )

* இந்த ( ) அடையாளங்களுக்குள் அடங்கியதை விட்டு விடலாம்.



## XII.

குரு சபையை நோக்கி ஓதுவது:



கர்த்தரானவர் உங்களோடிருக்கக்கடவார்.

சபை:



அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.

குரு:



கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.



கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்



பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக்கடவார்.



கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன் மேல் ஏறெடுத்து,



உனக்கு (†) சமாதானம் கட்டளையிடக் கடவார்.

சபை:



ஆமேன், ஆமேன், ஆ - மேன்.

உபதேசி தவசு நாளுக்குரிய முடிக்குஞ் செபத்தை வாசிப்பான்.

# III.

பெரிய வெள்ளிக் கிழமையில் செய்யும்

## ஆராதனை முறைமை.

அன்றைக்குப் பீட ஆராதனை இல்லை. கிறிஸ்து பாடுபட்ட சரித்திரம் வாசித்துத் தியானிக்கப்படும். கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய ௫௪. ௫௰ முதலிய ஞானப் பாட்டுகள் பாடப்படும்.

---

# IV.

நாயிற்றுக்கிழமை முதலிய திருநாட்களில் செய்யப்படும்

## அந்தி ஆராதனை முறைமை.

சாதாரண நாயிற்றுக்கிழமைகளில் ஞானோபதேசம் விஸ்தரிக்கப்படும். – பண்டிகை முதலிய விசேஷித்த நாட்களில் குரு பிரசங்கிப்பார்.

இதின்படி அந்தி ஆராதனை முறைமை இரு வகைப்படும்.

---



# ஞானோபதேசம் விஸ்தரிக்கப்படும் அந்தி ஆராதனை.

## I.

உபதேசி ஆரம்பச் செபத்தை வாசித்த பின் சபையார் ௱௨௯–ம் அல்லது வேறொரு ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.

## II.

குரு பீடத்திற்கு முன் நின்று சபையை நோக்கி ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**

குரு:

**பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.**

அவர் பீடத்திற்குத் திரும்பி ஓதுவது:

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, கிருபையுந் தயவுமுள்ள பிதாவே, தேவரீர் எங்களுக்கு ஈடேற்றமுண்டாக உம்முடைய வசனத்தைக் கட்டளையிட்டு, அதிலே உம்முடைய திருச்சித்தத்தையுங் கரையேறும் வழியையும் எங்களுக்குத் தெளிவாய் வெளிப்படுத்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைக் கிருபாகடாட்சமாய் நோக்கிப்பார்த்து, உம்முடைய திருவசனத்திலே அடங்கிய உச்சிதமான போதகங்களை எங்களுக்கு நன்றாய்த் தெரியப்பண்ணி, நாங்கள் உம்முடைய வசனத்தைப் பரிசுத்தமாக எண்ணிக்கொண்டு, அதைக் கவனமாகக் கேட்டுப் படித்து, அதற்கேற்றதாய்ச் செய்யவும் நடக்கவும் எங்களுக்கு உமது ஆவியின் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: **ஆமேன்.**

கவனிப்பு. இந்தக் கொல்லெக்துக்குப் பதிலாக வேறொரு கொல்லெக்தை ஓதலாம்.

## III.

பீடத்திற்கு முன் நிற்கிற குருவுஞ் சபையாரும் ஐந்து ஆதிநியாயங்களையுஞ் சொல்லு வார்கள்.

(ஞானோபதேசத்திலுள்ள ஐந்து ஆதி நியாயங்களில் ஒவ்வொன்றைச் சொல்லும் முன் வேண்டு மானால் குரு பின்வரும் வார்த்தைகளைச் சொல்லலாம்.

1. பத்துக்கற்பனைகளைச் சொல்லும் முன்:

நமது தேவனாகிய கர்த்தர் நாம் செய்யவும் விலக்கவும் வேண்டியவைகளை நமக்குத் தெரிவிக்கப் பத்துக்கற்பனைகளை நமக்கு அருளிச்செய்தார். நாம் அவை களை ஒடுக்கவணக்கத்தோடு சொல்வோமாக.

2. விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லும் முன்:

நாம் பத்துக்கற்பனைகளை மீறி, நித்திய கோபாக்கினைக்குப் பாத்திரராயிருப் பதினால், இரட்சிப்பு நமக்குத் தேவை. நாம் நமது இரட்சிப்புக்காக விசுவாசிக்க வேண்டியது இன்னதென்பதைத் தெரிவிக்கிற நமது விசுவாசப்பிரமாணத்தைப் பத்தி விசுவாசத்தோடு சொல்வோமாக.

3. கர்த்தருடைய செபத்தைச் சொல்லும் முன்:

நாம் மெய்விசுவாசத்தில் முடிவுபரியந்தம் உறுதியாய்த் தரித்திருக்கும் படிக்குச் செபஞ் செய்யவேண்டியது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கற் றுக் கொடுத்த செபத்தைப் பராபரனுடைய பிள்ளைகளுக்கேற்ற நம்பிக்கையோடு சொல்வோமாக.

4. ஞானஸ்நானக்கட்டளையைச் சொல்லும் முன்:

நாம் மறு செனமமாய்ப் பிறந்து பராபரனுடைய பிள்ளைகளாவதற்கு ஞா னஸ்நானம் பெற்றிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவுளம்பற்றின ஞானஸ்நானக் கட்டளையை நன்றியறிதலோடு சொல்வோமாக.

5. இராப்போசனக்கட்டளையைச் சொல்லும் முன்:

நாம் பாவத்திற்கு நீங்கி, மெய்விசுவாசத்தில் தேறும்படிக்கு மெய்யான மனஸ்தாபமும் விசுவாசமுமாய்க் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கவேண் டியது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவுளம்பற்றின இராப்போசனக்கட்டளை யை இஸ்தோத்திரத்தோடு சொல்வோமாக.)

கவனிப்பு. தகுந்த பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இருந்தால், அவர்களில் இருவர் பீடத்திற்குச் சமீபத்தில் நின்று, யாவருக்கும் விளங்கும்படியாக ஞானோபதேசக் குறிப்பிடத்திலுள்ள ஏதேனும் ஒரு பாகத்தை வினா விடையாகவும், ஞானப்பாட்டுப் புஸ்தகத்திலுள்ள ஏதேனும் ஒரு பாட்டைப் பாராமலுஞ் சொல்ல லாம்.



## IV.

குரு பீடத்தைவிட்டு வந்து, சபையாருக்கருகில் நின்று, ஞானோபதேசத் தின் ஒரு பாகத்தை வினாவி, அதை விஸ்தரிப்பார். (பிள்ளைகள் மாத்திரமல்ல, பெரியவர்களும் உத்தரவு சொல்வது நன்மை.)

அது முடிந்தபின் அவர் கர்த்தருடைய செபத்தையும் அப்போஸ்தல ஆசீர்வாதத் தையுஞ் சொல்லுவார்.

## V.

சபை ஒரு ஞானப்பாட்டில் இரண்டொரு கவிகளைப் பாடினபின் குரு பீடத்திற்கு முன் நின்று ஓதுவது:

**கர்த்தாவே, உமது சத்தியத்தில் எங்களைப் பரிசுத்தமாக்கும்.**

சபை:

**உமது வசனமே சத்தியம். (அல்லேலூயா.)**

குரு:

**பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.**

அவர் பீடத்திற்குத் திரும்பி ஓதுவது:

கர்த்தாவாகிய பராபரனே, எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் பிதாவே, தேவரீர் உம்முடைய அளவில்லாத இரக்கத்தின்படி உமது வசனத்தை எங்களுக்குக் கொடுத்து, அதைக்கொண்டு எங்களில் உமக்கு ஒரு சபையைக் கூட்டிச் சேர்த்து வளர்த்துவருகிற உம்முடைய பிதாவடைவான தயவுக்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகி றோம். நாங்கள் உம்முடைய திவ்விய வசனத்தை நன்றியறிந்த மன தோடே ஏற்றுக்கொண்டு, எங்கள் நடக்கையை அதற்கு ஒத்ததாக்கி, விசுவாசத்திலும் பொறுதி நம்பிக்கையிலுஞ் சிநேகத்திலும் மென்மே லும் வளர்ந்து, கடைசியில் நித்திய மோட்சத்தை அடைய, தேவரீர் எங்களுக்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உம் மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

குரு சபையை நோக்கி ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**

குரு:

**கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.**

**கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.**

**கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (†) சமாதானம் கட்டளையிடக் கடவார்.**

சபை:

**ஆமேன், ஆமேன், ஆமேன்.**

உபதேசி முடிக்கிற செபத்தை வாசிப்பான்.

---

## 2. அந்திப் பிரசங்க ஆராதனை முறைமை.

### I.

உபதேசி ஆரம்பச் செபத்தை வாசித்தபின் சபையார் அந்நாளுக்கடுத்த ஒரு ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.

### II.

குரு பீடத்திற்கு முன் நின்று சபையை நோக்கி ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**



குரு:

**பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.**

அவர் பீடத்திற்குத் திரும்பி அந்தப் பண்டிகைநாளுக்கடுத்த கொல்லெக்துகளில் ஒன்றை ஓதுவார்.

சபை: **ஆமேன்.**

### III.

குரு சபையை நோக்கித் திருநாளுக்கான வாக்கியங்களில் ஒன்றை வாசிப்பார். வாசித்தபின் அவர் சொல்வது:

**பராபரனுடைய நல்ல வார்த்தைக்காக அவருக்கு இஸ்தோத்திரம். அவர் அதை நம்முடைய இருதயங்களில் நித்திய சீவனுக்கென்று பலிக்கப் பண்ணுவாராக.**

சபை: **ஆமேன்.**

### IV.

சபை: திருநாளுக்கடுத்த ஒரு ஞானப்பாட்டைப் பாடும்.

### V.

குரு பிரசங்கத் தொட்டியில் ஏறி, சபையை நோக்கிச் சொல்வது:

**நமது பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக் கடவது. ஆமேன்.**

அப்போது அவர் நியமிக்கப்பட்ட வாக்கியத்தை வாசித்து, அதின்பேரில் பிரசங்கித்து, கர்த்தருடைய் செபத்தையும் அப்போஸ்தல ஆசீர்வாதத்தையுஞ் சொல்லி முடிப்பார்.

### VI.

சபை ஒரு ஞானப்பாட்டில் இரண்டொரு கவியைப் பாடினபின் குருவுஞ் சபையாருந் திருநாளுக்கான சுருக்க வேத வாக்கியங்களை முறை முறையாய் ஓதுவார்கள்.—அவைகளை இந்த முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்தில் காண்க.

குரு:

**பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.**

அவர் பீடத்திற்குத் திரும்பி ஒரு கொல்லெக்தை ஓதுவார்.

சபை: **ஆமேன்.**

குரு சபையை நோக்கி ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**

குரு:

**கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார். கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார். கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (+) சமாதானம் கட்டளையிடக் கடவார்.**

சபை:

**ஆமேன், ஆமேன், ஆமேன்.**

உபதேசி முடிக்கிற செபத்தை வாசிப்பான்.

---



# V.

## நாயிற்றுக் கிழமைகள் பண்டிகை நாட்கள் அல்லாத மற்ற நாட்களில் செய்யப்படும்

# ஆராதனை முறைமை.

---

நாயிற்றுக்கிழமைகள் திருநாட்களில் செய்யப்படும் ஆராதனைகளைத் தவிர, விசேஷமாய்ப் புதன் வெள்ளிக் கிழமைகளில் ஆராதனை செய்வது தகுதி. இவ்விரு நாட்களுக்கும் ஒரே வித ஆராதனை இருக்கலாம். வெள்ளிக் கிழமை ஆராதனையில் பிரசங்கத்திற்குப் பின் வித்தாளி என்னுஞ் சமுதாய விண்ணப்பத்தை ஓதலாம், அல்லது வாசிக்கலாம்.

### I.

உபதேசி ஆரம்பச் செபத்தை வாசித்த பின் சபையார் ஒரு ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.

### II.

குரு பீடத்திற்கு முன் நின்று சபையை நோக்கிச் சொல்வது அல்லது ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**

குரு:

**பிரார்த்தித்துக்கொள்ளக்கடவோம்.**

அவர் பீடத்திற்குத் திரும்பி ஒரு கொல்லெக்தை வாசிப்பார் அல்லது ஓதுவார்.

சபை: **ஆமேன்.**

## III.

குரு சபையை நோக்கி ஒரு வேதவாக்கியத்தை வாசிப்பார். அதை வாசித்தபின் அவர் சொல்வது:

பராபரனுடைய நல்ல வார்த்தைக்காக அவருக்கு ஸ்தோத்திரம். அவர் அதை நம்முடைய இருதயங்களில் நித்திய சீவனுக்கென்று பலிக்கப் பண்ணுவாராக.

## IV.

சபையார் ஒரு ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.

## V.

குரு பிரசங்கத் தொட்டியில் ஏறி, சபையை நோக்கிச் சொல்வது:

நமது பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக் கடவது.

அப்போது அவர் தெரிந்துகொண்ட வேதவாக்கியத்தை வாசித்து, அதின்பேரில் சுருக்கமாய்ப் பிரசங்கித்து, கர்த்தருடைய செபத்தையும் அப்போஸ்தல ஆசீர்வாதத்தையுஞ் சொல்லி முடிப்பார்.

## VI.

சபையார் குறிக்கப்பட்டிருக்கிற ஞானப்பாட்டில் இரண்டொரு கவிகளைப் பாடுவார்கள்.

## VII.

(* குரு பீடத்திற்கு முன் நின்று சொல்வது அல்லது ஓதுவது:

கர்த்தாவே, உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமாயிருக்கிறது. (அல்லேலூயா.)

சபை:

அது என் பாதைக்கு வெளிச்சமுமானது. (அல்லேலூயா.)

* இந்த இரண்டு அடையாளங்களின் நடுவிலே அடங்கியிருக்கிறதற்குப் பதிலாக Litaney என்னுஞ் சமுதாய விண்ணப்பத்தைப் பாடலாம், அல்லது வாசிக்கலாம்.



குரு:

பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.

அவர் பீடத்திற்குத் திரும்பி ஒரு கொல்லெக்தைச் சொல்லுவார் அல்லது ஓதுவார்.

சபை: ஆமேன்.*)

## VIII.

குரு சபையை நோக்கி சொல்வது அல்லது ஓதுவது:

கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:

அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.

குரு:

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (†) சமாதானம் கட்டளையிடக் கடவார்.

சபை:

ஆமேன், ஆமேன், ஆமேன்.

உபதேசி முடிக்கிற செபத்தை வாசிப்பான்.

# VI.

# அறுப்புக்காக

## இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

---

அறுப்பு முடிந்தபின் ஒரு நாயிற்றுக்கிழமையிலாகிலும் அல்லது வாரத்தில் ஆராதனை நடக்கும் மற்றொரு நாளிலாகிலும் தெய்வாலயத்தில் அதற்காக இஸ்தோத்திரஞ் செலுத்துகிறது தகுதியும் நன்மையுமாயிருக்கும். அதற்கு ஒரு சந்தியின் நாலாம் நாயிறு ஏற்ற நாளாயிருக்கும்.

நாயிற்றுக்கிழமையில் இந்த இஸ்தோத்திரஞ் செலுத்துதல் நடக்கிறதானால், அன்று நாளின் ஆராதனையுங் குறிக்கப்பட்ட நிருப சுவிசேஷ வாக்கியங்களும் மாற்றப்படாமல், அறுப்புக்குரிய கொல்லெக்தும் செபமும் வாசிக்கப்படும். குரு தெரிந்துகொள்ளும் வாக்கியத்தின்பேரில் பிரசங்கஞ் செய்வார்.

வாரத்தில் ஆராதனை நடக்கும் வேறொரு நாளில் அது செய்யப்படுகிறதானால், குரு பீடத்திலே நிருப சுவிசேஷ வாக்கியங்களாக, ௨ கொரி. ௯, ௯-ம் வரையில் அடங்கிய நிருப வாக்கியத்தையும், லூக்கா ௰௨, ௰௫-௩௪ வரையிலுமுள்ள சுவிசேஷ வாக்கியத்தையும் வாசித்து, தான் தெரிந்துகொள்ளும் வாக்கியத்தின்பேரில் பிரசங்கஞ் செய்வார்.

இதற்கடுத்த ஆரம்ப வாக்கியங்கள், கொல்லெக்துகள், செபங்களையும் இந்த முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தத்திலே காண்க.

---

## முதலாம் பங்கைச் சேர்ந்த அநுபந்தம்.

---

இதிலே அடங்கியிருக்கிறவைகள் ஆவன:

1. குறிக்கப்பட்ட நிருப சுவிசேஷ வாக்கியங்களும், படி வாக்கியங்களும். (Pericopae et Gradualia.)
2. ஆரம்பவாக்கியங்களும், ஆசீர்வாதத்தைக் கூறும் முன் குருவுஞ் சபையாரும் முறை முறையாய் ஓதுஞ் சுருக்க வேத வாக்கியங்களும். (Introitus et Antiphoniae.)
3. கொல்லெக்தென்னுஞ் சுருக்க செபங்கள். (Collectae.)
4. பண்டிகை நாட்களுக்குரிய செபங்கள்.
5. உபதேசி செய்யுஞ் செபங்கள்,
6. தவசு சங்கீதங்கள்.

# I.

# PERICOPAE ET GRADUALIA.

குறிக்கப்பட்ட

## திருசுவிசேஷ வாக்கியங்களும், படிவாக்கியங்களும்.

---

### கிறிஸ்து வருகையின் ௧-ம் ஞாயிறு.

திரு. ரோ. ௰௩, ௧௧–௰௪.

நித்திரையை விட்டு எழுந்திருக்க வேளையாயிற்றென்று நாம் காலத்தை அறிந்
திருக்கிறபடியினாலே, இப்படி எச்சரிக்கிறேன். ஏனென்றால் நாம் விசுவாசிகளான
வேளையைப் பார்க்க இப்போது நம்முடைய இரட்சிப்பு பின்னையுஞ் சமீபித்திருக்
கிறது. 12 இராச் சென்றுபோயிற்று; பகலோவெனில் சமீபித்தது. ஆனபடியி
னாலே அந்தகாரத்தினுடைய கிரியைகளைப் போட்டு விட்டு, வெளிச்சத்தின் ஆயு
தங்களைத் தரித்துக்கொள்ளக் கடவோம். 13 பகலிலே நடக்கிறதுபோலே சீராக
நடக்கக் கடவோம். பெருந்தீனியிலும் வெறியிலும் அல்ல, சயனங்களிலுங் காம
விகாரங்களிலும் அல்ல, விரோதத்திலும் பொறாமையிலும் அல்ல; 14 நீங்கள் கர்த்
தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, இச்சைகளுக்கு இடமாய் உட
லைப் பேணாதிருங்கள்.

குரு. வனாந்தரத்திலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள்; நம்முடைய பராபரனுக்கு
அந்தரவெளியிலே பாதையைச் செவ்வைபண்ணுங்கள். இதோ, வருகிறார்.
சபை. அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

சுவி. மத். ௨௧, ௧–௯.

அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாகச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான
பெத்பகேய்க்கு வந்தபோது, இயேசு இரண்டு சீஷர்களை அனுப்பி அவர்களுக்குச்
சொன்னதாவது: 2 உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்திலே போங்கள்;
அங்கே கட்டியிருக்கிற ஒரு கழுதையையும் அத்தோடேகூட ஒரு குட்டியையும்
உடனே காண்பீர்கள். அதுகளை அவிழ்த்து, எனக்குக் கொண்டுவாருங்கள்.
3 ஒருவன் உங்களுக்கு ஏதாகிலுஞ் சொன்னால், அப்போது: அதுகள் ஆண்டவ
ருக்குத் தேவை என்று சொல்லுங்கள்; உடனே அதுகளை அனுப்புவானென்றார்.
4 ஆனால் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறுகிறதுக்கு இதெல்லாஞ்
சம்பவித்தது. 5 அவன் உரைத்ததாவது: சீயோன் குமாரத்தியுடனே: இதோ,
உன் இராசா மெத்தனவருமாய், கழுதையின்மேலும் நுகத்தடிக்குக் கீழ்ப்பட்ட

கழுதையினுடைய குட்டியின்மேலும் ஏறியிருக்கிறவருமாய், உன்னண்டைக்கு
வருகிறாரென்று சொல்லுங்களென்றான். 6 சீஷர்கள் போய், இயேசு தங்களுக்
குக் கற்பித்தபடி செய்து, 7 கழுதையையுங் குட்டியையுங் கொண்டுவந்து, அது
கள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை அதுகள்மேல் ஏற்றினார்கள்.
8 ஆனால் திரள்கும்பு தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள்;
வேறே சிலர் மரங்களின் கிளைகளைத் தறித்து, வழியிலே தெளித்தார்கள். 9 முன்
பின் போகிற வருகிற கும்புகளோவெனில்: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா,
கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதமானது
களில் ஓசியன்னா என்று கூப்பிட்டார்கள்.

## கிறிஸ்து வருகையின் ௨-ம் ஞாயிறு.

நிரு. ரோ. ௰௫, ௪-௰௩.

முன்னெழுதப்பட்டதுகளெல்லாம் நம்முடைய போதனையாக முன்னெழுதப்
பட்டது; பொறுமையினாலும் வேத எழுத்துக்களின் தேற்றரவினாலும் நமக்கு நம்
பிக்கை உண்டாயிருப்பதற்காகத் தானே. 5 ஆனால் பொறுமைக்குந் தேற்றரவுக்
கும் பராபரனானவர் உங்களுக்குக் கிறிஸ்து இயேசுவின்படியே ஒன்றுக்கொன்று
ஏகசிந்தையாயிருக்குதலை அளிக்கக் கடவார். 6 நீங்கள் ஒருமனப்பட்டு, நம்முடைய
கர்த்தரான இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய பராபரனை ஒரே வாயினால் மகிமைப்
படுத்தத் தானே. 7 ஆகையினாலே கிறிஸ்துவும் பராபரனுக்கு மகிமையுண்டாக
நம்மை ஏற்றுக்கொண்டதுபோலே, ஒருவரை யொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்.
8 இப்போதும் பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களைத் திடப்படுத்து
கிறதுக்கு, இயேசுகிறிஸ்து பராபரனுடைய சத்தியத்துக்காகச் சுன்னத்தின் ஊழி
யக்காரரானார் என்றும், 9 புறச்சாதிகளோவென்றால் இரக்கத்துக்காகப் பரா
பரனை மகிமைப்படுத்துகிறார்கள் என்றுஞ் சொல்லுகிறேன். இதுநிமித்தஞ் சாதி
களுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்துக்குச் சங்கீதம்
பாடுவேனென்று எழுதியிருக்கிறபடி தானே. 10 பின்னையும்: சாதிகளே, அவரு
டைய சனத்தோடேகூடச் சந்தோஷப்படுங்களென்கிறார். 11 பின்னையும்: எல்லாச்
சாதிகளே, கர்த்தரைத் துதியுங்கள்; எல்லாச் சனசதளங்களே, அவரைப் புகழுங்
கள் என்கிறார். 12 பின்னையும்: ஈசாயின் வேரும் சாதிகளை ஆள எழும்புபவரும்
உண்டு, அவர்பேரில் சாதிகள் நம்பிக்கை வைப்பார்களென்று எசாயா சொல்லுகி
றான். 13 ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியின் பெலத்தினால் நம்பிக்கையிலே பெரு
குப்படிக்கு, நம்பிக்கையினுடைய பராபரன் உங்களை விசுவாசத்தினால் உண்டாகும்
எல்லாச் சந்தோஷத்தினாலுஞ் சமாதானத்தினாலும் நிரப்பக் கடவார்.

குரு. கர்த்தர் பண்ணின வாக்குத்தத்தத்துக்குத் தாமதிக்காமல், நம்முடைய மேல் நீண்ட
பொறுமையாயிருந்து, யாதொருவர் கெட்டுப்போக அல்ல, எல்லாருங் குணப்படுதலுக்கு
வரச் சித்தமாயிருக்கிறார். சீக்கிரமாய் வருகிறேன், ஆமேன் என்கிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.



சுவி. லூக். ௨௧, ௨௫-௩௬.

சூரியனிலுஞ் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்களும் பூமி
யின்மேல் இருக்கிறசாதிகளுக்குள்ளே கலக்கமான மன இடுக்கமும் உண்டாகும்.
சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். 26 பூச்சக்கரத்தின் மீதில் வருங்
காரியங்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷர் சோர்ந்து போ
வார்கள்; ஏனெனில் வானங்களின் பெலன்கள் அசையும். 27 அப்போது மனுஷ
னுடைய குமாரனை மேகத்திலே வல்லமையோடும் வெகு மகிமையோடும் வரக்
காண்பார்கள். 28 இதுகள் சம்பவிக்கத் தொடங்கும்போதோவெனில், நீங்கள்
நிமிர்ந்து, உங்கள் தலைகளை ஏறெடுங்கள்; அதேனெனில் உங்கள் மீட்பு சமீபிக்கிற
தென்றார். 29 ஒரு ஒப்பனையை அவர்களுக்குச் சொன்னார். அத்தி மரத்தையுஞ்
சகல மரங்களையும் பாருங்கள். 30 அதுகள் துளிர்விடுகையில், வசந்தகாலஞ் சமீ
பமாயிற்றென்று அதுகளாலே கண்டறிகிறீர்கள். 31 அப்படியே நீங்களும் இது
கள் சம்பவிக்கிறதைக் காணும்போது, பராபரனுடைய இராச்சியஞ் சமீபமா
யிருக்கிறதென்று அறியுங்கள். 32 மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்,
எல்லாஞ் சம்பவிக்கும்மட்டும் இந்தச்சந்ததி ஒழிந்து போகாது. 33 வானமும்
பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது. 34 உங்கள் இரு
தயங்களோவெனில் பெருந்தீனியினாலும் வெறியினாலும் பிழைப்பின் கவலைகளி
னாலும் பாரஞ் சுமத்தப்பட்டு, அசுப்பிலே அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கு,
எச்சரிக்கையாயிருங்கள். 35 அதேனெனில் பூமியின் மீதெல்லாங் குடியிருக்கிற
அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போலே வரும். 36 ஆகையால் சம்பவிக்
கப்போகிற இதுகளுக்கெல்லாம் நீங்கள் தப்புவித்துக்கொண்டு, மனுஷனுடைய
குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எல்லாக்
காலத்திலுஞ் செபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.

## கிறிஸ்து வருகையின் ௩-ம் ஞாயிறு.

நிரு. ௧ கொரி. ௪, ௧-௫.

எங்களை அவனவன் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரும் பராபரனுடைய
இரகசியங்களின் உக்கிராணக்காரருமாக எண்ணிக்கொள்ளக் கடவான். 2 அப்பு
றம் ஒருவன் உண்மையுள்ளவனென்று கண்டுபிடிக்கப்படுவதே உக்கிராணக்கார
ரிடத்தில் தேடப்படுகிற காரியமாயிருக்கிறது. 3 நானோவெனில் உங்களாலே,
அல்லது ஒரு மனுஷ நியாயநாளின் விசாரிப்பினாலே நியாயந்தீர்க்கப்படுவது
எனக்கு வெகு அற்பகாரியமாயிருக்கிறது. ஆனால் என்னை நானே நியாயந்தீர்க்கி
றதும் இல்லை. 4 ஏனென்றால் நான் என்னில் ஒரு குற்றத்தையும் அறியாதிருந்தா
லும், இதினாலே நான் நீதிமானாகிறவன் அல்ல; என்னை நியாயம் விசாரிக்கிறவர்
கர்த்தரானவர். 5 ஆனபடியினாலே கர்த்தர் வரும்மட்டாக நீங்கள் காலத்துக்கு
முன்னே ஒன்றும் நியாயந்தீர்க்காதேயுங்கள்; அவர் இருளின் அந்தரங்கங்களையும்
வெளிச்சமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்
போது புகழ்ச்சியானது அவனவனுக்குப் பராபரனாலே உண்டாம்.

குரு. சமாதானத்தைக் கூறி, நற்காரியத்தைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைக்கூறி, சியோனுடனே: உன் பராபரன் இராசரிக்கம் பண்ணுகிறாரென்று சொல்லுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் எத்தனை அழகானவைகள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். ௰௧, ௨-௰.

காவலிலிருக்கிற யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேட்டு, தன் சீஷர்க
ளில் இரண்டுபேரை அனுப்பி: 3 வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொருவருக்
குக் காத்திருப்போமோ என்று அவரைக் கேட்கச் சொன்னான். 4 இயேசு அவர்
களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீங்கள் போய், கேட்கிறதையுங்
காண்கிறதையும் யோவானுக்கு அறிவியுங்கள். 5 குருடர் பார்வையடைகிறார்
கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர்
கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறி
விக்கப்படுகிறது. 6 ஆர் என்னிடத்தில் இடறல்படாதிருக்கிறானோ, அவன் பாக்
கியவான் என்றார். 7 அவர்கள் போகிறபோதோவெனில், இயேசு கும்புகளுக்கு
யோவானைக் குறித்துச் சொல்லத் துவக்கினதாவது: வனாந்தரத்தில் எதைப் பார்க்
கப் புறப்பட்டீர்கள்; காற்றினால் அசையுண்ட நாணலையோ. 8 அல்லது எதைப்
பார்க்கப் புறப்பட்டீர்கள்; மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த மனுஷனையோ.
இதோ, மெல்லிய வஸ்திரங்களை உடுக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கி
றார்கள். 9 அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள்; தீர்க்கதரிசியையோ. ஆம்,
தீர்க்கதரிசியிலும் அதிகப்பட்டவனை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
10 அதேதென்றால்: இதோ, நாம் நம்முடைய தூதனை உம்முடைய முகத்துக்கு
முன்பாக அனுப்புகிறோம்; அவன் உமக்கு முன்னே உமது வழியை ஆயத்தம்
பண்ணுவானென்று எழுதிக் குறிக்கப்பட்டவன் இவன்தானே என்றார்.

### கிறிஸ்து வருகையின் ௩-ம் ஞாயிறு.

### நிரு. பிலிப். ௪, ௪-௭.

கர்த்தருக்குள் எப்போதுஞ் சந்தோஷமாயிருங்கள்; மறுபடியுஞ் சொல்லுகி
றேன், சந்தோஷமாயிருங்கள். 5 உங்கள் சாந்தகுணம் எல்லாமனுஷருக்குந்
தெரிந்திருக்கக் கடவது. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். 6 நீங்கள் ஒன்றுக்குங் கவ
லைப்படாமல், எல்லாத்திலும் உங்கள் விண்ணப்பங்கள் இஸ்தோத்திரிப்புடனே
கூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறிவிக்கப்படக் கட
வது. 7 அப்போது எல்லாப்புத்திக்கும் மேலான தெய்வசமாதானம் உங்கள் இரு
தயங்களையும் உங்கள் சிந்தைகளையுங் கிறிஸ்து இயேசுவுக்குள் காப்பாற்றும்.

குரு. கர்த்தருடைய நாமத்திலே வருகிறவர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர். இதோ, நம்முடைய பராபரன் இவர்தாமே. இவருக்காகக் காத்திருந்தோம். இவருடைய இரட்சிப்பினாலே களிகூர்ந்து மகிழுவோமாக.
சபை. அல்., அல்., அல்லேலூயா.



### சுவி. யோவா. ௧, ௰௯-௨௮.

யோவானை நீர் ஆரென்று கேட்க, யூதர் எருசலேமிலிருந்து ஆசாரியர்களை
யும் லேவியரையும் அனுப்பினபோது, அவன் கொடுத்த சாட்சியாவது: 20 அவன்
மறுதலியாமல் அறிக்கையிட்டு: நான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான்.
21 அவர்கள் அவனை: பின்னை ஆர்; நீர் எலியாவோ என்று கேட்டார்கள். அவன்:
நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியாரோ என்றதற்கு: அல்ல என்று
பிரத்தியுத்தாரஞ் சொன்னான். 22 அப்போது அவனுடனே: எங்களை அனுப்பின
வர்களுக்கு நாங்கள் பிரத்தியுத்தாரங் கொடுக்க, நீர் ஆர், உம்மை நீர் ஆரென்கி
றீர் என்றார்கள். 23 அவன்: எசாயா தீர்க்கதரிசி சொன்ன பிரகாரமாக நான்
வனாந்தரத்திலே: கர்த்தருடைய வழியைச் செவ்வைப்பண்ணுங்களென்று கூப்பிடு
கிறவருடைய சத்தமாயிருக்கிறேனென்றான். 24 அனுப்பப்பட்டவர்கள் பரிசேய
ராயிருந்தார்கள். 25 அவர்கள் அவனைக் கேட்டு, அவனுடனே: நீர் கிறிஸ்து அல்
லாமலும் எலியா அல்லாமலுந் தீர்க்கதரிசியார் அல்லாமலும் இருந்தால், பின்னை
ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்றார்கள். 26 யோவான் அவர்களுக்குப் பிரத்
தியுத்தாரமாகச் சொன்னதாவது: நான் தண்ணீரினால் ஞானஸ்நானங் கொடுக்கி
றேன்; ஆனால் நீங்கள் அறியாதிருக்கிறவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். 27 அவர்
எனக்குப் பிந்தி வந்தும், எனக்கு முந்தினவரானவர். அவருடைய பாதரட்சை
யின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவான் அல்ல என்றான். 28 இதுகள் யோர்தா
னுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங் கொடுத்த பெத்தாபராவிலே சம்ப
வித்தது.

### கர்த்தர் பிறந்த பண்டிகையின் ௧-ம் நாள்.

### நிரு. தீத்து ௨, ௰௧-௰௪.

பராபரனுடைய இரட்சிப்புள்ள கிருபை எல்லா மனுஷருக்கும் பிரசன்னப்
பட்டிருந்து, 12 நாம் அவபத்தியையும் லவுகீக இச்சைகளையும் வெறுத்து, மன
அடக்கமும் நீதியுந் தெய்வபத்தியுமாய் இப்பிரபஞ்சத்தில் சீவனம்பண்ணி, 13 பாக்
கியமான நம்பிக்கைக்கும், மகா பராபரனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசு
கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்க்க நம்மை
உபதேசிக்கிறது. 14 அவர் நம்மைச் சகல அக்கிரமத்துக்கும் நீங்கலாக்கி மீட்கவும்,
நற்கிரியைகளுக்குக் கன பத்தியான சொந்தச் சனமாகத் தமக்குச் சுத்திகரிக்கவும்,
நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார்.

குரு. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்காரர், வல்லமையுள்ள பராபரன், நித்திய பிதா, சமாதானப்பிரபு எனப்படும். பூமியின் குடிகளே, எல்லாருங் கர்த்தரை ஆர்ப்பரியுங்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக்கா உ, க—யச.

அந்நாட்களில் சம்பவித்ததேதென்றால், லோகமெல்லாங் குடிமதிட்பு எழுதப்
பட, அகுஸ்துராயனால் உத்தாரம் பிறந்தது. 2 சூரியாவிலே சிரேனியு துரையான
போது இந்த முதலாங் குடிமதிப்பு உண்டாயிற்று. 3 எல்லாருங் குடிமதிட்பு எழு
துவிக்க, தங்கள் தங்கள் பிறந்தகமான ஊருக்குப் போனார்கள். 4 அப்போது
யோசேப்பும், தான் தாவீதின் வீட்டானும் வமிசத்தானுமானபடியினாலே,
தனக்கு நியமிக்கப்பட்ட கர்ப்பவதியாகிய பெண்சாதி மரியாளுடனே கூடக் குடி
மதிப்பு எழுதுவிக்க, 5 கலிலேயாவின் ஊராகிய நாசரேத்திலிருந்து யூதேயாவில்
இருக்கிற பெத்லகேமென்னப்பட்ட தாவீதின் ஊருக்குப் போய் ஏறினான். 6 அப்
போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் அங்கேயிருக்கையில், அவள் பெறு
கிறதற்கு நாட்கள் நிறைவேறி, 7 தன் முதல்பேறான குமாரனைப் பெற்று, அவ
ரைப் புடவைகளில் சுற்றி, அவரை முன்னணையிலே படுக்கவைத்தாள்; சத்திர
த்தில் மடத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தது. 8 ஆனால் அந்தப்புறங்களி
லே வெளிதங்கி, தங்கள் மந்தையை இராத்திரியிலே காவல்காக்கிற மேய்ப்பர்
இருந்தார்கள். 9 இதோ, கர்த்தருடைய தூதன் அவர்கள் கிட்ட வந்து நின்றான்;
கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது; அப்போது மகா பய
மாய்ப் பயந்தார்கள். 10 ஆனால் தேவதூதன் அவர்களுக்குச் சொன்னதாவது:
பயப்படாதேயுங்கள், ஏனெனில் இதோ, எல்லாச்சனத்துக்கும் வரப்போகிற
பெரிய சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன். 11 அதாவது:
உங்களுக்கு இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்கிற இரட்சகர் தாவீதின் ஊரிலே
பிறந்தார். 12 பிள்ளையைப் புடவைகளில் சுற்றி, முன்னணையிலே படுக்க வைத்
திருக்கிறதை நீங்கள்காண்பதே உங்களுக்கு அடையாளம் என்றான். 13 அசுப்பிலே
பரம சேனையினுடைய திரள் அந்தத் தூதனுடனே கூட இருந்து, பராபரனைத்
துதித்து: 14 உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையும், பூமியிலே சமா
தானமும், மனிதர் பேரிலே பிரியமும் உண்டாவதாக என்றார்கள்.

கர்த்தர் பிறந்த பண்டிகையின் உ-ம் நாள்.

திரு. தீத்து ந, ச—எ.

நம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய அன்பும் நரசீவதயையும் பிர
சன்னமானபோது 5 அவர், நாம் தம்முடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்
பட்டு, நித்திய சீவனுடைய நம்பிக்கையின்படி சுதந்தரராவதற்கு, 6 நம்மை நாம்
செய்திருந்த நீதியின் கிரியைகளினால் அல்ல, தம்முடைய இரக்கத்தின்படியே மறு
ஜெனன முழுக்கினாலும், 7 தாம் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூல
மாய் நம்முடைய மேல் பரிபூரணமாக ஊற்றின பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்
குதலினாலும் இரட்சித்தார்.

குரு. வார்த்தை மாமிசமாகி, கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்ததாய் நம்மிடத்தில்
வாசம்பண்ணிற்று. பிதாவுக்கு ஒரேபேறானவரின் மகிமையாக அவருடைய மகிமையைக்
கண்டோம்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.



சுவி. லூக். உ, யரு-உய.

அப்போது சம்பவித்ததேதென்றால், தேவதூதர்கள் அவர்களைவிட்டு
வானத்துக்குப் போனபிற்பாடு, மேய்ப்பரான மனுஷர் ஒருவருக்கொருவர்: நாம்
பெத்லகேம்மட்டும் போய், கர்த்தர் நமக்கு அறிவித்ததான நடந்த இந்தக் காரியத்
தைப் பார்ப்போம், வாருங்களென்று சொல்லிக்கொண்டு, 16 தீவிரித்துவந்து,
மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே படுத்திருக்கிற பிள்ளையையுங்
கண்டார்கள். 17 கண்டு, இந்தப்பிள்ளையைக் குறித்துத் தங்களோடே சொல்லப்
பட்ட வார்த்தையின் செய்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள். 18 கேள்வியான
வர்களெல்லாரும் மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்ட விசேஷங்களுக்
காக ஆச்சரியப்பட்டார்கள். 19 மரியாளோவெனில் இந்த வார்த்தைகளையெல்லாந்
தன் இருதயத்திலே வைத்து, தியானித்துக்கொண்டிருந்தாள். 20 மேய்ப்பர் தங்
களுடனே சொல்லப்பட்டதின்படியே கேட்டுக் கண்டயாவுக்காகவும் பராபரனை
மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டே திரும்பினார்கள்.

கர்த்தர் பிறந்த பண்டிகைக்குப் பின்வரும் நாயிறு.

திரு. கலாத். ச, க—எ.

நான் சொல்லுகிறதேதெனில், சுதந்தரவாளி எல்லாத்துக்கும் எசமானா
யிருந்தும், அவன் எத்தனைகாலங் குழந்தையாயிருக்கிறானோ, அத்தனைகாலம்
அவனுக்கும் ஒரு அடிமைக்கும் வித்தியாசமில்லாமல், 2 தகப்பன் குறித்தகாலம்
மட்டும் அவன் காரியக்காரருக்கும் வீட்டுவிசாரிப்புக்காரருக்குங் கீழாயிருக்கி
றான். 3 அப்படியே நாங்களும் குழந்தைகளாயிருந்தபோது, லோகத்தின் இள
வழிப்பாடுகளுக்குக் கீழ் அடிமைப்பட்டவர்களாய் இருந்தோம். 4 ஆனால் நியா
யப்பிரமாணத்துக்குக் கீழானவர்களை மீட்டுக்கொள்ளவும், நாம் புத்திரசுவிகா
ரத்தை அடையவும், 5 பராபரன் காலம் நிறைவேறுதல் வந்தபோது, இஸ்திரி
யினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடை
ய குமாரனை அனுப்பினார். 6 இப்போதும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினாலே:
அப்பா பிதாவே என்றுகூப்பிடுகிற தமது குமாரனுடைய ஆவியைப் பராபரன்
உங்கள் இருதயங்களில் அனுப்பினார். 7 ஆகையால் நீ இனி அடிமையாயிராமல்,
புத்திரனாயிருக்கிறாய்; புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்ப் பராபரனுடைய
சுதந்தரனுமாயிருக்கிறாய்.

குரு. பராபரன் மாமிசத்திலே வெளிப்பட்டார்; ஆவியிலே நீதி விளங்கப்பட்டார்; தூதருக்குத்
தரிசனையானார்; சாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்; லோகத்தில் விசுவாசிக்கப்பட்
டார்; மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார். பூமியின் எல்லைகளெல்லாம் நம்மு
டைய பரிபாரனின் இரட்சிப்பைக் காணுகிறது.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். உ, நந—சய.

அவரைக் குறித்துச் சொல்லப்பட்டதுகளுக்காக யோசேப்பும் அவருடைய
தாயும் ஆச்சரியமாயிருந்தார்கள். 34 சிமெயோன் அவர்களை ஆசீர்வதித்து, அவ

ருடைய தாயாகிய மரியாளுடனே சொன்னதாவது: இதோ, அநேகர் இருதயங்
களுடைய சிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு, இவர் இஸ்ரவேலில் அநேக
ருடைய விழுகுதலுக்கும் எழுந்திருக்குதலுக்கும், எதிர்ப்பேசப்படும் அடை
யாளமாகவும் வைக்கப்பட்டு இருக்கிறார். 35 உன்னுடைய ஆத்துமத்தையும் ஒரு
பட்டையமும் உருவிப்போம் என்றான். 36 ஆசேருடைய கோத்திரத்தாளும் பானு
வேலின் குமாரத்தியுமான அன்னாளென்ற ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; இவள்
கன்னியாஸ்திரியாயிருந்து, பிற்பாடு ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்து, பிரு
தியும் வயதுசென்று, 37 எண்பத்துநாலுவயதான விதவையாயிருந்தாள். இவள்
தெய்வாலயத்தை விட்டுப் பிரியாமல், ஒருசந்தியினாலுஞ் செபங்களினாலும் இர
வும் பகலும் ஆராதனை செய்வாள். 38 இவளும் அந்நேரத்திலே சேர்ந்துநின்று,
அதற்கு இசைவாய்க் கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புக்குக் காத்
திருந்த யாவருக்கும் அவர் செய்தியைச் சொன்னாள். 39 அவர்கள் கர்த்தருடைய
நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் முடித்தபிற்பாடு, கலிலேயா தேசத்தி
லிருக்குந் தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பினார்கள். 40 ஆனால் பிள்ளை
வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினாலே நிறையப்பட்டிருந்தது;
பராபரனுடைய கிருபை அதின்மேல் இருந்தது.

## வருஷப் பிறப்பின் பண்டிகை.

நிரு. கலாத். ௩, ௨௩-௨௯.

ஆனால் விசுவாசம் வரும் முன்னே நாங்கள் வெளியாகப்போகிற விசுவாசத்
துக்கென்று அடைக்கப்பட்டவர்களாய், நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காக்கப்பட்
டிருந்தோம். 24 அப்படியே விசுவாசத்தினால் நாங்கள் நீதிமான்களாகிறதற்கு, நியா
யப்பிரமாணம் எங்களைக் கிறிஸ்துவண்டைக்கு வழிநடத்துகிற வாத்தியாயிருந்
தது. 25 விசுவாசம் வந்த பிற்பாடோவெனில், நாங்கள் இனி வாத்திக்குக்கீழான
வர்கள் அல்ல. 26 ஏனெனில் எல்லாருங் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவா
சத்தினாலே பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள்; 27 அதேனென்றால்
கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனைபேர் ஞானஸ்நானம் பெற்றீர்களோ, அத்தனை
பேருங் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள். 28 இதிலே யூதனென்றும் கிரேக்
கனென்றும் இல்லை, அடிமை என்றுந் தன்னிச்சைக்காரனென்றும் இல்லை,
ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; ஏனெனில் நீங்களெல்லாருங் கிறிஸ்து
இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். 29 நீங்கள் கிறிஸ்துவின் பாரிசமேயானால்,
நீங்கள் ஆபிரகாமின் வித்தும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரருமாமே.

குரு. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் அவரே. அவருடைய நாமம் என்
றென்றைக்கும் இருக்கும். எல்லாச்சாதிகளும் அவருக்குள் ஆசீர்வதித்துக்கொண்டு, அவ
ரைப் பாக்கியமுடையவர் என்று புகழுவார்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.



சுவி. லூக். ௨, ௨௧.

பிள்ளையைச் சுன்னத்துப்பண்ண எட்டுநாள் நிறைவேறினபோது, அது
கர்ப்பத்தில் உற்பவிக்கிறதுக்கு முன்னே தேவதூதனால் இடப்பட்ட இயேசு
என்கிற நாமம் அதுக்கு இடப்பட்டது.

## வருஷப்பிறப்பின் பண்டிகைக்குப் பிந்தின நாயிறு.

நிரு. ௧ பேது. ௪, ௰௨-௰௯.

பிரியமானவர்களே, சோதனையாக உங்களுக்கு உண்டாகுந் தணலினாலே நீங்
கள் ஒரு புதுமை உங்களுக்குச் சம்பவிக்கிறதுபோலே திகையாமல், 13 கிறிஸ்து
வினுடைய பாடுகளுக்கு எப்படி பங்குள்ளவர்களானீர்களோ, அப்படி அவரு
டைய மகிமையின் வெளிப்படுதலில் களிகூர்ந்து மகிழும்படிக்கும், சந்தோஷமா
யிருங்கள். 14 நீங்கள் கிறிஸ்துவினுடைய நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால்,
பாக்கியவான்கள்; ஏனெனில் மகிமையின் ஆவியும் பராபரனின் ஆவியுமானவர்
உங்கள்மேல் தங்கியிருக்கிறார். அவர்களிடத்திலோ தூஷணிக்கப்படுகிறார், உங்
களிடத்திலோ மகிமைப்படுகிறார். 15 ஆனால் உங்களில் ஒருவனுங் கொலைபாதக
னாய், அல்லது திருடனாய், அல்லது பொல்லாங்குசெய்தவனாய், அல்லது அந்நிய
காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாய்ப் பாடுபட வேண்டாம். 16 கிறிஸ்தவ
னாய்ப் பாடுபட்டானேயாகில், வெட்காமலிருந்து, பராபரனை இக்காரியத்திலே
மகிமைப்படுத்தக்கடவான். 17 ஏனெனில், நியாயத்தீர்ப்பு பராபரனுடைய வீட்
டிலே துவக்குங் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்தில் துவக்கப்பட்டதேயா
கில், பராபரனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்ன
மாயிருக்கும். 18 நீதிமான் இரட்சிக்கப்படுவது அரிதானால், ஆகாதவனும் பாவி
யும் எங்கே நிற்பான். 19 ஆகையால் பராபரனுடைய சித்தத்தின்படி பாடுபடுகிறவர்
கள் உண்மையுள்ள சிருஷ்டிகராகிய அவருக்குத் தங்கள் ஆத்துமாக்களை நன்மை
செய்கிறவர்களாய் ஒப்புக்கொடுக்கக்கடவார்கள்.

குரு. வெட்டப்பட்ட ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒருதளிர் புறப்பட்டு, அவன் வேரிலிருந்து
ஒரு கிளை எழும்பி, கனி தரும். கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமங்களைக்
காப்பாற்றி, அவர்களை ஆகாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௨, ௰௩-௨௩.

அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு, இதோ, கர்த்தருடைய தூதன் சொப்
பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டுச் சொன்னதாவது: நீ எழுந்திருந்து,
பிள்ளையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு ஓடிப் போய்,
நான் உனக்குச் சொல்லும்மட்டும் அவ்விடத்தில் இரு; ஏனென்றால் ஏரோதே
பிள்ளையைக் கொல்லுவதற்குத் தேடுவான் என்றான். 14 அப்போது அவன் எழுந்தி
ருந்து, இராவிலே பிள்ளையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு, எகிப்துக்
குப் புறப்பட்டுப்போய், 15 ஏரோதேயின் மரணபரியந்தம் அவ்விடத்திலிருந்தான். [illegible]
எகிப்திலிருந்து நம்முடைய குமாரனை வரவழைத்தேன் என்று [illegible]

யைக் கொண்டு கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாகத் தானே.
15 அப்போது ஏரோதே தான் சாஸ்திரிகளால் பரியாசம் பண்ணப்பட்டதைக்
கண்டு, மிகுந்த கோபமடைந்து, தான் சாஸ்திரிகளிடத்தில் கேட்டாராய்ந்த
காலத்தின்படியே பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலும் இரண்டு வயது
முதற்கொண்டு அதற்குக் கீழ்ப்பட்டதாயிருக்கிற சகல ஆண்பிள்ளைகளையுங் கொன்று
போட ஆட்களை அனுப்பினான். 17 அப்போது எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்
கப்பட்டது நிறைவேறிற்று. அவன் சொன்னதாவது 18 ராமாவில் சத்தங் கேட்
கப்பட்டது, புலம்பலும் அழுகையுந் துக்கிப்பும் மிகுதி. ராகேல் தன் பிள்ளை
களுக்காக அழுது, அதுகள் இல்லாதபடியால் ஆறுதலடைந்து கொள்ளாதிருக்
கிறாள் என்றான். 19 ஆனால் ஏரோதே இறந்தபின்பு, இதோ, கர்த்தருடைய தூதன்
சொப்பனத்தில் யோசேப்புக்கு எகிப்திலே காணப்பட்டு: 20 நீ எழுந்திருந்து,
பிள்ளையையும் அதின் தாயையுங் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப்
போ; அதேதென்றால் பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் சென்று
போனார்கள் என்றான். 21 அவன் எழுந்திருந்து, பிள்ளையையும் அதின் தாயையுங்
கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்தில் வந்தான். 22 ஆனால் அர்கெலாவு தன்
தகப்பனாகிய ஏரோதேயின் பட்டத்திலிருந்து யூதேயாவை ஆளுகிறான் என்று
கேட்டு, அங்கே போகப் பயந்தான். அப்போது அவன் சொப்பனத்தில் தெய்வ
உத்தரவு பெற்று, கலிலேயாப் புறங்களுக்குப் புறப்பட்டுப் போய், 23 நாசரேத்
தென்ற ஊரில் வந்து வாசம்பண்ணினான்; நாசரேயனென்று அழைக்கப்படுவார்
என்கிறதாய்த் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாகத்
தானே.

அல்லது:

திரு. எபிரே. க, க–யஉ.

பூர்வத்திலே பாராபரன் அநேகந்தரமும் பற்பல வகையாகவும் தீர்க்கதரிசிக
ளைக்கொண்டு பிதாக்களுக்கு விளம்பினபின், இந்தக் கடைசி நாட்களில் குமார
னைக்கொண்டு நமக்கு விளம்பினார். 2 இவரை எல்லாத்துக்குஞ் சுதந்தரவாளி
யாக வைத்தார்; இவரைக்கொண்டு லோகத்தையும் உண்டாக்கினார். 3 இவர் அவ
ருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தற்சுபாவத்தின் அச்சுமாயிருந்து,
எல்லாத்தையுந் தம்முடைய வல்லமையின் வசனத்தினாலே சுமந்துகொள்ள, தம்
... நம்முடைய பாவங்களின் சுத்திகரிப்பை உண்டாக்கி, உன்னதங்க
ளிலே மகத்துவத்தின் வலது பாரிசத்தில் உளுக்கார்ந்து, 4 தேவதூதரைப் பார்க்
கத் தாம் எத்தனைக்கு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அத்
தனைக்கு அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். 5 எனென்றால்: நீர் நம்முடைய
குமாரனாயிருக்கிறீர், இன்று நாம் உம்மைச் செனிப்பித்தோமென்கிறதாகவும்,
பின்னையும்: நாம் அவருக்குப் பிதாவாயிருப்போம், அவர் நமக்குக் குமாரனாயிருப்
பாரென்கிறதாகவும், அவர் தூதரில் எவனுக்காகிலும் எப்போது சொன்னார்.
தாம் முதல்பேறானவரைத் திரும்ப லோகத்துக்குள் அழைத்துக்கொண்டு வந்த
போதோவெனில்: தேவதூதரெல்லாம் அவரைப் பணியக் கடவார்கள் என்
தேவதூதரைக் குறித்தோ: தம்முடைய தூதரை ஆவிகளுந் தம்முடைய





வேலைக்காரரை அக்கினிச் சுவாலைகளுமாக்குகிறார் என்றும், 8 குமாரனைக் குறித்
தோவென்றால்: பாராபரனே, உம்முடைய ஆசனம் என்றென்றைக்குமுள்ள சதா
காலங்களாக நிற்கும்; உம்முடைய இராச்சியத்தின் செங்கோல் செம்மையான
செங்கோலாயிருக்கிறது. 9 நீதியைச் சிநேகித்து, ஆகாமியத்தைப் பகைத்திருக்
கிறீர்; ஆகையினாலே, பாராபரனே, உம்முடைய பாராபரன் உம்முடைய பங்காளி
களைப் பார்க்கிலும் உம்மை மகிழ்ச்சியின் எண்ணெயினால் அபிஷேகம்பண்ணி
னார். என்றும், 10 பின்னையும்: ஆண்டவரே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்
படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்கிறது. 11 அது
கள் அழிந்துபோம்; நீரோ நிலைநிற்கிறீர். அதுகள் எல்லாம் வஸ்திரம்போல் பழ
சாய்ப்போம். 12 அதுகளை ஒரு சால்வையைப்போல் சுருட்டுவீர்; அப்போது
மாறிப்போம். நீரோவென்றால் இருக்கிறபிரகாரமாக இருக்கிறீர்; உம்முடைய
வருஷங்கள் முடிந்துபோவதில்லை என்றுஞ் சொல்லியிருக்கிறது.

குரு. இதோ, நாம் தெரிந்துகொண்டவரும், நமது ஆத்துமம் பிரியமாயிருக்கிறவரும், நாம் ஆத
ரிக்கிறவருமாகிய நம்முடைய பணிவிடைக்காரன்; நம்முடைய ஆவியை அவர்மேல் வைக்
கிறோம்; அவர் சாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். ஒரு சமுத்திரந் துவக்க
மற்றச் சமுத்திரம் மட்டாகவும், ஆறு துவக்கிப் பூமியின் எல்லைகள் மட்டாகவும் ஆளுவார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவா. க, க–யச.

ஆதியிலே வார்த்தை இருந்தது; அவ்வார்த்தை பாராபரனிடத்தில் இருந்தது;
அவ்வார்த்தை பாராபரனுமாய் இருந்தது. 2 இது ஆதியிலே பாராபரனிடத்தில்
இருந்தது. 3 எல்லாம் அதினால் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அதையல்
லாமல் உண்டானதில்லை. 4 அதிலே சீவன் உண்டாயிருந்தது; அந்தச் சீவன்
மனுஷனுடைய வெளிச்சமாயிருந்தது. 5 வெளிச்சம் இருளிலே பிரகாசிக்கிறது;
ஆனால் இருள் அதை உணர்ந்துகொண்டதில்லை. 6 பாராபரனால் அனுப்பப்பட்ட
ஒரு மனுஷன் இருந்தான். அவன் பேர் யோவான். 7 இவன் தன்னால் எல்லாரும்
விசுவாசிக்கும்படிக்கு, வெளிச்சத்துக்குச் சாட்சிகொடுக்கச் சாட்சியாக வந்தான்.
8 அவன் அந்த வெளிச்சமாயிராமல், அந்த வெளிச்சத்துக்குச் சாட்சிகொடுக்க
வந்தான். 9 அது லோகத்திலே வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற
மெய்யான வெளிச்சமாயிருந்தது. 10 லோகத்தில் இருந்தார்; லோக...
லும் உண்டாயிற்று; ஆனால் லோகம் அவரை அறிந்ததில்லை. 11 தமக்குச் சொந்த
மானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்
ளாதேபோனார்கள். 12 ஆனால் எத்தனைபேர் அவரை ஏற்றுக்கொண்டார்களோ,
தம்முடைய நாமத்தின்பேரில் விசுவாசிக்கிற அத்தனைபேருக்கும் அவர் பாராபர
னுடைய பிள்ளைகளாகிறதற்கு அதிகாரங்கொடுத்தார். 13 அவர்கள் இரத்தங்களி
னாலாகிலும் மாமிசத்தின் சித்தத்தினாலாகிலும் புருஷனுடைய சித்தத்தினாலாகி
லும் பிறவாமல், பாராபரனாலே பிறந்தார்கள். 14 அந்த வார்த்தை மாமிசமாகி,
கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்ததாய் நம்மிடத்தில் வாசம்பண்ணினார்;
பிதாவுக்கு ஒரேபேறானவரின் மகிமையாக அவருடைய மகிமையைக் கண்டோம்.

முதலாம் பங்கு.

## கிறிஸ்து மகிமைவிளங்குதலின் பண்டிகை.

நிரு. எசா. சும, க-சு.

நீ எழும்பி வெளிச்சமாகு; ஏனெனில் உன் வெளிச்சம் வருகிறது, கர்த்தரு
டைய மகிமை உன்மேலே உதிக்கிறது. 2 ஏனெனில், இதோ, இருள் பூமியை
யும் அந்தகாரம் சனசதளங்களையும் மூடும்; ஆனால் உன்மேலே கர்த்தர் உதிக்கி
றார்; உன்மேலே அவருடைய மகிமை காணப்படும். 3 உன் வெளிச்சத்தண்டைக்
குச் சாதிகளும், உனக்கு உதிக்கிற ஒளிவண்டைக்கு இராசாக்களும் நடந்து வரு
வார்கள். 4 சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார். இவர்கள் எல்லாரும் கூட
டப்பட்டு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்திலிருந்துவந்து, உன் குமாரத்திகள்
உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள். 5 அப்போது நீ அதைக் கண்டு ஓடிவரு
வாய்; உன் இருதயம் அதிசயப்பட்டு விரிவாகும். ஏனெனில் கடற்கரையின்
திரள்கும்பு உன் வசமாகத் திரும்பி, சாதிகளின் பலத்த சேனை உன்னண்டைக்கு
வரும். 6 ஒட்டகங்களின் ஏராளமும் மீதியான் ஏப்பாத் தேசங்களின் வேகமான
ஒட்டகங்களும் உன்னை மூடும். சேபாவிலிருந்து அனைவரும் வந்து, பொன்னை
யும் தூபவர்க்கத்தையுங் கொண்டுவந்து, கர்த்தரின் துதிகளைச் சுவிசேஷமாய்ச்
சொல்லுவார்கள்.

குரு. சாதிகளே, அவருடைய சனத்தோடேகூடச் சந்தோஷப்படுங்கள். எல்லாச்சாதிகளே,
கர்த்தரைத் துதியுங்கள். எல்லாச் சனசமூகங்களே, அவரைப் புகழுங்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

• யகக

சுவி. மத். உ, க-மஉ.

ஏரோதே இராசாவின் நாட்களில் யூதேயாவின் ஊராகிய பெத்லகேமிலே
இயேசு பிறந்த பிற்பாடு, இதோ, சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து எருசலேமுக்கு
வந்து: 2 பிறந்திருக்கிற யூதருடைய இராசா எங்கே; ஏனென்றால் அவருடைய
நட்சத்திரத்தைக் கிழக்கிலே கண்டு, அவரைப் பணிந்துகொள்ளவந்தோம் என்றார்
கள். 3 ஏரோதே இராசா அதைக் கேட்டபோதோவெனில், அவனும் அவனோ
டேகூட எருசலேம் பட்டணத்தார் அனைவருங் கலங்கினார்கள். 4 அவன் சகல
பிரதான ஆசாரியரையுஞ் சனத்தின் வேதபாரகரையுங் கூட்டி, கிறிஸ்து பிறப்ப
தெங்கே என்று அவர்களைக் கேட்டு விசாரித்தான். 5 அவர்கள் அவனுக்குச்
சொன்னதாவது: யூதேயாவின் ஊராகிய பெத்லகேமில் தானே. அதேனென்
றால்: 6 யூதாவின் தேசமாகிய பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறிய
தல்ல; ஏனெனில் நம்முடைய சனமாகிய இஸ்ரவேலை ஆளப்போகிற பிரபு உன்
னிடத்திலிருந்து புறப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசியைக் கொண்டு எழுதப்
பட்டிருக்கிறது என்றார்கள். 7 அப்போது ஏரோதே சாஸ்திரிகளை இரகசியமாக
அழைத்து, நட்சத்திரங் காணப்பட்ட காலம் எது என்று அவர்களிடத்தில் உற்று
விசாரித்து, 8 அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி: நீங்கள் போய், பிள்ளையின்
செய்தியை நன்றாய் ஆராய்ந்துபாருங்கள். அதைக் கண்டபோதோவெனில்,
நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படிக்கு, அதை எனக்கு அறிவியுங்
கள் என்றான். 9 இராசா சொன்னதை அவர்கள் கேட்டுப் போனார்கள். இதோ,

நிருப சுவிசேஷ வாக்கியங்கள்.

அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்தின் மேல் வந்து
நிற்கும்மட்டும் அவர்களுக்கு முன்நடந்தது. 10 அவர்கள் நட்சத்திரத்தைக் கண்ட
போதோவெனில், மகா சந்தோஷமாக மிகுதியுஞ் சந்தோஷித்து, 11 வீட்டிலே
வந்து, பிள்ளையையும் அதின் தாய் மரியாளையுங் கண்டு, தாழ விழுந்து அதைப்
பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையுந் தூபவர்க்
கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள்.
12 ஆனால் ஏரோதேயண்டைக்குத் திரும்ப வேண்டாமென்று அவர்கள் சொப்ப
னத்தில் தெய்வேத்தனமாய் எச்சரிக்கப்பட்டு, மறுவழியாய்த் தங்கள் தேசத்திற்
குப் புறப்பட்டுப் போனார்கள்.

### மகிமைவிளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் க-ம் நாயிறு.

நிரு. ரோ. மஉ, க-சு.

இப்போதும், சகோதரரே, நீங்கள் புத்தியுள்ள ஆராதனைபண்ணுகிறவர்க
ளாய் உங்கள் சரீரங்களை சீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நற்பிரியமுமான
பலியாக நிறுத்த, பராபரனுடைய இரக்கங்களுக்காக உங்களுக்குப் புத்திசொல்லு
கிறேன். 2 நீங்கள் இந்தப்பிரபஞ்சத்துக்கொத்த வேஷந் தரிக்காமல், நீங்கள் பரா
பரனுடைய நன்றும் நற்பிரியமும் பரிபூரணமுமான சித்தம் ஏதென்று வகையறுக்
கும்படிக்கு, உங்கள் மனதின் புதிதாகுதலினால் மறுரூபமாகுங்கள். 3 என்ன
வெனில், எண்ணவேண்டியதுக்கு மிஞ்சி எண்ணாமல், பராபரன் அவனவனுக்குப்
பகிர்ந்த விசுவாசத்தின் அளவுக்குத் தகுதாய் மாத்திரம் அவனவன் தன்னை
எண்ண, நான் உங்களிலிருக்கிற ஒவ்வொருவனுக்கும் எனக்குக் கட்டளையிடப்
பட்ட கிருபையினாலே சொல்லுகிறேன். 4 ஏனென்றால் ஒரே சரீரத்திலே நமக்கு
அநேகம் அவயவங்கள் இருந்து, எல்லா அவயவங்களுக்கோவென்றால் ஒரே
தொழிலில்லாததுபோலே, 5 அநேகராயிருக்கிற நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீர
மாயிருக்கிறோம்; ஆனால் அவனவனைப் பார்த்தால், ஒன்றுக்கொன்று நாம் அவய
வங்களாயிருந்து, 6 நமக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படியே பலவித வரங்
களுள்ளவர்களாயிருக்கிறோம்.

குரு. இவர்மேலே கர்த்தருடைய ஆவியாகிய ஞானம் உணர்வென்றவைகளின் ஆவியும், ஆலோ
சனை பெலனென்றவைகளின் ஆவியும், அறிவு கர்த்தருக்குப் பயப்படுதலென்றவைகளின்
ஆவியுமானவர் தங்கியிருப்பார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். உ, சக-ருஉ.

அவருடைய தாய்தகப்பன் வருஷந்தோறும் பஸ்காவின் பண்டிகையிலே
எருசலேமுக்குப் போவார்கள். 42 அவர் பன்னிரண்டுவயதானபோது, அவர்கள்
பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய் ஏறி, 43 நாட்களை முடித்த
பிற்பாடு திரும்புகையில், பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்.
அதை யோசேப்பும் அவருடைய தாயும் அறியாமல், 44 அவர் பயணக்காரரு
டைய கூட்டத்திலே இருப்பாரென்று நினைத்து, ஒருநாள் பயணம் வந்து, உற

வின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடி, 45 அவ
ரைக் காணாமல், அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.
46 அப்போது சுற்றித்தேடினன்றால், மூன்று நாளைக்குப் பிற்பாடு அவரைத்
தெய்வாலயத்தில் போதகர் நடுவிலே உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசக்
கேட்கவும், அவர்களை இவர் கேட்கவுமாகக் கண்டார்கள். 47 ஆனால் அவர் பேசக்
கேட்கிற யாவரும் அவருடைய புத்திக்கும் பிரத்தியுத்தரங்களுக்கும் பிரமித்
தார்கள். 48 அவரைக் கண்டு அதிசயப்பட்டார்கள்; அவருடைய தாய் அவ
ருடனே: மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச்செய்தாய்; இதோ, உன் தகப்பனும்
நானும் வேதனையுடனே உன்னைத் தேடினோம் என்றாள். 49 அவர் இவர்களுடனே:
நீங்கள் என்னைத் தேடினதேது; என்பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்
டியதென்று அறியீர்களோ என்றார். 50 ஆனால் அவர் தங்களுக்குச் சொன்ன வார்த்
தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. 51 அவர்களுடனே கூட அவர் இறங்
கிப்போய், நாசரேத்துக்கு வந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவரு
டையதாய் இந்த வர்த்தமானங்களை எல்லாந் தன் இருதயத்திலே வைத்தாள்.
52 இயேசுவோவெனில் ஞானத்திலேயும், வளர்த்தியிலேயும், பராபரனிடத்தி
லும் மனுஷரிடத்திலுங் கிருபையிலேயும் அதிகப்பட்டார்.

### மகிமைவிளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் ௨-ம் ஞாயிறு.

நிரு. ரோ. ௰௨, ௭-௰௬.

தீர்க்கதரிசனமானாலும் விசுவாசப்பிரமாணத்துக்கு ஒத்ததாயிருக்கக் கட
... ஒருவன் ஊழியக்காரனானால் ஊழியத்திலும், போதிக்கிறவனானால் போத
கத்திலும், 8 புத்தி சொல்லுகிறவனானால் புத்தி சொல்லுகிறதிலுந் தரித்திருக்கக்
கடவான். கொடுக்கிறவன் கபடில்லாமையாய்க் கொடுக்கவும், முதலாளியான
வன் சாக்கிரதையுடனே இருக்கவும், இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே
செய்யவுங்கடவான். 9 சிநேகம் மாயமற்றதாயிருப்பதாக. பொல்லாப்பை அரு
வருத்து, நன்மையில் ஒட்டிக்கொண்டிருங்கள். 10 சகோதர சிநேகத்திலே ஒன்
றுக்கொன்று இனபட்சமாயிருங்கள். கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர்
முந்திக்கொள்ளுங்கள். 11 சாக்கிரதையிலே அசடராயிராதேயுங்கள். ஆவியிலே
அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். 12 நம்பிக்கையிலே சந்
தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். செபத்திலே
உறுதியாய்த் தரித்திருங்கள். 13 பரிசுத்தவான்களுடைய தாழ்ச்சிகளுக்கு உதவி
செய்யுங்கள். பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ளக் கருத்தாயிருங்கள். 14 உங்களைத்
துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; சபிக்காமல் ஆசீர்வதியுங்கள். 15 சந்
தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்
கள். 16 ஒன்றுக்கொன்று ஏகசிந்தையாயிருங்கள். மேட்டிமையானதுகளைச் சிந்
தியாமல், தாழ்மையானதுகளுக்கு உடந்தையாகுங்கள்.

குரு. கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவனெல்லாம் பாக்கியவான். இதோ, நாம உன்னண்டைக்கு வந்து, உன்னை ஆசீர்வதிப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.



சுவி. யோவா. ௨, ௧-௰௧.

மூன்றாம் நாளிலே கலிலேயாவின் ஊராகிய கானாவிலே கலியாணமாயிருந்
தது. அங்கே இயேசுவினுடைய தாயும் இருந்தாள். 2 ஆனால் இயேசுவும் அவ
ருடைய சீஷருங் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். 3 திவிதிராட்
சப்பழரசங் குறைபட்டபோது, இயேசுவினுடைய தாய் அவருடனே: திவிதி
ராட்சப்பழரசம் அவர்களுக்கு இல்லை என்றாள். 4 இயேசு அவளுடனே: இஸ்
திரீயே, எனக்கும் உனக்கும் என்ன; என்வேளை இன்னம் வந்ததில்லை என்றார்.
5 அவருடைய தாய் பணிவிடைக்காரருடனே: உங்களுக்கு அவர் என்ன சொல்லுகி
றாரோ, அதைச் செய்யுங்களென்றாள். 6 ஆனால் அங்கே யூதர் சுத்தம் பண்ணிக்
கொள்ளும் முறைமையின்படியே ஆறு கற்சாடிகள் வைத்திருந்தது. ஒவ்வொன்று
இரண்டு மூன்று குடம் பிடித்தது. 7 இயேசு அவர்களுடனே: சாடிகளிலே தண்
ணீரை நிரப்புங்கள் என்றார். அவர்கள் அதுகளை வாயுமட்டாக நிரப்பினார்கள்.
8 அப்போது அவர்களுடனே: நீங்கள் இப்போது மொண்டு, பந்தி விசாரிப்புக்
காரனண்டை கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டுபோனார்கள்.
9 ஆனால் திவிதிராட்சப்பழரசமாய்ப் போன தண்ணீரைப் பந்திவிசாரிப்புக்காரன்
ருசிபார்த்து, அது எங்கேயிருந்து வந்ததென்கிறதைத் தண்ணீரை மொண்ட
பணிவிடைக்காரர் அறிந்ததேயொழிய, தான் அறியாதிருக்கிறபோது, பந்திவி
சாரிப்புக்காரன் மணவாளனைக் கூப்பிட்டு, 10 அவனுடனே: எந்தமனுஷனும்
முந்தி நல்ல திவிதிராட்சப் பழரசத்தை வார்த்து, சனங்கள் திருப்தியடைந்திருந்
தால் அப்போது இளப்பமானதை வார்ப்பான்; நீ நல்லரசத்தை இதுவரைக்கும்
வைத்துவைத்தாய் என்றான். 11 அடையாளங்களுடைய இந்தத் துவக்கத்தை
இயேசு கலிலேயாவின் ஊரான கானாவிலே செய்து, தம்முடைய மகிமையை
வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர் அவர்பேரிலே விசுவாசித்தார்கள்.

### மகிமைவிளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் ௩-ம் ஞாயிறு.

நிரு. ரோ. ௰௨, ௰௬-௨௧.

உங்களில்தானே புத்திமான்களாயிராதேயுங்கள். 17 ஒருவனுக்குந் தீமைக்
குத் தீமையைச் சரிக்கட்டாதேயுங்கள். எல்லா மனுஷருக்கும் முன்பாக நன்மை
யானதுகளைப் பராமரியுங்கள். 18 கூடுமானால் எல்லா மனுஷரோடும் உங்களாலே
ஆனமட்டுஞ் சமாதானமாயிருங்கள். 19 பிரியமானவர்களே, நீங்கள் சரிக்குச் சரிக்
கட்டாமல், தேவகோபத்துக்கு இடங்கொடுங்கள்; ஏனென்றால்: நீதியைச் சரிக்
கட்டுதல் நம்முடையது, நாம் பதிலுக்குக் கொடுப்போமென்று கர்த்தர் சொல்லு
கிறாரென்று எழுதியிருக்கிறது. 20 ஆகையால் உன் சத்துருவுக்குப் பசியானால்,
அவனுக்கு அசனங்கொடு; அவனுக்குத் தாகமானால், அவன் தாகத்தைத் தீர்;
ஏனெனில் நீ இப்படிச் செய்கிறதினால் அவன் தலையின்மேல் எரிகிற கரிகளைக் குவிப்
பாய். 21 நீ பொல்லாப்பினால் வெல்லப்படாமல், பொல்லாப்பை நன்மையினாலே
வெல்லு.

குரு. மெத்தனவுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, மகாசமாதானத்தினாலே மன மகிழ்ச்சியாயிருப்பார்கள். சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ந்துகொண்டேயிருந்து, மனிதரில் ஏழைகள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே களிகூருவார்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். அ, க-ம௩.

அவர் பர்வதத்திலிருந்து இறங்கினபோது திரள்கும்புகள் அவரைப் பின்
சென்றது. 2 இதோ, ஒரு குஷ்டரோகி வந்து, அவரைப் பணிந்து: ஆண்டவரே,
உமக்கு மனதுண்டானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆம் என்றான். 3 அப்
போது இயேசு கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்கு மனதுண்டு, சுத்தமாகு
என்றார். உடனே அவன் குஷ்டரோகஞ் சுத்தமாயிற்று. 4 இயேசு அவனுடனே:
இதை யாருக்குஞ் சொல்லாதபடிக்குப் பார்; ஆனால் போய் ஆசாரியனுக்கு உன்
னைக் காண்பித்து, மோசே கற்பித்த காணிக்கையை அவர்களுக்குச் சாட்சியாகச்
செலுத்து என்றார். 5 இயேசு கப்பர்நகூமுக்குள் பிரவேசிக்கையில், நூற்றுக்குச்
சேர்வைக்காரன் அவரண்டை வந்து, அவரை வேண்டிக்கொண்டு: 6 ஆண்டவரே,
என் வேலைக்காரன் மிகவும் உபாதிப்பட்டு, வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடக்கி
றான் என்றான். 7 இயேசு அவனுடனே: நான் வந்து அவனைக் குணமாக்குவேன்
என்றார். 8 சேர்வைக்காரன் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: ஆண்டவரே,
நீர் என் தலைவாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவான் அல்ல; ஒரு வார்த்தை
மாத்திரஞ் சொல்லும், அப்போது என் வேலைக்காரன் ஆரோக்கியமாவான்.
9 அதேனென்றால் நான் அதிகாரத்துக்குக் கீழான மனுஷனாயிருந்தும், எனக்குக்
கீழாயிருக்கிற சேவகர் எனக்குண்டு. நான் ஒருவனைப் போ என்க, போகிறான்;
பின்னொருவனை வா என்க, வருகிறான்; என் பணிவிடைக்காரனுக்கு: இன்ன
தைச் செய் என்றுசொல்ல, செய்கிறானென்றான். 10 இயேசு இதைக்கேட்டு ஆச்
சரியப்பட்டு, பின்செல்லுகிறவர்களுடனே சொன்னதாவது: மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன், இஸ்ரவேலிலே முதலாய் நான் இப்படிக்கொத்த விசு
வாசத்தைக் கண்டதில்லை. 11 ஆனால் உங்களுக்குச்சொல்லுகிறேன், அநேகம்
பேர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து, வானராச்சியத்தில் ஆபிரகாம்
ஈசாக்கு யாக்கோபு என்றவர்களுடனே கூடப் பந்தியிருப்பார்கள். 12 இராச்சியத்
தின்புத்திரரோ எல்லாத்துக்கும் புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்.
அங்கே அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். 13 அப்போது இயேசு
சேர்வைக்காரனுடனே: போ, நீ விசுவாசித்தபடி உனக்காகக் கடவதென்றார்.
அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் ஆரோக்கியமானான்.

## மகிமைவிளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் ச-ம் நாயிறு.

நிரு. ரோ. ம௩, அ-ம.

ஒருவரை ஒருவர் சிநேகிக்கிற கடனேயல்லாமல், ஒருவனுக்கும் ஒன்றுங்
கடன்பட்டிராதேயுங்கள்; ஏனெனில் மற்றவனைச் சிநேகிக்கிறவன் நியாயப்பிரமா
ணத்தை நிறைவேற்றினான். 9 ஏனெனில்: விபசாரம் பண்ணாயாக; கொலைசெய்யா
யாக; களவு செய்யாயாக; பொய்ச்சாட்சி சொல்லாயாக; இச்சிக்காயாக என்ற
தும், வேறே கற்பனை ஏதேதுண்டோ, அதுவும்: உனக்கடுத்தவனை உன்னைப்
போலே சிநேகிப்பாயாக என்ற ஒரேவார்த்தையின் தொகையிலே அடங்கியிருக்
கிறது. 10 சிநேகம் அடுத்தவனுக்குப் பொல்லாப்பைச் செய்யாது; அப்படியே
சிநேகம் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.



குரு. கற்பனையினுடைய இலக்கு சுத்த இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாய்மற்ற விசு
வாசத்திலும் பிறக்குஞ் சிநேகந்தான். பயப்படாதே, சிறுமந்தையே; ஏனெனில் உங்கள்
பிதா உங்களுக்கு இராச்சியத்தைக் கொடுக்கப் பிரியசித்தமாயிருக்கிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். அ, உ௩-உஎ.

அவர் படவில் ஏறுகிறபோது அவர் சீஷர்கள் அவர்பிறகே சென்றார்கள்.
24 இதோ, படவு அலைகளினால் மூடப்படத் தக்கதாயக் கடலில் பெரிய கொந்
தளிப்பு எடுத்தது; அவரோவென்றால் நித்திரைபண்ணினார். 25 அப்போது அவ
ருடைய சீஷர்கள் சேர்ந்துவந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே, எங்களை இரட்
சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். 26 அப்போது அவர் இவர்களுடனே:
அற்பவிசுவாசிகளே, ஏன் பயமடைந்திருக்கிறீர்கள் என்று சொல்லி, எழுந்தி
ருந்து, காற்றுகளையும் அலையும் அதட்டினார். அப்போது மகா அமைதல் உண்
டாயிற்று. 27 ஆனால் மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ,
காற்றுகளுங் கடலும் அவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.

## மகிமை விளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் ரு-ம் நாயிறு.

நிரு. கொலோ. ௩, ௰உ-௰எ.

ஆனபடியினால், நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும்
பிரியருமாய் மன உருக்கமான இரக்கத்தையும் அன்பையும் மனத்தாழ்மையையும்
மெத்தனவையும் நீண்ட சாந்தத்தையுந் தரித்துக்கொண்டு, 13 ஒருவரை ஒருவர்
பொறுத்திருந்து, ஒருவன் பேரில் ஒருவனுக்குக் குறையுண்டாயிருந்தால்,
கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்
கள். 14 ஆனால் இதுகளுக்கெல்லாம் மேலாகப் பூரண சற்குணத்தின் கட்டாகிய
சிநேகத்தையே தரித்துக்கொள்ளுங்கள். 15 பராபரனுடைய சமாதானம் உங்கள்
இருதயங்களில் ஆளக் கடவது. அதற்கு நீங்கள் ஒரே சரீரமாயிருக்க அழைக்கப்
பட்டவர்களுமாமே. நன்றியறிந்தவர்களுமாயிருங்கள். 16 கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள் பரிபூரணமாக எல்லா ஞானத்தோடும் வாசமாயிருந்து, நீங்கள்
சங்கீதங்களாலுங் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் உங்களைப் போதி
த்து, உங்களுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தருக்கு
இனிதாய்ப் பாடி, 17 நீங்கள் வார்த்தையிலாகிலுங் கிரியையிலாகிலும் என்ன செய்
தாலும், அதையெல்லாங் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே செய்து, அவர்
முன்னிலையாகப் பிதாவாகிய பராபரனை இஸ்தோத்திரியுங்கள்.

குரு. நம்முடைய பெலனாகிய பராபரனைக் கம்பீரித்துப்பாடி, யாக்கோபின் பராபரனுக்கென்று
ஆர்ப்பரியுங்கள். அவர் நெரிந்தநாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அவிக்காம
லும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௰௩, உ௪-௩௰.

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினார். அதாவது:
வானராச்சியம் தன் வயலில் நல்ல விதையை விதைக்கிற மனுஷனுக்கு ஒப்பாம்.

ருக்கிறது. 25 ஆனால் மனுஷர் நித்திரைபண்ணுகையில், அவன் சத்துராதி வந்து,
கோதும்பைக்குள் களைகளை விதைத்துப்போட்டுப்போனான். 26 பயிரானது வளர்ந்
து, கனியைப் பிறப்பிக்கிறபோது, களைகளுங் காணப்பட்டது. 27 வீட்டெசமா
னுடைய பணிவிடைக்காரர் சேர்ந்துவந்து, அவனுடனே: ஆண்டவனே, நீர்
உமது வயலில் நல்ல விதையை விதைத்ததில்லையோ; பின்னை களைகள் அதுக்கு
எங்கேயிருந்து வந்ததென்றார்கள். 28 அவன் இவர்களுக்கு: சத்துராதிமனுஷன்
அதைச் செய்தான் என்றான். ஆனால் பணிவிடைக்காரர் அவனுடனே: நாங்கள்
போய் அதுகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோ என்றார்கள். 29 அதற்கு
அவன்: இல்லை, களைகளைப் பிடுங்குகையில் நீங்கள் கோதும்பையைக் கூட
வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்.
30 அறுப்புநாளில் நான் அறுக்கிறவர்களுடனே: முந்தக் களைகளைப் பிடுங்கி, அது
களைச் சுட்டெரிக்கிறதுக்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதும்பையையோ என்
களஞ்சியத்தில் சேருங்களென்பேனென்று சொன்னானென்றார்.

**மகிமை விளங்குதலின் பண்டிகைக்குப் பின் வரும் ௬-ம் நாயிறு.**

பேதுரு. ௨ பேது. க, யசு–உக.

சூட்சமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாய் உங்களுக்கு நம்முடைய
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய வல்லமையையும் வருகையையும் நாங்
கள் அறிவியாமல், 17 அவர் பிதாவாகிய பராபரனாலே கனமும் மகிமையும் பெற்று:
இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனாயிருக்கிறாரென்கிற சத்தம்
அவருக்கு மகா மேன்மையான மகிமையிலிருந்து வருகிறபோது, அவருடைய
மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாய் அதை உங்களுக்கு அறிவித்தோம்.
18 இந்தச் சத்தத்தை நாங்கள் அவரோடேகூடப் பரிசுத்த பர்வதத்திலிருக்கை
யில், வானத்திலிருந்து வரக் கேட்டோம். 19 மகாதிடமான தீர்க்கதரிசனவசன
மும் நமக்கு உண்டே, பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்
கும்மட்டும் நீங்கள் இருளான ஸ்தலத்திலே பிரகாசிக்கிற வெளிச்சமாகிய அதைக்
கவனித்திருக்கிறது நற்செய்கையாயிருக்கிறது. 20 வேத எழுத்திலுள்ள ஒரு தீர்க்
கதரிசனமுஞ் சுயதோற்றலான வியாக்கியானமுள்ளதல்லவென்கிறதை முதல் முதல் அறி
யுங்கள். 21 ஏனெனில் தீர்க்கதரிசனம் பூர்வத்தில் மனுஷன் சித்தத்தினால் வரா
மல், பராபரனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசி
னார்கள்.

குரு. நான் நீதியிலே உம்முடைய சமுகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது, உமது
சாயலால் திருப்தியாவேன். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்க
ளும் அவருடனேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௧௭, ௧–௯.

ஆறு நாளைக்குப் பிற்பாடு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவன்
தம்பி யோவானையுங் கூட்டிக்கொண்டு, தனிப்புற உயர்ந்த பர்வதத்தின்மேல்
அழைத்துப்போய், 2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகஞ் சூரிய



னைப்போலே பிரகாசித்தது; அவர் வஸ்திரங்களோ வெளிச்சத்தைப்போல்
வெண்மையாயிற்று. 3 இதோ, மோசேயும் எலியாவும் அவர்களுக்குத் தரிசனை
யாகி, அவரோடே பேசிக்கொண்டிருந்தார்கள். 4 அப்போது பேதுரு பிரத்தி
யுத்தாரமாக இயேசுவுடனே: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது.
உமக்குச் சித்தமானால் இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம்; உமக்கு ஒன்
றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றும் என்றான். 5 அவன் இன்னம்
பேசுகையில், இதோ, ஒளியுள்ளமேகம் அவர்கள்மேல் நிழலிட்டதும் அல்லா
மல், இதோ, மேகத்திலிருந்து: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச
குமாரனாயிருக்கிறார்; இவர் சொல் கேளுங்கள் என்கிற ஒரு சத்தம் பிறந்தது.
6 சீஷர்கள் இதைக் கேட்டு முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். 7 அப்
போது இயேசு சேர்ந்துவந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படா
தேயுங்களென்றார். 8 அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கையில், இயேசு ஒரு
வரைத் தவிர ஆரையுங் காணவில்லை. 9 அவர்கள் பர்வதத்திலிருந்து இறங்குகிற
போது, இயேசு அவர்களுக்கு: மனுஷனுடைய குமாரன் மரித்தோரிலிருந்து
எழுந்திருக்கும்மட்டும் இந்தத் தரிசனையை ஆரோடுஞ் சொல்லாதேயுங்களென்று
கற்பித்தார்.

**எழுபதாம் நாளென்கிற நாயிறு.**

திரு. ௧ கொரி. ௯, உ௪–௧0, ௫.

ஓடுஞ் சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்களாகிலும், ஒருவனே பந்தயத்
தைப் பெறுகிறானென்று அறியீர்களோ; நீங்கள் அதைப் பிடிக்கும்படியாய் ஓடுங்
கள். 25 ஆனால் போராடுகிறவனெல்லாம் எல்லாத்திலும் இச்சை அடக்கமாயிருக்
கிறான்; அவர்களோ அழிவுள்ள கிரீடத்தையும் நாமோ அழிவற்றதையும் பெறும்
படிக்குத் தானே. 26 ஆனபடியால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; நான்
ஆகாசத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். 27 மற்றவர்களுக்குப் பிரசங்
கிக்கிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என்னுடைய சரீரத்தை
நான் ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். 1 ஆனால், சகோதரரே, நம்முடைய பிதாக்
களெல்லாரும் மேகத்துக்குக் கீழேயிருந்தார்கள்; எல்லாருஞ் சமுத்திரத்தை
உருவ நடந்து வந்தார்கள்; 2 எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலுஞ்
சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்; 3 எல்லாரும் ஒரே
ஞான போசனத்தைப் புசித்தார்கள்; 4 எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்
குடித்தார்கள்; அதேதெனில் கூடவரும் ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடிச்
தார்கள். அந்தக்கன்மலையோ கிறிஸ்துவாயிருந்தார். 5 ஆகிலும் அவர்களில் மிச்ச
மானவர்கள் பேரிலே பராபரன் பிரியமாயிருந்ததில்லை; அதேதென்றால் வனாந்
தரத்திலே மடிவிக்கப்பட்டார்கள் என்கிறதுகளை நீங்கள் அறியாதேபோக எனக்கு
மனதில்லை.

குரு. பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை நடப்பியுங்கள்; ஏனெனில் இதய
மாய் மனதையும் பலத்தையும் உங்களில் உண்டாக்குகிறவர் பராபரன். அநாதி சிநேகத்
தால் உன்னைச் சிநேகித்தோம்; ஆனபடியால் கிருபையாய் உன்னை இழுத்துக்கொள்ளு
கிறோமென்று சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௨௰, ௧—௰௬.

அதேனென்றால் வானராச்சியம் வீட்டெசமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்
பாயிருக்கிறது. அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களைக் கூலி
பொருந்தி அழைக்க அதிகாலமே புறப்பட்டான். 2 வேலையாட்களுடனே நா
ளொன்றுக்கு ஒருபணமென்று பொருந்திக்கொண்டு, அவர்களைத் தன் திராட்
சத்தோட்டத்துக்கு அனுப்பினான். 3 மூன்றுமணி வேளையிலும் புறப்பட்டு,
கடைத்தெருவிலே வீணராய் நிற்கிற வேறேசிலரைக் கண்டான். 4 அவர்களுட
னே: நீங்களுந் திராட்சத் தோட்டத்தில் போங்கள்; நியாயமானபடி உங்க
ளுக்குத் தருவேனென்றான். 5 அவர்கள் போனார்கள். திரும்பவும் ஆறும் ஒன்ப
தாம் மணிவேளையில் புறப்பட்டு, அவ்விதமாய்ச் செய்தான். 6 பதினோராம் மணி
வேளையிலும் அவன் புறப்பட்டு, வீணராய் நிற்கிற வேறேசிலரைக் கண்டு, அவர்
களுடனே: நீங்கள் பகல்முழுதும் இங்கே வீணராய் நிற்பானேன் என்றான். 7 அவர்
கள் அவனுடனே: எங்களை யாரும் வேலைகொண்டதில்லை என்றார்கள். அவர்க
ளுடனே: நீங்களும் திராட்சத் தோட்டத்தில் போங்கள்; நியாயமானபடி
வாங்கிக்கொள்ளுவீர்கள் என்றான். 8 அஸ்தமனமானபோதோவெனில், தி
ராட்சத்தோட்டத்துக்கு எசமான் தன் காரியக்காரனுடனே: நீ வேலையாட்களை
அழைத்து, பிந்தினோர்துவக்கி முந்தினோர்மட்டுக்கும் அவர்களுக்குக் கூலியைக்
கொடு என்றான். 9 அப்படியே பதினோராம் மணிவேளையில் வேலைகொள்ளப்
பட்டவர்கள் வந்து, ஒவ்வொருபணத்தை வாங்கினார்கள். 10 பிறகு முந்தினோர்
வந்து, தங்களுக்கு அதிகம் கிடைக்குமென்று எண்ணியிருந்தும் அவர்களும் ஒவ்வொரு
பணத்தை வாங்கினார்கள். 11 வாங்கி, வீட்டெசமானுக்கு விரோதமாய் முறு
முறுத்து, 12 இந்தப் பிந்தினவர்கள் ஒரே மணிநேரம் வேலை செய்தார்கள்; நீரோ
அவர்களைப் பகலின் பாரத்தையும் வெயிலையுஞ் சகித்த எங்களுக்குச் சரியாக்கி
னீர் என்றார்கள். 13 அவனோவெனில் பிரத்தியுத்தாரமாக அவர்களில் ஒருவனுக்
குச்சொன்னதாவது: சிநேகிதனே, உனக்கு நான் அநியாயஞ் செய்ய இல்லை; நீ
என்னுடனே ஒரு பணத்துக்குச் சம்மதித்துக் கொண்டதில்லையோ. 14 உன்னு
டையதை நீ வாங்கிக்கொண்டு போ; ஆனால் உனக்குக் கொடுத்ததுபோல் இந்தப்
பிந்தினவனுக்குங் கொடுக்க எனக்கு மனதுண்டு. 15 அல்லது நான் என்னுடை
யதை என் மனதின்படியே செய்ய எனக்கு அதிகாரம் இல்லையோ. அல்ல
வென்று நான் நல்லவனாகையால், நீ வன்கண்ணனாயிருக்கிறாயோ என்றான்.
16 இவ்விதமாகப் பிந்தினோர் முந்தினோரும், முந்தினோர் பிந்தினோருமாய் இருப்
பார்கள்; அதேனென்றால் அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்ளப்
பட்டவர்களோ கொஞ்சம் என்றார்.

## அறுபதாம் நாளென்கிற நாயிறு.

நிரு. ௨ கொரி. ௰௧, ௰௯—௰௨, ௯.

மதியுள்ள நீங்கள் மதியற்றவர்களை நல்லமனதாய்ச் சகித்திருக்கிறீர்கள்.
20 அதேதென்றால் ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் பட்சித்தா
லும், ஒருவன் பிடித்துக்கொண்டாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன்
உங்களை முகத்தில் அறைந்தாலும், சகித்திருக்கிறீர்கள். 21 நாங்கள் பெலவீன



னதுபோல் [illegible]னப்படி சொல்லுகிறேன்; ஆனால் யாதொருவன் எதிலே
துணிவாயிருக்கிறானோ, அதிலே நானுந் துணிவாயிருக்கிறேன் என்று மதியில்
லாமையிலே சொல்லுகிறேன். 22 எபிரேயராயிருக்கிறார்களோ, நானும் எபிரே
யன்; இஸ்ரவேலராயிருக்கிறார்களோ, நானும் இஸ்ரவேலன்; ஆபிரகாமின் வித்
தாயிருக்கிறார்களோ, நானும் ஆபிரகாமின்வித்து. 23 கிறிஸ்துவின் ஊழியக்கா
ராயிருக்கிறார்களோ, நான் அவர்களுக்குமேற்பட்டவனென்று மதிகேடனாய்ச்
சொல்லுகிறேன். நான் வேலைகளில் அதிகமும்; பட்ட அடிகளில் அதிகமும்,
காவல்பண்ணப்பட்டதில் அதிகமுமானவன். நான் மரண அவதிகளிலும் வெகு
விசை அகப்பட்டவன். 24 யூதர் கையில் ஒன்றுகுறைய நாற்பது அடியாய் ஐந்து
தரம் பட்டேன்; 25 மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன்; ஒரு தரங் கல்
லெறியுண்டேன்; மூன்று தரங் கப்பல் சேதமானதிலே இருந்தேன்; ஒரு இராப்
பகலை முழுதும் ஆழத்திலே போக்கினேன். 26 அநேகந்தரம் வழிப்பயணங்களைப்
பண்ணினேன். ஆறுகளுடைய மோசங்களிலும், கள்ளர் மோசங்களிலும், சுய
சாதியாரால் வந்த மோசங்களிலும், புறச்சாதியாரால் வந்த மோசங்களிலும், ஊரி
லுண்டான மோசங்களிலும், வனாந்தரத்திலுண்டான மோசங்களிலும், சமுத்தி
ரத்திலுண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்திலுண்டான மோசங்
களிலும், 27 வேலையிலும், வருத்தத்திலும், வெகுவிசை கண்விழிப்புகளிலும், பசி
யிலும், தாகத்திலும், வெகுவிசை உபவாசங்களிலும், குளிரிலும், அம்மணத்திலும்
இருந்தேன். 28 புறக்காரியங்கள் தவிர, எனக்கு அனுதினமும் சந்தடி வரத்தும் எல்
லாச்சபைகளின் விசாரிப்பும் இருக்கிறது. 29 எவனடைந்தபெலவீனம் எனக்
குப் பெலவீனம் உண்டாகாதிருக்கும் எவனடைகிற இடறல் என்னை எரியப்
பண்ணாதிருக்கும். 30 மேன்மைபாராட்டவேண்டுமானால், என் பெலவீனத்துக்
கடுத்ததுகளைச் சொல்லி மேன்மைபாராட்டுவேன். 31 என்றென்றைக்கும் இஸ்
தோத்திரிக்கப்பட்ட பராபரனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்
பிதாவுமானவர் நான் பொய்சொல்லேனென்று அறிவார். 32 தமஸ்குவிலே
அரேத்தா இராசாவினுடைய சனத்தலைவன் என்னைப் பிடிக்கவேண்டுமென்று
தமஸ்கியருடைய பட்டணத்தைக் காவல்வைத்துக் காத்தான். 33 அப்போது பல
கணியிலிருந்து கூடையிலே மதில்வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவன் கைகளுக்
குத் தப்பிப்போனேன். 1 மேன்மைபாராட்டுகிறது எனக்குப் பிரயோசனமா
காதே; ஏனெனில் கர்த்தருடைய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையுஞ்
சொல்ல வருகிறேன். 2 கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். இவன்
பதினாலு வருஷத்துக்குமுன்னே மூன்றாவதானவானம் மட்டுக்கும் எடுக்கப்பட்
டான். சரீரத்துக்குள்ளானவனாகவோ என்று அறியேன்; சரீரத்துக்குப் புறம்பா
னவனாகவோ என்று அறியேன்; பராபரன் அறிவார். 3 இப்படிப்பட்ட மனுஷனை
அறிவேன். அவன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷன் பேசத்தகாத வாக்குக்கு
எட்டா வார்த்தைகளைக் கேட்டான். 4 சரீரத்துக்குள்ளானவனாகவோ சரீரத்துக்
குப் புறம்பானவனாகவோ என்று அறியேன்; பராபரன் அறிவார். 5 இப்படிக்
கொத்தவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்; ஆனால் என்னைத்தானேகுறித்து
நான் என் பெலவீனங்கள் பேரிலே ஒழிய, வேறொன்றின் பேரிலும் மேன்மை
பாராட்டுவதில்லை. 6 மேன்மை பாராட்டப்போனாலும், நான் மதியற்றவனாயிருப்
பதில்லை; ஏனெனில் உண்மையைச் சொல்லுவேன். ஆனால் யாதொருவன் என்
னிடத்தில் காண்கிறதுக்கும் அல்லது என்னால் கேட்கிறதுக்கும் அதிகமாய் என்னை

எண்ணும்படிக்கு அதைச் செய்யாதிருக்கிறேன். 7 வெ[illegible]தல்களுடைய
மேன்மையினுலும் என்னை நான் உயர்த்தாதபடிக்கு, எனக்கு ஒரு முள்ளு மாமி
சத்தில் கொடுக்கப்பட்டது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு என்னைக் குட்டுந்
சாத்தானுடைய தூதன்தானே. 8 இதுக்காக மூன்றுவிசை, அது என்னைவிட்டு
நீங்க, கர்த்தரை வேண்டிக்கொண்டேன். 9 ஆனால் அவர் என்னுடனே: நம்மு
டைய கிருபை உனக்குப் போதும், ஏனென்றால் பெலவீனத்திலே நம்முடைய
பெலன் நிறைவேறுகிறதென்றார். ஆகையால் கிறீஸ்துவினுடைய பெலன் என்
மேல் இறங்கியிருக்கிறதுக்காக நான் வெகு அதிக விருப்பமாய் என் பெலவீனங்க
ளின் பேரிலே மேன்மை பாராட்டுவேன்.

குரு. பராபரனாகிய கர்த்தர் சூரியனுங் கேடயமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையை
யும் அளிப்பார். நம்முடைய வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் நம்மிடத்
திற்குத் திரும்பாமல், அது நாம் விரும்புகிறதைச் செய்து, நாம் அதை அனுப்பின காரியம்
ஆகும்படியாய் வாய்க்கும் என்று சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். அ, ௪-௰௫.

வெகு கும்புஞ் சகல [illegible]ரிலுமிருந்து அவரண்டையிலே வந்தவர்களுங் கூடின
போதோவெனில், அவர் உவமையாய்ச் சொன்னதாவது: 5 விதைக்கிறவன் தன்
விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சிலது வழியருகே
விழுந்து மிதியுண்டது. ஆகாசத்துப் பறவைகளும் வந்து, அதைப் பட்சித்துப்
போட்டது. 6 வேறே சிலது கற்பாறையின் மேல் விழுந்தது. அது முளைத்தபின்,
அதற்கு ஈரமில்லாததினால், உலர்ந்து போயிற்று. 7 வேறே சிலது முள்ளுக்கு
நடுவே விழுந்தது; முள்ளுக்கள் கூடமுளைத்து, அதை நெருக்கிப்போட்டது.
8 வேறே சிலது நல்ல நிலத்தில் விழுந்தது; அது முளைத்து, ஒன்று நூறுபலன்
தந்தது என்றார். இதுகளைச் சொல்லி, கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவான்
என்று கூப்பிட்டார். 9 அவருடைய சீஷரோவென்றால் இந்த உவமை என்ன
வென்று அவரைக் கேட்டார்கள். 10 அவர் சொன்னதாவது: பராபரனுடைய
இராச்சியத்தின் இரகசியங்களை அறிதல் உங்களுக்கு அளிக்கப்பட்டது; மற்ற
வர்களோவெனில் கண்டுங் காணாமலுங் கேட்டும் உணராமலுமிருக்க, அவர்க
ளுக்கு உவமைகளாய் அளிக்கப்பட்டது. 11 ஆனால் உவமையின் அர்த்தமாவது:
விதை பராபரனுடைய வசனமாயிருக்கிறது. 12 வழியருகே விதைக்கப்பட்ட
வர்களோ கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். பிற்பாடு அவர்கள் விசுவாசித்து
இரட்சிக்கப்படாதபடிக்கு, பிசாசு வந்து, வசனத்தை அவர்கள் இருதயத்தினி
ருந்து எடுத்துப்போகிறது. 13 கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்களோவெ
னில், கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்
கள்; ஆனால் இவர்களுக்கு வேர் இல்லை, சிலகாலம் விசுவாசித்து, சோதனையின்
காலத்திலே பின்வாங்குகிறார்கள். 14 முள்ளுக்களில் விழுந்ததோவெனில், இவர்
கள் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; ஆனால் போய், கவலைகளினாலும் ஐசுவரியத்
தினாலுஞ் சீவனத்தின் செல்விக்கைகளினாலும் நெருக்கிப்போடப்பட்டு, பல
னுக்கு வராதிருக்கிறார்கள். 15 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டதோவெனில்,



இவர்கள் வ[illegible]த்தைக் கேட்டு, நன்றாஞ் சற்குணமுமான இருதயத்திலே காத்து,
பொறுமையுடனே கனிகொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்றார்.

## ஐம்பதாம் நாளென்கிற நாயிறு.

நிரு. ௧ பேது. ௩, ௰௮-௨௨.

[illegible]மையை பாவங்கள் நிமித்தம் கிறிஸ்துவாகிய நீதிபரரும் அநீதியர்
களுக்காகப் பாடுபட்டு, தாம் நம்மைப் பராபரனண்டைக்குச் சேர்க்கத் தக்கதாக,
மாமிசத்திலே கொலையுண்டு, ஆவியாலே உயிர்ப்பிக்கப்பட்டார். 19 அதிலே அவர்
போய் பூர்வத்தில் பராபரனுடைய நீண்ட பொறுமை ஒருவிசை நோவாவின் காட்
களிலே பேழை ஆயத்தம்பண்ணப்படுகையில் பொறுக்கும்போது, விசுவாசியா
மல் போன காவலிலுள்ள ஆவிகளுக்கும் பிரசங்கித்தார். 20 அந்தப் பேழையில்
கொஞ்சம்பேராகிய எட்டு ஆத்துமாக்கள் [illegible]ப்பட்டு, தண்ணீரால் காப்பாற்றப்பட்
டார்கள். 21 இதின் ஒப்பனையாகிய ஞானஸ்நானம் மாமிச அழுக்கை நீக்குதலா
யிராமல், பராபரனோடே நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்
போது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலால் இரட்சிக்
கிறது. 22 அவர் பரமண்டலத்துக்குள் போய், பராபரனுடைய வலதுபாரிசத்
திலே இருக்கிறார்; அவருக்குத் தேவதூதரும் அதிகாரங்களும் வல்லமைகளுங்
கீழ்ப்படிந்திருக்கிறது.

குரு. கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனைபேர் ஞானஸ்நானம் பெற்றீர்களோ, அத்தனைபேருங் கிறீஸ்
துவைத் தரித்துக்கொண்டீர்களே. கர்த்தர் தெய்வமாயிருக்கப்பட்ட சாதியும் அவர் தமக்
குச் சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட [illegible] பாக்கியமானது.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௩, ௰௩-௰எ.

அப்போது இயேசு கலிலேயாவிலிருந்து யோர்தான் அருகே யோவானண்
டைக்கு அவனால் ஞானஸ்நானம்பெற வந்தார். 14 ஆனால் யோவான் அவருக்குத்
தடைபண்ணி: நான் உம்மால் ஞானஸ்நானம்பெறத் தேவையாமே; நீர் என்னண்
டைக்கு வருகிறீரோ என்றான். 15 இயேசுவோவென்றால் அவனுடனே: இப்
போது இடங்கொடு; ஏனெனில் இப்படி நீதியை எல்லாம் நிறைவேற்ற நமக்கு
அடுத்ததாயிருக்கிறதென்று மறுமொழி சொன்னார். அப்போது அவருக்கு இடங்
கொடுத்தான். 16 இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடனே தண்ணீரில் நின்றேறி
னார். அப்போது, இதோ, பரமண்டலங்கள் அவருக்குத் திறக்கப்பட்டது; பராபர
னுடைய ஆவி புறாப்போல் இறங்கி, அவர்மேல் வருகிறதைக் கண்டான். 17 இதோ,
ஒரு சத்தமும் பரமண்டலங்களிலிருந்துண்டாகி: இவர் [illegible] பிரியமாயிருக்கிற
நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறாரென்று உரைத்தது.

## ஒடுக்கத்தின் நாற்பது நாட்களின் முதலாம் நாளாகிய புதன் கிழமை.

நிரு. ௧ கொரி. ௰௩, ௧-௰௩.

நான் மனுஷருடைய பாஷைகளையுந் தேவதூதருடைய பாஷைகளையும் பேசி
னாலும், சிநேகம் எனக்கு இல்லாதிருந்தால், நான் முழங்கும் வெண்கலமும்,

அல்லது ஓசைதருங் கிண்கிணியும் ஆனேன். 2 நான் தீர்க்கதரிசன முள்ளவனு
யிருந்து, சகல இரகசியங்களையுஞ் சகல அறிவையும் அறிந்து, [illegible]வதங்களைப்
பேர்க்கத்தக்க சகல விசுவாசத்தையும் பெற்றிருந்தாலும், சிநேகம் எனக்கு இல்
லாதிருந்தால், நான் ஒன்றுமில்லை. 3 நான் எனக்கு உண்டானதெ[illegible]லாத்தையும்
ஏழைகளுக்கு அசனத்துக்காகப் [illegible]கிர்ந்துகொடுத்து, நான் சுட்டெரி[illegible]கப்பட என்
சரீரத்தை ஒப்புக்கொடுத்தாலும், சிநேகம் எனக்கில்லாதிருந்தால், எனக்குப்
பிரயோசனம் ஒன்றுமில்லை. 4 சிநேகம் நீண்டசாந்தமுந் தயவுமாயிருக்கும்;
சிநேகம் பொறாமை அடையாது; சிநேகம் கர்வஞ் செய்யாது; அது உப்பிப்
போகாது; 5 அது இச்சையானதைச் செய்யாது; அது தனக்கானதுகளைத்
தேடாது; அது சினம் அடையாது; அது பொல்லாப்பாக எண்ணாது. 6 அது
அநியாயத்துக்குச் சந்தோஷப்படாமல், உண்மைக்குச் சந்தோஷப்படுகிறது;
7 அது எல்லாத்தையும் மூடி[illegible]; எல்லாத்தையும் ஒத்துக்கொள்ளுகிறது;
எல்லாத்தையும் நம்புகிறது; எல்லாத்தையுஞ் சகிக்கிறது. 8 சிநேகம் ஒருக்கா
லும் ஒழிந்துபோகாது. தீர்க்கதரிசனங்களாகிலும் நின்றுபோம்; பாஷைகளா
கிலும் ஓய்ந்துபோம்; அறிவென்கிலுங் குலைந்துபோம். 9 ஏனெனில் நாம் அறி
கிறதுங் குறைவு; நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதுங் குறைவு, 10 நிறைவு
வரும்போதோவெனில் குறைவு குலைந்துபோம். 11 நான் குழந்தையாயிருக்கிற
போது, குழந்தையைப்போலே பேசினேன்; குழந்தையைப்போலே உணர்ந்
தேன்; குழந்தையைப்போலே சிந்தித்தேன்; நான் புருஷனானபோதோவெனில்
குழந்தைக்காரியங்களைப் பரிகரித்தேன். 12 இப்போது கண்ணாடியிலே நிழலாகவும்
அப்போதோவெனில் முகமுகமாகவுங் காண்கிறோம். இப்போது நான் அறிகிறது
குறைவு, அப்போதோவெனில் நான் அறியப்பட்டபடி அறிந்துகொள்ளுவேன்.
13 இப்போதோவென்றால் விசுவாசம் நம்பிக்கை சிநேகம் இம்மூன்றும் நிற்கிறது;
இதுகளில் பெரியதோ சிநேகம்.

குரு. எங்கள் இரட்சிப்பின் பராபரனே, நீர் உமது நாமத்தினுடைய மகிமையினிமித்தமாக எங்
களுக்கு ஒத்தாசைசெய்து, எங்களைத் தப்புவித்து, உமது நாமத்தினிமித்தமாக எங்கள்
பாவங்களை நிவிர்த்தியாக்கும்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

சுவி லூக். ௰௮, ௩௧-௪௩.

அவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனே சொன்ன[illegible]
வது: இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம்; அங்கே மனுஷனுடைய
குமாரனைக்குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும்
32 அதெனெனில் புறச்சாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தை
யும் அடைந்து துப்பப்படுவார். 33 அவரை வாரினால் அடித்து, கொன்றுபோடு
வார்கள்; மூன்றாம் நாளிலோ திரும்ப எழுந்திருப்பார் என்றார். 34 அவர்கள் இது
களில் ஒன்றையும் உணர்ந்ததில்லை. இந்த வார்த்தை அவர்களுக்கு மறைபொரு
ளாயிருந்தது; சொல்லப்பட்டதுகளை அறியாதேபோனார்கள். 35 பின்னையுஞ் சம்ப
வித்ததேதென்றால், அவர் எரிகோவுக்குச் சமீபிக்கையில், வழி அண்டையில் ஒரு
குருடன் உளுக்கார்ந்து, இரந்துகொண்டிருந்தான். 36 அவன் கும்பு நடக்கிறதைக்



கேட்டு, இதேதென்று விசாரித்தான். 37 அவனுக்கு: இயேசு நாசரேத்தான் போகி
றாரென்று அறிவித்தார்கள். 38 அப்போது அவன்: இயேசுவே, தாவீதின் குமா
ரனே, எனக்கு இரங்குமென்று கூப்பிட்டான். 39 முன் போகிறவர்கள் அவனை
அமர்ந்திருக்க அதட்டினார்கள்; ஆனால் அவன் வெகு அதிகமாய்: தாவீதின் குமா
ரனே, எனக்கு இரங்கும் என்று சத்தமிட்டான். 40 இயேசுவோவென்றால் நின்று,
அவனைத் தம்மண்டைக்குக் கூட்டிவரச் சொன்னார். அவன் சேர்ந்துவந்தபோது,
41 நான் உனக்கு என்ன செய்ய மனதாயிருக்கிறாய் என்று அவனைக் கேட்
டார். அவன்: நான் பார்வை அடைய, ஆண்டவரே என்றான். 42 அப்போது
இயேசு அவனுடனே: பார்வை அடை; உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்
றார். 43 உடனே பார்வை அடைந்து, பராபரனை மகிமைப்படுத்திக்கொண்டே
அவரைப் பின்சென்றான். சனமெல்லாம் அதைக் கண்டு, பராபரனுக்குத் துதி
செலுத்தினார்கள்.

## ஒருசந்தியின் நாற்பது நாட்களின் ௧-ம் நாயிறு.

நிரு. ௨ கொரி. ௬, ௧-௰.

ஆனால் நீங்கள் பராபரனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றவர்களா
யிராதபடிக்கும், நாங்கள் உடன்வேலையாட்களாய்ப் புத்தி சொல்லுகிறோம்.
2 ஏனெனில்: பிரியமான காலத்திலே உன் வேண்டுதலைக் கேட்டு, இரட்சிப்பின்
நாளிலே உனக்கு ஒத்தாசை பண்ணினேனென்கிறார். இதோ, இப்போது நற் பிரி
யமானகாலம்; இதோ, இப்போது இரட்சிப்பினுடைய நாள். 3 ஊழியம் மிகைப்
[illegible]க்கு, நாங்கள் ஒன்றிலும் ஒரு இடறலையும் உண்டாக்காமல், 4 எல்லாத்
[illegible]ங்களைப் பராபரனுடைய ஊழியக்காரராக விளங்கப் பண்ணுகிறோம்.
வெகு பொறுமையிலும், உபத்திரவங்களிலும், அவதிகளிலும், இடுக்கண்களிலும்,
5 அடிகளிலும், காவல்களிலும், கலாதிகளிலும், பிரயாசங்களிலும், கண் விழிப்பு
களிலும் உபவாசங்களிலும், 6 கற்பிலும், அறிவிலும், நீண்டசாந்தத்திலும், தய
விலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற சிநேகத்திலும், 7 சத்தியத்தினுடைய
வசனத்திலும், பராபரனுடைய பெலத்திலும், நீதியினுடைய வலது இடதுபக்கத்
தாயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், 8 கனத்திலுங் கனவீனத்திலும், அவகீர்த்
தியிலும் நற்கீர்த்தியிலுந் தானே. எத்தராகக் காணப்பட்டும், சத்தியவான்களா
யிருக்கிறோம்; 9 அறியப்படாதவர்களாகக் காணப்பட்டும், அறிந்துகொள்ளப்
பட்டிருக்கிறோம்; மரிக்கிறவர்களாகக் காணப்பட்டும், இதோ, பிழைக்கிறோம்;
தண்டிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டும், கொல்லுண்ணாதிருக்கிறோம்; 10 துக்
கப்படுகிறவர்களாகக் காணப்பட்டும், எப்போதுஞ் சந்தோஷப்படுகிறோம்; தரித்
திரராகக் காணப்பட்டும், அனேகரை ஐசுவரியவான்களாக்குகிறோம்; ஒன்றுமில்
லாதவர்களாகக் காணப்பட்டும், எல்லாத்தையும் உடையவர்களாயிருக்கிறோம்.

குரு. கர்த்தரை என் அடைக்கலமும் என் கோட்டையும் நான் நம்பியிருக்கிற என் பராபரனும்
என்கிறேன். ஏனெனில் அவர் உன்னைக் குருவிபிடிக்கிறவனுடைய கண்ணிக்குத் தப்புவிப்
பார். என் நீதியின் பராபரனே, நான் கூப்பிடுகையில் என்னைக் கேளும்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

சுவி. மத். ௪, ௧-௰௧.

அப்பொழுது இயேசு பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு, ஆவியினாலே வனாந்
தரத்தில் கொண்டுபோகப்பட்டார். 2 அவர் நாற்பது நாள் இரவும் பகலும் உபவா
சமாயிருந்தபின்பு, அவருக்குப் பசித்தது. 3 அப்பொழுது சோதனைக்காரன் அவ
ரண்டைக்குவந்து: நீ பராபரனுடைய குமாரனானால், இந்தக்கல்லுகளை அப்பமா
கச் சொல் என்றது. 4 ஆனால் அவர் பிரதியுத்தாரமாக: மனுஷன் அப்பத்தினா
லே மாத்திரம் அல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சகலவார்த்தை
யினாலேயும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதென்றார். 5 அப்பொழுது பிசாசு
அவரைப் பரிசுத்த பட்டணத்துக்குக் கொண்டுபோய், அவரைத் தெய்வாலயத்து
உப்பரிகையின்மேல் நிறுத்தி: 6 நீ பராபரனுடைய குமாரனானால், தாழக்குதி;
ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உனக்காகக் கற்பிப்பார்; உன் பாதம் கல்லில்
இடறாதபடிக்கு, அவர்கள் உன்னைத் தங்கள் கைகளாலே ஏந்திக்கொண்டு போவார்கள்
என்று எழுதியிருக்கிறதென்று அவருக்குச் சொல்லிற்று. 7 இயேசு அதனுட
னே: உன் பராபரனாகிய கர்த்தரைப் பரிட்சைபாராயாக என்று பின்னையும் எழு
தியிருக்கிறதென்றார். 8 மறுபடியும் பிசாசு அவரை மகா உயர்ந்த பர்வதத்தின்
மேல் கொண்டுபோய், லோகத்தின் சகலஇராச்சியங்களையும் அதனதன் மகிமை
யையும் அவருக்குக் காண்பித்து: 9 நீ தாழவிழுந்து என்னைப்பணிந்தால், இதுக
ளெல்லாம் உனக்குத் தருவேன் என்று அவருக்குச் சொல்லிற்று. 10 அப்பொழுது
இயேசு அதனுடனே: போ, சாத்தானே, அதேனென்றால் பராபரனாகிய கர்த்த
ரைப் பணிந்து, அவர் ஒருவருக்கு ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிற
தென்றார். 11 அந்நேரமே பிசாசு அவரை விட்டுப்போயிற்று. இதோ, தேவ
தூதர்கள் சேர்ந்துவந்து, அவருக்கு ஊழியஞ் செய்தார்கள்.

## ஒருசந்தியின் ௨-ம் ஞாயிறு.

நிரு. ௧ தெசலோ. ௪, ௧-௭.

குறைக்காரியம் ஏதெனில், சகோதரரே, நீங்கள் எந்தப்பிரகாரமாக நடக்
கவும் பராபரனுக்கு ஏற்கவும்வேண்டியதென்று நாங்கள் எங்களிடத்தில் ஒப்புக்
கொண்டபடியே அதிகமதிகமாய்ப் பெருக, உங்களைக் கர்த்தராகிய இயேசுவுக்
குள் வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம். 2 ஏனெனில் கர்த்தராகிய இயேசு
வினால் உங்களுக்கு எந்தக் கற்பனைகளைக் கொடுத்தோம் என்று அறிவீர்கள்.
3 ஏதென்றால், நீங்கள் வேசித்தனத்தை விலகியிருந்து, 4 உங்களில் அவனவன்
தன் சரீரபாண்டத்தைப் பராபரனை அறியாத அஞ்ஞானிகளைப்போல் இச்சை
யின் விரகதாபத்துக்குள்ளாக அல்ல, 5 பரிசுத்தத்துக்குங் கனத்துக்குமுள்ளாக
ஆண்டு, 6 தொழிலிலே தன் சகோதரனை ஒடுக்காமலும் வஞ்சிக்காமலும் இருந்து,
பரிசுத்தமாகிறதே பராபரனுடைய சித்தமாயிருக்கிறது. ஏனெனில் நாங்கள் உங்
களுக்கு முன்னுஞ் சொல்லி, திடச்சாட்சியாய் எச்சரித்தபடி, இதுகளெல்லாத்
துக்குங் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். 7 அதேதென்றால் பரா
பரன் நம்மை அசுத்தத்துக்கு அல்ல, பரிசுத்தமாகுதலுக்கு அழைத்தார்.





குரு. உனக்கு நன்மைசெய்வோமென்று என்னோடே சொல்லியிருக்கிற கர்த்தாவே, நீர் என்னை
ஆசீர்வதித்தாலொழிய, உம்மைப்போகவொட்டேன். என் இருதயத்தின் வியாகுலங்கள்
பெருகியிருக்கிறது; என்னை என் இடுக்கண்களுக்கு நீங்கலாக்கிவிடும்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

சுவி. மத். ௰௫, ௨௧-௨௮.

இயேசு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, தீருசீதோன் பட்டணங்களின் திசை
களுக்கு அகன்றுபோனார். 22 இதோ, கானான்சாதியான இஸ்திரீ அந்த எல்லைகளி
லிருந்து புறப்பட்டுவந்து, அவரோடே: ஆண்டவரே, தாவீதின் குமாரனே,
எனக்கு இரங்கும்; என் மகள் பிசாசினால் கடினமாய் வாதிக்கப்படுகிறாளென்று
சொல்லிக் கூப்பிட்டாள். 23 ஆனால் அவர் அவளுக்கு ஒரு வார்த்தையையும் மறு
உத்தாரமாகச் சொல்ல இல்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் சேர்ந்துவந்து:
அவளை அனுப்பிவிடும்; ஏனெனில் நம்முடைய பிறகே கூப்பிடுகிறாளென்று அவ
ரை வேண்டிக்கொண்டார்கள். 24 ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: இஸ்ரவேல்
வீட்டிலேகாணாமல்போன ஆடுகளண்டைக்கு அனுப்பப்பட்டேனொழிய, மற்றப்
படி அல்ல என்றார். 25 அவளோவென்றால் வந்து: ஆண்டவரே, எனக்குச் சகா
யம்பண்ணுமென்று அவரைப் பணிந்துகொண்டாள். 26 அவரோவெனில் பிரதி
யுத்தாரமாக: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடு
கிறது நன்றாய் இராது என்றார். 27 ஆனால் அவள்: ஆம், ஆண்டவரே, ஆகிலுமோ
நாய்க்குட்டிகள் தங்கள் எசமான்களின் மேசைப்பலகைகளிலிருந்து விழுகிற
துணிக்கைகளில் தின்னுமே என்றாள். 28 அப்பொழுது இயேசு அவளுக்குப் பிரதி
யுத்தாரமாக: இஸ்திரியே, உன் விசுவாசம் பெரியது, நீ வேண்டுமென்றபடி
உனக்காகக்கடவதென்றார். அந்நேரந் துவக்கி அவள் மகள் ஆரோக்கியமானாள்.

## ஒருசந்தியின் ௩-ம் ஞாயிறு.

நிரு. எபேசி. ௫, ௧-௯.

நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல் பராபரனைப் பின்பற்றுகிறவர்களாகி,
2 கிறிஸ்து நம்மைச் சிநேகித்து, நமக்காகத் தம்மைத்தாமே பராபரனுக்குச்
சுகந்தவாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்ததுபோலே,
நீங்களுஞ் சிநேகத்திலே நடந்துகொள்ளுங்கள். 3 ஆனால் பரிசுத்தவான்களுக்கு
அடுக்கும்படியே, உங்களுக்குள் வேசித்தனஞ் சகல அசுத்தம் அல்லது பொரு
ளாசை என்றிதுகளின் பேர்முதலாய் இல்லாதிருப்பதாக. 4 வம்பும் பைத்தியப்
பேச்சும் பரிகாசமும் அடாதுதானே. அதுகள் ஏற்காத காரியங்கள்; இஸ்
தோத்திரமே ஏற்றது. 5 ஏனெனில் வேசிக்கள்ளன், அல்லது அசுத்தவான்,
அல்லது விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் ஒருவனுக்கும் பரா
பரனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரம் இல்லை
என்று அறிந்திருக்கிறீர்கள். 6 ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே
மோசம் போக்க வேண்டாம்; ஏனென்றால் இந்தக்காரியங்கள் நிமித்தமாக அவி
சுவாசத்தின் பிள்ளைகள் மீதில் பராபரனுடைய கோபம் வரும். 7 ஆகையால்

அவர்களுக்குப் பங்காளிகளா ஆகாதிருங்கள். 8 ஏனெனில் முற்காலத்தில் அந்த
காரமாயிருந்தீர்கள்; இப்பொழுதோவெனில் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்
கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். 9 ஏனெனில் ஆவியின்
கனி சகல நற்குணத்திலும், நீதியிலும் உண்மையிலும் விளங்குகிறது.

குரு. கர்த்தாவே, என் சத்துருக்களின் நிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செம்மைப்படுத்தும். உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படவும், உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போகவும் எழுந்தருளும்.

சபை: ஆமேன், ஆமேன், ஆமேன்.

## சுவி. லூக். ௰௧, ௰௪-௨௮.

அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டார்; அது ஊமையாயிருந்தது. அப்
போது சம்பவித்ததேதென்றால், பிசாசு துரத்தப்பட்டபின்பு ஊமையன் பேசினான்.
அதற்கு ஜனக்கும்புகள் ஆச்சரியப்பட்டார்கள். 15 ஆனால் அவர்களில் சிலர்: பிசாசு
களின் தலைவனாகிய பேயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறான்
என்றார்கள். 16 வேறேபேர்களோவெனில் சோதித்து, வானத்திலிருந்து உண்
டாகும் ஒரு அடையாளத்தை அவரிடத்திலே தேடினார்கள். 17 ஆனால் அவர்
இவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: தனக்குத்
தானே விரோதமாகப் பிரிந்த எந்த இராசாங்கமும் பாழாகி, எந்த வீடும் விழுந்து
போம். 18 சாத்தானுந் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்தால், அதின் இராச்
சியம் எப்படி நிற்கும்; ஏனெனில் பேயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்
திவிடுகிறேன் என்கிறீர்கள். 19 நானோவெனில் பேயெல்செபூலைக் கொண்டு பிசாசு
களைத் துரத்திவிட்டால், உங்கள் பிள்ளைகள் ஆரைக்கொண்டு அதுகளைத் துரத்தி
விடுகிறார்கள். ஆகையால அவர்கள் உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாய் இருப்பார்
கள். 20 நான் பராபரனுடைய விரலினால் பிசாசுகளைத் துரத்திவிட்டேனேயாகில்,
பராபரனுடைய இராச்சியம் அல்லவோ உங்கள் கிட்டவந்தது. 21 ஆயுததாரியாகிய
பெலவான் தன் அரண்மனையைக் காக்கிறபோது, அவனுக்கு உள்ளது பத்திரப்
பட்டிருக்கும். 22 அவனிலும் பெலவான் அவன் மேல் வந்து, அவனைச் செயித்
தானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு,
அவன் உடைமைகளைப் பங்கிடுகிறான். 23 என்னுடனே இராதவன் எனக்கு
விரோதமாயிருக்கிறான்; என்னுடனே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். 24 அசுத்த
ஆவி மனுஷனை விட்டுப் புறப்படும்போது, அது தண்ணீரற்ற இடங்களில் இளைப்
பாறுதலைத் தேடித் திரிந்து, கிடையாமலேபோய்: நான் விட்டுப் புறப்பட்டு வந்த
என் வீட்டுக்குத் திரும்புவேனென்று சொல்லி, 25 வரும்போது அதைப் பெருக்
கிச் சிங்காரிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கும். 26 அப்போது அதுபோய், தன்னி
லும் பொல்லாத வேறே ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு, உட்பிரவேசித்து,
அங்கே குடியிருக்கும்; அப்போது அந்த மனுஷனுடைய பிற்காரியங்கள் முற்காரி
யங்களைப் பார்க்கிலுங் கேடாயிருக்கும் என்றார். 27 அவர் இதுகளைச் சொல்லுகையில்
சம்பவித்ததேதென்றால், கும்பில் ஒரு இஸ்திரி சத்தமிட்டு, அவருடனே: உம்
மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளதென்றாள்.
28 அவரோவெனில்: பராபரனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்
கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார்.



## ஒருசந்தியின் ௪-ம் நாயிறு.

### நிரு. கலா. ௪, ௨௧-௩௧.

நியாயப்பிரமாணத்துக்குக் கீழாயிருக்க மனதுள்ள நீங்கள், நியாயப்பிரமா
ணப் புஸ்தகஞ் சொல்லுகிறதைக் கேளீர்களோ என்று எனக்குச் சொல்லுங்கள்.
22 அதேனெனில் ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தாரென்று எழுதியி
ருக்கிறது; அடிமையானவளிடத்தில் பிறந்த ஒருவனும் அடிமையல்லாத சமு
சாரியினிடத்தில் பிறந்த ஒருவனுந்தானே. 23 அடிமையானவளிடத்தில் பிறந்தவ
னோவெனில் மாமிசத்தின்படியே பிறந்தான்; அடிமையல்லாதவளிடத்தில் பிறந்
தவனோ வாக்குத்தத்தத்தினால் பிறந்தான். 24 இதுகள் ஞான அர்த்தமுள்ள காரி
யங்கள்; ஏதெனில், இந்த இஸ்திரிகள் இரண்டு ஏற்பாடுகள். ஒன்று அடிமைத்
தனத்துக்குள்ளாகப் பிள்ளைபெறுகிற சீனாய் பர்வதத்தின் ஏற்பாடு; அது ஆகார்
தானே. 25 ஏனெனில் ஆகாரென்கிறது அரபிலுள்ள சீனா பர்வதமாயிருக்கிறது.
அது இப்போதிருக்கிற எருசலேமுக்குச் சரியாய் வருகிறது. அது தன் பிள்ளை
களோடே கூட அடிமைப்பட்டிருக்கிறது. 26 ஆனால் மேலான எருசலேம் அடி
மையல்லாதது; இது நமக்கெல்லாந் தாயாயிருக்கிறது. 27 ஏனெனில்: பிள்ளை
பெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய் எழும்
பிச் சத்தமிடு; ஏனெனில் புருஷன் உள்ளவளைப் பார்க்கிலும் அவாந்தரமானவ
ளுக்கு அதிகபிள்ளைகள் உண்டென்று எழுதியிருக்கிறது. 28 நாமோவெனில்,
சகோதரரே, ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.
29 ஆனால் அப்போது மாமிசத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை எப்
படி துன்பப்படுத்தினானோ, அப்படி இப்போதும் நடக்கிறது. 30 ஆனால் வேத
எழுத்து என்னசொல்லுகிறது: அடிமையானவளையும் அவள் மகனையும் புறம்பே
தள்ளு; ஏனெனில் அடிமையானவளின் மகன் அடிமையல்லாதவளின் குமார
னோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்று சொல்லுகிறது. 31 ஆகையால்,
சகோதரரே, நாம் அடிமையானவளுக்கு அல்ல, அடிமையல்லாதவளுக்குப் பிள்
ளைகளாயிருக்கிறோம்.

குரு. ஆண்டவரே, ஆராண்டைக்குப் போவோம். உம்மில் நித்திய சீவனுடைய வசனங்கள் உண்டாயிருக்கிறதே. காலமே எங்களை உமது கிருபையாலே திருப்தியாக்கும்.

சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

## சுவி. யோவான் ௬, ௧-௰௫.

இதுகளுக்குப் பிற்பாடு இயேசு தீபேரியா பட்டணத்துக்கு அருகான கலிலே
யாக்கடலின் அக்கரைக்குப் போனார். 2 திரள்கும்பு அவரைப் பின்சென்றது;
ஏனெனில் அவர் வியாதிக்காரரில் செய்த அடையாளங்களைக் கண்டார்கள்.
3 ஆனால் இயேசு ஒரு பர்வதத்தில் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனே கூட
உளுக்கார்ந்தார். 4 ஆனால் யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது.
5 அப்போது இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரள்கும்பு தம்மண்டை
வரக்கண்டு, பிலிப்புவுடனே: இவர்கள் சாப்பிடத்தக்கதாக எங்கே அப்பங்களைக்
கொள்வோமென்றார். 6 இதையோவெனில் அவனைச் சோதித்துச் சொன்னார்;
ஏனெனில் தாம் செய்யப்போகிறதைத் தாம் அறிந்திருந்தார். 7 பிலிப்பு அவருக்

குப் பிரத்தியுத்தாரமாக: அவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங் கொஞ்ச மாய்
வாங்கிக்கொள்ளவாகிலும், இருநூறு பணத்து அப்பங்கள் அவர்களுக்கு போ
தாதே என்றான். 8 சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்னப்
பட்ட அவருடைய சீஷரில் ஒருவன் அவருடனே: 9 இங்கே ஒரு பிள்ளை இருக்
கிறது, அதின் கையில் வால்கோதும்பையின் ஐந்தப்பங்களும் இரண்டு மீன்களும்
இருக்கிறது; ஆனால் இதுகள் இத்தனை சனங்களுக்கு எம்மாத்திரமென்றான்.
10 இயேசுவோவென்றால்: சனங்களை உளுக்காரப் பண்ணுங்கள் என்றார். ஆனால்
அவ்விடம் வெகு புல்லாயிருந்தது. அப்போது இலக்கத்தின்படியே ஏறக்குறைய
ஐயாயிரம் பேராகிய மனுஷர்கள் உளுக்கார்ந்தார்கள். 11 இயேசு அப்பங்களை
எடுத்துக்கொண்டு, இஸ்தோத்திரம்பண்ணி, சீஷர் கையிலே கொடுத்தார்; சீஷர்
பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அப்படியே மீன்களிலும் அவர்கள்
வேண்டுமென்றமாத்திரங் கொடுக்கார். 12 அவர்கள் திருப்தியடைந்த பிற்பாடோ
வெனில், அவர் தம்முடைய சீஷருடனே: ஒன்றுஞ் சேதமாய்ப் போகாதபடிக்கு,
மீந்த துணிக்கைகளைச் சேருங்களென்றார். 13 அப்போது அவர்கள் சேர்த்து,
வால்கோதும்பையின் ஐந்தப்பங்களில் சாப்பிட்டவர்களுக்கு மீந்திருந்த துணிக்
கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். 14 அப்போது இயேசு
செய்த அடையாளத்தை மனுஷர் கண்டு: இவர் மெய்யாய் லோகத்தில் வருகிற
தீர்க்கதரிசியாயிருக்கிறார் என்றார்கள். 15 ஆனால் அவர்கள் வந்து, தம்மை இராசா
வாக்கும்படிக்குப் பிடிக்கப்போகிறதை இயேசு அறிந்து, விலகி, மறுபடியுந் தாம்
ஒருவராய்ப் பர்வதத்தின் மேல் ஏறினார்.

### ஒருசந்தியின் ரு-ம் நாயிறு.

எபிரே. ௯, ௰௧-௰௫.

கிறிஸ்து வரப்போகும நன்மைகளின் பிரதான ஆசாரியராய் வந்து, இந்தச்
சிருஷ்டிப்பாகிய கைவேலையான கூடாரத்தின் வழியாக அல்ல, அதிகப் பெரியதும்
உத்தமமுமானதின் வழியாகவும், 12 கிடாய்கள் கன்றுக்குட்டிகளுடைய இரத்தத்
தாலும் அல்ல, தம்முடைய சுய இரத்தத்தாலும் ஒரே விசை பரிசுத்த ஸ்தலத்
திலே நித்திய மீட்குதலை உண்டுபண்ணி, உட்பிரவேசித்தார். 13 ஏனென்றால்
எருதுகள் கிடாய்களுடைய இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்
பட்ட கிடாரியின் சாம்பலும், மாமிசத்துய்யமுண்டாகப் பரிசுத்தப்படுத்தினால்,
14 எத்தனை அதிகமாய் நித்திய ஆவியினாலே தம்மைத் தானே பராபரனுக்குப் பழு
தற்றவராய்ப் பலியிட்ட கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்கள் மனச்சாட்சியைச்
சீவனுள்ள பராபரனுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, செத்த கிரியைகளறச் சுத்தி
கரிக்கும். 15 முதலாம் உடன்படிக்கையின் கீழ்ச் சுமந்த மீறுதல்களின் மீட்புக்
காக மரணமுண்டாகி, அப்படியே அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்
ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைவதற்காக, அவர் புது உடன்படிக்கையின்
மத்தியஸ்தராயிருக்கிறார்.

குரு. பராபரனே, உம்முடைய கிருபையின்படி எனக்கு இரங்கி, உம்முடைய மிகுந்த இரக்கங்
களின்படியே என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை
மிகவுங் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

101



சுவி. யோவான் அ, ௪௬-௫௯.

...னில் ஒருபாவமு உண்டென்று உங்களில் ஆர் என்னைக் குற்றஞ்சாட்டுவான்.
நான் சத்தியத்தைச் சொன்னேனேயாகில், நீங்கள் என்னை விசுவாசியாமல்போ
கிறதென்ன. 47 பராபரனால் உண்டானவன் பராபரனுடைய வார்த்தைகளைக்
கேட்கிறான். நீங்கள் பராபரனால் உண்டாயிராதபடியினாலே கேளாமல் போகிறீர்
களென்றார். 48 அப்போது யூதர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: நீ சமாரியன்
என்றும், பிசாசை உடையவன் என்றும், நாங்கள் நிதானமாகச் சொல்லுகிறோம்
அல்லவோ என்றார்கள். 49 இயேசு பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நான்
பிசாசை உடையவனாயிராமல், என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன்: ஆனால் நீங்
கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். 50 நானோவெனில் என் மகிமையைத்
தேடேன்; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் இருக்கிறார். 51 மெய்யாகவே மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்
டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காணான் என்றார். 52 அப்போது
யூதர் அவருக்குச் சொன்னதாவது: நீ பிசாசை உடையவனென்று இப்போது
அறிந்திருக்கிறோம்; ஆபிரகாமுந் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள், நீயோவெனில்:
ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், என்றென்றைக்கும் மரணத்தை
ருசியான் என்கிறாய். 53 எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ. அவர்
மரித்தார்; தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். உன்னை நீ எப்படிக்கொத்தவனுக்கு
கிறாய் என்றார்கள். 54 இயேசு பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: என்னை
நானே மகிமைப்படுத்தினால், என் மகிமை ஒன்றுமில்லை; என்பிதா என்னை மகி
மைப்படுத்துகிறவர். அவரை நீங்கள் உங்கள் பராபரனென்று சொல்லியும்,
55 அவரை அறியீர்கள்; நானோவெனில் அவரை அறிந்திருக்கிறேன். அவரை
அறியேனென்று சொன்னேனாகில், உங்களைப்போலே பொய்யனாவேன். அவரை
நான் அறிந்து, அவர் வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறேன். 56 உங்கள் பிதாவா
கிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருக் களிகூர்ந்தான்; கண்டுஞ்
சந்தோஷப்பட்டான் என்றார். 57 அப்போது யூதர் அவருடனே: உனக்கு இன்
னம் ஐம்பது வயதில்லாதிருந்தும், ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.
58 இயேசு அவர்களுடனே: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன், ஆபிரகாம் உண்டாகாததற்குமுன்னே நான் இருக்கிறேன் என்றார்.
59 அப்போது அவர் மேல் எறியக் கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். ஆனால்
இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தைவிட்டு, வெளிப்
பட்டு, இப்படியாய் அப்புறம் போனார்.

### ஒருசந்தியின் ௬-ம் நாயிறு.

திரு. பிலிப். உ, ரு-௧௧.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. 6 அவர்
பராபரனுடைய ரூபாயிருந்தும், பராபரனுக்குச் சமமாயிருக்குதலைக் கொள்ளை
யாடின உடைமையாக எண்ணாமல், 7 தம்மைத்தாம் வெறுமையாக்கி, ஊழியக்
காரன் ரூபெடுத்து, மனுஷர் சாயலாகி, 8 வேஷத்திலே மனுஷனாகக் காணப்

பட்டு, தம்மைத்தாம் தாழ்த்தி, மரணபரியந்தம் சிலுவையினுடைய மரணபரியந்
தமே கீழ்ப்படிந்தவரானார். 9 ஆனபடியினாலே பராபரன் அவரை மேலுக்கு மே
லாகவும் உயர்த்தி, 10 இயேசு என்கிற நாமத்துக்கு வானோர் பூதலத்தோர் பூமியின்
கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், 11 நாவு யாவும் இயேசு
கிறிஸ்து கர்த்தரென்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கைபண்ணும்
படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கு அருளிச்செய்
தார்.

குரு. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பலத்தை
யுங் கனத்தையும் மகிமையையும் இஸ்தோத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரமாயி
ருக்கிறது, கர்த்தாவே, இரட்சியும்; இராசா எங்கள் செபத்தைக் கேட்கக்கடவார்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

சுவி. மத். உக, க–கூ.

அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாகச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான
பெத்பகேய்க்கு வந்தபோது, இயேசு இரண்டு சீஷர்களை அனுப்பி அவர்களுக்குச்
சொன்னதாவது: 2 உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்திலே போங்கள்;
அங்கே கட்டியிருக்கிற ஒரு கழுதையையும் அதோடேகூட ஒரு குட்டியையும்
உடனே காண்பீர்கள்; அதுகளை அவிழ்த்து, எனக்குக் கொண்டுவாருங்கள்.
3 ஒருவன் உங்களுக்கு ஏதாகிலுஞ் சொன்னால், அப்போது: அதுகள் ஆண்ட
வருக்குத் தேவை என்று சொல்லுங்கள்; உடனே அதுகளை அனுப்புவான் என்
றார். 4 ஆனால் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறுகிறதுக்கு இதெல்
லாஞ் சம்பவித்தது. அவன் உரைத்ததாவது: சீயோன் குமாரத்தியுடனே:
இதோ, உன் இராசா மெத்தவும் சாந்தகுணமுள்ளவருமாய், கழுதையின்மேலும் நுகத்தடிக்குக் கீழ்ப்
பட்ட கழுதையினுடைய குட்டியின் மேலும் ஏறியிருக்கிறவருமாய், உன்னண்
டைக்கு வருகிறாரென்று சொல்லுங்களென்றான். 6 சீஷர்கள் போய், இயேசு தங்
களுக்குக் கற்பித்தபடி செய்து, 7 கழுதையையுங் குட்டியையுங் கொண்டுவந்து,
அதுகள் மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை அதுகள் மேல் ஏற்றி
னார்கள். 8 ஆனால் திரள் கும்பு தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்
டார்கள்; வேறே சிலர் மரங்களின் கிளைகளைத் தறித்து, வழியிலே தெளித்தார்கள்.
9 முன் பின் போகிற வருகிற கும்புகளோவெனில்: தாவீதின் குமாரனுக்கு ஓசி
யன்னா, கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னத
மானதுகளில் ஓசியன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்.

## பெரிய வியாழக் கிழமை.

நிருப. க கொரி. ய௧, உங–௨௬.

நான் உங்களுக்கு ஒப்புவித்ததை நான் கர்த்தராலே அடைந்தேன். அதா
வது: கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியிலே
அப்பத்தை எடுத்துக்கொண்டு, 24 இஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள்
வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயி



ருக்கிறது; இதை என்னை நினைக்கிறதுக்காகச் செய்யுங்களென்றார். 25 அந்தப்ப
டியே இராப்போசனம் பண்ணின பிற்பாடு, அவர் பாத்திரத்தையும் எடுத்துக்
கொண்டு: இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்திலே புது உடன்படிக்கை
யாயிருக்கிறது; இதை நீங்கள் குடிக்கிறபோதெல்லாம் என்னை நினைக்கிறதுக்காகச்
செய்யுங்களென்றார். 26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்
பாத்திரத்தைக் குடிக்கிறபோதெல்லாம் கர்த்தருடைய மரணத்தை அவர் வரும்
மட்டும் அறிவிக்கிறீர்கள். 27 ஆனபடியால் எவனாகிலும் அபாத்திரனாய் இந்த அப்
பத்தைப் புசித்து, அல்லது கர்த்தருடைய பாத்திரத்தைக் குடித்தால், அவன்
கர்த்தருடைய சரீரத்துக்கும் இரத்தத்துக்குங் குற்றமுள்ளவனாயிருப்பான். 28 ஆ
கையால் மனுஷன் தன்னைத்தான் சோதித்தறிந்து, இப்படியே இந்த அப்பத்திலே
புசித்து, இந்தப் பாத்திரத்திலே குடிக்கக் கடவான். 29 ஏனெனில் அபாத்திர
னாய்ப் புசித்துக் குடிக்கிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று எண்ணாதே
போகிறபடியினாலே, தனக்குத்தானே நியாயத்தீர்ப்பை வருவிக்கும்படி புசித்துக்குடிக்கிறான்.
30 இதுநிமித்தமாக உங்களில் பெலவீனரும் வியாதிக்காரரும் வெகுபேர்கள்
உண்டு; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். 31 ஏனெனில் நம்மை நாமே
நிதானித்து விசாரித்தால், நியாயந்தீர்க்கப்படோம். 32 நியாயந்தீர்க்கப்பட்டோ
மேயாகில், நாம் லோகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு,
கர்த்தராலே தண்டிக்கப்படுகிறோம்.

குரு. நாங்கள் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்
கியமாயிருக்கிறதல்லவோ, நாங்கள் பிட்கிற அப்பங் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கிய
மாயிருக்கிறதல்லவோ. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்.
சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.

சுவி. யோவான் ய௩, க–ய௫.

பஸ்காவின் பண்டிகைக்கு முன்னே, இயேசு இந்தலோகத்தைவிட்டுப் பிதா
வண்டைக்குப் போகத் தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இந்த
லோகத்திலிருக்கிற தம்முடையவர்களை எப்படி சிநேகித்துக்கொண்டிருந்தாரோ,
அப்படியே முடிவுபரியந்தம் அவர்களைச் சிநேகித்தார். 2 இராப்போசனம் பண்
ணக்கொள்ளவும், பிசாசு அப்போதே சீமோன் குமாரனாகிய யூதாஸ் இஸ்காரியோத்
தின் இருதயத்திலே அவரைக் காட்டிக்கொடுக்கவேண்டுமென்கிறதைப் போட்டி
ருக்கக்கொள்ளவும், 3 இயேசு பிதா எல்லாவற்றையுந் தம்முடைய கைகளில் அளித்
தாரென்கிறதையும் தாம் பராபரனிடத்திலிருந்து வந்ததையும் பராபரனண்டைக்
குப் போகிறதையும் அறிந்திருந்து, 4 இராப்போசனத்தை விட்டெழுந்து, வஸ்தி
ரங்களைப் போட்டு வைத்து, ஒரு சீலையை எடுத்து, சுற்றிக் கட்டிக்கொண்டார்.
5 பிற்பாடு கழுவுகிற பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக்
கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.
6 அப்போது சீமோன் பேதுருவண்டைக்கு வந்தார்; அவன் அவருடனே: ஆண்
டவரே, நீர் என் கால்களைக் கழுவுகிறீரோ என்றான். இயேசு அவனுக்குப் பிரத்
தியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று நீ இப்போது அறியாய்; இனி
மேலோ அறிவாய் என்றார். 8 பேதுரு அவருடனே: நீர் என்றைக்கும் என் கால்

களைக் கழுவ வேண்டாம் என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக:
உன்னை நான் கழுவாதேபோனால், என்னுடனே உனக்குப் பங்கில்லை என்றார்.
9 சீமோன் பேதுரு அவருடனே: ஆண்டவரே, என்கால்களை மாத்திரம் அல்ல,
கைகளையுந் தலையையுங் கூடஎன்றான். 10 இயேசு அவனுடனே: முழுகினவனுக்
குக் கால்களைமாத்திரங் கழுவத் தேவையாயிருக்கிறது; அன்றி முழுதுஞ் சுத்த
மாயிருக்கிறான். நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; எல்லாருமோ அல்ல என்றார்.
11 ஏனெனில் தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தார்; ஆகையினாலே:
நீங்களெல்லாருஞ் சுத்தம் அல்ல என்றார். 12 அவர்களுடைய கால்களை கழுவின
பிற்பாடோவெனில், அவர் தம்முடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, திரும்ப
உளுக்கார்ந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை
அறிந்திருக்கிறீர்களோ. 13 நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும்
அழைக்கிறீர்கள், நிதானமுமாய்ச் சொல்லுகிறீர்கள்; ஏனெனில் நான் அவர்
தான். 14 இப்போதும் ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் கால்களைக் கழு
வினதுண்டானால், நீங்களும் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவக் கடவீர்கள்.
15 ஏனென்றால் நான் உங்களுக்குச் செய்ததுபோல், நீங்களுஞ் செய்வதற்கு, உங்
களுக்கு மாதிரியைக் கொடுத்தேன் என்றார்.

## அல்லது.

சுவி. லூக். ௨௨, ௰௪–௨௰.

வேளைவந்தபோது அவரும் அவருடனே கூடப்பன்னிரண்டு அப்போஸ்தல
ரும் பந்தியிருந்தார்கள். 15 அப்போது அவர் இவர்களுடனே: நான் பாடுபடுகிற
தற்கு முன்னே இந்தப் பஸ்காவை உங்களுடனே புசிக்க மிகவும் வாஞ்சைப்பட்
டேன். 16 ஏனென்றால் பராபரனுடைய இராச்சியத்திலே அது நிறைவேறும்மட்
டாக இனி அதிலே புசியேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்
லி, 17 பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, இஸ்தோத்திரித்து: நீங்கள் இதைவாங்கி,
உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள். 18 ஏனென்றால் பராபரனுடைய
இராச்சியம்வரும்மட்டாகத் திராட்சக்கனியின் இரசத்திலே குடியேன் என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 19 அவர் அப்பத்தை எடுத்துக்கொண்டு,
இஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்
களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; இதை என்னை
நினைக்கிறதுக்காகச் செய்யுங்கள் என்றார். 20 அந்தப்படியே இராப்போசனம் பண்
ணின பிற்பாடு, அவர் பாத்திரத்தையுங் கொடுத்து, சொன்னதாவது: இந்தப் பாத்
திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்திலே புது உடன்படிக்
கையாயிருக்கிறது என்றார்.

## பெரிய வெள்ளிக் கிழமை.

பாடுபட்ட சரித்திரம் வாசிக்கப்படும்.

105



## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையின் க-ம் நாள்.

நிரு. க கொரி. ரு, ௬–அ.

நீங்கள் பாராட்டுகிற பெருமை நல்லதல்ல; கொஞ்சமான புளித்தமா பிசைந்
தமா அனைத்தையும் உப்பப்பண்ணுகிறதென்று அறியீர்களோ. 7 ஆனபடியினாலே,
நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, நீங்கள் புதிதான பிசைந்தமாவா
யிருக்கிறதுக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள்; ஏனெ
னில் நம்முடைய பஷா நமக்காக அடிக்கப்பட்டதே; அது கிறிஸ்து தானே.
8 ஆகையால் பழைய புளித்தமாவோடு அல்ல, துர்க்குணமும் பொல்லாப்பு
மென்ற புளித்தமாவோடும் அல்ல, துப்புரவும் உண்மையுமென்ற புளிப்பில்லாத
அப்பங்களோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.

குரு. கிறிஸ்து இயேசு நம்முடைய பாவங்களின் நிமித்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாம்
நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டார். அவராலே நமக்குச் செயங்கொடுத்த
பராபரனுக்கு இஸ்தோத்திரம்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மாற்கு ௰௬, க–அ.

ஓய்வுநாளான பின்பு மக்தலாலூர் மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியா
ளும், சாலொமேயும், தாங்கள் வந்து, அவரைப் பூசவேண்டுமென்று கந்தவர்க்கங்
களைக் கொண்டு, 2 வாரத்து முதல் கிழமையில் அதிகாலமே சூரியன் உதிக்கையில்
கல்லறையண்டைக்கு வந்து: 3 கல்லைக் கல்லறையின் வாசலிலிருந்து நமக்குப்
புரட்டித் தள்ளுபவன் ஆர் என்று ஒருத்தியோடொருத்தி சொல்லிக்கொண்டார்
கள். 4 அவர்கள் நோக்கிப் பார்க்கிறபோது, கல் புரட்டித் தள்ளப்பட்டதென்று
கண்டார்கள்; ஏனெனில் அது மெத்தப் பெரிதாயிருந்தது. 5 அவர்கள் கல்லறைக்
குள் பிரவேசித்து, வெள்ளை அங்கிதரித்த ஒரு வாலிபனை வலதுபாரிசத்தில் உளுக்
கார்ந்திருக்கக் கண்டு திகைத்தார்கள். 6 அவனோவென்றால் அவர்களுக்குச் சொன்
னதாவது: திகையாதேயுங்கள்; சிலுவையில் அறையுண்ட நாசரேத்தானாகிய
இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் எழுந்திருந்தார், அவர் இங்கே இல்லை;
இதோ, அவரை வைத்த இடம். 7 ஆனால் நீங்கள் போய், அவருடைய சீஷருக்
கும் பேதுருவுக்கும்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறாரென்றும்,
அவர் உங்களுக்குச் சொன்னபடி அங்கே அவரைக் காண்பீர்கள் என்றுஞ் சொல்
லுங்கள் என்றான். 8 அவர்கள் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, கல்லறையை விட்டோடி
னார்கள்; அதேனென்றால் நடுக்கமும் பிரமிப்பும் அவர்களைப் பிடித்தது. ஆருக்
கும் ஒன்றுஞ் சொல்லாமலும் போனார்கள்; ஏனெனில் பயந்திருந்தார்கள்.

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையின் உ-ம் நாள்.

நிரு. அப்போ. ௰, ௩௪–௪௩.

பேதுரு தன் வாயைத் திறந்து சொன்னதாவது: பராபரன் முகமாட்ட
முள்ளவர் அல்ல என்றும், 35 எல்லாச் சாதியிலும் அவருக்குப் பயந்திருந்து நீதி

மைச் செய்கிறவன் அவருக்கு உகந்தவன் என்றும், மெய்யாய் உணர்ந்துகொள்
ளுகிறேன். 36 அவர் எல்லாருக்குங் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்
கொண்டு சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவித்து, இஸ்ரவேல் புத்திரருக்கு
அனுப்பின வார்த்தையானது உங்களுக்குத் தெரியாததல்ல. 37 நாசரேத்தூரா
கிய இயேசுவைப் பராபரன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும்
அபிஷேகம் பண்ணினார் என்றும், பராபரன் அவருடனேகூட இருந்தபடியி
னாலே, அவர் நன்மைசெய்கிறவராகவும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட
யாவரையுங் குணமாக்குகிறவராகவுஞ் சுற்றித்திரிந்தார் என்றும், 38 யோவான்
பிரசங்கித்த ஞானஸ்நானத்துக்குப் பிற்பாடு கலிலேயா துவக்கி யூதேயாமுழுதும்
நடந்த வர்த்தமானத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். 39 அவர் யூதருடைய தேசத்
திலும் எருசலேமிலுஞ் செய்ததுகளுக்கெல்லாம் நாங்கள் சாட்சிகளாயிருக்
கிறோம். அவரை ஒரு மரத்திலே தூக்கி, போக்கிவிட்டார்கள். 40 அவரைப் பரா
பரன் மூன்றாம் நாளில் எழுப்பி, பிரசன்னமாய்க் காணப்படப் பண்ணினார். 41 எல்
லாச் சனத்துக்கும் அல்ல, அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பிற்பாடு அவரோ
டே புசித்துக் குடித்தவர்களும் பராபரனால் முன் நியமிக்கப்பட்டிருந்த சாட்சி
களுமாகிய எங்களுக்குத் தானே என்றான்.

குரு. அழாதே, இதோ, யூதாவின் கோத்திரமுந் தாவீதின் வேருமாகிய சிங்கம் ஜெயங்கொண்டது. எல்லாச் ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலை விழுங்குவார். மரணத்தைச் ஜெயமாக விழுங்குவார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். உச அதி. கங-ஙரு.

இதோ, அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு அறுப
து ஸ்தாதி தூரமான எம்மவு என்னும் பேருடைய கிராமத்துக்குப் போனார்கள்.
14 அவர்கள் சம்பவித்த இந்தக் காரியங்களை எல்லாங் குறித்து ஒருவருக்கொருவர்
பேசிக்கொண்டார்கள். 15 அவர்கள் ஒருவருக்கொருவர் பேசி விசாரித்துக்கொண்
டிருக்கையில் சம்பவித்ததேதென்றால், இயேசு தாமுஞ் சமீபித்து, அவர்களுடனே
கூட நடந்தார். 16 ஆனால் அவரை அறியாதபடிக்கு, அவர்களுடைய கண்கள் பிடி
பட்டிருந்தது. 17 அவர் இவர்களுடனே: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழி
நடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் இந்த வார்த்தைகள் ஏதென்
றார். 18 அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்னும் பேருள்ளவன் பிரத்தியுத்
தாரமாக அவருடனே: நீ மாத்திரம் எருசலேமிலே இக்காலங்களில் சம்பவித்தது
களை அறியாத பரதேசியாயிருக்கிறாயோ என்றான். 19 அப்போது அவர் இவர்
களுடனே: எதுகளை என்றார். அவர்கள் அவருடனே சொன்னதாவது: பராபர
னுக்குஞ் சகல சனத்துக்கும் முன்பாகச் செய்கையிலும் வார்த்தையிலும் வல்ல
மையுள்ள தீர்க்கதரிசியாயிருந்த இயேசு நாசரேத்தானை 20 நம்முடைய பிரதான
ஆசாரியர்களுந் தலைவருமே மரண ஆக்கினைக்கு ஒப்புக்கொடுத்து, சிலுவையில்
அறைந்தார்கள் என்கிறதுகளைத் தானே. 21 நாங்களோவெனில், இஸ்ரவேலை மீட்
கப்போகிறவர் அவர் என்று நம்பினோம். ஆனால் இப்படி எல்லாம் இருந்தும்,
இதுகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது. 22 எங்களில் சில இஸ்திரீ



ளோ எங்களைப் பிரமிக்கவும் பண்ணினார்கள். அவர்கள் அதிகாலமே கல்லறை
யண்டையிலிருந்து, 23 அவருடைய சரீரத்தைக் காணாமல், அவர் உயிரோடிருக்
கிறார் என்று சொன்ன தேவதூதருடைய தரிசனையையுங் கண்டோம் என்று வந்
தார்கள். 24 அப்போது எங்களுடனே இருக்கிறவர்களில் சிலர் கல்லறையண்டை
யிலே போய், இஸ்திரீகள் சொன்னதுக்குச் சரியாய்க் கண்டார்கள்; அவரையோ
காண இல்லை என்றார்கள். 25 அப்போது அவர் இவர்களுடனே: தீர்க்கதரிசிகள்
சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதுக்கு அவமதியும் மந்த இருதயமுமானவர்
களே, 26 கிறிஸ்து இப்பாடுகளை உத்தரிக்கவுந் தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்
கவும் வேண்டியதாயிருந்ததில்லையோ என்று சொல்லி, 27 மோசேயையுஞ் சகல
தீர்க்கதரிசிகளையுந் துவக்கி, சகல வேத எழுத்துக்களிலுந் தமக்கடுத்ததுகளை
அவர்களுக்கு விவரித்துக் காட்டினார். 28 அவர்கள் பயணம்பண்ணுங் கிராமத்துக்
குச் சேர்ந்தார்கள்; அப்போது அவர் அப்புறம் போகிறவர் போலே காண்பித்
தார். 29 ஆனால் அவர்கள்: எங்களுடனேகூட இரும்; அதேதெனில் அந்திநேரமா
கப் பொழுது சாய்ந்ததென்று சொல்லி, அவரை வருந்திக்கொண்டிருந்தினார்
கள். அப்போது அவர்களுடனேகூடத் தங்கியிருக்கிறதுக்கு உள்பிரவேசித்தார்.
30 அவர் இவர்களுடனேகூடப் பந்தியிருக்கையில் சம்பவித்ததேதென்றால், அவர்
அப்பத்தை எடுத்து, இஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக்
கொடுத்தார். 31 அப்போது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்
தார்கள். அவரோ [illegible]னில் அவர்களுக்கு அதிரிசியமாய்ப் போனார். 32 அப்போது
ஒருவரோடொரு[illegible] அவர் வழியிலே நம்முடனே பேசி, வேதஎழுத்துக்களை
நமக்குத் திறந்து [illegible]ல்லும்போது, நம்முடைய இருதயம் நமக்குள் பற்றி எரி
ந்ததாயிருந்த[illegible]யோ என்று சொல்லிக்கொண்டு, 33 அந்நேரமே எழுந்திருந்து,
எருசலேமுக்குத் [illegible]ம்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருக்கிறவர்களுங்
கூடினவர்களாகவும்: 34 கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து, சீமோனுக்குத் தரிசனை
யானார் என்று சொல்லுகிறவர்களாகவுங் கண்டு, 35 தாங்களும் வழியில் சம்பவித்
ததுகளையும் அவர் அப்பத்தைப் பிட்கையில் தங்களுக்கு எப்படி அறியப்பட்டார்
என்கிறதையும் விவரித்தார்கள்.

உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின க-ம் நாயிறு.

நிரு. க யோவான் ரு, ச-அ.

பராபரனில் பிறந்ததெல்லாம் லோகத்தைச் செயிக்கும்; நம்முடைய விசுவா
சமே லோகத்தைச் செயித்த செயம். 5 இயேசு பராபரனுடைய குமாரன் என்று
விசுவாசிக்கிறவனே ஒழிய, பின்னை ஆர் லோகத்தைச் செயிக்கிறவன். 6 இயேசு
கிறிஸ்துவாகிய இவரே தண்ணீரோடும் இரத்தத்தோடும் வந்தவர்; தண்ணீரோடு
மாத்திரம் அல்ல, தண்ணீரோடும் இரத்தத்தோடுந் தானே. ஆவி சத்தியம் என்று
ஆவியே சாட்சியுங் கொடுக்கிறவர். 7 எனெனில் வானத்திலே சாட்சிகொடுக்கிற
வர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்
கள். 8 பூமியிலே சாட்சிகொடுக்கிறதுகளும் மூன்றுண்டு: ஆவி, தண்ணீர், இரத்

தம்; இம்மூன்றும் ஒன்றுக்கே இருக்கிறது. 9 நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்
றுக்கொண்டால், பராபரனுடைய சாட்சி அதிகமாய் இருக்கிறது. பராபரனுடைய
சாட்சியோவென்றால், தம்முடைய குமாரனைக் குறித்து அவர் கொடுத்த சாட்சி
தானே. 10 பராபரனுடைய குமாரன்பேரிலே விசுவாசிக்கிறவன் இந்தச் சாட்சி
யைத் தனக்குள் வைத்திருக்கிறான். பராபரனை விசுவாசியாதவன் அவரைப்
பொய்யராக்கிவருகிறான்; ஏனெனில் பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துத்
தந்த சாட்சியின்பேரில் விசுவாசியாதிருக்கிறான். 11 நித்திய சீவனைப் பராபரன்
நமக்குத் தந்தாரென்கிறதும், இந்தச் சீவன் அவருடைய குமாரனுக்குள் இருக்
கிறதென்கிறதுமே அந்தச் சாட்சி. 12 குமாரனை உடையவன் சீவனை உடைய
வன், பராபரனுடைய குமாரனில்லாதவன் சீவனில்லாதவன்.

குரு. மறுபடியும் உங்களைப் பார்ப்பேன்; அப்போது உங்கள் இருதயஞ் சந்தோஷப்படும்;
ஏனெனில் நான் பிழைப்பேன், நீங்களும் பிழைப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௨௰, ௰௯–௩௧.

வாரத்தின் முதல்கிழமையான அன்றைத்தினம் அஸ்தமனவேளையிலே,
சீஷர்கூடியிருந்த இடத்தில் யூதருடைய பயத்தினாலே கதவு பூட்டியிருக்கக்கொள்ள,
இயேசு வந்து நடுவேநின்று, அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம் என்றார்.
20 இதைச் சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்
பித்தார். அப்போது சீஷர் கர்த்தரைக் கண்டு, சந்தோஷப்பட்டார்கள். 21 அப்
போது இயேசு மறுபடியும் அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம்; பிதா
என்னை அனுப்பினதுபோல், நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,
22 அவர்கள் மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்த ஆவியை வாங்குங்கள்; 23 எவர்
கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது;
எவர்கள் பாவங்களைச் சுமத்திவைக்கிறீர்களோ, அவர்கள் மேல் அதுகள் சுமத்தி
வைக்கப்பட்டிருக்கிறது என்றார். 24 பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்
பட்ட தோமாவோவெனில் இயேசு வருகிறபோது அவர்களுடனே கூட இருந்த
தில்லை. 25 அவனுடனே மற்றச் சீஷர்: கர்த்தரைக் கண்டோமென்றார்கள். அவ
னோவெனில் அவர்களுடனே: நான் அவருடைய கைகளில் ஆணிகளுடைய அச்
சைக் கண்டு, என் விரலை ஆணிகளுடைய அச்சிலே போட்டு, என் கையை அவ
ருடைய விலாவிலே போட்டாலொழிய, விசுவாசியேன் என்றான். 26 எட்டு நாளைக்
குப் பிற்பாடு மறுபடியும் அவருடைய சீஷரும் அவர்களுடனேகூடத் தோமா
வும் உள்ளே இருந்தார்கள். கதவுகள் பூட்டியிருக்கக்கொள்ள, இயேசு வந்து,
நடுவேநின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். 27 பிற்பாடு தோமாவுடனே:
நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார்த்து, உன் கையை நீட்டி என்
விலாவிலே போட்டு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். 28 தோமா
அவருக்குப் பிரத்தியுத்தரமாக: என் ஆண்டவரே, என் பராபரனே என்றான்.
29 இயேசு அவனுடனே: தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்
தாய்; காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். 30 ஆனால் இந்தப்
புஸ்தகத்தில் எழுதியிராத வேறே அநேகம் அடையாளங்களையும் இயேசு தமது



சீஷருக்கு முன்பாகச் செய்தார். 31 இதுகளோவெனில், இயேசு பராபரனுடைய
குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிப்பதற்கும், விசுவாசித்து அவர்
நாமத்திலே சீவனை அடைந்திருப்பதற்குமாக எழுதப்பட்டது.

உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௨-ம் நாயிறு.

நிரு. ௧ பேதுரு ௨, ௨௧–௨௫.

ஏனென்றால் இதுக்கு அழைக்கப்பட்டீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்
களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய காலடிகளைத் தொடர்ந்துவர, உங்
களுக்குப் பிரமாணம் பின்வைத்தார். 22 அவர் பாவஞ் செய்ததில்லை; அவர் வாயிலே
வஞ்சனை காணப்பட்டதுமில்லை. 23 அவர் வையப்படுகிறபோது பதிலுக்கு வையா
மலும், பாடுபடுகிறபோது மிரட்டாமலும், நீதிநியாயந்தீர்க்கிறவருக்கு அதை
ஒப்புக்கொடுத்தார். 24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்க நம்மு
டைய பாவங்களைத் தாமே தம்முடைய சரீரத்தில் எடுத்துக்கொண்டு, மரத்தில்
ஏறினார். அவர் தழும்புகளால் குணமானீர்கள். 25 ஏனெனில் சிதறுண்ட ஆடு
களைப்போல் இருந்தீர்கள்; ஆனால் இப்போது உங்கள் ஆத்துமங்களுடைய மேய்ப்
பருங் கண்காணியருமானவரண்டைக்குத் திருப்பப்பட்டீர்கள்.

குரு. கர்த்தர் என் மேய்ப்பர்; நான் தாழ்ச்சி அடையேன். அவர் மேய்ப்பனைப்போலே தமது
மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்திலே சேர்த்து, தமது மடியிலே
சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௰, ௰௧–௰௬.

நானே நல்லமேய்ப்பனானவர்; நல்லமேய்ப்பனானவர் தம்முடைய சீவனை
ஆடுகளுக்காகக் கொடுக்கிறார். 12 ஆனால் மேய்ப்பனாயிராதவனும் ஆடுகள் தனக்
குச் சொந்தமென்றிராதவனுமான கூலியாள் ஓநாய் வரக் கண்டு, ஆடுகளைவிட்டு
ஓடிப்போகிறான்; அப்போது ஓநாய் அதுகளைப் பிடித்து, ஆடுகளைச் சிதறடிக்கும்.
13 கூலியாளோவெனில், கூலியாளானபடியினாலே, ஓடிப்போகிறான்; ஆடுகளுக்
காக அவன் கவலைப்படான். 14 நானே நல்லமேய்ப்பனானவர்; என் பிதா என்னை
அறிந்து நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோல், நான் என்னுடையதுகளை அறிந்
தவரும் என்னுடையதுகளால் அறியப்பட்டவருமாயிருக்கிறேன். 15 என் சீவனை
யும் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன். 16 இந்தத் தொழுத்ததல்லாத வேறே ஆடு
களும் எனக்குண்டு; அதுகளையும் நான் கொண்டுவரவேண்டும், அதுகள் என் சத்
தத்தைக் கேட்கும்; ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாம் என்றார்.

உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் நாயிறு.

நிரு. ௧ பேதுரு ௨, ௰௧–௨௰.

பிரியமானவர்களே, ஆத்துமத்துக்கு விரோதமாகப் போர்செய்யும் மாம்ச
இச்சைகளுக்கு நீங்கள் விலகியிருக்கவும், 12 புறச்சாதியார் உங்களை எதிலே அக்

கிரமக்காரரென்று மிகைசொல்லுகிருர்களோ, அதிலே உங்கள் நற்கிரியைகளைக்
கண்டு, கண்காணிப்பின் நாளிலே பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு, நீங்கள்
அவர்களுக்குள்ளே நல்நடக்கையாய் நடக்கவும், அரதேசிகளும் பரதேசிகளுமா
கிய உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 13 ஆகையால் எல்லா மனுஷ அதிகாரக்
கட்டளைக்குங் கர்த்தர் நிமித்தமாகக் கீழ்ப்படியுங்கள். மேன்மையான அதிகார
முள்ள இராசாவுக்காகுலுஞ் சரி, 14 தீமைசெய்கிறவர்களின் ஆக்கினைக்கும் நன்மை
செய்கிறவர்களின்புகழ்ச்சிக்கும் அவனால் அனுப்பப்பட்ட துரைகளுக்காகுலுஞ்
சரி; 15 ஏனெனில் நீங்கள் நன்மைசெய்கிறதினாலே மதியற்ற மனுஷருடைய அறி
யாமையை வாய்க்கட்டுவது பராபரனுடைய சித்தமாயிருக்கிறது. 16 விடுதலையா
யிருந்தும், விடுதலையைத் துற்குணத்துக்கு மூடலாகக் கொண்டிராமல், பராபர
னுடைய அடிமைகளாயிருங்கள். 17 எல்லாரையுங் கனம்பண்ணுங்கள், சகோதர
ரைச் சிநேகியுங்கள்; பராபரனுக்குப் பயந்திருங்கள்; இராசாவைக் கனம்பண்ணுங்
கள். 18 வேலைக்காரரே, எல்லாப்பயத்துடனே எசமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்
கள்; நல்லவர்களுக்குஞ் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட
ருக்குங் கூடத்தானே. 19 ஏனென்றால் ஒருவன் பராபரன் பேரில் பத்தியான
மனச்சாட்சியின் நிமித்தந் துக்கங்களைச் சகித்து, அநியாயமாய்ப் பாடுபவித்
தால், அதுவே கிருபை. 20 ஏனெனில் நீங்கள் பாவஞ்செய்து அறையப்பட்டுச் சகித்
தால், அது என்ன கீர்த்தி; நீங்கள் நன்மைசெய்து பாடுபட்டுச் சகித்தீர்களேயா
னால், அதுவே பராபரனிடத்தில் கிருபை.

குரு. கொஞ்சநிமிஷம் உன்னைக் கைவிட்டோம்; ஆனால் மகா மிகுந்த இரக்கங்களால் உன்னைச்
சேர்ப்போம்; நித்திய கிருபையாய் உனக்கு இரங்குவோமென்று கர்த்தராகிய உன் மீட்பர்
சொல்லுகிருர்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௰௬, ௰௬–௨௨.

கொஞ்சப்போதிலே என்னைக் காணுதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்
போதிலே என்னைக் காண்பீர்கள்; ஏனெனில் நான் பிதாவண்டைக்குப் போகி
றேன் என்றார். 17 அப்போது அவருடைய சீஷரில் சிலர் தங்களுக்குள்ளே சொன்
னதாவது: கொஞ்சப்போதிலே என்னைக் காணுதிருப்பீர்கள் என்றும், மறுபடியுங்
கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்களென்றும், நான் பிதாவண்டைக்குப்
போகிறேனென்றும், அவர் நம்முடனே சொல்லுகிறது என்ன, 18 கொஞ்சப்போது
என்கிறாரே, இதென்ன; அவர் சொல்லுகிறது இன்னதென்று அறியோமென்
றார்கள். 19 அப்போது இயேசு தம்மை அதைக் கேட்க மனதாயிருக்கிறார்க
ளென்று அறிந்து, அவர்களுடனே சொன்னதாவது: கொஞ்சப்போதிலே என்
னைக் காணுதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்கள்
என்று நான் சொன்னதற்காக ஒருவரையொருவர் கேட்கிறீர்கள். 20 மெய்யாக
வே மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள்;
லோகமோ சந்தோஷப்படும், நீங்களோ துக்கிப்பீர்கள்; ஆனால் உங்கள் துக்கஞ்
சந்தோஷமாகும். 21 ஸ்திரி பெறுகிறபோது, துக்கம் அடைந்திருக்கிருள்;
ஏனெனில் அவள் வேளைவந்தது. ஆனால் பிள்ளையைப் பெற்றபின்பு, ஒருமனுஷன்



லோகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினாலே அப்புறம் உபத்திரவத்தை
நினையாள். 22 நீங்களும் இப்போது துக்கம் அடைந்திருக்கிறீர்கள்; ஆனால் மறுபடி
யும் உங்களைக் காணுவேன், அப்போது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்; உங்
கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து வாங்கான். அந்த நாளிலே
நீங்கள் என்னை ஒன்றுங் கேட்பதில்லை என்றார்.

## செப தவ ஒருசந்தியின் பெருநாள்.

நிரு. எசாயா ருரு, ௬. எ.

கர்த்தர் கண்டுபிடிக்கப்படுகையில், அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயி
ருக்கையில், அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். 7 ஆகாதவன் தன் வழியையும்,
அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரண்டைக்கு மனந்திரும்பக்
கடவன்; அப்போது அவன் மேல் மனதுருகுவார். நம்முடைய பராபரனண்
டைக்குக மனந்திரும்பக் கடவான்; ஏனெனில் அவர் மன்னிக்கிறதற்குத் தயை
பெருத்திருக்கிருர்.

குரு. பராபரனே, உம்முடைய கிருபையின்படி எங்களுக்கு இரங்கி, உமது மிகுந்த இரக்கங்
களின்படியே எங்கள் மீறுதல்கள் நீங்க எங்களைச் சுத்திகரியும்.

சபை. ஆமென், ஆமென், ஆமென்.

சுவி. மத். ௩, அ–௰.

ஆகையால் குணப்படுதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். 9 ஆபிரகாம்
எங்களுக்குத் தகப்பன் என்று உங்கள் உள்ளத்தில் சொல்ல நினைவுகொள்ளாதே
யுங்கள்; ஏனெனில் பராபரன் இந்தக் கல்லுகளில் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை
எழுப்ப வல்லவர் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 10 அப்போதே கோடா
லியும் மரங்களின்வேரருகில் வைத்தாச்சுது; ஆனபடியினாலே நல்லகனிகொடாத
மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் என்றான்.

## உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்தின ௪-ம் நாயிறு.

நிரு. யாக். க, ௰௬–௨௧.

என் பிரிய சகோதரரே, மோசம் போகாதேயுங்கள். 17 சகல நல்ல ஈவுங்
குறையற்ற சகல வரமும் உயர இருந்துண்டாகி, ஒரு மாறுதலாகிலும் ஒரு வேற்று
மையின் நிழலாகிலும் இல்லாத வெளிச்சங்களுடைய பிதாவினிடத்திலிருந்து
இறங்கிவருகிறது. 18 அவர் தாம் சித்தமாய் நம்மை, தம்முடைய சிருஷ்டிகளில்
நாம் ஒரு முதல் விளைவாயிருக்கத்தக்கதாக, சத்தியத்தின் வசனத்தினாலே ஜெனிப்
பித்தார். 19 ஆகையினாலே, என் பிரிய சகோதரரே, ஒவ்வொரு மனுஷன் கேட்
கிறதுக்குத் தீவிரமும், பேசுகிறதுக்குத் தாமதமும், கோபத்துக்குத் தாமதமுமா

யிருக்கக் [illegible]டவான். 20 ஏனென்றால் மனுஷனுடைய கோபம் பராபரனுடைய
நீதியை நடப்பியாது. 21 ஆகையால் நீங்கள் எல்லா ஊத்தைகளையும் மிஞ்சுகிற
துர்க்குணத்தையும் போட்டுவிட்டு, உள்ளே நடப்பட்டதும் உங்கள் ஆத்துமாக்
களை இரட்சிக்க வல்லதுமான வசனத்தை மெத்தனவுடனே ஏற்றுக்கொள்ளுங்
கள்.

குரு. தாகமுள்ளவன்மேல் தண்ணீரை ஊற்றுவோம்; நம்முடைய ஆவியை உன் வித்தின்
மேலும் நம்முடைய ஆசீர்வாதத்தை உன் சந்தானத்தின் மேலும் ஊற்றுவோமென்று
கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௰௬, ரு-௰ரு.

இப்போதோவெனில் என்னை அனுப்பினவரண்டைக்குப் போகிறேன்; ஆனால்
எங்கே போகிறீரென்று உங்களில் [illegible] ஒருவனும் என்னைக் கேளாமல், 6 நான் இது
களை உங்களுக்குச் சொன்னதினால், துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்று.
7 ஆனால் நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்
களுக்குப் பிரயோசனமாயிருக்கிறது; ஏனென்னில் நான் போகாதிருந்தால், தேற்
ரவாளன் உங்களண்டைக்கு வரார்; நான் போனேனேயாகில், அவரை உங்களண்
டைக்கு அனுப்புவேன். 8 அவர் வந்து, லோகத்தைப் பாவத்தின் நிமித்தமும்
நீதியின் நிமித்தமும் நியாயத்தீர்த்தலின் நிமித்தமுங் கடிந்துகொள்ளுவார்.
9 என் பேரில் விசுவாசியார்களென்கிறபடியினாலே, பாவத்தின் நிமித்தமும்,
10 நீங்கள் இனி என்னைக் காணாமல், நான் என் பிதாவண்டைக்குப் போகிறேன்
என்கிறபடியினாலே, நீதியின் நிமித்தமும், 11 இந்த லோகத்தின் பிரபு நியாயந்
தீர்க்கப்பட்டது என்கிறபடியினாலே, நியாயத்தீர்த்தலின் நிமித்தமுந் தானே.
12 உங்களுக்குச் சொல்ல இன்னம் அநேகங் காரியங்கள் எனக்கு உண்டு; ஆனால்
இப்போது அதுகளைச் சுமக்க மாட்டீர்கள். 13 சத்தியத்தினுடைய அந்த ஆவி
வரும்போதோவென்னில், அவர் உங்களை எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழிநடத்
துவார்; ஏனெனில் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்வியாகும்
யாவையுஞ் சொல்லி, வருங்காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். 14 அவர் என்னை
மகிமைப்படுத்துவார்; ஏனெனில் என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்
பார். 15 பிதாவுக்கு உண்டானதெல்லாம் என்னுடையதாயிருக்கிறது; ஆகை
யினாலே என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பாரென்றேன் என்றார்.

**உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ரு - ம் நாயிறு.**

நிரு. யாக். க, உ௨-உஎ.

நீங்கள் உங்களையே மோசம் போக்காதபடிக்கு, வசனத்தின் கேள்விக்கா
ராய் மாத்திரம் இராமல், அதின் செய்கைக்காரராகுங்கள். 23 ஏனென்றால் ஒரு
வன் வசனத்தின் செய்கைக்காரனல்லாத கேள்விக்காரனாயிருந்தால், இவன் தன்
சுபாவ முகத்தைக் கண்ணாடியிலே கண்டறிகிற மனுஷனுக்கு ஒப்பானவன்.
24 அதெனெனில் தன்னைத்தான் கண்டறிந்து, புறப்பட்டுப்போய், உடனே தான்

113



இருந்த விதத்தை மறந்தான். 25 ஆனால் விடுதலையினுடைய நிறைவாகரமான
வேதத்துக்குள் குனிந்து பார்த்து, அதிலே நிலையாயிருக்கிறவனே மறதியான
கேள்விக்காரனாயிராமல், கிரியையின் செய்கைக்காரனாயிருக்கிறபடியினாலே, தன்
செய்கையில் பாக்கியவானாயிருப்பான். 26 உங்களில் ஒருவன், தான் தெய்வபத்தி
யுள்ளவனென்று நினைத்தும், தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை எத்
தினால், இவனுடைய தெய்வபத்தி அவம். 27 திக்கற்றவர்களையும் விதவைகளையும்
அவர்களுடைய உபத்திரவத்திலே கண்டு சந்திக்கிறதும், தன்னை லோகத்தால்
கறைப்படாதவனாகக் காக்கிறதும், பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக மாசில்
லாத சுத்த தெய்வபத்தியாயிருக்கிறது.

குரு. கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவோமென்றும், உண்மை
யாய்ப் பணிகிறவர்கள் பிதாவை ஆவியிலும் உண்மையிலும் பணிந்துகொள்ளுவார்களென்
றுங் கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௰௬, உ௩-௩௰.

மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என்
நாமத்திலே பிதாவைக் கேட்கப்போகிற யாவை[illegible] உங்களுக்குக் கொடுப்பார்.
24 இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்திலே ஒன்றுங் [illegible]டதில்லை; உங்கள் சந்தோ
ஷம் நிறைந்ததாயிருக்கக் கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள். 25 இதுகளை உவ
மைகளாய் உங்களுடனே பேசினேன்; ஆனால் வேளைவரும், அப்போது நான் உவ
மைகளாய் அப்புறம் உங்களுடனே பேசாமல், வெளிப்பொருளாகப் பிதாவை [illegible]
களுக்கு அறிவிப்பேன். 26 அந்த நாளில் என் நாமத்திலே கேட்பீர்கள், உங்களுக்
காகப் பிதாவை நான் கேட்பேனென்று உங்களுக்குச் சொல்லேன். 27 ஏனெனில்
நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் பராபரனிடத்திலிருந்துவந்ததை விசுவாசித்த
படியினாலே, பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். 28 நான் பிதாவினிடத்திலிருந்து
புறப்பட்டு, லோகத்திலே வந்தேன்; மறுபடியும் லோகத்தை விட்டு, பிதாவண்
டைக்குப் போகிறேன் என்றார். 29 அவருடைய சீஷர் அவருடனே: இதோ, இப்
போது நீர் உவமை ஒன்றுஞ் சொல்லாமல், வெளிப்பொருளாய்ப் பேசுகிறீர்.
30 நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர் என்றும், உம்மை ஒருவன் கேட்க உமக்
குத் தேவை இல்லை என்றும், இப்போது அறிந்திருக்கிறோம். இதினாலே நீர் பரா
பரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

**கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.**

நிரு. அப். க, க-௰க.

தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தல
ருக்குப் பரிசுத்த ஆவியினாலே கற்பனை தந்து, ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட நாள்
மட்டுஞ் செய்யவும் உபதேசிக்கவுந் துவக்கினதெல்லாத்தையுங் குறித்து, 2 முத
லாம் பிரசங்கத்தை முன் பண்ணினேனே. 3 அவர் பாடுபட்ட பின்பு, அவர்களுக்

குத் தம்மை அநேகந் தெளிவான அடையாளங்களால் உயிரோடிருக்கிறவராகப்
பிரசன்னப்படுத்தி, நாற்பது நாள் வரையிலே அவர்களுக்குத் தரிசனையாகி, பரா
பரனுடைய ராச்சியத்துக்கடுத்தவைகளைப் பேசினார். 4 அவர் இவர்களைக் கூட்டி,
இவர்களுக்குக் கற்பித்ததாவது: நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல், என்
னாலே கேள்விப்பட்டான பிதாவின் வாக்குத்தத்தத்துக்குக் காத்திருங்கள். 5 அதே
னென்றால் யோவான் தண்ணீரினால் ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்களோவெ
னில் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்படுவீர்கள். அது வெகுநா
ளுக்குப் பிற்பாடு அல்ல என்றார். 6 கூடிவந்தவர்களோவெனில் அவரை: ஆண்
டவரே, இக்காலத்தில் இஸ்ரவேலுக்கு இராசாங்கத்தைச் சீர்திருத்தி வைப்பீரோ
என்று கேட்டார்கள். 7 ஆனால் அவர் இவர்களுடனே: பிதா தம்முடைய அதிகா
ரத்திலே வைத்திருக்கிற காலங்களையாகிலும் வேளைகளையென்கிலும் அறிவது உங்
கள் காரியம் அல்ல. 8 உங்கள்மேல் பரிசுத்த ஆவி வரும் போதோவெனில், நீங்
கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா சமாரியா தேசங்களிலெங்கும்,
பூமியின் கடைசிமட்டும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். 9 இதுகளைச்
சொன்ன பின்பு, அவர் இவர்கள் பார்த்திருக்க ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்;
ஒரு மேகம் அவரை இவர்கள் கண்களுக்கு மறைவாக எடுத்துக்கொண்டது.
10 அவர் போகிறபோது இவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்திருக்கையில்,
இதோ, வெண் உடையுடனே இரண்டு புருஷர் அவர்களண்டையிலே வந்து நின்
று: 11 கலிலேய மனுஷரே, நீங்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்பானேன்;
உங்களை விட்டு வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவை
வானத்துக்கு எந்தப் பிரகாரமாய்ப் போகக் கண்டீர்களோ, அந்தப் பிரகாரமாக
அவர் வருவார் என்றார்கள்.

குரு. கர்த்தர் என் ஆண்டவருடனே: நமது வலதுபாரிசத்தில் உளுக்காருமென்றார். பராபர
னைக் கீர்த்தனத்தின்மேல் கீர்த்தனம் பண்ணுங்கள்; நம்முடைய இராசாவைக் கீர்த்தனத்
தின்மேல் கீர்த்தனம் பண்ணுங்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மாற்கு ௰கா, ௰சு—உ௰.

பிற்பாடு பந்தியிருக்கிற பதினொருவருக்கு அவர் தம்மை வெளிப்படுத்தி,
எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமல் போனதின் நிமித்தம்
அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினார்.
15 அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் லோகமெங்கும் போய், சிருஷ்
டியாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். 16 விசுவாசமுள்ள
வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோவெ
னில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். 17 விசுவாசிக்கிறவர்களைப் பின்செல்
லும் அடையாளங்களாவது: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள்,
நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; 18 சர்ப்பங்களை நீக்கிவிடுவார்கள், சாவுக்கு
இனமான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களுக்குச் சேதம்பண்ணாது;
ஆரோக்கியமில்லாதவர்கள்மேல் கைகளை வைப்பார்கள், அப்போது குணமாவார்
கள் என்றார். 19 கர்த்தரோவென்றால் அவர்களுடனே பேசினதுக்குப் பிற்பாடு,

115





பரமண்டலத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலதுபாரிசத்
தில் உளுக்கார்ந்தார். 20 ஆனால் அவர்கள் புறப்பட்டு, எங்கும் பிரசங்கம் பண்ணி
னார்கள். கர்த்தரோவெனில் துணையாய்க் கிரியையை நடப்பித்து, பின்செல்லும்
அடையாளங்களினால் வசனத்தைத் திடப்படுத்தினார்.

கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின கூ-ம் ஞாயிறு.

திரு. கபேதுரு ச, எ—௰க.

எல்லாக் காரியங்களின் முடிவுங் கிட்டிவந்தது. ஆகையால் சொஸ்தபுத்தியா
யிருந்து, செபங்களுக்கு மனத்தெளிவாயிருங்கள். 8 எல்லாத்தைப் பார்க்கிலு
மோவென்றால் ஒருவருக்கொருவர் கருத்தான சிநேகமுள்ளவர்களாயிருங்கள்;
ஏனெனில் சிநேகம் திரள் பாவங்களை மூடும். 9 முறுமுறுப்பில்லாமல்,
ஒருவரை ஒருவர் சேர்த்துக்கொண்டு, 10 அவனவன் எப்படி வரம்பெற்றிருக்கி
றானோ, அப்படியே பராபரனுடைய பற்பல கிருபையின் நல் உக்கிராணக்காரரைப்
போல் ஒருவருக்கொருவர் அதினால் ஊழியஞ் செய்யுங்கள். 11 ஒருவன் பேசினால்,
பராபரனுடைய வாக்கியங்களாய்ப் பேசக்கடவான்; ஒருவன் ஊழியஞ் செய்தால்,
பராபரன் கொடுக்கிற பலத்தால் செய்யக்கடவான், எல்லாத்திலும் பராபரன்
இயேசு கிறிஸ்து மூலமாய் மகிமைப்படும் பொருட்டாகத் தானே. அவருக்கு
என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமையும் பெலனும் உண்டாயிருக்
கிறது. ஆமேன்.

குரு. மெத்தனவர்கள் பாக்கியவான்கள்; அதேனென்றால் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்
கொள்ளுவார்கள். பெலத்தினாலும் அல்ல, வல்லமையினாலும் அல்ல, நம்முடைய ஆவியி
னாலே ஆகுமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௰ரு, உகூ—௰சு, ச.

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவி
னிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவியென்ற தேற்றர
வாளன் வரும்போதோவெனில், அவர் எனக்காகச் சாட்சிகொடுப்பார். 27 நீங்க
ளும் சாட்சிகொடுப்பீர்கள்; ஏனெனில் ஆதிமுதலாய் என்னுடனேகூட இருந்தீர்
கள். 1 நீங்கள் இடறல்படாதபடிக்கு, இதுகளை உங்களுக்குச்சொன்னேன். 2 உங்
களை ஆலயத்துக்குப்புறம்பாக்குவார்கள் என்கிறதுந் தவிர, வேளைவரும், அப்
போது உங்களைக் கொல்லுகிறவனெல்லாந்தான் பராபரனுக்கு ஆராதனை செலுத்
துகிறவன் என்று நினைப்பான். 3 அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடி
யினாலே, இதுகளை உங்களுக்குச் செய்வார்கள். 4 அந்தவேளை வரும்போதோ
வெனில், நான் அதை உங்களுக்குச் சொன்னேனென்று உங்களுக்கு நினைப்புண்
டாக, இதுகளை உங்களுடனே பேசினேன். ஆனால் இதுகளை உங்களுக்கு ஆதி
முதலாய் நான் சொன்னதில்லை; ஏனெனில் உங்களுடனேகூட இருந்தேன் என்
றார்.

## பெந்தெகொஸ்தே பண்டிகையின் ௧-ம் நாள்.

நிரு. அப். ௨, ௧-௰௩.

பெந்தெகொஸ்தே நாள் நிறைவேறுகையில், எல்லாரும் ஏக மனதாய் ஒரு
மித்திருந்தார்கள். 2 அசுப்பிலே ஓடிவருகிற பலத்த காற்றைப்போல் ஒரு முழக்
கம் வானத்திலிருந்துண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டை முழுதும்
நிரப்பிற்று. 3 அப்போது அக்கினியின் நாக்குகள்போலான பிரிக்கப்பட்ட நாக்கு
கள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்களில் ஒவ்வொருவன் மேலும் வந்திருந்
தது. 4 எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவி தங்களுக்கு விளம்
பக்கொடுத்தபடி மற்றப் பாஷைகளிலே பேசத் துவக்கினார்கள். 5 ஆனால் வானத்தின்
கீழிருக்கிற சகலவித சாதியிலும் இருந்து வந்தபத்தியுள்ள மனுஷராகிய யூதர் எரு
சலேமிலே குடியிருந்தார்கள். 6 இந்தச் சத்தம் உண்டானபோது, திரள் கூடி
வந்து கலங்கிற்று; அதேனென்றால் ஒவ்வொருவரும் அவர்களைத் தன் தன் பாஷை
யிலே பேசக் கேட்டார்கள். 7 எல்லாரும் பிரமித்து, ஆச்சரியப்பட்டு, ஒருவரோ
டொருவர் சொன்னதாவது: இதோ, பேசுகிற இவர்கள் எல்லாருங் கலிலேயர்
அல்லவோ. 8 பின்னை எப்படி நாம் அவரவர் தான் தான் பிறந்த தன் தன் பாஷை
யிலே அவர்கள் பேசக் கேட்கிறோம். 9 பார்த்தரும், மேதரும், எலாமியரும்,
மெசொப்பொத்தாமியாவிலும், யூதேயாவிலும், கப்பதோகியாவிலும், பொந்து
விலும், ஆசியாவிலும், 10 பிரிகியாவிலும், பம்பிலியாவிலும், எகிப்திலும், கிரேனே
பட்டணத்தைச் சுற்றியிருக்கும் லீபியாவின் புறங்களிலுங் குடியிருக்கிறவர்களும்,
ரோமாபுரி பரதேசத்தாரும், யூதரும், யூத மார்க்கத்தமைந்தவர்களும், 11 கிரேத்
தரும், அராபியருமாகிய நாம் அவர்கள் நம்முடைய பாஷைகளிலே பராபரனு
டைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோம் என்றார்கள். 12 எல்லாரும் பிரமித்துச்
சந்தேகப்பட்டு, ஒருவரோடொருவர்: இது என்னவாம் என்றார்கள். 13 வேறே
பேர்களோவெனில்: மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று ஆகடியம்பண்
ணினார்கள்.

குரு. நாம் இஸ்ரவேல் வீட்டார் மேல் நம்முடைய ஆவியை ஊற்றுவோம்; உங்கள் குமாரரும்
குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; அப்போது கர்த்தருடைய நாமத்தைத்
தொழுதுகொள்பவனெல்லாம் இரட்சிக்கப்படுவானென்று பராபரன் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௧௪, ௨௩-௩௧.

இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஒருவன் என்னைச் சிநேகித்தால்,
அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனை என்பிதா சிநேகிப்பார்;
அவனண்டைக்கு நாங்கள் வந்து, அவனிடத்தில் வாசம்பண்ணுவோம். 24 என்
னைச் சிநேகியாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளான். நீங்கள் கேட்கிற வச
னம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.
25 நான் உங்களுடனே இருக்கக்கொள்ள, இதுகளை உங்களுக்குச் சொன்னேன்.
26 ஆனால் பிதா என் நாமத்திலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்ற
வாளனே உங்களுக்கு எல்லாத்தையும் போதிவித்து, நான் உங்களுக்குச் சொன்ன



தெல்லாத்தையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். 27 சமாதானத்தை உங்களுக்கு
வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்;
லோகந் தருகிறதுபோல் நான் உங்களுக்குத் தரேன்; உங்கள் இருதயங் கலங்கவும்
வேண்டாம், பயமாயிருக்கவும் வேண்டாம். 28 போய் உங்களண்டைக்கு வருகிறே
னென்று நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்கள்; என்னைச் சிநேகித்தீர்
களானால், பிதாவண்டைக்குப் போகிறேனென்று நான் சொன்னதற்காகச் சந்தோ
ஷப்படுவீர்கள்; ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவர். 29 அது சம்பவிக்
கும்போது நீங்கள் விசுவாசிப்பதற்காக, இப்போது அது சம்பவியாததுக்கு முன்
னே அதை உங்களுக்குச் சொன்னேன். 30 இனி உங்களுடனே வெகுவாய்ப் பே
சேன், ஏனெனில் இந்த லோகத்தின் பிரபு வருகிறான்; ஆனால் அவனுக்கு என்னி
டத்தில் ஒன்றும் இல்லை. 31 நானோவெனில் பிதாவைச் சிநேகிக்கிறேன் என்றும்,
பிதா எனக்குக் கற்பித்தபடியே செய்கிறேன் என்றும், லோகம் அறியும்படிக்கு,
எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

## பெந்தெகொஸ்தே பண்டிகையின் ௨-ம் நாள்.

நிரு. அப். ௰, ௪௨-௪௮.

சனத்துக்குப் பிரசங்கிக்கவும், நாம் உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோ
ருக்கும் பராபரனால் குறிக்கப்பட்ட நியாயாதிபதி என்று திடச்சாட்சியாக ஒப்பு
விக்கவும், அவர் எங்களுக்குக் கற்பித்தார். 43 இவர் பேரிலே விசுவாசிக்கிறவனெல்
லாம் இவர் நாமத்தினால் பாவ மன்னிப்பைப் பெறுகிறானென்று தீர்க்கதரிசிகள்
எல்லாரும் இவருக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் என்றான். 44 பேதுரு இன்னம்
இந்த வார்த்தைகளைப் பேசியிருக்கையில், வசனத்தைக் கேட்ட எல்லார்மீதிலும்
பரிசுத்த ஆவி இறங்கினார். 45 அப்போது பேதுருவுடனேகூட வந்திருந்த சுன்னத்
துள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் ஈவு புறச்சாதியார் மேலும் ஊற்றப்பட்ட
தென்று பிரமித்தார்கள். 46 ஏனெனில் அவர்கள் பாஷைகளைப் பேசுகிறதையும்
பராபரனை மகிமைப்படுத்துகிறதையுங் கேட்டார்கள். அப்போது பேதுரு பிரத்
தியுத்தாரமாக: 47 நம்மைப் போல் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்கள் ஞான
ஸ்நானம் பெறாதபடிக்கு, யாதொருவன் தண்ணீரைத் தடைபண்ணலாமோ
என்று சொல்லி, 48 அவர்கள் கர்த்தருடைய நாமத்திலே ஞானஸ்நானம்பெறக்
கற்பித்தான்.

குரு. சகல மாமிசத்தின் மீதிலும் நம்முடைய ஆவியை ஊற்றுவோமென்று பராபரன் சொன்ன
வாக்குத்தத்தம் உங்களுக்கும், பராபரனுடைய கர்த்தர் வரவழைக்கப் போகிற சாதி
யுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது. எல்லாச் சனசதளங்களே, கர்த்தரைப் புகழுங்
கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௩, ௰௬-௨௧.

அதேனெனில் பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை, அவர் பேரில்
விசுவாசிக்கிறவனெல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காக,

தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார். 17 ஏனெனில் பராபரன் தம்
முடைய குமாரனை லோகத்தில், லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுப்
பாமல், அவராலே லோகம் இரட்சிக்கப்படுவதற்காக அனுப்பினார். 18 அவர்பேரில்
விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோவெ
னில், பராபரனுடைய ஒரேபேருன குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசியா
மல் போனபடியினாலே, அப்போதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கி
ருன். 19 வெளிச்சம் லோகத்திலே வந்திருந்தும், மனுஷர் வெளிச்சத்தைப் பார்க்க
இருளைச் சிநேகித்ததே ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்கிறது; ஏனெனில் அவர்
களுடைய கிரியைகள் பொல்லாததாயிருந்தது. 20 அதேனென்றால் பொல்லாங்கு
செய்கிறவனெல்லாம் வெளிச்சத்தைப் பகைத்து, தன் கிரியைகள் அதட்டப்படா
தபடிக்கு, வெளிச்சத்தண்டை வராதிருக்கிறான். 21 ஆனால் உண்மையைச் செய்
கிறவன், தன் கிரியைகள் வெளியாகும்படிக்கு, வெளிச்சத்தண்டை வருகிறான்;
ஏனெனில் அதுகள் பராபரனுக்குள் செய்யப்பட்டிருக்கிறது என்றார்.

**திரித்துவத்தின் பண்டிகை.**

திரு. ரோ. ௰௧, ௩௩—௩௬.

ஆ, பராபரனுடைய ஞானம் அறிவு என்றதுகளின் ஐசுவரியம் எத்தனை ஆழம்;
அவருடைய நியாயத்தீர்ப்புகள் எத்தனையாய் அளவறுக்கப்படாததுகளும், அவரு
டைய வழிகள் எத்தனையாய் ஆராயப்படாததுகளுமாயிருக்கிறது. 34 ஏனென்றால்
கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் ஆர்; அல்லது, அவருக்கு உசாவுதுணை
யானவன் ஆர். 35 அல்லது, தனக்குப் பதில்கொடுக்கப்பட முந்தி அவருக்குக்
கொடுத்தவன் ஆர். 36 ஏனென்றால் எல்லாம் அவராலும் அவர் மூலமாகவும் அவ
ருக்கென்றும் இருக்கிறது. அவருக்கு என்றென்றைக்கும் மகிமையுண்டாகக்
கடவது. ஆமேன்.

குரு. இருந்தவரும் இருக்கிறவரும் வரப்போகிறவருமாயிருக்கிற சர்வத்துக்கும் வல்ல பராபர
னாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. யோவான் ௩, ௧—௰௫.

யூதரில் தலைவனாகிய நீக்கொதேமு என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் பரி
சேயரில் இருந்தான். 2 இவன் இராத்திரியிலே இயேசுவண்டையில் வந்து, அவ
ருடனே: ரபி, நீர் பராபரனாலே வந்த போதகர் என்று அறிவோம்; ஏனெனில்
ஒருவனுந் தன்னுடனே பராபரன் இருந்தாலொழிய, நீர் செய்கிற இந்த அடை
யாளங்களைச் செய்யக் கூடாது என்றான். 3 இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தார
மாக: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடி
யும் பிறந்தாலொழிய, பராபரனுடைய இராச்சியத்தைக் காணக் கூடாது என்
றார். 4 நீக்கொதேமு அவருடனே: மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி
பிறக்கலாம்; அவன் இரண்டாந்தரந் தன் தாயின் கர்ப்பத்துக்குள் பிரவேசித்துப்
பிறக்கக் கூடுமோ என்றான். 5 இயேசு பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது:



மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் தண்ணீரினாலும்
ஆவியினாலும் பிறந்தாலே ஒழிய, பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்
கக் கூடாது. 6 மாமிசத்தினால் பிறந்தது மாமிசமாயிருக்கிறது, ஆவியினாலே பிறந்
தது ஆவியாயிருக்கிறது. 7 நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்
குச் சொன்னதற்காக அதிசயப்படாதே. 8 காற்று தனக்குச் சரிபோன இடத்
திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆகிலும் எங்கேயிருந்து வரு
கிறதென்றும் எங்கே போகிறதென்றும் அறியாய். ஆவியினாலே பிறந்தவன் எல்
லாம் அந்தப்படியே இருக்கிறான் என்றார். 9 நீக்கொதேமு அவருக்குப் பிரத்தி
யுத்தாரமாக: இதுகள் சம்பவிக்கக் கூடுகிறது எப்படி என்றான். 10 இயேசு அவ
னுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்
தும், இதுகளை அறியாயோ. 11 மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகி
றேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதுக்குச் சாட்சி
கொடுக்கிறோம்; ஆனால் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளீர்கள். 12 நான் உங்
களுக்குப் பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்ல நீங்கள் விசுவாசியாதேபோனால்,
பரமகாரியங்களை உங்களுக்குச் சொன்னேனாகில், எப்படி விசுவாசிப்பீர்கள். 13 பர
மண்டலத்திலிருந்து இறங்கின பரமண்டலத்திலுள்ள மனுஷனுடைய குமாரனே
யொழிய, ஒருவனும் பரமண்டலத்துக்கு ஏறினதில்லை. 14 மோசே வனாந்தரத்தில்
சர்ப்பத்தை உயர்த்தின வண்ணமாய் மனுஷனுடைய குமாரனும் 15 அவர் பேரில்
விசுவாசிக்கிறவன் எல்லாங் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காக
உயர்த்தப்படவேண்டியது என்றார்.

**திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௧-ம் ஞாயிறு.**

திரு. ௧ யோவான் ௪, ௰௬—௨௧.

பராபரன் சிநேகம் தானே. சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் பராபரனில்
நிலைத்திருக்கிறான்; பராபரன் அவனிலும் நிலைத்திருக்கிறார். 17 நியாயத்தீர்ப்பின்
நாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கும்படிக்கு, இதிலே சிநேகம் நம்மிட
த்தில் நிறைவேறிற்று; ஏனெனில் அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இந்த லோ
கத்தில் இருக்கிறோம். 18 சிநேகத்திலே பயம் இல்லை, நிறைந்த சிநேகம் பயத்தைப்
புறம்பே தள்ளும்; ஏனெனில் பயம் வாதையுள்ளது, பயப்படுகிறவனோ சிநேகத்
திலே தேறினவன் அல்ல. 19 நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம், ஏனெனில்
அவர் நம்மை முந்திச் சிநேகித்தார். 20 ஒருவன்: பராபரனைச் சிநேகிக்கிறேன்
என்று சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; ஏனெ
னில் தான் கண்ட தன் சகோதரனைச் சிநேகியாதவன் தான் காணாத பராபரனை
எப்படி சிநேகிக்கக் கூடும். 21 பராபரனைச் சிநேகிக்கிறவன் தன் சகோதரனையுஞ்
சிநேகிக்கவேண்டுமென்கிற கற்பனையை அவரால் அடைந்திருக்கிறோம்.

குரு. ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால், அவனில் பிதாவின் சிநேகமில்லை. லோகமும் அதின்
இச்சையும் ஒழிந்துபோம்; பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்
றைக்கும் நிலைநிற்கிறான்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

முதலாம் பங்கு.

சுவி. லூக். ௰௬, ௰௯–௩௧.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலே
யேறப்பெற்ற புடவையுந் தரித்துக்கொண்டு, அனுதினமுஞ் சம்பிரமமாய் வாழ்ந்
திருந்தான். 20 ஆனால் லாசரு என்ற நாமமுள்ள தரித்திரன் ஒருவன் இருந்தான்.
அவன் பருக்கள் நிறைந்தவனாய் அவன் வாசலண்டையிலே கிடந்து, 21 ஐசுவரிய
வானுடைய பந்தியிலிருந்து விழுந் துணிக்கைகளால் தன்பசியை ஆற்ற ஆசையா
யிருந்தான். ஆனால் நாய்களும் வந்து அவன் பருக்களை நக்கிற்று. 22 அப்புறஞ்
சம்பவித்ததேதென்றால், தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய
மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். ஆனால் ஐசுவரியவானும் மரித்து அடக்
கப்பட்டான். 23 அவன் நரகத்திலே வேதனைகளில் இருக்கும்போது, தன் கண்
களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையுங்
கண்டான். 24 அப்போது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் என்மேல் இரங்கி,
லாசருவை தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்
பண்ண அனுப்பும்; அதேதென்றால் இந்தச் சுவாலையிலே வேதனைப்படுகிறேன்
என்று கூப்பிட்டான். 25 ஆனால் ஆபிரகாம் சொன்னதாவது: மகனே, உயிரோ
டிருக்கக்கொள்ள, நீ உன் நன்மைகளையும் லாசரு அப்படியே தீமைகளையும் அனு
பவித்துத்தீர்ந்ததென்று நினைத்துக்கொள்; இப்போது இவனோ தேற்றப்படுகிறான்,
நீயோ வேதனைப்படுகிறாய். 26 இதுகளெல்லாந் தவிர, இவ்விடத்திலிருந்து உங்
களண்டைக்குக் கடந்துபோகவும், அல்லது அவ்விடத்திலிருந்து எங்களண்டைக்
குக் கடந்துவரவும், மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்
களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது என்றான். 27 அப்
போது அவன் சொன்னதாவது: அப்படியானால், தகப்பனே, நீர் அவனை என்
தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். 28 ஏனெனில்
எனக்கு ஐந்து சகோதரர் உண்டு; அவர்களும் இந்த வேதனையுள்ள இடத்துக்கு
வராதபடிக்கு, இவன் அவர்களுக்குத் திடச்சாட்சியாய் அறிவிக்கத் தக்கதாகத்
தானே என்றான். 29 ஆபிரகாம் அவனுடனே: அவர்களுக்கு மோசேயுந் தீர்க்க
தரிசிகளும் உண்டு; அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்றான். 30 அவனோவெ
னில்: அப்படி அல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன்
அவர்களண்டைக்குப் போனால், குணப்படுவார்கள் என்றான். 31 ஆனால் அவன்
இவனுடனே: அவர்கள் மோசேயையுந் தீர்க்கதரிசிகளையுங் கேளாவிட்டால், மரித்
தோரிலிருந்து ஒருவன் எழுந்தாலும் ஒப்பார்களென்று சொன்னான் என்றார்.

திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨-ம் நாயிறு.

நிரு. ௧ யோவான் ௩, ௰௩–௰௮.

என் சகோதரரே, லோகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதேயுங்
கள். 14 மரணத்தைவிட்டு நீங்கி, சீவனுக்குள்பட்டிருக்கிறோம் என்கிறதை நாம்
அறிவோம்; ஏனெனில் சகோதரரைச் சிநேகிக்கிறோம். சகோதரனைச் சிநேகி
யாதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான். 15 தன் சகோதரனைப் பகைக்கிற
வனெல்லாம் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; ஆனால் மனுஷகொலைபாதகனா





கிய ஒருவனுக்குள்ளும் நித்திய சீவன் நிலைத்திருக்கிறதில்லை என்று அறிவீர்கள்.
16 அவர் நமக்காகத் தம்முடைய சீவனைவிட்டுவிட்டதினாலே, சிநேகம் இன்ன
தென்று அறிந்தோம். நாமுஞ் சகோதரருக்காகச் சீவனை விட்டு விடக் கடனாளி
களாய் இருக்கிறோம். 17 ஆனால் எவனாகிலும் லோக சீவனமுடையவனாயிருந்து,
தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனை
விலக அடைத்துக் கொண்டால், அவனுக்குள் பராபரனுடைய சிநேகம் எப்படி
நிலைக்கும். 18 என் பிள்ளைகளே, வசனத்தினாலும் அல்ல, நாவினாலும் அல்ல,
கிரியையினாலும் உண்மையினாலுஞ் சிநேகிக்கக் கடவோம்.

குரு. உங்களை அந்தகாரத்தை விட்டுத் தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்
தவருடைய புண்ணியங்களை அறிவிக்கக் கடவீர்கள். அவர் மெய்யாகவே சனசதளங்களைச்
சிநேகிக்கிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௰௪, ௰௬–௨௪.

அவரோவெனில் அவனுக்குச் சொன்னதாவது: ஒரு மனுஷன் பெரிய விருந்
தைப் பண்ணி, அநேகரை அழைத்து, 17 விருந்துவேளையில்: வாருங்கள், எல்
லாம் ஆயத்தமாயிற்று என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்ல, தன் ஊழி
யக்காரனை அனுப்பினான். 18 அவர்கள் எல்லாரும் ஏகமாய் வரக்கூடாதென்று
மனுக்கேட்கத் தொடங்கினார்கள். முந்தினவன் அவனுடனே: ஒரு வயலைக் கொண்
டேன், நான் புறப்பட்டுப்போய், அதைப் பார்க்க எனக்குத் தேவையாயிருக்கிறது;
என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். 19 வேறொருவன்:
ஐந்து ஏர்க்குண்டைக் கொண்டேன், அதுகளைச் சோதிக்கப் போகிறேன்; என்னை
மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். 20 வேறொருவன்: பெண்ணை
விவாகம் பண்ணினேன், இதின் நிமித்தம் நான் வரக் கூடாது என்றான். 21 அந்த
ஊழியக்காரன் வந்து, தன் எசமானுக்கு இதுகளை அறிவித்தான். அப்போது
வீட்டுக்கு எசமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப்
பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் புறப்பட்டுப்போய், தரித்திரரையும்
ஊனரையுஞ் சப்பாணிகளையுங் குருடரையும் இங்கே உள்ளே அழைத்து வா என்
றான். 22 ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தபடி செய்யப்பட்டது; இன்னம்
இடம் உண்டென்றான். 23 அப்போது எசமான் ஊழியக்காரனுடனே: நீ வழிகளி
லும் வேலிகள் அருகேயும் புறப்பட்டுப்போய், என் வீடு நிறையும்படிக்குச்
சனங்களை உள்ளே வர வருந்தி அழை. 24 ஏனெனில் அழைக்கப்பட்ட அந்த
மனுஷரில் ஒருவனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றானென்று சொன்னார்.

திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் நாயிறு.

நிரு. ௧ பேது. ௫, ௬–௰௧.

ஆனபடியினாலே பராபரன் ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்தும்படிக்கு
அவருடைய வல்லமையான கைக்குக் கீழாகத் தாழுங்கள். 7 உங்கள் கவலையை

யெல்லாம் அவர்மேல் எறிந்துவிடுங்கள்; ஏனெனில் அவர் உங்களுக்காக விசாரிப்
பாய் இருக்கிறார். 8 மனத்தெளிவாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள்
எதிரியாகிய பிசாசு கர்ச்சிக்கிற சிங்கம்போலே, எவனை விழுங்கலாமோ என்று
வகைதேடிச் சுற்றித்திரிகிறது. 9 அத்தோடே நீங்கள் விசுவாசத்தில் உறுதியாய்
எதிர்த்து நின்று, லோகத்திலுள்ள உங்கள் சகோதரக் கூட்டத்தில் அப்படிக்
கொத்த பாடுகளே நிறைவேறி வருகிறதென்று அறியுங்கள். 10 ஆனால் கொஞ்சக்
காலம் பாடுபடுகிற நம்மைக் கிறிஸ்து இயேசுவுக்குள் தம்முடைய நித்திய மகி
மைக்கு அழைத்த எல்லாக் கிருபையினுடைய பராபரன் உங்களைச் சீர்பொருந்
தப்பண்ணி, உறுதியாக்கி, திடப்படுத்தி, அஸ்திபாரப்படுத்தக் கடவார். 11 அவருக்கு
மகிமையும் பெலனும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாயிருக்
கக்கடவது. ஆமேன்.

குரு. மனத்தாழ்மையுள்ளோர் பாக்கியவான்கள். பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு லோகத்
திலே வந்தாரென்கிறது உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்குப் பாத்திரமுமான வார்த்தை.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௰௫, ௧–௰.

சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் வசனங்களைக் கேட்க, அவரிடத்தில்
குச் சேருகிறவர்களாயிருந்தார்கள். 2 அப்போது பரிசேயரும் வேதபாரகரும்:
இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களுடனே சாப்பிடுகிறார் என்று முறு
முறுத்தார்கள். 3 அவரோவெனில் அவர்களுடனே சொன்ன உவமையாவது:
4 உங்களில் எந்த மனுஷனாகிலும் நூறு ஆடுடையவனாயிருந்து, அதுகளில் ஒன்றை
இழந்தால், தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் விட்டு, இழந்ததைக்
கண்டுபிடிக்கும் மட்டும் அதைத் தேடிப்போகானோ. 5 கண்டுபிடித்தால், அவன்
அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்கள் மேல் போட்டுக்கொண்டு, 6 வீட்டுக்கு
வரும்போது, சிநேகிதரையும் அயலகத்தாரையுங் கூட வரவழைத்து, அவர்க
ளுடனே: என்னோடே சந்தோஷமாயிருங்கள்; அதேனெனில் காணாமல்போன
என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்பான். 7 இப்படியே குணப்படுதல்
தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்க, குணப்படுகிற
ஒரே பாவியின் பேரிலே பரமண்டலத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன். 8 அல்லது, எந்த ஸ்திரியாகிலும் பத்து வெள்
ளிக்காசை வைத்திருந்து, ஒரு வெள்ளிக்காசை இழந்தால், விளக்கைக் கொளுத்தி,
வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கும் மட்டாகக் கவனமாய்த் தேடாளோ.
9 கண்டுபிடித்தால், அவள் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையுங் கூட வர
வழைத்து: என்னோடே சந்தோஷமாய் இருங்கள்; அதேனெனில் நான் இழந்தி
ருந்த வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன் என்பாள். 10 இப்படியே குணப்படு
கிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்குள்ளே சந்தோஷம்
உண்டாகிறதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.



## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௪-ம் நாயிறு.

திரு. ரோ. அ, ௰அ–௨௩.

ஏனென்றால் இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்
குப் பாத்திரமானதுகள் அல்ல என்று எண்ணுகிறேன். 19 ஏனெனில் சிருஷ்டி
யினுடைய ஏக்கம் பராபரனுடைய புத்திரரின் வெளிப்படுதலுக்குக் காத்துக்
கொண்டிருக்கிறது. 20 அதேனென்றால் சிருஷ்டிதானுங் கேட்டினுடைய அடி
மைத்தனத்துக்கு நீங்கலாகி, பராபரனுடைய பிள்ளைகளின் மகிமையான தன்னிங்
களுக்கு உள்ளாகும் என்கிற நம்பிக்கையாய், 21 சிருஷ்டியானது மாய்கைக்குக்
கீழ்ப்பட்டிருக்கிறது; தன்னிச்சையாய் அல்ல, கீழ்ப்படுத்தினவர் நிமித்தமாகத்
தானே. 22 ஏனென்றால் சருவசிருஷ்டியும் இதுவரைக்குங் கூடத்தவித்து, கூட
வேதனைப்படுகிறதென்று அறிந்திருக்கிறோம். 23 அது மாத்திரமோ அல்ல, ஆவி
யின் முதல் வரங்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரத்தின் மீட்பாகிய புத்
திரசுவிகாரத்துக்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.

குரு. கர்த்தர் அவனவனுக்கு அவனுடைய நீதிக்கும் அவன் உண்மைக்குந் தக்கதாய்ப் பலன்
அளிப்பார். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அதேனென்றால் அவர்கள் இரக்கம்
பெறுவார்கள்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௬, ௩௬–௪௨.

ஆனபடியினாலே உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறதுபோல், நீங்
களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள். 37 குற்றமாய் நிர்ணயாதேயுங்கள்; அப்போ
து குற்றமாய் நிர்ணைக்கப்படாதிருப்பீர்கள். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்
கள்; அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலைபண்
ணுங்கள்; அப்போது விடுதலை பண்ணப்படுவீர்கள். 38 கொடுங்கள், அப்போது
உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும் நல்ல அளவை
உங்கள் மடியிலே கொடுப்பார்கள். ஏனெனில் எந்த அளவால் அளக்கிறீர்களோ,
அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் என்றார். 39 அவர் பின்னையும்
அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: குருடனுக்குக் குருடன் வழிகாட்ட
லாமோ, இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவோ. 40 சீஷன் தன் போத
கனுக்கு மேல்பட்டவனாயிராமல், தேறினவனெல்லாந் தன் போதகனைப்போல்
இருப்பான். 41 ஆனால் நீ உன் சுய கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன்
சகோதரன் கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன. 42 அல்லது, நீ உன் கண்
ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல், உன் சகோதரனுடனே: சகோதரனே, நான்
உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடட்டும் என்று எப்படி சொல்லக்
கூடும். மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு;
பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயையும் எடுத்துப்போட வகை
பார்ப்பாயாக என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௫-ம் நாயிறு.

நிரு. ௧ பேது. ௩, அ-௰௫.

கடைசியென்னவென்றால், எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும் பரதவிக்கிறவர்
களும் சகோதர நேசமும் உருக்கவாளிகளும் பட்சமுள்ளவர்களுமாய் இருங்கள்.
9 பொல்லாப்புக்குப் பொல்லாப்பையும், அல்லது உதாசனத்துக்கு உதாசனத்
தையுஞ் சரிக்கட்டாதேயுங்கள். அதற்கு எதிரிடையாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச்
சுதந்தரித்துக்கொள்ள அழைக்கப்பட்டவர்கள் என்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.
10 ஏனெனில், சீவனை விரும்பி, நல் நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன்
தன் நாவைப் பொல்லாப்புக்குந் தன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கி
அமர்த்தி, 11 பொல்லாப்பைவிட்டு விலகி, நன்மைசெய்யவும், சமாதானத்தைத்
தேடி, அதைப் பின்தொடரவுங் கடவான். 12 ஏனெனில் கர்த்தருடைய கண்கள்
நீதிமான்கள் மேல் வைக்கப்பட்டு, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுத
லுக்குக் கவனிக்கிறது; ஆனால் கர்த்தருடைய முகம் பொல்லாங்கு செய்கிறவர்க
ளுக்கு விரோதமாய் இருக்கிறது. 13 நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களா
னால், உங்களுக்குப் பொல்லாப்பைச் செய்பவனும் ஆர். 14 அல்லவென்று நீதியின்
நிமித்தமாக நீங்கள் பாடனுபவித்தாலும், பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். அவர்
கள் பயமுறுத்தலுக்கோ நீங்கள் பயப்படாமலுங் கலங்காமலும், 15 கர்த்தராகிய
பராபரனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்.

குரு. கர்த்தர் நல்லவரும் இக்கட்டுநாளிலே அரணான கோட்டையுமாயிருந்து, தம்மை நம்புகிற
வர்களை அறிந்திருக்கிறார். அவரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்
கியவான்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௫, ௧-௰௧.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், கும்பு பராபரனுடைய வசனத்தைக்
கேட்க அவரை நெருக்கி நிற்கையில், அவர் கெனேசரேத்தென்ற சிறு கடலண்
டையிலே நின்றிருந்து, 2 கடல் கரையிலே இரண்டு படவுகளை நிற்கக் கண்டார்;
மீன் பிடிக்கிறவர்களோவென்றால் அதுகளை விட்டு இறங்கி, வலைகளை அலசிக்
கொண்டிருந்தார்கள். 3 அப்போது அந்தப் படவுகளில் ஒன்றுக்குள்ளே ஏறி
னார்; அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ள,
அவர் அவனை வேண்டிக்கொண்டு, அந்தப் படவில் உளுக்கார்ந்திருந்து, கும்புக
ளைப் போதகம் பண்ணினார். 4 வசனித்து முடித்த பின்பு, அவர் சீமோனுடனே:
நீ ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய், மீன்வேட்டைக்கு உங்கள் வலைகளைத்
தாழவிடுங்கள் என்றார். 5 சீமோன் அவருக்கு பிரத்தியுத்தாரமாக: ஐயரே, இரா
முழுதும் நாங்கள் பிரயாசப்பட்டு, ஒன்றும் பிடித்ததில்லை; உம்முடைய வார்த்தை
யின்படியோவென்றால் வலையைத் தாழ விடுவேன் என்றான். 6 அவர்கள் இப்படி
செய்து, வெகு ஏராளமான மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் வலை
யோவெனில் கிழிந்தது. 7 அப்போது வேறே படவிலிருந்த பங்காளிகள் வந்து



தங்களுக்கு ஒத்தாசை பண்ண, அவர்களுக்குச் சைகை காட்டினார்கள். அவர்கள்
வந்து, இரண்டு படவுகளையும் அமிழ்ந்தத் தக்க பாரமாக நிரப்பினார்கள். 8 ஆனால்
சீமோன் பேதுரு இதைக் கண்டு, இயேசுவின் முழங்கால்களண்டை விழுந்து:
ஆண்டவரே, என்னை விட்டுப் புறப்படும்; ஏனென்றால் பாவியான மனுஷனாய்
இருக்கிறேன் என்றான். 9 ஏனெனில் அகப்பட்ட மீன் வேட்டையினாலே அவ
னுக்கும் அவனுடனே கூட இருந்த யாவருக்குந் திகைப்பு உண்டாயிற்று. 10 சீ
மோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபுக்கும்
யோவானுக்கும் அந்தப்படி தானே. அப்போது இயேசு சீமோனுடனே: பயப்
படாதே; இது முதல் மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். 11 அவர்கள்
படவுகளைக் கரையிலே தட்டவைத்து, எல்லாத்தையும் விட்டு, அவரைப் பின்
சென்றார்கள்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௬-ம் நாயிறு.

நிரு. ரோ. ௬, ௩-௰௧.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற நாம் அனைவரும் அவ
ருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோமென்று அறியீர்களோ.
4 ஆகையால் கிறிஸ்து பிதாவின் மகிமையினாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்
பட்டதுபோல், நாமும் நவமான சீவனில் நடந்து கொள்ளும்படிக்கு, ஞான
ஸ்நானத்தினால் அவருடனே கூட மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்பட்டோம்.
5 ஏனெனில் அவருடைய மரணத்துக்கு ஒப்பாக நாம் கூட நாட்டப்பட்டவர்களா
னால், அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் அப்படி இருப்போம். 6 நாம் இனி
பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவத்தின் சரீரம் அழிந்துபோகும்
பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில்
அறையப்பட்டதென்கிறதை அறிந்திருக்கிறோமே. 7 ஏனென்றால் மரித்தவன்
பாவத்துக்கு நீங்கி நீதிமானாக்கப்பட்டான். 8 கிறிஸ்துவுடனே கூட மரித்தோ
மேயானால், அவருடனேகூடப் பிழைத்துமிருப்போம் என்று விசுவாசிக்கிறோம்.
9 மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிக்கிறதில்லை என்று அறிந்திருக்
கிறோமே; மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாது. 10 ஏனெனில் அவர் மரித்
தது பாவத்துக்கு ஒரே விசை மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறதோவெனில்
பராபரனுக்குப் பிழைத்திருக்கிறார். 11 அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்
துக்கு மரித்தவர்களாகவும், பராபரனுக்கோ நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து
இயேசுவுக்குள் பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணுங்கள்.

குரு. நீங்கள் சுத்தமாகும்படிக்கு, உங்கள்பேரிலே சுத்தமான தண்ணீரைத் தெளிப்போம்;
உங்களுக்கு நவமான இருதயத்தையும் உங்கள் உள்ளத்திலே நம்முடைய ஆவியையுந் தந்து
உங்களை நமது கட்டளைகளில் நடக்கவும் நமது நியாயங்களைக் கைக்கொள்ளவும் அதுகளின்
படி செய்யவும் பண்ணுவோம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௫, ௨௰-௨௬.

அதேனென்றால் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் நீதி வேதபாரகர்
பரிசேயர் என்றவர்களின் நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய, வான
ராச்சியத்துக்குள் பிரவேசிக்க மாட்டீர்கள். 21 கொலை செய்யாயாக என்பதும்,
ஆராகிலுங் கொலைசெய்தால் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும்,
பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டது என்று கேட்டீர்கள். 22 ஆனால் நான் உங்க
ளுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்
பவன் எல்லாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். ஆராகிலுந் தன் சகோதர
னைச் சீ என்றால், ஆலோசனைச் சபைத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். ஆராகிலும்
மதிகேடனே என்றால், எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். 23 ஆகையால் நீ பீடத்
தண்டை உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் சகோதரனுக்கு உன்பேரி
லே குறையுண்டென்று அங்கே நினைவுகூர்ந்தாயாகில், 24 அவ்விடத்திலே பீடத்
தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், உன் சகோதரனோடே முந்
த ஒப்பரவாகி, பிற்பாடு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. 25 எதிரியானவன்
உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னை ஊழியக்கா
ரனுக்கு ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலுமிருக்க, நீ
சீக்கிரமாக உன் எதிரியோடே இன்னம் வழியிலிருக்கக்கொள்ள, அவனுடனே
நல்மனம் பொருந்து. 26 மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ கடைசிக்
காசைக் கொடுத்துத்தீரும் மட்டாக அவ்விடத்திலிருந்து புறப்பட மாட்டாய்
என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப்பிந்தின ௭-ம் நாயிறு.

நிரு. ரோ. ௬, ௰௯-௨௩.

உங்கள் மாமிசத்தினுடைய பலவீனத்தின் நிமித்தம் மனுஷனடவாய்ச்
சொல்லுகிறேன். அக்கிரமம் நடக்க நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்துக்
கும் அக்கிரமத்துக்கும் ஊழியமாய் எப்படி நிறுத்தினீர்களோ, அப்படி இப்போ
து பரிசுத்தமாகுதல் நடக்க உங்கள் அவயவங்களை நீதிக்கு ஊழியமாய் நிறுத்துங்
கள். 20 ஏனெனில் பாவத்துக்கு நீங்கள் ஊழியக்காரராயிருக்கக்கொள்ள, நீதிக்
கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். 21 ஆனால் அப்போது என்ன பலனை நீங்கள் இப்
போது வெட்கப்படுகிற கிரியைகளால் அடைந்தீர்கள்; அதுகளின் முடிவு மரண
மே. 22 இப்போதோவெனில் நீங்கள் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டு,
பராபரனுக்கு ஊழியக்காரரான பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுடைய பலன்;
முடிவோ நித்திய சீவன். 23 ஏனென்றால் பாவத்தின் சம்பளம் மரணம்; பராபரனு
டைய கிருபை வரமோவெனில் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு மூல
மாய் வரும் நித்திய சீவன்.

குரு. பராபரனுக்கு ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்
கிற வித்தியாசத்தைக் காண்பீர்கள். ...மையானவர்கள் புசித்துத் திருப்தியடைவார்
கள்; உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.



சுவி. மாற்கு ௮, ௧-௯.

அந்நாட்களிலே திரள்கும்பிருந்து அவர்களுக்குப் புசிக்க ஒன்றும் இல்லாத
போது, இயேசு தம்முடைய சீஷரைச் சேரவழைத்து, அவர்களுடனே: 2 கும்
பின்மேல் மனதுருகுகிறேன்; ஏனெனில் அவர்கள் இப்போது மூன்று நாளாய்
என்னண்டை தரித்து, புசிக்க ஒன்றும் இல்லாதிருக்கிறார்கள். 3 நான் அவர்களைப்
பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால், வழியிலே தொய்ந்துபோவார்
கள்; ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலேயிருந்து வந்தார்கள் என்றார்.
4 அவருடைய சீஷர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இவர்களை ஒருவன் இங்கே
வனாந்தரத்தில் அப்பங்களினாலே திருப்திபண்ண எங்கேயிருந்து வரும் என்றார்
கள். 5 அவர்களை: உங்களுக்கு எத்தனை அப்பங்களுண்டென்று கேட்டார்; அவர்
கள்: ஏழு என்றார்கள். 6 அப்போது அவர் சனம் தரையிலே பந்தியிருக்கக் கட்ட
ளையிட்டு, ஏழப்பங்களை எடுத்து, இஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு, அவர்கள் முன்
னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். அவர்கள் சனத்தின்முன்னே
வைத்தார்கள். 7 கொஞ்சஞ் சிறு மீன்கள் அவர்களுக்கு உண்டாயிருந்தது. அவர்
இஸ்தோத்திரம் பண்ணி, அதுகளையும் அவர்கள்முன்னே வைக்கச் சொன்னார்.
8 ஆனால் அவர்கள் புசித்து, திருப்தியடைந்து, மீந்த துணிக்கைகளை ஏழு கூடை
எடுத்தார்கள். 9 புசித்தவர்களோவெனில் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்
தார்கள். அவர் இவர்களை அனுப்பிவிட்டார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப்பிந்தின ௮-ம் நாயிறு.

நிரு. ரோ. ௮, ௰௨-௰௭.

ஆகையால், சகோதரரே, கடனாளிகளாயிருக்கிறோம்; ஆனால் மாமிசத்தின்
படி சீவனம் பண்ண மாமிசத்துக்கு அல்ல. 13 ஏனெனில் நீங்கள் மாமிசத்தின்படி
சீவனம் பண்ணினால், சாகப்போகிறீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை
மடியப்பண்ணினீர்களேயாகில், பிழைப்பீர்கள். 14 ஏனென்றால் எவர்கள் பராபர
னுடைய ஆவியினால் ஏவப்பட்டு நடக்கிறார்களோ, அவர்கள் பராபரனுடைய புத்
திரராயிருக்கிறார்கள். 15 ஏனெனில் திரும்பப் பயமுண்டாக நீங்கள் அடிமைத்த
னத்தின் ஆவியைப் பெற்றிராமல், புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.
அவரால் அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம். 16 பராபரனுடைய பிள்ளைகளா
யிருக்கிறோம் என்று அந்த ஆவியே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொ
டுக்கிறார். 17 நாம் பிள்ளைகளேயானால், சுதந்தரருமாயிருக்கிறோம்; பராபரனு
டைய சுதந்தரரும், கூட மகிமைப்பட, கூடப் பாடுபட்டோமானால், கிறிஸ்துவு
டன் சுதந்தரருந்தானே.

குரு. அவர் வெளிச்சத்திலிருக்கிறதுபோல் நாமும் வெளிச்சத்தில் நடந்தோமானால், நமக்கு அந்நியோந்நிய ஐக்கியம் உண்டாயிருந்து, அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்கிறது.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௭, ௰௫—௨௩.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் ஆட்டுத்
தோலைப் போர்த்துக்கொண்டு, உங்களண்டைக்கு வருகிறார்கள்; உள்ளேயோ
கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்கள். 16 அவர்களுடைய கனிகளினால் அவர்களை
அறிவீர்களாக. முள்ளுச்செடிகளில் திவிதிராட்சப் பழங்களையும் முள்ளுப்பூண்டு
களில் அத்திப்பழங்களையும் அறுக்கிறார்களோ. 17 அந்தப்படி நல்ல மரமெல்லாம்
நல்ல கனிகளைக் கொடுக்கும்; ஆகாத மரமோ ஆகாத கனிகளைக்கொடுக்கும். 18 நல்
லமரம் ஆகாத கனிகளைக்கொடுக்கக் கூடாது; ஆகாத மரம் நல்லகனிகளைக் கொ
டுக்கவுங் கூடாது. 19 நல்லகனி கொடாத மரம் எல்லாம் வெட்டப்பட்டு, அக்கினி
யிலே போடப்படும். 20 ஆனதுகொண்டு அவர்கள் கனிகளினாலே அவர்களை அறி
வீர்களாக. 21 என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவ
னும் அல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே
வானராச்சியத்துக்குள் பிரவேசிப்பான். 22 அந்த நாளில் அநேகம் பேர் என்னு
டனே: ஆண்டவரே, ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனம் உரைத்
தோம் அல்லவோ, உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிட்டோம் அல்ல
வோ, உமது நாமத்திலே அநேகம் அற்புதங்களைச் செய்தோம் அல்லவோ என்
பார்கள். 23 அப்போது நான்: ஒருக்காலும் உங்களை அறிந்தேன் இல்லை, அக்கி
ரமச் செய்கைக்காரரே, என்னை விட்டகன்று போங்கள் என்று அவர்களுக்கு
அறிக்கை பண்ணுவேன் என்றார்.

திரித்துவத்தின் பண்டிகைக்குப்பிந்தின ௯-ம் நாயிறு.

நிரு. ௧ கொரி. ௰, ௬—௰௩.

அவர்கள் இச்சித்ததுபோல் நாமும் ஆகாததுகளை இச்சிக்கிறவர்களாயிராத
படிக்கு, இதுகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிற்று. 7 சனம் புசிக்கிறதுக்குங்
குடிக்கிறதுக்கும் உளுக்கார்ந்து, விளையாடுகிறதுக்கு எழுந்திருந்தார்கள் என்று
எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரரானதுபோல், நீங்
களும் அப்படிக்கொத்தவர்கள் ஆகாதேயுங்கள். 8 வேசித்தனம் பண்ணாமலும்
இருக்கக் கடவோம்; அப்படி அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரே நாளி
லே இருபத்து மூவாயிரம்பேர் விழுந்தார்கள். 9 கிறிஸ்துவைச் சோதியாமலும்
இருக்கக் கடவோம்; அப்படி அவர்களில் சிலர் சோதித்து, பாம்புகளால் அழிக்கப்
பட்டார்கள். 10 முறுமுறுக்காமலும் இருங்கள்; அப்படி அவர்களில் சிலர் முறு
முறுத்து, சங்கரிக்கிறவனால் அழிக்கப்பட்டார்கள். 11 ஆனால் இதுகள் எல்லாந்
திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு வந்து சம்பவித்து, லோகத்தின் முடி
வுகாலங்களுக்குள்ளான நமக்கு எச்சரிக்கையாக எழுதப்பட்டது. 12 ஆனபடியி
னாலே நிற்கிறவனாகத் தன்னை எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவான்.
13 மனுஷசோதனையல்லாமல் வேறே சோதனை உங்களைப் பிடித்ததில்லை. பராப
ரனேவெனில் உண்மையாயிருக்கிறார்; அவர் உங்கள் பலத்துக்கு மிஞ்சினதாய்



நீங்கள் சோதிக்கப்பட ஒட்டாமல், நீங்கள் உத்தரிக்கக்கூடும்படிக்கு, சோதனை
யுடனே கூடப் போக்கையும் உண்டாக்குவார்.

குரு. இதோ, ஆண்டவருக்குப் பயப்படுகிறதே ஞானம், பொல்லாப்பை விட்டு விலகுகிறதே
உணர்வு. அதுகளின்படி செய்து நடக்கிற யாவரின் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௰௬, ௧—௯.

அவர் தம்முடைய சீஷரோடுஞ் சொன்னதாவது: ஐசுவரியவானான ஒரு
மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; இவன் அவனுடைய ஆஸ்திகளை
அழித்துப் போட்டவனாய் அவனுக்கு அறிவிக்கப்பட்டான். 2 அப்போது அவனை
அழைத்து, அவனுடனே: உன்பேரில் நான் இதைக் கேட்கிறதேது; உன் உக்கிரா
ணக் கணக்கை ஒப்புவி, ஏனெனில் இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது
என்றான். 3 உக்கிராணக்காரனோவென்றால் தனக்குள்ளே சொல்லிக்கொண்ட
தாவது: என்ன செய்வேன், என் எசமான் உக்கிராணவிசாரிப்பை என்னை விட்
டு வாங்கிப்போடுகிறானே; கொத்துகிறதுக்கு எனக்குப் பெலன் இல்லை, இரக்க
வும் வெட்கப்படுகிறேன். 4 நான் உக்கிராண விசாரிப்புக்குப் புறம்பாய்த் தள்ளப்
படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாக, நான் செய்
யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்று சொல்லி, 5 தன் எசமானுக்குக்
கடன்பட்டவர்களில் ஒவ்வொருவனை வரவழைத்து, முந்தினவனுடனே: நீ என்
எசமானுக்குப் பட்டகடன் எத்தனை என்றான். 6 அவன்: நூறு குடம் எண்ணெய்
என்றான். அப்போது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி உளுக்கார்ந்து, ஐம்
பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். 7 பிறகு வேறொருவனோடே: நீயோ
பட்ட கடன் எத்தனை என்றான்; அவன்: நூறு கலங் கோதும்பை என்றான். அப்
போது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான்.
8 அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எசமான் அவனைப்
புகழ்ந்தான். ஏனெனில் வெளிச்சத்தின் பிள்ளைகளைப்பார்க்க இந்தப் பிரபஞ்சத்
தின் பிள்ளைகள் தங்களுடைய சந்ததிக்குப் புத்திமான்களாயிருக்கிறார்கள். 9 நானும்
உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மாளும்போது, உங்களை நித்திய கூடாரங்
களில் ஏற்றுக்கொள்ளுவார் உண்டாக, அநீத லோகப்பொருளால் உங்களுக்குச்
சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்றார்.

திரித்துவத்தின் பண்டிகைக்குப்பிந்தின ௰-ம் நாயிறு.

நிரு. ௧ கொரி. ௰௨, ௧—௰௧.

சகோதரரே, ஞானவரங்களின் செய்தியை நீங்கள் அறியாதிருக்க எனக்கு
மனதில்லை. 2 வழிகாட்டப்பட்டபடி, நீங்கள் ஊமையான விக்கிரகங்களண்டைக்
குக்கொண்டுபோகப்பட்ட அஞ்ஞானிகளாயிருந்தீர்கள் என்று அறிவீர்கள். 3 இப்
போதும், பராபரனுடைய ஆவியினாலே பேசுகிற ஒருவனும் இயேசுவைத் தூஷ

ணியான் என்றும், பரிசுத்த ஆவியினாலொழிய, ஒருவனும் இயேசுவைக் கர்த்த
ரென்று சொல்லக் கூடாதென்றும், உங்களுக்கு அறிவிக்கிறேன். 4 ஆனால் வரங்
களுடைய வித்தியாசங்கள் உண்டு, ஆவியோ ஒருவர். 5 ஊழியங்களுடைய வித்
தியாசங்களும் உண்டு, கர்த்தரோ ஒருவர். 6 பெலன்களுடைய வித்தியாசங்களும்
உண்டு, எல்லாத்தையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற பராபரனே ஒருவர்.
7 ஆனால் அவனவனுக்கு ஆவியினுடைய விளக்கம் பிரயோசனத்துக்காகக் கட்ட
ளையிடப்படுகிறது. 8 அதேதெனில், ஒருவனுக்கோ ஆவியினாலே ஞானத்தினு
டைய வசனமும், வேறொருவனுக்கோ அந்த ஆவியினாலேதானே அறிவினுடைய
வசனமும், 9 வேறொருவனுக்கோ அந்த ஆவியினாலே தானே விசுவாசமும்,
வேறொருவனுக்கோ அந்த ஆவியினால் தானே குணமாக்கும் வரங்களும், 10 வே
றொருவனுக்கோ வல்லமைகளைச் செய்யும் பெலன்களும், வேறொருவனுக்கோ
தீர்க்கதரிசனமும், வேறொருவனுக்கோ ஆவிகளுடைய வித்தியாசங்களை நிதா
னிக்குதலும், வேறொருவனுக்கோ பற்பல பாஷைகளும், வேறொருவனுக்கோ
பாஷைகளை வியார்த்திபண்ணுதலுங் கட்டளையிடப்படுகிறது. 11 ஆனால் அந்த
ஒரே ஆவியானவர் அவரவருக்கு அவர்கள் சொந்த வரங்களைத் தம்முடைய சித்
தத்தின்படியே பகிர்ந்துகொடுத்து, இதுகளை எல்லாம் நடப்பிக்கிறார்.

குரு. பராபரனுடைய தயவையுங் கண்டிப்பையும் பார். விழுந்தவர்கள்பேரிலே இருக்கிற கண்டிப்பையும், உன்பேரிலோ, நீ தயவிலே நிலைத்திருந்தால், இருக்கிற தயவையுந்தானே. உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுக் கர்த்தரண்டைக்குத்திரும்புங்கள், அவர் மன்னிக்கிறதுக்குத் தயைபெருத்திருக்கிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௰௯, ௪௧-௪௮.

அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து, அதின் மேல் அழுது:
42 நீயும் இந்த உன்னுடைய நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கானதுகளை அறிந்
தால், நாவினை; இப்போதோவெனில் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.
43 அதேதென்றால், உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமல்போனபடியினா
லே, உன் சத்துருக்கள் உன்னைச் சூழத் தெற்றுபோட்டு, உன்னை வளைந்துகொண்
டு, எங்கும் உன்னை இறுகப்பிடித்து, 44 உன்னையும் உன்னிலிருக்கிற உன் பிள்ளை
களையுந் தரையாக்கிப்போட்டு, உன்னில் கல்லின்மேல் கல்லை வைக்காதிருக்கும்
நாட்கள் உன்மேல் வரும் என்றார். 45 அவர் தெய்வாலயத்துக்குள் பிரவேசித்து
அதிலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கி,
அவர்களுடனே: 46 நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்கிறது என்று எழுதி
யிருக்கிறது; ஆனால் நீங்கள் அதைக் கள்ளர் கெபியாக்கினீர்கள் என்றார். 47 அவர்
அனுதினமும் தெய்வாலயத்தில் உபதேசித்துக்கொண்டிருந்தார். ஆனால் பிர
தான ஆசாரியர்களும் வேதபாரகருஞ் சனத்தின் மூப்பரும் அவரைக் கொன்று
போடவகைதேடி, 48 அதை எப்படி செய்வதென்றுகாணாமல் போனார்கள்; ஏனெ
னில் சனமெல்லாம் அவரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தது.



## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௧-ம் ஞாயிறு.

### நிரு. ௧ கொரி. ௰௫, ௧-௰.

சகோதரரே, நான் உங்களுக்கு அறிவித்ததும் நீங்கள் ஏற்றுக்கொண்டதும்
நீங்கள் நின்றிருக்கிறதுமான சுவிசேஷத்தையே உங்களுக்கு அறிவிக்கிறேன். 2 நீங்
கள் விசுவாசித்தது விருதாவாயிராமல், நான் உங்களுக்கு அறிவித்த பிரகாரமாக
நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினால் உங்களுக்கு இரட்சிப்பும் உண்டு.
3 நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென
றால், கிறிஸ்து வேத எழுத்துக்களின்படியே நம்முடைய பாவங்கள் நிமித்தமாக
மரித்து, 4 வேத எழுத்துக்களின்படியே அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நா
ளில் எழுந்திருந்து, 5 கேப்பாவுக்கும், பிற்பாடு பன்னிருவருக்குந் தரிசனையானார்
என்கிறது தானே. 6 அதின் பிறகு அவர் ஐந்நூறு சகோதரருக்கேற ஒருமிக்க
தரிசனையானார். அவர்களில் மிச்சமானவர்கள் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்
கள்; சிலரோவெனில் நித்திரை அடைந்தார்கள். 7 பிற்பாடு யாக்கோபுக்கும்,
அதின் பிறகு அப்போஸ்தலர் எல்லாருக்குந் தரிசனையானார். 8 ஆனால் எல்லா
ருக்குங் கடைசியிலே அழிகருபோல் இருந்த எனக்குந் தரிசனையானார். 9 ஏனெ
னில் நான் அப்போஸ்தலரெல்லாரிலுஞ் சிறியவனாய் இருக்கிறேன்; நான் பராபர
னுடைய சபையைத் துன்பப்படுத்தினபடியினாலே, நான் அப்போஸ்தலனென்று
அழைக்கப்படப் பாத்திரவானல்ல. 10 நான் இருக்கிறதோவெனில் பராபரனு
டைய கிருபையினாலே இருக்கிறேன். அவர் என் மீதில் வைத்த கிருபை விருதா
வாயிராமல், நான் அவர்களெல்லாரையும்பார்க்க அதிகமாய் உழைத்தேன்; நா
னே அல்ல, என்னுடனே இருக்கும் பராபரனுடைய கிருபைதானே.

குரு. கிரியைக்காரனாயிராமல், ஆகாதவனை நீதிமானாக்குகிறவர்பேரிலே விசுவாசிக்கிறவனுக்கு அவனுடைய விசுவாசம் நீதியாக எண்ணப்படும். எவன்மேல் கர்த்தர் அவன் பாவத்தைச் சுமத்தாதிருக்கிறாரோ, அந்த மனுஷன் பாக்கியவான்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௰௮, ௯-௰௪.

பின்னையுந் தாங்கள் நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்
ணுகிற சிலருடனே அவர் சொன்ன உவமையாவது: 10 இரண்டு மனுஷர் செபம்
பண்ணத் தெய்வாலயத்துக்குப் போய் ஏறினார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன்
ஆயக்காரன். 11 பரிசேயன் நின்று தனக்குள்ளே பண்ணின செபமாவது: பரா
பரனே, நான் பறிகாரர், அநீதக்காரர், விபசாரருமாகிய மற்ற மனுஷரைப்போ
லும் அல்ல, இந்த ஆயக்காரனைப்போலும் அல்ல என்கிறதுக்காக உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன்; 
12 வாரத்துக்கு இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என்
எனக்குக் கைவசமானதெல்லாத்திலும் பத்தில் ஒன்றைச் செலுத்துகிறேன் என்
றான். 13 ஆயக்காரன் தூரநின்று, தன் கண்களை முதலாய் வானத்துக்கு ஏறெடுக்க
மனதாயிராமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என்
பேரிலே கிருபையுள்ளவராகும் என்றான். 14 அவனைப் பார்க்க இவனே நீதிமா

ளுக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்கு இறங்கிப்போனான் என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். ஏனெனில் தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்
படுவான்; தன்னைத் தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௨-ம் நாயிறு.

### நிரு. ௨ கொரி. ௩, ௪-௯.

ஆனால் இப்படிக்கொத்த நம்பிக்கை கிறிஸ்துமூலமாக எங்களுக்குப் பராபரன்
மேல் இருக்கிறது. 5 நாங்களாய் யாதொன்றைச் சிந்திக்க எங்களால்தான் சமர்த்
தராயிருக்கிறோம் என்கிறதில்லை; எங்கள் சாமர்த்தியம் பராபரனாலே உண்டா
யிருக்கிறது. 6 அவர் எங்களைப் புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்க
வுஞ் சமர்த்தராக்கினார்; எழுத்தினுடைய ஊழியக்காரராயிருக்க அல்ல, ஆவியி
னுடைய ஊழியக்காரராயிருக்கத் தானே. ஏனெனில் எழுத்து கொல்லுகிறது,
ஆவியோ உயிர்ப்பிக்கிறது. 7 கல்லுகளில் பதிந்து, எழுத்துக்களில் அடங்கிய மர
ணத்தினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருந்து, மோசேயினுடைய முகத்தி
லுள்ள வாங்கிப்போகிற மகிமையின் நிமித்தமாக இஸ்ரவேல் புத்திரர் அவன்
முகத்தை நோக்கிப்பார்க்கக் கூடாதிருந்ததேயானால், 8 எத்தனை அதிகமாய் ஆவி
யினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருக்கும். 9 ஏனெனில் ஆக்கினைக்குள்ளா
கத் தீர்க்குதலின் ஊழியம் மகிமையானால், வெகு அதிகமாய் நீதியாக்குதலின் ஊழி
யம் மகிமையிலே பெருகுகிறது. 10 அதேனெனில் இந்தப்பிரகாரமாய்ப் பார்த்
தால், மகிமைப்பட்டிருந்த அது இந்த மகாமேன்மையான மகிமையின் முன்னே
மகிமைப்பட்டதும் அல்ல. 11 ஏனெனில் வாங்கிப்போகிறது மகிமையோடிருந்த
தானால், வெகு அதிகமாய் நிலைநிற்கிறது மகிமையுள்ளதாயிருக்கும்.

குரு. கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் விசுவாசிக்கிற எவனையும் இரட்சிப்பதற்காகத் தெய்வ
பெலனாயிருக்கிறது. கர்த்தர் வந்து உங்களை இரட்சிப்பார்; அப்போது குருடரின் கண்கள்
திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மாற்கு ௭, ௩௧-௩௭.

மறுபடியும் அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப்புறப்
பட்டு, பத்துப் பட்டணங்களுடைய எல்லைகளின் நடுவாய்க் கலிலேயாக் கடலண்
டை வந்தார். 32 அப்போது பேசமாட்டாத ஒரு செவிடனை அவரண்டைக்குக்
கொண்டுவந்து, அவன் மேல் கையை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள்.
33 அப்போது அவர் அவனைக் கும்பலைவிட்டு, தனியே அழைத்துப்போய், தம்மு
டைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத்
தொட்டு, 34 வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா,
அதாவது: திறவுண்டுபோ என்றார். 35 உடனே அவனுடைய செவிகள் திறவுண்டு,
அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்துபோய், செவ்வையாய்ப் பேசினான். 36 இதை
யாருக்குஞ் சொல்லாதிருக்க அவர்களுக்குக் கற்பித்தார். ஆனால் அவர்களுக்கு



எத்தனைக்குக் கற்பித்தாரோ, அத்தனைக்கு அதிகமாய் அவர்கள் பிரசங்கித்து:
37 எல்லாத்தையும் நன்றாக்கினார், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணு
கிறார் என்று மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௩-ம் நாயிறு.

### நிரு. கலாத். ௩, ௰௫-௨௨.

சகோதரரே, மனுஷமுறைமையாகச் சொல்லுகிறேன்; உறுதிபண்ணப்பட்
டதாகிய ஒரு மனுஷனுடைய ஏற்பாட்டை முதலாய் ஒருவனுந் தள்ளுகிறதில்லை,
அத்தோடு ஏதாகிலுங் கூட்டுகிறதுமில்லை. 16 இப்போதும் ஆபிரகாமுக்கும் அவ
னுடைய வித்துக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டது. வித்துகளுக்கும் என்று
வெகு வசனமாய்ச் சொல்லாமல், உன் வித்துக்கும் என்று ஏகவசனமாய்ச் சொல்
லுகிறார். அந்த வித்து கிறிஸ்துதானே. 17 ஆனால் பராபரனால் கிறிஸ்துவை நோக்கி
முன் உறுதி பண்ணப்பட்ட ஏற்பாட்டை, நானூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிற
பாடு உண்டான நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தத்தைத் தள்ளும்படியாய், உறுதி
யற்றதாக்காது என்கிறதையே சொல்லுகிறேன். 18 ஏனெனில் நியாயப்பிரமாணத்
தினால் சுதந்தரம் உண்டானால், அது இனி வாக்குத்தத்தத்தினால் உண்டாயிராது.
ஆபிரகாமுக்கோவெனில் பராபரன் அதை வாக்குத்தத்தத்தாலே அருளிச்செய்
தார். 19 இப்போதும் நியாயப்பிரமாணம் எதுக்கு. அது வாக்குத்தத்தத்தைப்
பெற்ற வித்து வரும் மட்டாக மீறுதல்களின் நிமித்தமாய்க் கூட்டப்பட்டு, தேவ
தூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. 20 மத்தியஸ்த
னோவெனில் ஒருவருடையவன் அல்ல, பராபரனோ ஒருவர் தானே. 21 இப்போ
தும் நியாயப்பிரமாணம் பராபரனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமோ;
அல்லவே. ஏனெனில் உயிர்ப்பிக்கத் தக்க நியாயப்பிரமாணங் கொடுக்கப்பட்டிருந்
தால், நீதியானது மெய்யாய் நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும். 22 வேத
எழுத்தோவெனில் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே வாக்குத்
தத்தம் விசுவாசிகளுக்கு அளிக்கப்படும்படிக்கு, எல்லாத்தையும் ஏகமாய்ப் பா
வத்தின் கீழ் அடைத்துப் போட்டது.

குரு. நம்மையல்லாமல் இரட்சகரில்லை. நாம் நாமே உன் மீறுதல்களை நம்முடைய நிமித்தமாகக்
குலைக்கிறோம். நாம் உனக்கு ஆரோக்கியம் வரப் பண்ணி, உன் காயங்களை ஆற்றுவிப்
போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௰, ௨௩-௩௭.

அவர் சீஷரண்டைக்குத் திரும்பி, தனித்துச் சொன்னதாவது: நீங்கள் பார்க்
கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள். 24 ஏனெனில் அநேகந் தீர்க்
கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் பார்க்கிறதுகளைக் காணவும், நீங்கள் கேட்கிற
துகளைக் கேட்கவும் ஆசையாயிருந்தும், காணாமலுங் கேளாமலும் போனார்கள்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 25 இதோ, நியாயசாஸ்திரி ஒரு

வன் எழுந்திருந்து: போதகரே, நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்
துக் கொள்ளுவேன் என்று அவரைச் சோதித்தான். 26 அவரோவென்றால் அவ
னுடனே: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது; எப்படி வாசிக்கிறாய்
என்றார். 27 அவன் பிரத்தியுத்தாரமாக: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு
இருதயத்தினாலும் உன் முழு ஆத்துமத்தினாலும் உன் முழுப் பலத்தினாலும் உன்
முழுச் சிந்தையினாலும், உனக்கு அடுத்தவனை உன்னைப்போலுஞ் சிநேகிப்பாயாக
என்கிறதாய்த்தானே என்றான். 28 அவர் அவனுடனே: நிதானமாய் மறு உத்தா
ரஞ் சொன்னாய்; இப்படிச் செய், அப்போது பிழைப்பாய் என்றார். 29 அவனோ
வென்றால் தன்னை நீதிமானாக்க மனதாய் இயேசுவுடனே: ஆனால் எனக்கு அடுத்த
வன் ஆர் என்றான். 30 இயேசு பிரத்தியுத்தாரங் கொடுத்துச் சொன்னதாவது:
ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு இறங்கிப்போய், கள்ளர் கையில்
அகப்பட்டான். அவர்கள் அவனை உரிந்துகொண்டு, காயப்படுத்தி, குற்றுயிராக
விட்டுப் போனார்கள். 31 ஆனால் தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழி இறங்
கிவந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். 32 அந்தப்படியே ஒரு
லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போ
னான். 33 ஆனால் சமாரியன் ஒருவன் வழிப்பயணம் பண்ணி, அவனண்டை வந்து,
அவனைக் கண்டு மனதுருகி, 34 சேர்ந்து, அவனுடைய காயங்களில் எண்ணெய்
யுந் தீவிதிராட்சப் பழரசமும் வார்த்து, அதுகளைக் கட்டி, அவனைத் தன் சுய
வாகனத்தின் மேல் ஏற்றி, அவனை மண்டபத்திலே கொண்டுபோய், அவனைப் பரா
மரித்து, 35 மறு நாளிலே புறப்படும் போது, இரண்டு வெள்ளிக்காசை எடுத்து,
மண்டபத்தான் கையிலே கொடுத்து, அவனுடனே: இவனைப் பராமரித்துக்கொள்;
அதிகமாய் நீ ஏதாகிலுஞ் செலவழித்தால், அதை நான் திரும்ப வருகையில் உனக்
குக் கொடுப்பேன் என்றான். 36 இப்போதுங் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு
இந்த மூன்று பேர்களில் ஆர் அடுத்தவனாக உனக்குக் காணுகிறது என்றார்.
37 அவன்: இரக்கத்தை அவனிடத்தில் செய்தவனே என்றான். ஆகையால் இயேசு
அவனுடனே: நீ போய், நீயும் அந்தப்படிசெய் என்றார்.

### திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௪-ம் நாயிறு

நிரு. கலாத். ௫, ௰௬-௨௪.

மாமிசத்தின் இச்சையை நிறைவேற்றாதிருந்து, ஆவியிலே நடந்துகொள்ளுங்
கள் என்கிறேன். 17 ஏனெனில் மாமிசம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவியோ மா
மிசத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் வேண்டுமென்றதுகளைச் செய்
யாதபடிக்கு, இதுகள் ஒன்றுக்கொன்று எதிர்க்கிறது: 18 ஆவியினால் ஏவப்பட்டீர்
களேயானால், நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்கள் அல்ல. 19 மாமி
சத்தின் கிரியைகளோவெனில் வெளியரங்கமாயிருக்கிறது; அதாவது: விபசாரம்,
வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20 விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகை
கள், விரோதங்கள், வயிராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பேதகங்கள்,
அமார்க்கங்கள், 21 பொறாமைகள், கொலைகள், வெறிகள், பெருந்தீனிகள் முதலா
னதுகள் தானே. இப்படிக்கொத்ததுகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய இராச்
சியத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று நான் முந்திச் சொன்னதுபோல் இப்போ



தும் அதுகளைக் குறித்து உங்களுக்கு முன்னறச் சொல்லுகிறேன். 22 ஆவியின்
கனியோவெனில்: சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீடியசாந்தம், தயவு, நற்கு
ணம், விசுவாசம், மெத்தனவு, இச்சையடக்கம். 23 இப்படிக்கொத்தவர்களை நியா
யப்பிரமாணம் விரோதிக்காது. 24 கிறிஸ்துவின் பாரிசமானவர்களோவெனில் மா
மிசத்தை ஆசைகள் இச்சைகளோடுங்கூடச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

குரு. என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்று கர்த்தர் சொல்லுகிறார். சிறுமையானவன் கூப்பிட்டபோது கர்த்தர் கேட்டு, அவனை அவன் நெருக்கங்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். நாம் ஒருமித்து அவருடைய நாமத்தை உயர்த்துவோம்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௰௭, ௰௧-௰௯.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், அவர் எருசலேமுக்குப் பயணம் பண்
ணுகையில், அவர் சமாரியாவையுங் கலிலேயாவையும் நடுவழியாய் உருவநடந்து
வந்தார். 12 அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள
பத்துமனுஷர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: 13 இயேசு ஐயரே,
எங்கள் மேல் இரங்கும் என்று சத்தமிட்டார்கள். 14 அவர் கண்டு அவர்களுடனே:
நீங்கள் போய், உங்களை ஆசாரியர்களுக்குக் காண்பியுங்கள் என்றார். அப்போது
சம்பவித்ததேதென்றால், அவர்கள் போகையில் சுத்தமானார்கள். 15 ஆனால் அவர்
களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, மகா சத்தத்
துடனே பராபரனை மகிமைப்படுத்தி, 16 அவருடைய பாதத்தண்டையிலே முகங்
குப்புற விழுந்து, அவருக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தினான். அவன் சமாரியனா
யிருந்தான். 17 ஆனால் இயேசு பிரத்தியுத்தாரமாக: பத்துப் பேருஞ் சுத்தமானதில்
லையோ, அந்த ஒன்பதுபேரோ எங்கே. 18 இந்த மறுசாதியானையேயொழிய, மற்
றொருவனும் பராபரனுக்கு மகிமை செலுத்துவதற்குத் திரும்பி வரக்காணோமோ
என்றுசொல்லி, 19 அவனுடனே: எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை
இரட்சித்தது என்றார்.

### திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௫-ம் நாயிறு.

நிரு. கலாத். ௫, ௨௫-௬, ௰.

நாம் ஆவியிலே பிழைத்தால், ஆவியிலே நடக்கவுங் கடவோம். 26 வீண்பெரு
மைக்காரரும் ஒருவரையொருவர் மூட்டிவிடுகிறவர்களும் ஒருவருக்கொருவர்
பொறுப்பற்றவர்களுமாகாதிருக்கக் கடவோம். 1 சகோதரரே, ஒரு மனுஷன்
யாதொரு தப்பிதத்திலே அகப்பட்டுக்கொண்டாலும், ஆவியைப் பெற்றிருக்கிற
நீங்கள் மெத்தனவின் ஆவியாலே இப்படிக்கொத்தவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்
கள். நீயுஞ் சோதிக்கப்படாதபடிக்கு, உன்னையே நோக்கியிரு. 2 ஒருவர் பாரங்
களை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய நியாயப்பிரமாணத்தை நிறை
வேற்றுங்கள். 3 ஏனென்றால் ஒருவன் தான் ஒன்றுமல்லாதிருந்தும், தன்னை ஒரு
பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே மோசம் போக்குகிறான். 4 தன்

தன் சுயகிரியையை அவனவன் உத்தமமாக்கக் கடவான்; அப்போது மற்றவனைப்
பார்க்கையில் அல்ல, தன்னையே பார்க்கையில் புகழ்ச்சியைப் பெற்றிருப்பான்.
5 ஏனெனில் அவனவன் தன் தன் சுயபாரத்தைச் சுமப்பான். 6 வசனத்தின் உப
தேசத்தைக் கேட்கிறவனேவென்றால், உபதேசிக்கிறவனைச் சகல நன்மைகளிலும்
பங்காளனாக்கக் கடவான். 7 மோசம் போகாதேயுங்கள்; பராபரன் தம்மைப் பரி
காசம் பண்ணவொட்டார். ஏனெனில் மனுஷன் என்னத்தை விதைக்கிறானோ,
அதையே அறுப்பான். 8 தன் மாம்சத்தின் மேல் விதைக்கிறவன் மாம்சத்தினால்
அழிவை அறுப்பான்; ஆவியின்மேலே விதைக்கிறவனோ ஆவியினால் நித்திய ஜீவனை
அறுப்பான். 9 ஆனால் நன்மை செய்கிறதில் இளக்கரியாதிருக்கக் கடவோம்;
ஏனெனில் தளர்ந்து போகாதிருந்தோமானால், ஏற்றகாலத்திலே அறுப்போம்.
10 ஆகையால் நமக்குக் காலம் இருக்கக்கொள்ள, யாவருக்கும், விசேஷமாய் விசு
வாசத்தின் வீட்டாருக்கும் நன்மை செய்யக் கடவோம்.

குரு. கர்த்தர் தெய்வமானால், அவரைப் பின்பற்றுங்கள். எவன் வெல்லுகிறானோ, அவனுக்குப்
பராபரனுடைய பரதீசின் நடுவிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கத் தருவோ
மென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். ௬, உ௪-௩௪.

ஒருவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ் செய்யக் கூடாது. ஏனென்
றால் ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்
துகொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான். நீங்கள் பராபரனுக்கும் லோகப்
பொருளுக்கும் ஊழியஞ்செய்யக் கூடாது. 25 ஆனதுகொண்டு உங்களுக்குச் சொல்
லுகிறேன், என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போமென்று உங்கள் ஜீவ
னுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும், கவலைப்
படாதேயுங்கள். ஆகாரத்தைப் பார்க்கச் ஜீவனும் உடையைப் பார்க்கச் சரீரமும்
அதிகமாயிருக்கிறது அல்லவோ. 26 ஆகாசத்தின் பட்சிகளை நோக்கிப்பாருங்கள்.
அதுகள் விதைக்கிறதும் அறுக்கிறதுங் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதும் இல்
லை. இல்லாவிட்டாலும் உங்கள் பரம பிதா அதுகளைப் பிழைப்பூட்டுகிறார். அது
களைப் பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள் அல்லவோ. 27 ஆனால் உங்களில்
ஆர் கவலைப்படுகிறதினால் தன் அளவோடு ஒரே முழத்தைக் கூட்டலாம். 28 உடைக்
காகவும் நீங்கள் கவலைப்படுகிறது என்ன. வெளியிலே லீலிய புஷ்பங்கள் எப்
படி வளருகிறதென்று அதுகளைக் கவனித்துப் பாருங்கள். அதுகள் உழைக்கிற
தும் இல்லை, நூற்கிறதும் இல்லை. 29 இல்லாவிட்டாலும், சாலொமோன் தானே
தன் சர்வமகிமையிலும் இதுகளில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன். 30 இப்போதும் இன்றைக்கு இருந்து, நாளைக்கு
அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்
தால், வெகு அதிகமாய் உங்களை உடுத்துவிப்பார் அல்லவோ, அற்பவிசுவாசிக
ளே. 31 ஆனபடியால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்
னத்தை உடுப்போம் என்று சொல்லிக் கவலைப்படாதேயுங்கள். 32 ஏனென்றால்
இதுகள் எல்லாத்தையும் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பரம



பிதாவோவெனில் இதுகளெல்லாம் உங்களுக்குத் தேவை என்று அறிவார். 33 ஆ
னால் முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்
கள்; அப்போது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். 34 ஆகை
யால் நாளையத்தினத்துக்காகக் கவலைப்படாதேயுங்கள்; ஏனெனில் நாளையத்தினந்
தன்னுடையதுகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போ
தும் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப்பிந்தின ௰௬-ம் நாயிறு.

### எபேசி. ௩, ௰௩-௨௧.

ஆகையால் உங்கள் நிமித்தமாக நான் அநுபவிக்கிற உபத்திரவங்களில் நீங்
கள் இளக்கரித்துப்போகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். அதுகள் உங்களுக்கு
மகிமையாயிருக்கிறது. 14 இது நிமித்தமாக நான், பரமண்டலங்களிலும் பூமியின்
மேலுமுள்ள இனக்கூட்டம் அனைத்துக்கும் நாமகாரணராகிய, 15 நம்முடைய கர்த்
தரான இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி, என் முழங்கால்களை முடக்கி,
16 நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,
17 விசுவாசத்தினால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், 18 நீங்
கள் சிநேகத்திலே வேரூன்றி, அஸ்திபாரப்பட்டவர்களாகி, சகல பரிசுத்தவான்க
ளோடுங்கூட அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து,
19 அறிவுக்கு மேலான கிறிஸ்துவினுடைய சிநேகத்தை அறிந்துகொள்ளவல்லவர்
களாகவும், பராபரனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர்
தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அளிக்க வேண்டிக்
கொள்ளுகிறேன். 20 ஆனால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதையும் நினைக்கிறதையு
மெல்லாம் பார்க்க மெத்தவும் அதிகமாக நமக்குள் பெலனாயிருக்குஞ் சத்துவத்
தின்படி செய்கிறதுக்கு வல்லவராகிய அவருக்கு, 21 சபையிலே என்றைக்கு
முள்ள சதாகாலங்களுடைய தலைமுறைகளில் எல்லாங் கிறிஸ்து இயேசு மூலமாய்
மகிமை உண்டாவதாக. ஆமேன்.

குரு. இளைஞர் இளைத்து விடாய்க்கிறார்கள். வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்
திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து எழும்புவார்கள். மரித்த உம்முடையவர்கள் பி
ழைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௭, ௰௧-௰௭.

மறுநாளில் சம்பவித்ததேதென்றால், நாயீன் என்று சொல்லப்பட்ட ஒரு
ஊருக்குப் போனார். அவருடைய சீஷர் அநேகரும் வெகு கும்பும் அவருடனே
கூடப் போனார்கள். 12 அவர் ஊர்வாசலுக்குச் சமீபித்தபோதோவென்றால்,
இதோ, தன் தாய்க்கு ஒன்றான குமாரனாகிய மரித்த ஒருவன் வெளியே எடுத்து
கொண்டுவரப்பட்டான். அவளோவெனில் விதவையானவள்; ஊரார் வெகு கும்பு அவ
ளுடனேகூட வந்திருந்தார்கள். 13 கர்த்தர் அவளைப்பார்த்து, அவள்மேல் மனது

ருகி, அவனுடனே: அழாதே என்று சொல்லி, 14 சேர வந்து பாடையைத் தொட்
டார். சுமந்தவர்களோவென்றால் நின்றார்கள். அப்போது அவர்: வாலிபா, எழுந்
திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். 15 அப்போது மரித்தவன் எழுந்து
உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவர் அவனை அவன் தாய்க்கு ஒப்புவித்
தார். 16 ஆனால் எல்லாருக்கும் பயம்பிடித்து: மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே
எழுந்திருந்தார் என்றும், பராபரன் தம்முடைய ஜனத்தைக் கண்டு சந்தித்தார்
என்றும், பராபரனை மகிமைப்படுத்தினார்கள். 17 இந்த அவருடைய வார்த்தமானம்
யூதேயா முழுவதுஞ் சுற்றுத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௭-ம் நாயிறு.

### நிரு. எபேசி. ௪, ௧-௬.

இப்போதும் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய்,
2 எல்லா மனத்தாழ்மை மெத்தனவு நீண்டசாந்தத்தோடும் நடந்துகொண்டு,
ஒருவரை யொருவர் சிநேகமாய்ப் பொறுத்திருந்து, 3 சமாதானக்கட்டினாலே
ஆவியின் ஒருமையைக் கைக்கொள்வதற்குச் சாக்கிரதையாயிருக்க, கர்த்தருக்குள்
கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். 4 ஒரே சரீரமும்
ஒரே ஆவியும் உண்டு; அழைக்கப்பட்ட நீங்கள் ஒரே நம்பிக்கைக்கும் அழைக்
கப்பட்டீர்கள். 5 ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,
6 எல்லாருக்கும் ஒரே பராபரனும் பிதாவும் உண்டு. அவர் உங்களெல்லார் மீதி
லுமுள்ளவரும், உங்களெல்லாரைக் கொண்டுங் கிரியை நடப்பிக்கிறவரும், உங்க
ளெல்லாருக்குள்ளும் இருக்கிறவருமாமே.

குரு. நாம் அவர்களுக்கு ஒருமனப்பட்ட இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிதான ஆவியைக் கொடுப்போம்; அவர்கள் நமக்குச் சனமாயிருப்பார்கள், நாம் அவர்களுக்குப் பராபரனுமாக இருப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. லூக். ௰௪, ௧-௰௧.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால், பரிசேயரில் தலைவனாகிய ஒருவன் வீட்
டிலே அவர் ஓய்வுநாளிலே அப்பம் புசிக்க வருகையில், அவர்கள் அவரைச் சர்ப்
பனையாகக் காத்திருந்தார்கள். 2 இதோ, நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனு
ஷன் அவருக்கு முன்பாக இருந்தான். 3 இயேசு நியாயசாஸ்திரிகளுக்கும் பரி
சேயருக்கும் பிரத்தியுத்தாரமாக: ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமோ
என்றார். 4 அவர்களோவெனில் பேசாதிருந்தார்கள். அப்போது அவர் அவனைப்
பிடித்துக் குணமாக்கிவிட்டு, 5 அவர்களுடனே: உங்களில் எவனுடைய கழுதை
யாகிலும் எருதென்கிலும் ஒரு துரவிலே விழுந்தால், அதை அவன் உடனே ஓய்
வுநாளிலே தூக்கிவிடானோ என்றார். 6 இதற்கு அவர்கள் எதிர் உத்தரஞ்சொல்ல
மாட்டாதே போனார்கள். 7 ஆனால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில்
முதல் இடங்களை எப்படி தெரிந்துகொண்டார்களென்கிறதை அவர் கவனித்து



பார்த்து, அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: 8 நீ ஒருவனால் கலியாணத்
துக்கு அழைக்கப்பட்டால், பந்தியில் முதல் இடத்தில் உட்காராதே; ஏனெனில்
ஒருவேளை உன்னிலுங் கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்கக்கொள்ள,
9 உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து, உன்னுடனே: இவனுக்கு இடங்
கொடு என்பான். அப்போது நீ வெட்கத்துடனே கடைசி இடம் பிடிக்கத் துவக்
குவாய். 10 நீ அழைக்கப்பட்டால், போய்க் கடைசி இடத்தில் உட்காரு; அப்
போது உன்னை அழைத்தவன் வந்து, உன்னுடனே: சிநேகிதனே, உயரப்போ
யிரு என்றால், உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக்
கனம் உண்டாகும். 11 அதேதென்றால் தன்னைத் தான் உயர்த்துகிறவனெல்லாந்
தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௮-ம் நாயிறு.

### நிரு. ௧ கொரி. ௧, ௪-௯.

நீங்கள் சகலத்திலுஞ் சகல வசனத்திலுஞ் சகல அறிவிலும் இயேசுகிறிஸ்து
வுக்குள் ஐசுவரியவான்களானீர்கள் என்கிற, அவருக்குள் உங்களுக்கு அளிக்கப்
பட்ட பராபரனுடைய கிருபைக்காக, 5 எப்போதும் என் பராபரனை உங்கள்
நிமித்தம் இஸ்தோத்திரிக்கிறேன். 6 ஏனென்றால் உங்களுக்கு ஒரு வரமுங் குறை
யாயிராமல், நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய வெளிப்
படுதலுக்குக் காத்திருந்த தக்கதாய், 7 கிறிஸ்துவினுடைய சாட்சி உங்களில்
திடப்பட்டது. 8 நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே
குற்றஞ்சுமத்தப்படாதவர்களாயிருக்க, அவர் உங்களை முடிவுபரியந்தமுந் திடப்
படுத்துவார். 9 உங்களைத் தம்முடைய குமாரனாகிய நம்முடைய கர்த்தர் இயேசு
கிறிஸ்துவினுடைய ஐக்கியத்துக்கு அழைத்த பராபரன் உண்மையுள்ளவர்.

குரு. கிறிஸ்து இயேசு பராபரனாலே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தப்படுத்தலும் மீட்புமாக்கப்பட்டார். இஸ்ரவேலின் வித்தாகிய யாவரும் அவருக்குள் நீதிமான்களாகி, மேன்மைபாராட்டுவார்கள்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். ௨௨, ௩௪-௪௬.

அவர் சதுசேயருடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர் கேட்டு ஒன்
றாய்க் கூடினார்கள். 35 அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதித்து:
36 போதகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக்கற்பனை பெரியதென்று கேட்டான்.
37 ஆனால் இயேசு அவனுக்குச் சொன்னதாவது: உன் பராபரனாகிய கர்த்தரை
உன் முழு இருதயத்தாலும் உன் முழு ஆத்துமத்தாலும் உன் முழு நினைவினாலுஞ்
சிநேகிப்பாயாக. 38 இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது. 39 அத்தோ
டொத்த இரண்டாம் கற்பனையோ: உனக்கு அடுத்தவனை உன்னைப்போல் சிநே
கிப்பாயாக என்பது. 40 இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமுந்
தீர்க்கதரிசனங்களுந் தொங்குகிறது என்றார். 41 ஆனால் பரிசேயர் கூடியிருக்கை

யில், இயேசு அவர்களை: 42 கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க்காணுகிறது;
ஆருடைய குமாரனுயிருக்கிருர் என்று கேட்டார். அவருடனே: தாவீதினுடைய
குமாரன் என்ருர்கள். 43 அப்போது அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: இப்
போதுந் தாவீது ஆவியினுலே அவரை ஆண்டவரென்று சொல்லுகிறதெப்படி.
44 கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய
பாதபடியாக்கிப்போடும்மட்டும் நம்முடைய வலதுபாரிசத்திலே உருக்காரும் என்
ருரென்று சொன்னுனே. 45 தாவீது அவரை ஆண்டவர் என்று சொன்னுனேயா
கில், இவர் அவனுடைய குமாரனுயிருக்கிறது எப்படி என்ருர். 46 ஒருவனும் அவ
ருக்கு ஒரு வார்த்தையையும் மறு உத்தாரமாகச் சொல்லக்கூடாதிருந்தது. அந்
நாள் முதல்கொண்டு அப்புறம் ஆரும் அவரைக் கேட்கத் துணிந்ததும் இல்லை.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௰௯-ம் ஞாயிறு.

### நிரு. எபேசி. ௪, ௨௰௨-௨௮.

முந்தின நடக்கையின்படி மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போ
கிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, 22 உங்கள் மனதின் ஆவியிலே
புதிதாகி, 23 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் பராபரன் சாயலாகச் சிருஷ்
டிக்கப்பட்ட நவமான மனுஷனைத் தரித்துக்கொள்ள வேண்டுமென்கிறதாக, 24 நீங்
கள் இயேசுவுக்குள் மெய்ம்மை உண்டென்று அவரைக்குறித்துக் கேள்வியாகி, அவ
ரால் போதிவிக்கப்பட்டீர்களே. 25 ஆனபடியினுல் பொய்யைக் களைந்து, அவனவன்
தனக்கடுத்தவனுடனே மெய்யைப் பேசுங்கள்; ஏனெனில் ஒருவருக்கொருவர்
அவயவங்களாயிருக்கிருேம். 26 நீங்கள் சினமடைந்தால், பாவஞ் செய்யாதேயுங்
கள்; உங்கள் எரிச்சலின்மேலே சூரியன் அஸ்தமிக்க ஒட்டாமலும், 27 பிசாசுக்கு
இடங்கொடாமலும் இருங்கள். 28 திருடினவன் இனி திருடாமல், குறைச்சலுள்ள
வனுக்குக் கொடுக்கத் தனக்குண்டாகக் கைகளினுல் நல்ல வேலைசெய்து உழைக்
கக் கடவான்.

குரு. நீங்கள் பாம எருசலேமாகிய ஜீவனுள்ள பராபரனுடைய பட்டணத்துக்கு வந்து சேர்ந்
தீர்கள். வியாதிப்பட்டிருக்கிறேனென்று குடியானவனொருவனுஞ் சொலவதில்லை; அதில்
வாசமாயிருக்கிற சனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். ௯, ௧-௮.

அப்போது அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு, தம்முடைய பட்டணத்தில்
வந்தார். 2 இதோ, படுக்கையின்மேல் கிடக்கிற ஒரு திமிர்வாதக்காரனை அவரண்
டைக்குக் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு,
திமிர்வாதக்காரனுடனே: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்
கப்பட்டதென்ருர். 3 அப்போது, இதோ, வேதபாரகரில் சிலர் தங்கள் உள்ளத்
திலே: இவன் தேவதூஷணஞ் சொல்லுகிருன் என்ருர்கள். 4 ஆனுல் இயேசு
அவர்கள் நினைவுகளைக் கண்டு சொன்னதாவது: நீங்கள் உங்கள் இருதயங்களில்





பொல்லாததுகளை நினைக்கிறதேதது. 5 ஏனெனில் எது எளிதாயிருக்கிறது: பாவங்
கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வது எளிதோ, எழுந்திருந்து நட
வென்று சொல்வது எளிதோ. 6 ஆனுல் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ
னுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்கிறதை நீங்கள் அறிய வேண்டுமென்
று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே: நீ எழுந்திருந்து, உன் படுக்கையை எடுத்
துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்ருர். 7 அப்போது அவன் எழுந்திருந்து,
தன் வீட்டுக்குப் போனுன். 8 ஜனங்கள் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்
கு அப்படிக்கொத்த அதிகாரத்தைக் கொடுத்த பராபரனை மகிமைப்படுத்தினர்
கள்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௰-ம் ஞாயிறு.

### நிரு. எபேசி. ௫, ௰௫-௨௰௧.

ஆகையினுலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல் அல்ல, ஞானமுள்ளவர்க
ளைப்போல் கவனமாய் நடந்துகொள்ள வகை பார்த்து, 16 காலத்தைத் தப்பா
மல் பிடியுங்கள்; ஏனெனில் நாட்கள் பொல்லாததாயிருக்கிறது. 17 ஆகையால்
நீங்கள் மதியற்றவர்களாகாமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்வுள்
ளவர்களாகி, 18 கெட்டமீர்க்கமுள்ள மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினுல்
நிறையப்பட்டு, 19 சங்கீதங்களாலுங் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும்
உங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்
கீர்த்தனம் பண்ணி, 20 பிதாவாகிய பராபரனை நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் நாமத்திலே எப்போதும் எல்லாத்துக்காகவும் இஸ்தோத்திரித்து,
21 தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

குரு. கர்த்தர் ஞானத்தைத் தருகிருர்; அவர் வாக்கினுல் அறிவும் உணர்வும் வரும். இதோ, நாம்
உன் அக்கிரமத்தை நீக்கி, உனக்குப் புது வஸ்திரங்களைத் தரிப்பித்தோம் என்று அவர்
சொல்லுகிருர்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். ௨௰௨, ௧-௰௪.

இயேசு மறுவுத்தரவு கொடுத்து, திரும்ப அவர்களுக்குச் சொன்ன உவமை
வார்த்தைகளாவது: 2 வானராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த
இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. 3 அழைக்கப்பட்டவர்களைக் கலி
யாணத்துக்கு வரச்சொல்ல, அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினுன்; ஆனுல்
அவர்கள்: வர மாட்டோம் என்ருர்கள். 4 மறுதரம் அவன் வேறே ஊழியக்காரரை
அனுப்பி, அழைக்கப்பட்டவர்களுக்கு: இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணி
னேன், என் எருதுகளுங் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டு, எல்லாம்
ஆயத்தமாயிற்று; கலியாணத்துக்கு வாருங்கள் என்று சொல்லுங்கள் என்ருன்.
5 ஆனுல் அவர்கள் அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும் பின்னொருவன்
தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். 6 மற்றவர்களோ அவன் ஊழியக்கா

ளைப் பிடித்து, நிந்தித்து, கொன்றுபோட்டார்கள். 7 இராசா அதைக் கேட்ட
போதோவெனில் கோபம் அடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலை
பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தைச் சுட்டுப்போட்டான். 8 அப்போது
தன் ஊழியக்காரருடனே: கலியாணமோ ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்
டவர்களோவென்றால் அதுக்குப் பாத்திரவான்களாயிருந்ததில்லை. 9 ஆனபடி
யால் நீங்கள் வழிப்பிரிவுகளிலே போய், அகப்பட்டயாவரையுங் கலியாணத்துக்கு
அழையுங்களென்றான். 10 அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப் போய்,
அகப்பட்டபொல்லார் நல்லார் யாவரையுங் கூட்டிச்சேர்ந்தார்கள்; கலியாணம் பந்தி
யிருக்கிறவர்களால் நிறைந்தது. 11 ஆனால் பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கிறதுக்கு
இராசா உட்பிரவேசித்தபோது, கலியாணவஸ்திரந் தரித்திராத ஒரு மனுஷனை
அங்கே கண்டு, 12 அவனுடனே: சிநேகிதனே, கலியாணவஸ்திரமில்லாதவனாய்
இங்கே எப்படி உட்பிரவேசித்தாய் என்றான். அவனுக்கோவெனில வார்த்தை
யற்றுப் போச்சுது. 13 அப்போது இராசா பணிவிடைக்காரருடனே: அவன்
கால்களையுங் கைகளையுங் கட்டி, அவனை எடுத்துப்போய், எல்லாத்துக்கும் புறம்
பான இருளிலே போடுங்கள்; அங்கே அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும்
என்றான். 14 அதேதெனில் அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்
ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௧ம் நாயிறு.

### நிரு. எபேசி. ௬, ௰–௰௭.

குறைகாரியம் என்னவெனில், என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய
பலத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். 11 நீங்கள் பிசாசின் உபாயதந்திரங்க
ளோடு எதிர்த்து நிற்கக் கூடும்படிக்கு, பராபரனுடைய சர்வாயுதவர்க்கத்தையுந்
தரித்துக்கொள்ளுங்கள். 12 ஏனெனில் இரத்தத்தோடும் மாமிசத்தோடும் அல்ல,
துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தினுடைய அந்தகார
லோகாதிபதிகளோடும் பரம காரியங்களில் பொல்லாங்கு சிந்திக்கும் ஆவிகளின்
விளைகளோடும் நமக்குப் போர் இருக்கிறது. 13 ஆகையால் பொல்லாத நாளிலே
நீங்கள் எதிர்க்கவும், எல்லாத்தையுஞ் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் கூடும்
படிக்கு, பராபரனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.
14 அப்படியாகவென்று, நீங்கள் சத்தியத்தால் உங்கள் அரையைக் கட்டினவர்க
ளும், நீதியின் மார்க்கவசத்தை உடுத்தவர்களும், 15 கால்களில் சமாதான சுவிசே
ஷத்துக்கு முஸ்திப்பாய்த் தோற்பரந் தொடுத்தவர்களுமாக நின்று, 16 எல்லாத்
துக்கும் மேலாக விசுவாசத்தின் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்; அதினா
லே நீங்கள் பொல்லாங்கனுடைய நெருப்பான அம்புகளையெல்லாம் அவித்துப்
போடலாம். 17 இரட்சிப்பின் தலைச்சோட்டையும், பராபரனுடைய வசனமாகிய
ஆவியின் பட்டயத்தையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

குரு. ஒருவன் போராடினாலும் நியாயப்பிரகாரமாய்ப் போராடினாலொழிய, கிரீடந் தரிப்பிக்
கப்படான். கர்த்தர் தம்மைத் தேடினவர்களுக்குத் தென்பட்டு, அவர்களுடைய கூப்பிடு
தலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

143



### சுவி. யோவா. ௪, ௪௬–௫௪.

இராசாவின் மனுஷன் ஒருவன் இருந்தான்; அவன் குமாரன் கப்பர்நகூ
மிலே வியாதியாய்க் கிடந்தான். 47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிலே
வந்ததை இவன் கேட்டபோது, அவரண்டைக்குப் போய், அவர் இறங்கிவந்து,
தன் மகனைக் குணமாக்க அவரை வேண்டிக்கொண்டான். ஏனெனில் சாகச் சமீ
பமாயிருந்தான். 48 அப்போது இயேசு அவனுடனே: நீங்கள் அடையாளங்களை
யும் அற்புதங்களையுங் காணாதிருந்தால், விசுவாசியீர்கள் என்றார். 49 இராசாவின்
மனுஷன் அவருடனே: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே இறங்கி
வாரும் என்றான். 50 இயேசு அவனுடனே: போ, உன் குமாரன் பிழைத்திருக்கி
றான் என்றார். இயேசு தனக்குச் சொன்னவார்த்தையை அந்த மனுஷன் நம்பிப்
போனான். 51 ஆனால் அவன் இறங்கிப்போகையில், அவனுடைய ஊழியக்காரர்
அவனுக்கு எதிர்கொண்டுவந்து: உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறானென்று
அறிவித்தார்கள். 52 அப்போது எந்தமணிவேளையிலே அவனுக்குக் குணமாயிற்று
என்று அவர்களிடத்திலே விசாரித்தான். அவர்கள் அவனுடனே: நேற்று ஏழாம்
மணிவேளையில் சுரம் அவனைவிட்டது என்றார்கள். 53 அப்போது: உன் குமாரன்
பிழைத்திருக்கிறானென்கிறதை இயேசு தன்னுடனே சொன்ன மணிவேளை அது
வே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்
கள். 54 இந்த இரண்டாம் அடையாளத்தை இயேசு மறுபடியும் யூதேயாவிலிருந்து
கலிலேயாவுக்கு வந்தபோது செய்தார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௨ம் நாயிறு.

### நிரு. பிலிப். ௧, ௩–௰௧.

முதல்நாள் துவக்கி இற்றையில் வரைக்கும் நீங்கள் சுவிசேஷத்துக்காக அன்
னியோன்னிய ஐக்கியமானவர்களென்று, 4 நான் உங்களை நினைக்கிற போதெல்
லாம் என் பராபரனை இஸ்தோத்திரித்து, 5 உங்கள் அனைவருக்காகவும் நான் பண்
ணுகிற எல்லாச்செபத்திலும் எப்போதுஞ் சந்தோஷத்துடனே விண்ணப்பஞ்
செய்து, 6 உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின்
நாள்மட்டாக முடிய நடத்திவருவாரென்கிறதையே நம்பியிருக்கிறேன். 7 என் கட்
டுகளிலும், நான் சுவிசேஷத்துக்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்துகிற
திலும், நீங்கள் அனைவரும் என்னோடேகூடக் கிருபையில் ஐக்கமாயிருக்கிறவர்க
ளென்று, உங்களை நான் என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே,
இப்படி உங்களெல்லாரையுங் குறித்து நினைக்கிறது எனக்கு நியாயமாயிருக்கிறது.
8 ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் உருக்கமான சிநேகத்திலே உங்களெல்லார்
மேலும் எத்தனை வாஞ்சையாயிருக்கிறேன் என்கிறதுக்குப் பராபரன் எனக்குச
சாட்சி. 9 இன்னம் உங்கள் சிநேகம் அதிகமதிகமாய் அறிவிலும் எல்லா உணர்த்தி
யிலும் பெருகவும், 10 இந்தப்பிரகாரமாக நீங்கள் நன்மை தீமை இன்னதென்று
வகையறுத்து, கிறிஸ்துவின் நாள்மட்டுக்குந் துப்புரவானவர்களும் இடறலற்ற
வர்களும், 11 பராபரனுக்கு மகிமையுந் துதியுமாக இயேசு கிறிஸ்துவினாலே நீதி
யின்கனிகளால் நிறைந்தவர்களுமாயிருக்கவுஞ் செபம்பண்ணுகிறேன்.

குரு. பராபரன் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு மன்னித்ததுபோல், நீங்களும் ஒருவருக்கொருவர்
மன்னியுங்கள். நமக்குப் பயப்படுகிற பயத்தையும் நம்மை அறிகிற அறிவையும் உங்கள்
இருதயங்களில் கொடுத்து, உங்களுக்கு நன்மை செய்வோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௰௮, உ௩-௩௫.

ஆகையால் வான ராச்சியந் தன் பணிவிடைக்காரரோடு கணக்குப் பார்க்க
வேண்டுமென்றிருந்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. 24 அவன்
கணக்குப் பார்க்கத் துவக்கினபோது, பதினாயிரந் தாலந்து கடன்பட்ட ஒருவன்
அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்து விடப்பட்டான். 25 ஆனால் கொடுத்துத்
தீர்க்க அவனுக்கு இல்லாமையால், அவன் எசமான் அவனையும் அவன் பெண்
சாதி பிள்ளைகளையும் அவனுக்கு உண்டானதெல்லாத்தையும் விற்று, கடனைத்
தீர்க்கக் கட்டளையிட்டான். 26 ஆகையால் அந்தப் பணிவிடைக்காரன் கீழே விழுந்
து: ஆண்டவனே, எனக்காக மனம்பொறும்; உமக்கு எல்லாத்தையுங் கொடுத்துத்
தீர்ப்பேனென்று அவனைப் பணிந்துகொண்டான். 27 எசமானோவென்றால் அந்தப்
பணிவிடைக்காரன்பேரில் மனதுருகி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவ
னுக்கு மன்னித்துவிட்டான். 28 ஆனால் அந்தப் பணிவிடைக்காரன் புறப்பட்டு,
தன் பணிவிடைத்தோழரில் தனக்கு நூறு வெள்ளிக்காசு கடன்பட்டிருந்த ஒரு
வனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்
குக் கொடுத்துத்தீர் என்றான். 29 ஆகையால் அவனுடைய பணிவிடைத்தோழன்
அவன் காலிலே விழுந்து: எனக்காக மனம்பொறு; உனக்கு எல்லாத்தையுங்
கொடுத்துத் தீர்ப்பேனென்று அவனை வேண்டிக்கொண்டான். 30 ஆனால் அவன்
மாட்டேனென்று போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவ
னைச் சிறைச்சாலையில் போட்டுவித்தான். 31 அவன் பணிவிடைத் தோழரோவென்
றால் சம்பவித்ததைக் கண்டு, மிகுந்த துக்கம் அடைந்து, வந்து சம்பவித்ததெல்
லாத்தையும் எசமானுக்கு அறிக்கைபண்ணினார்கள். 32 அப்போது அவன் எசமான்
அவனை அழைப்பித்து, அவனுக்குச் சொன்னதாவது: பொல்லாத பணிவிடைக்
காரா, நீ என்னைவேண்டிக்கொண்டதினால் அந்தக் கடன் யாவையும் உனக்கு மன்
னித்துவிட்டேனே. 33 நான் உனக்கு இரங்கினதுபோல் நீயும் உன் பணிவிடைத்
தோழனுக்கு இரங்க வேண்டியதாய் இருந்ததில்லையோ என்று, 34 அவனுடைய
எசமான் கோபமடைந்து, அவன் தனக்குப் பட்ட கடனையெல்லாங் கொடுத்துத்
தீர்க்குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். 35 நீங்கள் உங்
கள் மனப்பூர்வமாய் அவனவன் தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னி
யாதேபோனால், இந்தப் பிரகாரமாக என் பரம பிதா உங்களுக்குஞ் செய்வார்
என்றார்.

### திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உ௩-ம் நாயிறு.

நிரு. பிலிப். ௩, ௰௭-உ௧.

சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி; நாங்கள்
உங்களுக்கு மாதிரியாகும்படி நடக்கிறவர்களை நோக்குங்கள். 18 ஏனெனில், அநே



 

கர் நடக்கையைக் குறித்து அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் பகைஞர்
என்று உங்களுக்கு அநேகந் தரம் சொன்னேன், இப்போதோவெனில் அழு
கையோடுஞ் சொல்லுகிறேன். 19 பூமிக்கடுத்த சிந்தையான அவர்களுடைய
முடிவு அழிவு தானே; அவர்கள் தேவன் வயிறு; அவர்கள் மகிமை அவர்கள் இலச்
சையில் இருக்கிறது. 20 நம்முடைய சஞ்சரிப்போவெனில் பரமண்டலங்களில்
இருக்கிறது; அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவாகிய இரட்ச
கரை வரப்பார்த்துக்கொண்டும் இருக்கிறோம். 21 அவர் தமக்கு எல்லாத்தையுங்
கீழ்ப்படுத்திக்கொள்ள வல்லமையான தம்முடைய பலத்தின்படியே நம்முடைய
தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறு
ரூபப்படுத்துவார்.

குரு. யோசனையை யோசியுங்கள், அது அவத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்
காது: ஏனெனில் எங்களுடனே பராபரன் இருக்கிறார்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். உஉ, ௰௫-உஉ.

அப்போது பரிசேயர் போய், வசனத்திலே அவரைச் சிக்கப்பண்ண யோச
னைபண்ணி, 16 தங்கள் சீஷர்களை எரோதேயின் மனுஷரோடே கூட அவரண்
டைக்கு அனுப்பினார்கள். இவர்கள்: போதகரே, நீர் சத்தியமுள்ளவராயிருந்து,
பராபரனுடைய வழியைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும், எவனென்றும்
உமக்குக் கவை இல்லை என்றும் அறிவோம்; அதேனெனில் நீர் மனுஷமுகமாட்
டம் பார்க்கிறதில்லை. 17 ஆகையால் உமக்கு எப்படி காணுகிறது, இராயனுக்கு
வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்று எங்களுக்குச் சொல்லும் என்
றார்கள். 18 ஆனால் இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே, நீங்
கள் என்னைச் சோதிக்கிறதேது; 19 வரிக்காசை எனக்குக் காட்டுங்கள் என்றார்.
அவர்கள் ஒரு பணத்தை அவருக்குக் கொண்டுவந்தார்கள். 20 அப்போது அவர்
களுடனே: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் ஆருடையது என்றார். 21 அவருடனே:
இராயனுடையது என்றார்கள். அப்போது அவர்களுடனே: ஆகையால் இராயனு
டையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்குஞ் செலுத்துங்கள்
என்றார். 22 அவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, அவரை விட்டுப் போய்
விட்டார்கள்.

### திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உ௪-ம் நாயிறு.

நிரு. கொலொ. ௧, ௯-௰௪.

ஆனபடியினாலே நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காகச் செபம்
பண்ணி, நீங்கள் கர்த்தருக்குப் பாத்திரமாய் எல்லா இதமியமாகவும்நடந்து, எல்
லா நற்கிரியையிலுங்கனிதந்து, பராபரனை அறிகிறதிலே வளர்ந்து, 10 சந்தோஷத்
தோடே கூடிய எல்லாப் பொறுமைக்கும் நீண்டசாந்தத்துக்கும் அவர் மகிமையி
னுடைய வல்லமையின்படி மிகுதியாகவும் பலப்படும்படிக்கு, 11 நீங்கள் அவரு

டைய சித்தத்தை எல்லா ஞானமும் ஞான உணர்வுமாய் அறிகிற அறிவினால் நிறை
யப்பட வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய ஓயாதிருந்து, 12 வெளிச்சத்திலுள்
ள பரிசுத்தவான்களின் சுதந்தரப் பங்குக்கு நம்மை ஏற்றவர்களாக்கின பிதாவுக்கு
இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். 13 அவர் நம்மை அந்தகாரத்தினுடைய அதி
காரத்துக்கு நீங்கலாக்கி, தமது நேசகுமாரனுடைய இராச்சியத்துக்குள் படுத்தி
வைத்தார். 14 இவருக்குள் நமக்கு இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பா
கிய மீட்புண்டாயிருக்கிறது.

குரு. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. அவர்க
ளெல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்கள். அவர் நாம் காத்திருக்கிற கர்த்தர்; அவரு
டைய இரட்சிப்பினாலே களிகூர்ந்து மகிழுகிறோம்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௯, ௰௮-௨௬.

அவர் இவைகளை அவர்களோடே பேசுகிறபோது, இதோ, ஒரு தலைவன்
சேர்ந்து, அவரைப் பணிந்து: என் மகள் இந்நேரத்திலே செத்துப்போனாள். ஆகி
லும் நீர் வந்து, அவள் மேலே உமது கையை வையும்; அப்போது பிழைப்பாள்
என்றான். 19 இயேசு எழுந்திருந்து, தம்முடைய சீஷர்களோடுங் கூட அவன் பிற
கே போனார். 20 இதோ, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு இஸ்திரீ
பிறகே சேர்ந்து வந்து, அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். 21 ஏனெனில்
தன் உள்ளத்திலே: அவருடைய வஸ்திரத்தைமாத்திரந் தொட்டேனாகில், சொஸ்
தமாவேன் என்றாள். 22 இயேசுவோவென்றால் திரும்பி அவளைக் கண்டு: மகளே,
திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல்
இஸ்திரி சொஸ்தமானாள். 23 இயேசு தலைவன் வீட்டிலே வந்து, தாரைக்காரரை
யும் இரைகிற சந்தடியையுங் கண்டு, 24 அவர்களுடனே: அகலப்போங்கள், ஏனெ
னில் சிறுபெண் மரித்திராமல், நித்திரைபண்ணுகிறது என்றார். ஆனால் அவரை
நகைத்தார்கள். 25 கும்பு வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவே
சித்து, அதின் கையைப் பிடித்தார். அப்போது சிறுபெண் எழுந்திருந்தது. 26 இந்
தக் கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலியமாயிற்று.

**திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின ௨௫-ம் நாயிறு.**

நிரு. ௧ தெச. ௪, ௰௩-௰௮.

சகோதரரே, நித்திரை அடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்ற
மற்றவர்களைப்போலே துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்குமனதில்லை. 14 ஏனென்
றால் இயேசு மரித்துத் திரும்ப எழுந்திருந்ததை நாம் விசுவாசிக்கக்கொள்ள, இயே
சுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் பராபரன் அவரோடேகூட அந்தப் பிர
காரமாகக்கொண்டுபோவார். 15 ஏனெனில் கர்த்தருடைய வருகையில் உயிரோடே
மீதியான நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை என்று கர்த்
தருடைய வார்த்தையாய் உங்களுக்குச் சொல்லுகிறோம். 16 அதேனென்றால் கர்த்



தர் தாமே ஆர்ப்பரிப்போடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் பராபரனுடைய
எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்குவார். அப்போது கிறிஸ்துவுக்குள்
மரித்தவர்கள் முந்தி எழுந்திருப்பார்கள். 17 பிற்பாடு உயிரோடே மீதியான நாம்
அவர்களோடுங்கூட ஏகமாய்க் கர்த்தருக்கு ஆகாசத்தில் எதிர்கொண்டுபோக,
மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்படியே எப்போதுங் கர்த்தருடனே
கூட இருப்போம். 18 ஆகையால் உங்களை ஒருவருக்கொருவர் இந்த வார்த்தைக
ளால் தேற்றுங்கள்.

குரு. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரை அடைந்தவர்களில் முதல் பலபாகமானார்.
கர்த்தருடைய பெரியநாள் கிட்டிச்சேர்ந்து, மிகவுந் தீவிரிக்கிறது. ஆனால் தீங்கு வராத
தற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்பட்டு, சமாதானத்தோடே இளைப்பாறு
கிறான்.
சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௨௪, ௰௫-௨௮.

ஆனால் தானியேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவ
ருப்பைப் பரிசுத்த ஸ்தலத்திலே நிற்கக் கண்டீர்களானால், (அதை வாசிக்கிறவன்
சிந்திக்கக் கடவான்,) 16 அப்போது யூதேயாவிலுள்ளோர் பர்வதங்களின்மேல்
ஓடிப்போகக் கடவார்கள். 17 வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டில் எதையாகி
லும் எடுப்பதற்கு இறங்கவேண்டாம். 18 வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களை
எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத் திரும்பவும்வேண்டாம். 19 ஆனால் அந்த நாட்க
ளில் கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. 20 ஆனால் நீங்கள்
ஓடிப்போவது மாரிகாலத்திலும் ஓய்வுநாளிலும் சம்பவியாதபடிக்கு வேண்டிக்
கொள்ளுங்கள். 21 அதேனென்றால் மகா உபத்திரவம் அப்போது உண்டாயிருக்
கும். அப்படிப்பட்டது லோகத்தின் ஆதிகாலந்துவக்கி இந்நாள்வரைக்குஞ் சம்
பவித்ததும் இல்லை, இனி சம்பவிப்பதும் இல்லை. 22 அந்த நாட்கள் குறுக்கப்ப
டாதேபோனால், ஒரு மாமிசமானாலுந் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்
பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறுக்கப்படும். 23 அப்போது யாதொ
ருவன் உங்களுடனே: இதோ கிறிஸ்து இங்கே, அதோ அங்கே என்று சொன்
னால், நம்பாதேயுங்கள். 24 ஏனென்றால் கள்ளக் கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரி
சிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்
போக்கத் தக்கதாய்ப் பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையுஞ் செய்வார்
கள். 25 இதோ, உங்களுக்கு முன்னறச் சொன்னேன். 26 ஆகையால்: இதோ,
வனாந்தரத்திலிருக்கிறாரென்று உங்களுக்குச் சொன்னார்களானால், வெளிப்புறப்
படாதேயுங்கள்; இதோ, அறை வீடுகளில் இருக்கிறாரென்றால், நம்பாதேயுங்கள்.
27 அதேனென்றால் மின்னல் கிழக்கில் எழும்பி மேற்கு மட்டும் பிரகாசிக்கிற வண்
ணமாய் மனுஷனுடைய குமாரன் வருகை இருக்கும். 28 அதேனெனில் பிணம்
எங்கே இருக்கிறதோ, அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உசா - ம் ஞாயிறு.

### நிரு. உ பேதுரு ங, ங-யச.

கடைசி நாட்களில் தங்கள் சுய இச்சைகளின்படி நடந்து, 4 அவர் வருகை
யின் வாக்குத்தத்தம் எங்கே இருக்கிறது; பிதாக்கள் நித்திரை அடைந்த பிறபாடு
எல்லாஞ் சிருஷ்டியின் தோற்றம்முதல் இருந்த பிரகாரமாக இருக்குமே என்று
சொல்லுகிற சக்கந்தக்காரர் வருவார்கள் என்கிறதை முதல் முதல் அறிந்திருங்கள்.
5 ஏனெனில் பூர்வகாலத்தில் பராபரனுடைய வார்த்தையினாலே வானங்களும்
சலத்தினாலுஞ் சலத்திலேயும் நிலைகொண்ட பூமியும் இருந்தது என்கிறதையும்,
6 அதுகளாலே அப்போதிருந்த லோகம் வெள்ளங்கொண்டு அழிந்தது என்கிற
தையும், அவர்கள் மனதார அறியாமல் போகிறார்கள். 7 இப்போதிருக்கிற வா
னங்களும் பூமியுமோவெனில் அந்த வார்த்தையாலே தானே வைத்து வைக்கப்பட்டு,
பத்தியற்ற மனுஷர் நியாயந்தீர்க்கப்பட்டுக் கெடும் நாளுக்கு அக்கினிக்கு இரையா
கக் காக்கப்படுகிறது. 8 ஆனால், பிரியமானவர்களே, கர்த்தரிடத்தில் ஒரு நாள்
ஆயிரம்வருஷங்களைப் போலவும், ஆயிரம்வருஷங்கள் ஒரு நாளைப்போலவும்
இருக்கிறதென்கிற ஒரே காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். 9 சிலர்
தாமதமென்று எண்ணுகிறதுபோல், கர்த்தர் பண்ணின வாக்குத்தத்தத்துக்குத்
தாமதிக்காமல், நம்முடையமேல் நீண்டபொறுமையாயிருந்து, யாதொருவர்
கெட்டுப்போக அல்ல, எல்லாருங் குணப்படுதலுக்கு வரச் சித்தமாயிருக்கிறார்.
10 ஆனால் கர்த்தருடைய நாள் இராவில் திருடன் வருகிற வண்ணமாய் வரும். அதி
லே வானங்கள் மடமடப்போடு ஒழிந்து, பூதியங்களோ எரிந்து கரைந்து, பூமி
யும் அதிலுள்ள கிரியைகளும் வெந்துபோம். 11 இப்போதும், இதுகளெல்லாங்
கரைந்துபோகிறதாயிருக்கக்கொள்ள, நீங்கள், வானங்கள் வெந்து கரைந்து, பூதி
யங்கள் எரிந்துருகிப்போகிற பராபரனுடைய நாளின் வருகைக்குக் காத்திருக்க
வுந் தீவிரிக்கவும், 12 பரிசுத்த நடக்கைகளிலுந் தெய்வபத்தியிலும் எப்படிப்பட்ட
வர்களாயிருக்கவேண்டியது. 13 ஆனால் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே
நீதி வாசமாயிருக்கிற புது வானங்களுக்கும் புதுப் பூமிக்குங் காத்திருக்கிறோம்.
14 ஆகையினாலே, பிரியமானவர்களே, இதுகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் அவ
ரால் கறையுங் குற்றமுமற்றவர்களாய்ச் சமாதானத்தில் கண்டுபிடிக்கப்படச் சாக்
கிரதையாயிருங்கள்.

குரு. கர்த்தர் அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படவும், எல்லா விசுவாசி களிலும் ஆச்சரியப்படத் தக்கவராகவும் வருவார். அவர் பூச்சக்கரத்தை நீதியாகவும், சன சாதிகளை உண்மையாகவும், நியாயந்தீர்ப்பார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

### சுவி. மத். உரு, ஙக-சசா.

ஆனால் மனுஷனுடைய குமாரன் தமது மகிமையிலே தம்முடைய சகல பரி
சுத்த தூதரோடுங்கூட வரும்போது, அவர் தமது மகிமையினுடைய ஆசனத்தின்
மேல் உளுக்கார்ந்திருப்பார். 32 அப்போது அவருக்கு முன்பாக எல்லாச் சாதி
களுங் கூட்டப்படுவார்கள். அவர்களை அவர் ஒரு மேய்ப்பன் ஆடுகளையுங் கிடாய்



களையும் பிரிக்கிறதுபோலே வெவ்வேறாகப் பிரித்து, 33 ஆடுகளைத் தம்முடைய
வலது பக்கத்திலுங் கிடாய்களை இடது பக்கத்திலும் நிறுத்துவார். 34 அப்போது
இராசா தம்முடைய வலது பக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்வதாவது: வாருங்
கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்றம் முதல் உங்
களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.
35 ஏதெனென்றால் பசியாயிருந்தேன், எனக்குச சாப்பாடு கொடுத்தீர்கள். தாக
மாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். பரதேசியாயிருந்தேன், என்னைச்
சேர்த்துக்கொண்டீர்கள். 36 அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்
தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள். காவலில் இருந்தேன்,
என்னண்டைக்கு வந்தீர்கள் என்பார். 37 அப்போது நீதிமான்கள் அவருக்குப்
பிரத்தியுத்தாரமாகச் சொல்லுவதாவது: ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்போது
பசியாயிருக்கக் கண்டு போஷித்தோம்; அல்லது தாகமாயிருக்கக் கண்டு உம்மு
டைய தாகத்தைத் தீர்த்தோம். 38 உம்மை நாங்கள் எப்போது பரதேசியாயிருக்
கக் கண்டு சேர்த்துக்கொண்டோம்; அல்லது அம்மணமாயிருக்கக் கண்டு உமக்கு
வஸ்திரங் கொடுத்தோம். 39 உம்மை நாங்கள் எப்போது வியாதியாகவும் அல்லது
காவலில் இருக்கிறவராகவுங் கண்டு உம்மண்டைக்கு வந்தோம் என்பார்கள்.
40 இராசா அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: மெய்யாகவே உங்களுக்குச் சொல்
லுகிறேன், நீங்கள் எல்லாரிலுஞ் சிறியரான இந்த என்னுடைய சகோதரரில் ஒரு
வனுக்கு என்ன செய்தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள் என்பார். 41 அப்
போது இடது பக்கத்திலுள்ளவர்களுக்குஞ் சொல்லுவார்: சபிக்கப்பட்டவர்க
ளே, என்னைவிட்டு, பிசாசுக்கும் அதின் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்
திய அக்கினியிலே போங்கள். 42 ஏனெனில் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்
பாடு கொடுத்தீர்கள் இல்லை. தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்
இல்லை. 43 பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் இல்லை.
அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் இல்லை. வியாதியாக
வுங் காவலிலும் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் இல்லை என்பார். 44 அப்
போது அவர்களும் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: ஆண்டவரே, உம்மை நாங்
கள் எப்போது பசியாகவும் தாகமாகவும் பரதேசியாகவும் அம்மணமாகவும் வியா
தியாகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உமக்கு ஊழியஞ் செய்யாதிருந்
தோம் என்பார்கள். 45 அப்போது அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எல்லாரிலுஞ் சிறியரான இவர்களில்
ஒருவனுக்கு என்ன செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்குஞ் செய்யாதிருந்தீர்
கள் என்பார். 46 அப்படியே இவர்கள் நித்திய வேதனையிலும், நீதிமான்களோ
நித்திய சீவனிலும் போவார்கள் என்றார்.

## திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின உஎ - ம் ஞாயிறு.

### நிரு. க தெச. ரு, க-யக.

ஆனால், சகோதரரே, காலங்களையும் வேளைகளையுங் குறித்து உங்களுக்கு
எழுதப்படுவது உங்களுக்குத் தேவை இல்லை. 2 ஏனெனில் இராத்திரியிலே திரு
டன் வருகிற வண்ணமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய்

அறிவீர்கள். 3 அதேனென்றால் அவர்கள்: சமாதானமென்றுஞ் சுகமென்றுஞ்
சொல்லும்போது, அசுப்பிலே கெர்ப்பவதியின்மேல் வேதனை வருகிறதுபோல
அவர்கள் அழிவு வந்து, தப்பமாட்டாதிருப்பார்கள். 4 நீங்களோ, சகோதரரே,
அந்தநாள் திருடனைப்போல உங்களைப் பிடிக்க, அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்
ல, 5 நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயி
ருக்கிறீர்கள். நாம் இரவுக்கும் அந்தகாரத்துக்கும் உள்ளானவர்கள் அல்ல.
6 ஆகையால் மற்றவர்களைப்போல நாம் நித்திரைபண்ணாமல், விழித்துக்கொண்டு,
வெறியற்றிருக்கக் கடவோம். 7 ஏனெனில் நித்திரை பண்ணுகிறவர்கள் இராத்
திரியிலே நித்திரைபண்ணுகிறார்கள்; வெறியாயிருக்கிறவர்கள் இராத்திரியிலே
வெறியாயிருக்கிறார்கள். 8 பகல் மனுஷராகிய நாமோவெனில் வெறியற்றிருந்து,
விசுவாசம் சிநேகம் என்ற மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கை என்ற
தலைச்சோட்டையுந் தரித்துக்கொண்டிருக்கக் கடவோம். 9 ஏனெனில் பராபரன்
நம்மைக் கோபத்துக்கு அல்ல, நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய்
இரட்சிப்பைத் தேடிக்கொள்வதற்குக் குறித்தார். 10 நாம் விழித்திருந்தாலும், நித்
திரை அடைந்திருந்தாலும், தம்முடனேகூட ஏகமாய்ப் பிழைக்கிறதுக்கு இவர்
நமக்காக மரித்தவர். 11 ஆகையினாலே நீங்கள் செய்து வருகிறதுபோல ஒருவருக்
கொருவர் புத்திசொல்லி, ஒருவரையொருவர் ஊன்றக்கட்டுங்கள்.

குரு. எச்சரிக்கையாயிருங்கள். விழித்திருங்கள்; ஏனெனில் காலம் எப்போது என்று அறியீர்
கள். ஆவியும் மணவாளியும்: வாரும் என்கிறார்கள்; கேட்கிறவனும் வாரும் என்பானாக.
சீக்கிரமாய் வருகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௨௫, ௧-௰௩.

அப்போது வானராச்சியம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்து, மணவாளனுக்கு
எதிர்கொண்டு போகப் புறப்படுகிற பத்துக் கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பாயிருக்
கும். 2 அவர்களில் ஐந்துபேர் புத்தியுற்றோரும், ஐந்துபேர் புத்தியற்றோருமா
யிருந்தார்கள். 3 புத்தியற்றோரானவர்கள் தங்கள் தீவட்டிகளைப் பிடித்தும், கை
யோடே எண்ணெய் கொண்டுபோனதில்லை. 4 புத்தியுற்றோரோ தங்கள் தீவட்டி
களோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டுபோனார்கள்.
5 மணவாளன் தாமதித்துப்போனதோவெனில், எல்லாரும் நித்திரைமயக்கமாகித்
தூங்கிவிட்டார்கள். 6 ஆனால் பாதிராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகி
றார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்களென்கிற கூக்குரல் உண்டாச்
சுது. 7 அப்போது அந்தக் கன்னியாஸ்திரிகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்
கள் தீவட்டிகளைச் சோடித்தார்கள். 8 புத்தியற்றோரோவென்றால் புத்தியுற்றோ
ருடனே: உங்கள் எண்ணெயிலே எங்களுக்குக் கொஞ்சந் தாருங்கள்; ஏனெனில்
எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறது என்றார்கள். 9 ஆனால் புத்தியுற்றோர்
பிரத்தியுத்தாரமாக: அப்படி வேண்டாம்; எங்களுக்கும் உங்களுக்கும் போதாமல்
போகாதபடிக்கு, நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய், உங்களுக்குக் கொள்ளுங்
கள் என்றார்கள். 10 அவர்கள் கொள்ளப்போகிறபோதோவெனில் மணவாளன்
வந்தார். அப்போது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாணத்துக்கு



உட்பிரவேசித்தார்கள்; கதவும் பூட்டப்பட்டது. 11 பின்பு மற்றக் கன்னியாஸ்திரி
களும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறவும் என்றார்கள். 12 ஆ
னால் அவர் பிரத்தியுத்தாரமாக: உங்களை அறியேனென்று மெய்யாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன் என்றார். 13 ஆனபடியினால் விழித்திருங்கள்; ஏனெனில்
மனுஷனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையையென்கிலும் அறியீர்
கள் என்றார்.

சியோன் இஸ்தோத்திரப் பண்டிகை.

நிரு. ௨ கொரி. ௫, ௰௭ - ௨௧.

ஆகையால் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச்சிருஷ்டியாயிருக்கி
றான். பழையவைகள் ஒழிந்து போயிற்று; இதோ, எல்லாம் புதிதாயிற்று. 18 ஆ
னால் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தமக்கு ஒப்பரவாக்கி, ஒப்பரவாக்
குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்த பராபரனாலே இதுகளெல்லாம் உண்
டாயிற்று. 19 அதேனெனில் பராபரன் கிறிஸ்துவுக்குள்ளிருந்து, லோகத்தாரின்
பாவங்களை அவர்கள்மேல் சுமத்தாமல், லோகத்தைத் தமக்கு ஒப்பரவாக்கிக்
கொண்டு, ஒப்பரவாக்குதலின் வசனத்தை எங்களுக்குள்ளே வைத்தார். 20 ஆன
படியினாலே, பராபரன் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதாய், நாங்கள் கிறிஸ்
துவுக்காகத் தானாபதிகளாயிருந்து: பராபரனோடு ஒப்பரவாகுங்களென்று கிறிஸ்
துவுக்குப் பதிலாக வேண்டிக்கொள்ளுகிறோம். 21 ஏனெனில் நாம் அவருக்குள்
பராபரனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவ
மாக்கினார்.

குரு. சகல சாதிகளுக்குஞ் சாட்சியாக இராச்சியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்
கும் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௨௮, ௰௮ - ௨௰.

அப்போது இயேசு சேர்ந்து, அவர்களுடனேபேசிச் சொன்னதாவது: வா
னத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது.
19 ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையுஞ் சீஷராக்க, பிதா குமாரன் பரி
சுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்
களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள்.
இதோ, நான் லோகமுடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட
இருக்கிறேன் என்றார். ஆமேன்.

திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூரும் திருநாள்.

நிரு. அபி: ௰௪, ௬ - ௰௨.

வேறொரு தூதனை நடுவானத்தில் பறக்கக் கண்டேன். அவனுக்குப் பூமியின்
மேல் குடியிருக்கிறவர்களுக்கும்; சகல சாதிக்கும், கோத்திரத்துக்கும், பாஷைக்

கும், சனசதளத்துக்கும் அறிவிக்கத்தக்கதாக, நித்திய சுவிசேஷம் உண்டாயிருந்
தது. 7 அவன் மகா சத்தத்துடனே: நீங்கள் பராபரனுக்குப் பயந்து, அவருக்கு
மகிமையைச் செலுத்துங்கள்; ஏனெனில் அவருடைய நியாயத்தீர்ப்பின் வேளை
வந்ததென்றும், வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும்
உண்டாக்கினவரைப் பணிந்துகொள்ளுங்கள் என்றும் உரைத்தான். 8 வேறொரு
தூதன் பின்சென்று: மகா பட்டணமாகிய பாபிலோன் விழுந்தது, விழுந்தது;
ஏனெனில் தன் வேசித்தனத்தின் உக்கிரமான மதுபானத்திலே எல்லாச் சாதிக
ளுக்கும் குடிக்கக் கொடுத்ததென்றான். 9 மூன்றாந் தூதன் அவர்களைப் பின்
சென்று, மகா சத்தமாய் உரைத்ததாவது: ஒருவன் மிருகத்தையும் அதின் சுரூபத்
தையும் பணிந்து, தன் நெற்றியிலாகிலுந் தன் கையிலாகிலும் முத்திரையடையா
ளந் தரித்துக்கொண்டால், 10 அவன் பராபரனுடைய கோபத்தின் பாத்திரத்
தில் கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமான மதுபானத்திலே
குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்குமுன்பாகவும்
அக்கினியாலுங் கெந்தகத்தாலும் வாதிக்கப்படுவான். 11 அவர்கள் வாதையின்
புகை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் எழும்பும். மிருகத்தையும்
அதின் சுரூபத்தையும் பணிந்துகொள்ளுகிறவர்களுக்கும், யாதொருவன் அதி
னுடைய நாமத்தின் முத்திரையடையாளத்தைத் தரித்துக்கொண்டால் அவனுக்
கும், இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லை. 12 இங்கே பரிசுத்தவான்களுடைய
பொறுமையிருக்கிறது, இங்கே பராபரனுடைய கற்பனைகளையும் இயேசுவைப்பற்
றும் விசுவாசத்தையுங் கைக்கொள்ளுகிறவர்கள் உண்டு என்றான்.

குரு: இப்போதும் நாம்விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டபடியினால், நம்முடைய கர்த்
தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்ப் பராபரனிடத்திலே சமாதானம் பெற்றிருக்கிறோம்.
சேனைகளுடைய கர்த்தர் நம்மோடே கூட இருக்கிறார். யாக்கோபுடைய பராபரன் நமக்கு
உயர்ந்த அடைக்கலமானவர்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. மத். ௰க, உரு-௩௰.

அந்தவேளையிலே இயேசு மறுமொழியாகச் சொன்னதாவது: பிதாவே, வா
னத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இதுகளை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்
கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினீர் என்கிறதுக்காக உம்மை மகிமைப்
படுத்துகிறேன். 26 ஆம், பிதாவே, அப்படியே உமக்குமுன்பாகப் பிரியமாயிருந்
தது. 27 என் பிதாவினால் எனக்குச் சகலமும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.
பிதா தவிர ஆரும் குமாரனை அறியான்; குமாரனும் குமாரன் எவனுக்கு வெளிப்
படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர ஆரும் பிதாவையும் அறியான்.
28 பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்கு
வாருங்கள்; நான் உங்களை இளைப்பாற்றுவேன். 29 என் நுகத்தடியை உங்கள்மேல்
ஏற்றுக்கொண்டு, என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள். அதேனென்றால் மெத்த
னவும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்கு
இளைப்பாறுதல் கிடைக்கும். 30 ஏனெனில் என் நுகத்தடி மெதுவும் என் சுமை
லேசுமாயிருக்கிறது என்றார்.



## கோவில் பிரதிஷ்டை பண்டிகை.

நிரு. அறிவி. உக, க-ரு.

நான் புதுவானத்தையும் புதுப்பூமியையுங் கண்டேன்; ஏனெனில் முந்தின
வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயிற்று. சமுத்திரமும் இனி இல்லை.
2 யோவானாகிய நான், தன் புருஷனுக்கு அலங்கரிக்கப்பட்ட மணவாளியைப்
போல ஆயத்தமான புது எருசலேமென்ற பரிசுத்த பட்டணத்தைப் பராபரனால்
வானத்திலிருந்து இறங்கக் கண்டு, 3 வானத்திலிருந்து உண்டான ஒரு பெரிய சத்
தத்தைக் கேட்டேன்; அது உரைத்ததாவது: இதோ, மனுஷரிடத்திலே பராபர
னுடைய கூடாரம்; அவர்களிடத்திலே வாசமாயிருப்பார்; அவர்கள் இவருடைய
சனங்களுமாயிருப்பார்கள்; பராபரன் தாமே அவர்களோடேகூட இருந்து, அவர்
களுடைய பராபரனுமாய் இருப்பார். 4 எல்லாக் கண்ணீரையும் பராபரன்
அவர்கள் கண்களில் இல்லாமல் துடைப்பார். இனி மரணமும் இல்லை, இனி துக்
கமாகிலும் அலறுதலாகிலும் வருத்தமாகிலும் இல்லை; ஏனெனில் முந்தினதுகள்
போய்விட்டதென்று உரைத்தது. 5 ஆசனத்தின்மீதில் வீற்றிருக்கிறவர்: இதோ,
எல்லாத்தையும் புதிதாக்குகிறோம் என்றார். அவர் என்னுடனே: எழுது, ஏனெ
னில் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானதுகள் என்று விளம்பினார்.

குரு. சேனைகளுடைய கர்த்தரே, உம்முடைய வாசஸ்தலங்கள் எத்தனை இன்பமானதுகள்.
என் இருதயமும் என் மாமிசமுஞ் சீவனுள்ள பராபரனை நோக்கிக் கம்பீர சத்தமிடுகிறது.
நம்முடைய பெலனுகிய பராபரனைக் கம்பீரித்துப் பாடுவோம், வாருங்கள்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

சுவி. லூக். ௰கூ, க-௰.

அவர் எரிகோவில் பிரவேசித்து, உருவநடந்து வந்தார். 2 இதோ, சகேயு
என்னப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். அவன் ஆயக்காரரில் தலைவனும் ஐசு
வரியவானுமாயிருந்தான். 3 அவன் இயேசு ஆரென்று அவரைப் பார்க்க வகை
தேடினான். ஆனால் அவன் சரீர அளவில் குள்ளனானபடியினாலே, கும்பைத் தொட்
டு அவனுக்குக் கூடாதேபோயிற்று. 4 அப்போது அவன் முன்னாக ஓடி, அவ
ரைப் பார்க்கிறதுக்கு ஒரு காட்டத்திமரத்தின்மேல் ஏறினான்; ஏனெனில் அந்த
வழியாய் அவர் வருகிறவராயிருந்தார். 5 இயேசு அந்த இடத்துக்கு வந்தபோது,
அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு, அவனுடனே: சகேயுவே, தீவிரமாய்
இறங்கு; ஏனெனில் இன்றைக்கு நான் உன் வீட்டிலே இருக்கவேண்டும் என்றார்.
6 அவன் தீவிரமாய் இறங்கி, அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான்.
7 அதைக் கண்டு அனைவரும், பாவியான மனுஷனிடத்திலே தங்கப் பிரவேசித்
தாரென்று முறுமுறுத்தார்கள். 8 ஆனால் சகேயு நின்று, கர்த்தருடனே: இதோ,
ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்; நான்
ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால், நாலத்தனை
யாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். 9 இயேசு அவனுடனே: இன்று
இந்த வீட்டுக்கு இரட்சிப்பு உண்டாயிற்று; ஏனெனில் இவனும் ஆபிரகாமுடைய
குமாரனாயிருக்கிறான். 10 ஏனெனில் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்க
வும் மனுஷனுடைய குமாரன் வந்தார் என்றார்.

## அறுப்புக்காக இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

(௩௨-ம் பக்கத்தில் பார்.)

திரு. ௨ கொரி. ௯, ௬–௰௫.

நான் சொல்லுகிறதேதெனில், சிறுக விதைக்கிறவன் சிறுகவும் அறுப்பான்;
ஆசீர்வாதங்களோடே விதைக்கிறவன் ஆசீர்வாதங்களோடும் அறுப்பான். 7 அவ
னவன் தான் மனதிலே நியமித்தபடி கொடுக்கக் கடவான்; துக்கத்தினாலே அல்லது
கட்டாயத்தினாலே வேண்டாம்; ஏனெனில் சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப்
பராபரன் சிநேகிக்கிறார். 8 ஆனால் நீங்கள் எல்லாத்திலும் எப்போதும் எல்லா
மனத்திருப்தியோடும் இருந்து, சகல நற்கிரியைக்கும் பெருகுவதற்காக, பரா
பரன் உங்கள்மேல் சகல கிருபையையும் பெருகப்பண்ண வல்லவராயிருக்கிறார்.
9 வாரியிறைத்து, ஏழைகளுக்குக் கொடுத்தான், அவன் நீதி என்றென்றைக்கும்
நிற்குமென்று எழுதியிருக்கிற பிரகாரமாகத் தானே. 10 விதைக்கிறவனுக்கு
விதையை ஈகிறவரோவெனில் புசிக்க அப்பத்தையும் ஈந்து, உங்கள் விதை
யைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சல்களை வளர்ப்பார். 11 பராபர
னுக்கு எங்களால் இஸ்தோத்திரம் வருத்துவிக்கிற கூடில்லாத நற்குணமெல்லாம்
உண்டாக, நீங்கள் எல்லாத்திலும் ஐசுவரியவான்களாய் இருக்கும்படிக்குத்தா
னே. 12 ஏனெனில் இந்தத் தர்ம நடத்தையின் ஊழியம் பரிசுத்தவான்களுடைய
குறைவுகளை நிறைவாக்குகிறதாக மாத்திரம் இராமல், அநேகர் பராபரனை இஸ்
தோத்திரிக்கிறதினால் பெருகுகிறதுமாயிருக்கிறது. 13 அவர்கள் இந்த ஊழியத்
தின் உத்தமத்தைக் கண்டு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படித
லோடே அறிக்கைபண்ணுகிறீர்களென்றும், தங்களுக்கும் அனைவருக்குங் கபடில்
லாத தர்ம ஐக்கியமாயிருக்கிறீர்களென்றும், பராபரனை மகிமைப்படுத்தி, 14 உங்
களுக்காக வேண்டுதல்செய்து, உங்களிலுள்ள பராபரனுடைய மகா மேன்மை
யான கிருபையின் நிமித்தமாக உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள். 15 ஆனால்
பராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு இஸ்தோத்திரம்.

குரு. பராபரன் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து நமக்கு மழைகளையுஞ் செழித்த காலங்களையுங் கொடுத்து, ஆகாரத்தினாலுஞ் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்புகிறார். அவரைக் கம்பீரித்துப் பாடி, நம்முடைய இரட்சிப்பின் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக் கடவோம், வாருங்கள்.

சபை. அல்., அல்., அல்லேலூயா.

அல்லது:

(ஒருசந்தியின் நாட்களில்)

குரு. எல்லாச் சீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; தேவரீர் ஏற்ற வேளையிலே அதுகளின் போசனத்தை அதுகளுக்குக் கொடுக்கிறீர். உமது கையைத் திறந்து சீவனுள்ளதெல்லாத்தையும் இதமியமாய்த் திருப்தியடையப்பண்ணுகிறீர்.

சபை. ஆமேன், ஆமேன், ஆமேன்.







சுவி. லூக். ௰௨, ௰௫–௩௧.

அவர் பின்னையும் அவர்களுடனே: பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருக்
கப் பாருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கும் அவன் சீவன் அவன் ஆஸ்திகளின்
திரட்சியினாலே உண்டாயிராது என்றார். 16 அவர்களுக்கு ஒரு உவமையைச்
சொன்னார், அதாவது: ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனுடைய காணி பூமி நன்
றாய் விளைந்தது. 17 அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு சொன்னதாவது:
என்ன செய்வேன்; என் தானியங்களைச் சேர்த்துவைக்க எனக்கு இடம் இல்லை
யே. 18 நான் ஒன்று செய்வேன்; என் களஞ்சியங்களை இடித்துப்போட்டு, பெரி
தாய்க் கட்டி, எனக்கு விளைந்ததெல்லாத்தையும் என்னுடைய நல்ல வஸ்துக்
களையும் அங்கே சேர்த்து வைத்து, 19 என் ஆத்துமத்துடனே: ஆத்துமமே,
உனக்கு அநேகம் வருஷங்களுக்கு வெகு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது;
இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாயிரு என்பேன் என்று சொன்னான். 20 ஆனால்
பராபரன் அவனுடனே: மதியற்றவனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம்
உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும்; அப்போது நீ ஆயத்தம் பண்ணினதுகள்
ஆருடையதாம் என்றார். 21 பராபரனுக்குள் ஐசுவரியவானாயிராமல், தனக்குத்
தான் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவன் அப்படி இருக்கிறான் என்றார். 22 அவர் தம்
முடைய சீஷருடனே சொன்னதாவது: ஆகையால் என்ன உண்போமென்று உங்
கள் சீவனுக்காகவும், என்ன உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும், கவ
லைப்படாதேயுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 23 ஆகாரத்தைப் பார்க்
கச் சீவனும் உடையைப் பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்கிறது. 24 காகங்களைக்
கவனித்துப்பாருங்கள்; அதுகள் விதைக்கிறதும் இல்லை, அறுக்கிறதும் இல்லை;
அதுகளுக்குப் பண்டகசாலையும் இல்லை, களஞ்சியமும் இல்லை. இல்லாவிட்டா
லும், பராபரன் அதுகளைப் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்க நீங்கள்
எத்தனை விசேஷத்திருக்கிறீர்கள். 25 உங்களில் ஆர் கவலைப்படுகிறதினால் தன்
அளவோடே ஒரே முழத்தைக் கூட்டலாம். 26 இப்போதும் எல்லாத்திலுஞ் சிறி
யதும் உங்களால் ஆகாதிருக்கக்கொள்ள, மற்றதுகளுக்காக நீங்கள் கவலைப்படுவா
னேன். 27 லீலிய புஷ்பங்களை எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்;
அதுகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை. இல்லாவிட்டாலும், சாலொ
மோன் முதலாய்த் தன் சகல மகிமையிலும் இதுகளில் ஒன்றைப்போலும் உடுத்
தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 28 இப்போதும் இன்
றைக்கு இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன்
இவ்விதமாய் உடுத்துவித்தால், உங்களை எத்தனை அதிகம், அற்பவிசுவாசிகளே.
29 ஆனபடியால், என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று நீங்
கள் கேளாமலும், மனதில் அசிமானப்படாமலும் இருங்கள். 30 ஏனென்றால்
இதுகள் எல்லாத்தையும் லோகச் சாதியார் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பிதா
வோவெனில் இதுகள் உங்களுக்குத் தேவை என்று அறிந்திருக்கிறார். 31 பராபர
னுடைய இராச்சியத்தையே தேடுங்கள்; அப்போது இதுகளெல்லாம் உங்களுக்
குக் கூடக் கொடுக்கப்படும் என்றார்.

# II.

## INTROITUS ET ANTIPHONIAE.

## ஆரம்ப வாக்கியங்களும், ஆசீர்வாதத்தைக் கூறும் முன் குருவும் சபையாரும் முறைமுறையாய் ஓதுங் கூருக்க வேதவாக்கியங்களும்.

---

### A. INTROITUS ET GLORIA.

### ஆரம்ப வாக்கியங்களும் தேவதுதியும்.

---

1. சாதாரண நாயிற்றுக் கிழமைகளில்.

(௪-ம் பக்கத்தில் பார்):

குரு (சபையை நோக்கி):



1. கர்த்தரை எல்லாக் காலத்திலும் | ஸ்தோத்திரிப்பேன்.
2. என்னோடேகூடக் கர்த்தரை | மகிமைப்படுத்துங்கள்.
3. கர்த்தர் நல்லவர் என்றதை | ருசித்துப் பாருங்கள்.

சபை:



1. அவர் துதி எப்போதும் என் | வாயிலிருக்கும்.
2. நாம் ஒருமித்து அவர் | நாமத்தை உயர்த்துவோம்.
3. அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற | மனுஷன் பாக்கியவான்.

பிதாவுக்கும் மு. (ரு-ம் பக்கத்திலே பார்.)

---



154

குறிப்பு: பின் வரும் ஆரம்ப வாக்கியங்கள் ௪-ம் ரு-ம் பக்கங்களிலுள்ள இராகங்களின்படி பாடப்படலாம். அல்லது, வேண்டுமானால், பின் வரும் இராகங்களின்படியேயும் பாடப்படும்.

2. கிறிஸ்து வருகையின் க-ம் நாயிறு.

குரு:



1. சீயோன் குமாரத்தியே, மிகவுங் களி | கூரு.
2. இதோ, உன் இராசா உன்னண்டைக்கு | வருகிறார்.
3. தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா. அல்லே | லூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. இஸ்ரவேல் குமாரத்தி | யே, களிகூரு.
2. அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரு | மாக வருகிறார்.
3. உன்னதமானவைகளில் ஓசியன்னா. | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

3. கர்த்தர் பிறந்த பண்டிகை.

குரு (முந்தின இராகத்தின்படி):

1. உங்களுக்கின்று இரட்சகர் | பிறந்தார்.
2. பராபரனை ஒருவனும் ஒருக்காலுங் கண்ட | தில்லை.
3. கர்த்தரைப் புதுப்பாட்டாய்ப் பாடுங்கள். அல்லே | லூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை (முந்தின இராகத்தின்படி):

1. கர்த்தராகிய கிறிஸ்து அவரே. | அல்லேலூயா.
2. பிதாவின் மடியிலிருக்கிற குமாரனே அதை நமக்கு விவரித்தார். அல்லேலூயா.
3. அவர் அதிசயங்களைச் செய்கிறார். | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

### 4. வருஷப் பிறப்பின் பண்டிகை.

குரு:



1. அவருக்கு இயேசுவென்று | பெயர் இடப்படும்.
2. லோகமும் அதின் இச்சையும் | ஒழிந்துபோம்.
3. அல்லேலூயா, கர்த்தரைத் | துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. ஏனெனில் அவர் மது சனத்தின் பாவங்களை நீக்கி, அவர்களை ரட்சிப்பார். | அல்லேலூயா.
2. பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் என்றென்றைக்கும் | நிலை நிற்கிறான்.
3. ஏனெனில் அவர் நல்லவர், அவர் கிருபை | என்றும் உள்ளது.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

### 5. கிறிஸ்து மகிமை விளங்கின பண்டிகை.

குரு:



1. கர்த்தருடைய மகிமை வெளியரங்கம் | ஆகும்.
2. அவருடைய விசேஷம் அறிவிக்கப்படாதிருந்தவர்கள் அதைக் காண் | பார்கள்.
3. இருளில் நடக்கிற சனம் பெரிய வெளிச்சங் கண்டது. | அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

159



சபை:



1. சகல மாமிசமும் அதை | ஏகமாய்க் காணும்.
2. கேள்விப்படாதிருந்தவர்கள் அதை | உணருவார்கள்.
3. மரணத்தின திசையிலும் நிழலிலும் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

### 6. பெரிய வியாழக்கிழமை.

குரு:



1. கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் | ஆனவர்.
2. இது வானத்திலிருந்திறங்கின | அப்பம்.
3. நாம் வெளிச்சத்தில் நடந்தால், நமக்கு அன்னியோன்னிய ஐக்கம் | உண்டு.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. தம்முடைய அதிசயங்களின் நினைவுகூருதலை | உண்டுபண்ணினர்.
2. இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் | பிழைத்திருப்பான்.
3. கிறிஸ்துவின் இரத்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் | சுத்திகரிக்குது.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

7. கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை.

குரு:



1. கர்த்தர் எழுந்தார். | அல்லேலூயா.
2. மரித்தோரிலிருந்தெழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை. | அல்லேலூயா.
3. மரணஞ் ஜெயமாக விழுங்கப்பட்டது. | அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. அவர் மெய்யாகவே எழுந்தார். | அல்லேலூயா.
2. மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாது. | அல்லேலூயா.
3. நமக்குச் ஜெயங் கொடுத்த பராபரனுக்கு ஸ்தோத்திரம். | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

8. கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

குரு:



1. பராபரன் ஆர்ப்பரிப்போடு ஏறுகிறார். | அல்லேலூயா.
2. அவர் உன்னதத்திற்கேறினார். | அல்லேலூயா.
3. சகல சனசதளங்களே, கைகொட்டுங்கள். | அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.



சபை:



1. கர்த்தர் எக்காளசத்தத்தோடு ஏறுகிறார். | அல்லேலூயா.
2. சிறையாக்குதலைச் சிறையாக்கிப்போட்டார். | அல்லேலூயா.
3. பராபரனைக் கம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள். | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

9. பெந்தெக்கொஸ்தே பண்டிகை.

குரு:



1. தாகமுள்ளவன் மேல் | தண்ணீரை ஊற்றுவோம்.
2. நாம் சகல மாமிசத்தின் மேலும் நம்முடைய | ஆவியை ஊற்றுவோம்.
3. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள். | அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. வறண்ட நிலத்தின் மேல் | அதை ஊற்றுவோம்.
2. கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் | ஊற்றுவோம்.
3. இதிலே களிகூர்ந்து மகிழக் கடவோம். | அல்லேலூயா.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

## 10. திரித்துவத்தின் பண்டிகை.

குரு:



1. சேனைகளுடைய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். | அல்லேலூயா.
2. வானத்திலே சாட்சிகொடுக்கிறவர் மூவர், பிதா குமாரன் | பரிசுத்த ஆவி.
3. எல்லாம் அவராலும் அவர் மூலமாகவும் அவருக் | கென்றும் இருக்கிறது.

சபை:



1. பூமி எல்லாம் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறது. | அல்லேலூயா.
2. இம்மூவரும் ஒன் | றாயிருக்கிறார்கள்.
3. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டா | தாக. ஆமேன்.

குரு:

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:

*ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

*இதின் இராகத்தை ௫ - ம் பக்கத்தில் பார்.



## 11. மிசியோன் இஸ்தோத்திரப் பண்டிகை.

குரு:



1. உங்கள் கண்களை நீங்கள் ஏறெடுத்து வயல் | வெளிகளைப் பாருங்கள்.
2. அறுக்கிறவன் பலன் பெறுவான். | அல்லேலூயா.
3. பராபரன் எங்களை | ஆசீர்வதிக்கக் கடவார்.

சபை:



1. அவைகள் அப்போதே அறுப்புக்கு வெண்மையாயிருக்கிறதென்று | பாருங்கள்.
2. நித்திய ஜீவனுக்குக் கனியைச் சேர்க்கிறான். | அல்லேலூயா.
3. பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருப்ப | தாக. ஆமேன்.

குரு:

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

*ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.

---

*இதின் இராகத்தை ௫ - ம் பக்கத்தில் பார்.

## 12. திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூரும் பண்டிகை.

குரு:



1. கர்த்தர் தம்முடைய நீதியை | வெளிப் படுத்தினார்.
2. அவர் தம்முடைய இரட்சிப்பைப் பிர | ஸ்தா மாக்கினார்.
3. அவருடைய சாட்சிகள் மகா உறுதியானவைகள். | அல்லே லூயா.

சபை:



1. நமது பராபரனாகிய கர்த்தரின் செபஆலச் சீயோனில் விவ | ரிப் போம், வாருங்கள்.
2. அவர் தமது நீதியைச் சாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார். | அல்லேலூயா.
3. பரிசுத்தம் நித்திய நாளாக அவருடைய வீட்டின் அலங் | கார மாய் இருக்கிறது.

குரு:

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவ தாக.

சபை:

*ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக் கிறபடியே. ஆமென்.

*இதின் இராகத்தை ௫ - ம் பக்கத்தில் பார்.



## 13. கோவில் பிரதிஷ்டை பண்டிகை.

குரு:



பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரை | ஆர்ப்பரியுங்கள்.
கர்த்தர் பராபரனென்று | அறியுங்கள்.
அவர் வாசல்களிலே துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச் சியோடும் பிர | வேசியுங்கள்

சபை:



கர்த்தருக்கு மகிழ்ச்சியோடே ஆராதனை செய்து, கம்பீர சத்தத் தோடே அவர் முன் | பாக வாருங்கள்.
நாம் அல்ல, அவரே நம்மைத் தமக்குச் சனமும் தமது மேய்ச்ச லின் ஆடுகளும் | ஆக்கினார்.
கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவ ருடைய உண்மை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. | அல் லேலூயா.

குரு:

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவ தாக.

சபை:

*ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக் கிறபடியே. ஆமேன்.

## 14. அறுப்புக்கால இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

குரு:



1. கர்த்தரைக் கம்பீரித்துப் பாடுவோம், | வாருங்கள்.
2. துதியோடே அவர் சந்நிதிக்கு முன்பாக | வாருங்கள்.
3. எல்லா மாமிசத்துக்கும் அதிகாரங்கொடுக்கிறவரைத் | துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை:



1. நமது இரட்சிப்பின் கன்மலையைச் சங்கீர்த்தனம் | பண்ணக்கடவோம்.
2. சங்கீர்த்தனங்களால் அவரை ஆர்ப்பரித்துப் | பாடக்கடவோம்.
3. ஏனெனில் அவர் கிருபை | என்றும் உள்ளது.

ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமேன்.



## B. ANTIPHONIAE;

ஆசீர்வாதத்தைக் கூறும் முன், குருவும் சபையாரும் முறை முறையாய் ஓதும் சுருக்க வேதவாக்கியங்கள்.

குரு:



சபை:



### 1. கர்த்தர் பிறந்த பண்டிகை.

குரு:

பராபரன் மாமிசத்தில் | வெளிப்பட்டார். அல்லேலூயா.

சபை:

தெய்வபத்தியின் இந்த இரகசியம் பெரிதாயிருக்கிறது. | அல்லேலூயா.

### 2. வருஷப் பிறப்பின் பண்டிகை.

குரு:

ஆண்டவர் தலைமுறை தலைமுறையாக நமக்கு | அடைக்கலமானவர். அல்லேலூயா.

சபை:

அவர் அநாதியாய் என்றென்றைக்கும் நம்முடைய பராபரன்தாமே. | அல்லேலூயா.

### 3. கிறிஸ்து மகிமை விளங்கின பண்டிகை.

குரு:

கர்த்தர் என் விளக்கை | வெளிச்சமாக்குகிறார். அல்லேலூயா.

சபை:

என் பராபரனாகிய கர்த்தர் என் இருளைப் பிரகாசிப்பிக்கிறார். | அல்லேலூயா.

169






4. கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை.

குரு:

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று | அறிகிறேன். அல்லேலூயா.

சபை:

நான் என் மாமிசத்திலிருந்து பராபரனைப் பார்ப்பேன். | அல்லேலூயா.

5. கர்த்தர் பரமேறின பண்டிகை.

குரு:

பராபரன் அவரை மேலுக்குமேலாக | உயர்த்தினார். அல்லேலூயா.

சபை:

எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கு அருளிச்செய்தார். | அல்லேலூயா.

6. பெந்தெக்கொஸ்தே பண்டிகை.

குரு:

புத்திரசுவிகாரத்தின் | ஆவியைப் பெற்றோம். அல்லேலூயா.

சபை:

அவரால் அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம். அல்லேலூயா.

7. திரித்துவத்தின் பண்டிகை.

குரு:

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனைப் புகழ்ந்து ஸ்தோத்திரிக்கிறோம். அல்லேலூயா.

சபை:

அவர் அனாதியாய் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கப்பட்டவர். அல்லேலூயா.



மிசியோன் இஸ்தோத்திரப் பண்டிகை.

குரு:

...ராச் சாதிகளே, கர்த்தரைத் | துதியுங்கள். அல்லேலூயா.

சபை:

எல்லாச் சனசதளங்களே, அவரைப் புகழுங்கள். | அல்லேலூயா.

9. திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூரும் பண்டிகை.

குரு:

கர்த்தருடைய வசனம் என்றென் | றைக்கும் நிற்கும். அல்லேலூயா.

சபை:

அவருடைய சத்தியம் தலைமுறை தலைமுறையாகவும் இருக்கும். | அல்லேலூயா.

10. கோவில் பிரதிஷ்டை பண்டிகை.

குரு:

ஆருதஸ்தலம் எத்தனை பயப்படத்தக்க | தாயிருக்கிறது. அல்லேலூயா.

சபை:

இது பராபரனுடைய வீடொழிய, வேறொன்றல்ல; இது வானத்தின் வாசல். | அல்லேலூயா.

11. அறுப்புக்காக இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

குரு:

கர்த்தரைத் துதியுங்கள், ஏனெனில் | அவர் நல்லவர். (அல்லேலூயா.)

சபை:

அவர் கிருபை என்றும் உள்ளது. (அல்லேலூயா.)

# III.

## COLLECTAE.

## கொல்லெக்தென்னுஞ் சுருக்க செபங்கள்.

சாதாரண ஞாயிற்றுக்கிழமைகள்.

1.

சர்வத்திற்கும்வல்ல அநாதி பராபரனே, ஒருவருஞ் சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவரே, தேவரீர் உம்முடைய ஒன்றான குமாரனைக்கொண்டும் பரிசுத்த ஆவியைக்கொண்டும் உம்மை மனிதராகிய எங்களுக்குத் தயவாய் வெளிப்படுத்தினதற்காக உமக்குத் தாழ்மையாய் இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் உம்மையும் உம்முடைய திருச்சித்தத்தையும் நன்றாய் அறிந்து, கிறிஸ்துவினிடத்தில் உமக்குச் சம்மதியான ஊழியஞ்செய்து, எங்கள் ஆயுவின் முடிவு பரியந்தம் உமது கிருபையிலே நிலைநின்று, கடைசியிலே நித்திய சீவனுக்குப் பங்காளிகளாய்ப் போவதற்கு, தேவரீர் கிருபைசெய்ய வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வவல்லமையுள்ள பிதாவாகிய பராபரனே, நாங்கள் உறுதியான விசுவாசத்திலே உமக்கு ஊழியஞ்செய்து, உமது நாமத்தை அறிக்கைபண்ணுகிறதிலே மரண பரியந்தம் நிலைநிற்கும்படிக்கு, உமது வசனம் எங்களிடத்தில் ஓடிப்பரம்பி, தகுந்த தைரியத்தோடே பிரசங்கிக்கப்படுவதற்கும், கிறிஸ்தமான திருச்சபை அதினால் சீர்பொருந்தித் தேறுவதற்கும், தேவரீர் உமது ஆவியையுந் திவ்விய ஞானத்தையுந் தந்தருளவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.





3.

சர்வத்திற்கும்வல்ல நித்திய பராபரனே, தேவரீர் பூமி எங்குமுள்ள உம்முடைய திருச்சபையைப் பரிசுத்த ஆவியைக்கொண்டு பரிசுத்தமாக்கி ஆண்டு நடத்தி வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். தேவரீர் உமது பரிசுத்த ஆவியை எங்களுக்கு அளித்து, நாங்கள் அவர் மூலமாய் உம்மை விசுவாசித்து, உமக்குப் பிரியமான ஊழியஞ் செய்யும்படி, எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

அன்புள்ள கர்த்தராகிய பராபரனே, தேவரீர் உமது பரிசுத்த வசனத்தை எங்களுக்கு அருளிச்செய்து, அதை இற்றைவரைக்கும் எங்களிடத்திலே காப்பாற்றி வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலே மரணபரியந்தம் நிலைத்திருந்து, நித்திய இரட்சிப்பை அடைவதற்கு, தேவரீர் உமது வசனத்தைக்கொண்டு எங்களுக்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின்மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

கிறிஸ்து வருகையின் ஞாயிறுகள்.

1.

அன்புள்ள கர்த்தராகிய பராபரனே, எங்களண்டைக்கு வருகிற உம்முடைய நேச குமாரனை நாங்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளவும், சுத்த இருதயத்தோடு உமக்கு ஊழியஞ் செய்யவும் ஆயத்தமாயிருக்கும்படி, தேவரீர் எங்களை எழுப்பியருளவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கி, உமது ஒன்றான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நீதியுள்ள இராசாவும் இரட்சகருமாக ஏற்படுத்தி அனுப்பி, இவரைக் கொண்டு எங்களை எல்லாப் பாவத்திலும் பிசாசின் வல்லமையிலும் நித்திய மரணத்திலுமிருந்து மீட்டிரட்சிக்கதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். நாங்கள் இவரை எங்கள் நீதியுள்ள இராசாவும் இரட்சகருமாக அறிந்து அண்டிக்கொள்ளவும், இவருடைய எளிமைத்தனத்துக்காகவும் அநேகர் அசட்டைசெய்யும் இவருடைய [illegible]னத்துக்காகவும் இடறல்படாமல், இவரை உறுதியாய் நம்பி, நித்திய இரட்சிப்பை அடையவும், தேவரீர் உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களைப் பிரகாசிப்பித்து, ஆண்டுநடத்தவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

3.

நித்திய பராபரனே, தயவுள்ள பிதாவே, தேவரீர் உம்முடைய குமாரனைச் சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கும் நியாயாதிபதியாக நியமித்து, அவரைக்கொண்டு உமது திருச்சபையை உலகத்தின் முடிவிலே எல்லா நிர்ப்பந்தத்திலுமிருந்து மீட்டிரட்சித்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். தேவரீர் எங்கள்மேல் கிருபைகூர்ந்து, எங்கள்மீட்பும் பாக்கியமான நம்பிக்கையுஞ்சமீபிக்கச்செய்து, இந்த அழுகையின்பள்ளத்தாக்கினின்று உலகத்தோற்றமுதல் உம்முடைய குமாரனைக்கொண்டு எங்களுக்கு ஆயத்தப்படுத்தின நித்திய இராச்சியத்திலே எங்களைத் தயவாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எங்கள் ஒன்றான மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

173



சர்வவல்லமையுள்ள பராபரனே, அன்புள்ள பிதாவே, தேவரீர் எங்களைக் கிருபையாய் அந்தகார இராச்சியத்தினின்று இரட்சித்து, உம்முடைய பரிசுத்த சுவிசேஷத்தின் வெளிச்சத்துக்கு வரவழைத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் பாவநித்திரையை விட்டெழுந்து, அந்தகாரத்தினுடைய கிரியைகளை நீக்கிப்போட்டு, மெய்யான விசுவாசத்தோடும் பரிசுத்த நடக்கையோடும் வெளிச்சத்திலே சீராக நடக்கும்படி, தேவரீர் எங்களைப் பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பித்து, பரிசுத்தமாக்கி, ஆண்டுநடத்த வேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக்கு முந்தின இராத்திரி.

பரமபிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது ஒரேபேறான குமாரன் மனிதனாகப் பிறந்த இராத்திரியைச் சந்தோஷமாகக் கொண்டாடும்படி, எங்களுக்கு மறுபடியும் சமயங் கட்டளையிட்டதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் எங்கள் இரட்சிப்புக்கென்று இவ்வுலகில் அவதரித்த அவரைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளவும், அவர் உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது பயமற்ற பூரண சந்தோஷத்தோடு அவரைத் தரிசிக்கவும், எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

அன்புள்ள கர்த்தராகிய பராபரனே, தேவரீர் ஆசீர்வாதம் நிறைந்த அந்த இராத்திரியில் எங்கள் இரட்சகர் பிறந்ததினாலே உலகத்துக்கு வெளிச்சத்தை உதிக்கப்பண்ணினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இவர் எங்கள் வெளிச்சமாயிருக்கிறதினால் இம்மையிலே நாங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும், மறுமையிலே அவருடைய மகிமையின் சோதியைத் தரிசித்து, நித்திய சந்தோஷமுள்ளவர்களாய் உம்மை இஸ்தோத்திரிக்கவும், எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று உமது நேசகுமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

### கர்த்தர் பிறந்த பண்டிகை.

சர்வத்திற்கும்வல்ல அநாதி பராபரனே, உமது நேச குமாரனின் பிறப்பினால் தேவரீர் நித்திய சீவனின் வெளிச்சத்தை எங்களுக்குப் பிரகாசிக்கப்பண்ணினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். நாங்கள் இவரைப் பற்றும் விசுவாசத்தை எங்கள் வாயினால் அறிக்கையிட்டு, எங்கள் செய்கையினால் வெளிப்படுத்தும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.



2.

கிருபையுள்ள கர்த்தரும் நரசீவதயவுள்ள பிதாவுமாகிய பராபரனே, தேவரீர் உமது ஒன்றான நேச குமாரனை இவ்வுலகில் அனுப்பி, அவரைக்கொண்டு நீசப்பாவிகளாகிய எங்களைச் சகல பாவங்களிலும் பிசாசின் வல்லமையிலும் நித்திய மரணத்திலுமிருந்து இரட்சித்த உம்முடைய மகா பெரிய சிநேகத்துக்காகவும் இரக்கத்துக்காகவும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் நன்றியறிந்த மனதோடே உம்முடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, அதற்காக ஓயாமல் உம்மைத் துதித்து, அதினாலே சகல துன்பநாட்களிலும் ஆறுதலையும் பெலனையுஞ் சமாதானத்தையும் அடையும்படிக்கு, தேவரீர் உம்முடைய பரிசுத்த ஆவியினாலே எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்து, திடப்படுத்தி, ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

### வருஷமுடிவின் இராத்திரி.

1.

திரியேக பராபரனே, தேவரீர் எங்கள் பேரில் கிருபைகூர்ந்து, இந்த வருஷம் முழுமையும் எங்களைக் கிருபையாய்ப் பராமரித்து, ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயும் எங்களுக்குச் சொல்லிமுடியாத உபகாரங்களைச் செய்துவந்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். தேவரீர் எங்களைத் தயவாய் நோக்கிப்பார்த்து, நாங்கள் உம்முடைய சகல உபகாரங்களுக்காகவும் உம்மை நன்றியறிதலோடே துதித்து, அவைகளை உமக்குச் சங்கையும் எங்களுக்குப் பிரயோசனமுமாய் அனுபவிக்கும்படி எங்களுக்குக் கிருபைசெய்து, இனியும் எங்கள் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்குந் தேவையானவைகளை எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

### 2.

சர்வத்திற்கும்வல்ல பராபரனே, அன்புள்ள பிதாவே, தேவரீர் எங்களை இந்த வருஷமுழுவதுஞ் சகல தீமைகளுக்கும் விலக்கிக்காத்து, உமது கிருபையின் நன்மைகளாலே எங்களை நிரப்பினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் உட்பிரவேசிக்கப்போகிற புதுவருஷத்தில் புது ஆசீர்வாதங்களை அடைந்து, பழைய மனிதனைக் களைந்துபோட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதற்கும், கடைசியில் இந்த லோகத்தைவிட்டுப் புது எருசலேமில் பிரவேசித்து, உம்மைப் புது நாவுகளினால் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிப்பதற்கும், தேவரீர் எங்களுக்கு அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

## வருஷப்பிறப்பின் பண்டிகை.

### 1.

கர்த்தாவாகிய பராபரனே, பரமபிதாவே, தேவரீர் எங்களை நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படி, உம்முடைய ஒரே பேறான குமாரனை அதற்குக் கீழாக்கினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் எங்கள் பழைய பாவங்களுக்குந் துன்மனச்சாட்சிக்கும் நீங்கலாகி, அவருடைய கீழ்ப்படிதலினால் மெய்யான ஆறுதலையுங் கடைசியிலே நித்திய சீவனையும் அடையும்படிக்கு, தேவரீர் உமது பரிசுத்த ஆவியினால் எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பிக்கவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.



சர்வத்திற்கும்வல்ல நித்திய பராபரனே, சகல நல்லீவுகளையுங் குறையற்ற சகல வரங்களையும் இறங்கிவரப்பண்ணுகிற பிதாவே, தேவரீர் கடந்துபோன வருஷத்தில் எங்களுக்கு ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயுஞ் செய்துவந்த சகல உபகாரங்களுக்காகவும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் எங்களுக்குக் கிருபைபொழியும் பாக்கியமுள்ள புதுவருஷத்தை அளித்து, எங்களைச் சகல மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும் விலக்கமாய்க் காத்து, திவ்விய ஆசீர்வாதங்களால் எங்களை நிரப்பவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

## மகிமை விளங்குதலின் பண்டிகை.

கர்த்தராகிய பராபரனே, தேவரீர் புறச்சாதிகளுக்கு நட்சத்திரத்தினால் வழிகாட்டி, உமது ஒரே பேறான குமாரனை அவர்களுக்கு வெளிப்படுத்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். சாதிகளின் வெளிச்சமாகிய அவரை நாங்கள் எப்போதும் பின்சென்று, அவருடைய பாக்கியமான செங்கோலுக்குக் கீழாக நித்திய சமாதானத்தை அநுபவித்து, கடைசியிலே அவருடைய நித்திய மகத்துவத்தைத் தரிசிக்கும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது நேச குமாரனின் மகிமையைப் புறச்சாதிகளுக்கு விளங்கப்பண்ணினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் அவருடைய நித்திய மகிமையைக் காண்பதற்கு மரணபரியந்தம் அவரை விசுவாசித்து அண்டிக்கொள்ளும்படி, தேவரீர் எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

இரக்கமுங் கிருபையுமுள்ள பிதாவாகிய பராபரனே, உமக்குத் தூரமானவர்களாயிருந்த புறச்சாதியாராகிய எங்களுக்குத் தேவரீர் உமது நேச குமாரனை வெளிப்படுத்தி, அவர் சாதிகளின் வெளிச்சமாகவும் பூமியின் கடைசி பரியந்தம் இரட்சிப்பாகவும் இருக்கிறாரென்பதை எங்களுக்குத் தெரியப்படுத்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் எங்கள் அழைப்புக்குப் பாத்திரமாய் நடந்து, விசுவாசமாகிய பொன்னையும் செபமாகிய தூபவர்க்கத்தையும் பொறுமையாகிய வெள்ளைப்போளத்தையும் அவருக்குச் செலுத்தவும், அவருடைய நாமத்துக்குப் புகழ்ச்சியும் அவருடைய சபைக்கு நன்மையுமாக எங்கள் பெலன்கள் சொத்துக்களைக் கையாடிவரவும், தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

ஆமேன்.



173

ஒருசந்தியின் நாட்கள்.

1.

சர்வவல்லமையுள்ள அநாதி பராபரனே, பிசாசின் வல்லமையை எங்களைவிட்டு நீக்கிப்போடும்படி, தேவரீர் உமது சொந்தக் குமாரனைச் சிலுவையின் வேதனையைச் சகிக்கப்பண்ணினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் பாவமன்னிப்பைப் பெற்று, நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்கப்படும்படிக்கு, அவருடைய பாடுகளைத் தியானித்து அறிக்கைபண்ணவும், அவரை இஸ்தோத்திரிக்கவும், தேவரீர் எங்களுக்கு வரமளிக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

இரக்கமுள்ள நித்திய பராபரனே, தேவரீர் உமது ஒரே பேறான குமாரனைப் பாராமல், அவர் எங்கள் பாவங்களைச் சிலுவையில் சுமந்து தீர்க்கும்படி, எங்கள் எல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரம். தேவரீர் எங்கள் இருதயங்கள் தத்தளிக்காமலும் அவநம்பிக்கைக்குள்ளாகாமலும் இருக்கும்படி, அவரைப் பற்றும் விசுவாசத்தை எங்களுக்கு அளிக்கவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

3.

இரக்கமுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது ஒன்றான குமாரனை எங்கள் இரட்சிப்புக்கென்று சிலுவையின் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்

கள் அவர் சம்பாதித்த இரட்சிப்பினால் பூரண ஆறுதலடைந்து, அவர் நிமித்தஞ் சகல பாவங்களையும் அருவருத்து, பகைத்து விட்டுவிட்டு, எங்களுக்கு நேரிடும் உபத்திரவத்தைப் பொறுமையாய்ச் சகித்து, அவரைக்கொண்டு உம்மண்டை சேர்ந்து, நித்திய மோட்ச பாக்கியத்தை அடையும்படிக்கு, தேவரீர் உமது பரிசுத்த ஆவியை எங்களுக்கு அளிக்கவேண்டுமென்று உமது ஒரேபேறான குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

பெரிய வியாழக்கிழமை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நாங்கள் உமது பாடுகளை நினைக்கிறதற்கு உமது திருச் சரீரத்தைப் புசித்து உமது திரு இரத்தத்தைக் குடிக்கும்படி, தேவரீர் உமது மரண சாதன வார்த்தையினால் எங்களுக்குக் கற்பித்தருளினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் எங்களை நன்றாய்ச் சோதித்து, எங்கள் இரட்சகராகிய உம்மை மெய்யாய் அறிந்து, 'இந்தப் பரிசுத்த இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கும்படிக்கு, தேவரீர் எங்களைப் பிரகாசிக்கவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.' தேவரீர் உமது பிதாவோடு பரிசுத்த ஆவியின் ஒருமைத்தனத்திலே அனாதியாய் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறீர், சுவாமி.

சபை: ஆமேன்.

---



கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை.

1.

சர்வவல்லபமுங் கிருபையுமுள்ள பராபரனே, இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிசாசின் வல்லமையிலிருந்து மீண்டிரட்சிக்கப்பட்டு, உமது இராச்சியத்தில் பிழைக்கும்படி, தேவரீர் உமது நேசகுமாரனின் மரணத்தினாலே பாவம் சாபம் மரணத்தையும் நிர்மூலமாக்கி, அவருடைய உயிர்த்தெழுதலினாலே நித்திய சீவனையும் அழியாமையையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். கர்த்தாவே, நாங்கள் இந்த நற்செய்தியை முழுமனதினாலே நம்பி, விசுவாசித்து, தேவபக்தியாய் எப்போதும் உம்மைத் துதித்து, பரிசுத்த நடக்கையிலே உறுதியாய் நின்று, நித்திய சீவனை அடையும்படியாக, உம்முடைய நேச குமாரனும் எங்கள் ஒன்றான இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தங் கிருபைசெய்ய வேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

கர்த்தாவாகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது ஒன்றான குமாரனை எங்கள் பாவங்களின் நிமித்தம் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, நாங்கள் நீதிமான்களாவதற்கு அவரை உயிரோடெழுப்பினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். தேவரீர் உமது பரிசுத்த ஆவியை எங்களுக்கு அளித்து, அவரைக்கொண்டு எங்களை ஆண்டுநடத்தி, மெய்யானவிசுவாசத்திலே காப்பாற்றி, சகல பாவங்களுக்கும் விலக்கிக்காத்து, நித்திய சீவனுக்கென்று உயிரோடெழுப்ப வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

சர்வத்திற்கும்வல்ல பராபரனே, சமாதானத்தையும் சகல ஆசீர்வாதத்தையும் அளிக்கிற பிதாவே, தேவரீர் நித்திய உடன்படிக்கையின் கர்த்தரும் ஆடுகளுடைய பெரிய மேய்ப்பருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். தேவரீர் எங்களைத் தயவாய் நோக்கிப்பார்த்து, இயேசு கிறிஸ்து சகல பாவிகளுக்காகவுஞ் சம்பாதித்த இரட்சிப்பில் நாங்களும் பங்குபெற்று அனுபவிப்பதற்கும், உமக்கேற்ற சகல நற்கிரியைகளிலுங் குறைவற்றவர்களாவதற்கும், தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

4.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, தேவரீர் உம்முடைய ஒன்றான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் லோகத்தையும் அதின் பிரபுவாகிய பிசாசையுஞ் செயித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்களும் உமது வல்லமையின் பெலத்தினால் லோகத்தைச் செயித்து, எங்களிடத்தில் எப்போதும் உம்முடைய கிருபையின் சாட்சியை அடைந்துகொள்ளும்படிக்கு, தேவரீர் எங்களுக்குள்ளே உம்முடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தையும் அதைக்கொண்டு நவமான பிறப்பையும் உண்டுபண்ண வேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---





கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

1.

சர்வத்திற்கும்வல்ல கர்த்தராகிய பராபரனே, உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் இரட்சகர் பரத்துக்கு ஏறினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் பரத்துக்கு ஏறின அவரை விசுவாசித்து, அவரால் பெற்றுக்கொண்ட ஆவியின்படி நடந்து, பரலோகத்திலுள்ள அவரோடு சஞ்சரிக்கும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

கிருபையுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது ஒன்றான குமாரனை, எல்லாவற்றையும் நிரப்பும்படி, எல்லாவானங்களின் மேலும் உயர்த்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இப்பூமியில் சஞ்சரிக்கிற நாங்கள் பரமண்டலத்திலுள்ள எங்கள் பிறந்தகத்தின்பேரில் ஆசையாயிருக்க, தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

பரிசுத்த ஆவியின் பண்டிகை.

1.

கர்த்தராகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் பெந்தெகொஸ்தே நாளில் உமது விசுவாசிகளின் இருதயங்களைப் பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பித்துப் போதித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் உமது ஆவியினால் மெய்ஞ்ஞானத்தை அடைந்து, எப்போதும் அவருடைய தேற்றரவினாலும் வல்லமையினாலுஞ் சந்தோஷப்படும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று

உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வத்திற்கும்வல்ல அநாதி பராபரனே, தேவரீர் கிறிஸ்தமான முழுத் திருச் சபையையும் உமது பரிசுத்த ஆவியினால் கூட்டிச் சேர்த்து, பரிசுத்தமாக்கி, ஆண்டுகொள்ளுகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். உமது திருச்சபை தன் சகல அவயவங்களோடும் உமது கிருபையினால் சுத்த விசுவாசத்திலே உமக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, தேவரீர் பரிசுத்த ஆவியைக்கொண்டு அதற்கு வரங்களை அளிக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

3.

கர்த்தாவாகிய பராபரனே, தேவரீர் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து உண்டுபண்ணின இரட்சிப்பை எங்களுக்கு மிகுந்த தெளிவாய்ப் போதித்து வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இப்பூமியிலுள்ள உமது பிள்ளைகள் யாவரும் தங்கள் ஒன்றான இரட்சகராகிய அவரை ஏகமனதாய் விசுவாசிப்பதற்கும், புறச்சாதியார் யாவரும் அவரைத் தங்கள் இரட்சகராக அறிந்து, ஏற்றுக்கொண்டு, தங்கள் தங்கள் பாஷைகளில் உமது மகத்துவங்களைத் தெரிவிப்பதற்கும், தேவரீர் உமது பரிசுத்த ஆவியைச் சகல மாமிசத்தின்மேலும் ஊற்றவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

185



## திரித்துவத்தின் பண்டிகை

1.

பரம பிதாவாகிய பராபரனே, நாங்கள் உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே பரிசுத்த ஆவியைக்கொண்டு உம்மைக் கேட்கும் யாவையும் எங்களுக்கு அருளிச்செய்வோமென்று வார்த்தைப்பாடு கொடுத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் பிதாவாகிய தேவரீரையும் உமது குமாரனையும் பரிசுத்த ஆவியையும் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிப்பதற்காக, உமது குமாரனின் கிருபையும் பிதாவாகிய உமது சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கமும் எப்போதும் எங்களோடிருக்கும்படி, அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வத்திற்கும்வல்ல பரிசுத்த பராபரனே, பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியுமாய் வணங்கப்படுகிற ஆண்டவரே, தேவரீர் எங்களை உண்டாக்கிக் காப்பாற்றி வருகிற தயவையும், எங்களை மீட்டிரட்சித்த இரக்கத்தையும், எங்களைப் பரிசுத்தமாக்குகிற கிருபையையும், சத்திய வேதத்தைக்கொண்டு எங்களுக்கு வெளிப்படுத்தினதற்காக உம்மை வணங்கி ஸ்தோத்திரிக்கிறோம். தேவரீர் எங்களைக் கிருபையாய்க் கண்ணோக்கி, எங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து, உமது திருச் சித்தத்தையும் மகிமையையும் எங்களுக்கு மென்மேலும் விளங்கப்பண்ணி, உமது வசனத்திலுள்ள நியாயங்களை நாங்கள் சந்தோஷத்தோடு கேட்கிறதற்கும், கேட்டவைகளின்படி செய்கிறதற்கும் நடக்கிறதற்கும், இப்படி எங்கள் கிறிஸ்துமார்க்கத்தில் மென்மேலுந் தேறி உத்தமராவதற்கும், எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். திரியேக பராபரனாகிய பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இப்போதும் எப்போதும் என்றென்றைக்கும் கனமும் மகிமையுந் துதியும் உண்டாவதாக.

சபை: ஆமேன்

---

## மிசியோன் இஸ்தோத்திரப் பண்டிகை.

1.

கர்த்தராகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது ஒன்றான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்தத் தேசத்திலுள்ள சாதிகளுக்கும் விசேஷமாய் எங்களுக்கும் வெளிப்படுத்தி, நாங்கள் உம்மோடு ஒப்பரவாகும்படிக்கு, உமது சுத்த சுவிசேஷத்தின் தானாதிபதிகளை இத்தேசத்துக்கு அனுப்பினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் சகல சாதிகளுக்காகவுங் கிருபையாய் உதிக்கப்பண்ணின இரட்சிப்பின் வெளிச்சத்தினால் நாங்களும் இத்தேசத்தார் யாவரும் எப்போதும் பிரகாசிப்பிக்கப்பட்டு, கடைசியிலே உமது திவ்விய மகத்துவத்தைத் தரிசிக்கும்படி, தேவரீர் கிருபைசெய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின்முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

இரக்கமுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் புறச்சாதியாராகிய எங்களையும் உம்முடைய நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அறியவும் நித்திய சீவனைச் சுதந்தரிக்கவும் வரவழைத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் மெய்விசுவாசத்தில் அதிகமதிகமாய் வளர்ந்து, அதிலே முடிவுபரியந்தம் நிலைநின்று, உமக்குமுன்பாகப் பரிசுத்தத்திலே நடந்து, கடைசியாய் நித்திய சுதந்தரத்தை அடைந்து அனுபவிக்கும்படி, தேவரீர் எங்களைப் பரிசுத்த ஆவியைக்கொண்டு ஆண்டு நடத்த வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---





## திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள்.

1.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது தாசனாகிய லுத்தரைக்கொண்டு சீர்திருத்தின திருச்சபையில் நாங்களும் உமது இலவசமான கிருபையினால் சேர்க்கப்பட்டு, உமது பரிசுத்த சுவிசேஷத்தைக் கேட்டு, உமது பிதாவடைவான சித்தத்தை அதினால் தெளிவாய் அறிந்து, உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எங்கள் விசுவாசக் கண்களால் காணக் கூடியவர்களாயிருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். எங்கள் இரட்சிப்புக்காக உதித்த உமது வசனமாகிய வெளிச்சம் எங்களிடத்தில் அவிந்துபோகாமல், மென்மேலும் பிரகாசிக்கவும், எங்களுக்கு எவ்வித துன்பங்கள் நேரிட்டாலும், நாங்கள் உமது சத்தியத்தை விட்டுவிடாமல், அதில் முடிவுபரியந்தம் உறுதியாய் நின்று, நித்திய இரட்சிப்பை அடையவும், எங்களுக்குத் துணைசெய்தருள வேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வவல்லமையுள்ள அநாதி பராபரனே, தேவரீர் உமது எதிராளிகள் பூமியெங்கும் அதிகரிக்கிறதையும், உமது ஊழியக்காரருக்கு விரோதமான அவர்கள் பயமுறுத்தலையும் நோக்கிப்பார்த்து, உமது ஊழியர் அவர்களுக்கு அஞ்சாமல், தைரியத்தோடு உமது வசனத்தைப் பிரசங்கிக்கவும், அநேகர் தேவரீருக்குப் பயப்பட்டு, உம்மைச் செம்மையாய் அறிந்து, உமது திரு நாமத்தைப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கவும், அனுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

## அறுப்புக்காகச் செய்யும் இஸ்தோத்திர செபம்

1.

சர்வவல்லமையுள்ள பராபரனே, இரக்கமுள்ள பிதாவே, தேவரீர் எங்களுக்குச் சரீரத்தையும் ஆத்துமத்தையும் அளித்து இற்றைவரைக்குங் காப்பாற்றி ஆசீர்வதித்து வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் எங்களுக்குக் கொடுத்துவருகிற சகல சலுகைகளுக்காகவும் நாங்கள் சிநேகத்தோடும் நன்றியறிதலோடும் உமக்கு ஊழியஞ் செய்து, நீர் இனிமேலும் எங்களைப் பராமரித்து, சகல நன்மைகளையுங் கொடுப்பீரென்று உறுதியாய் நம்பும்படிக்கு, உம்முடைய திவ்விய ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தந்தருளவேண்டுமென்று உம்முடைய நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

கர்த்தாவாகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் இந்த வருஷத்தை உமது நன்மைகளால் முடிசூட்டி, நிலத்தின் பலனைச் சேதமில்லாமல் அறுத்துச் சேர்க்க, எங்களுக்குக் கிருபை செய்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த இந்த உபகாரங்களினால் நாங்கள் உமது பிதாவுடைய தயவையுங் கிருபாகடாட்சத்தையும் அறிந்து, உம்மை எப்போதும் இஸ்தோத்திரிக்கும்படி, அவைகளைத் தேவபத்தியோடும் சந்தான சௌக்கியத்தோடும் அனுபவிக்க, எங்களுக்குக் கிருபை செய்தருளவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---



## தவசு நாள்.

1.

இரக்கமுள்ள பரம பிதாவே, தேவரீர் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் எங்கள் பாவங்களின் நிமித்தம் அனுபவிக்கவேண்டிய தண்டனையைத் தேவரீர் உம்முடைய இரக்கத்தினாலே எங்களை விட்டு விலக்கி, நாங்கள் பாவ வழியை விட்டுத் திரும்பும்படி, எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, மன இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மகா கிருபையுமுள்ள பரம பிதாவே, அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னிக்கிற தேவரீருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதுகளை நடப்பிக்கிற ஏழைப்பாவிகளாகிய எங்கள் மேல் இரங்கி, உமது குமாரன் பட்டபாடுகள் மரணத்தின் நிமித்தம் எங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்கு மன்னித்தருளவேண்டுமென்று உமது ஒன்றான நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

தேவவசன விஸ்தரிப்பு.

1.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, கிருபையுந் தயவுமுள்ள பிதாவே, தேவரீர் எங்களுக்கு ஈடேற்றமுண்டாக உம்முடைய வசனத்தைக் கட்டளையிட்டு, அதிலே உம்முடைய திருச் சித்தத்தையுங் கரையேறும் வழியையும் எங்களுக்குத் தெளிவாய் வெளிப்படுத்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைக் கிருபாகடாட்சமாய் நோக்கிப்பார்த்து, உம்முடைய திருவசனத்திலே அடங்கிய உச்சிதமான போதகங்களை எங்களுக்கு நன்றாய்த் தெரியப்பண்ணி, நாங்கள் உம்முடைய வசனத்தைப் பரிசுத்தமாக எண்ணிக்கொண்டு, அதைக் கவனமாய்க் கேட்டுப் படித்து, அதற்கேற்றதாகச் செய்யவும் நடக்கவும் எங்களுக்கு உம்முடைய ஆவியின் வரங்களைத் தந்தருளவேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

கிருபையுள்ள பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது ஊழியரைக்கொண்டு உமது திருவசனமாகிய நல்ல விதையை எங்கள் இருதயங்களில் விதைக்கச் சித்தமாயிருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் உமது திருவசனத்தைக் கவனமாய்க் கேட்டு, அதை நன்றாஞ் சற்குணமுமான இருதயத்திலே காத்து, பொறுமையோடு கனி கொடுக்கும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன.



3.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது பரிசுத்த வசனத்தைக்கொண்டு உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தி, எங்களை உமது இராச்சியத்துக்கும் நித்திய மோட்ச பாக்கியத்துக்கும் வரவழைத்ததற்காக உம்மை இஸ்தோத்திரிக்கிறோம். தேவரீர் எங்களை உமது திருவசனத்திலே திடப்படுத்திக் காப்பாற்றி, எங்களுக்கு நேரிடுஞ் சகல இக்கட்டிலும் அதினால் எங்களைத் தேறுதல்படுத்தி, எங்கள் பாவங்களையெல்லாங் கிருபையாய் மன்னித்து, உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களைப் பரிசுத்தமாக்கி, நாங்கள் உமது கிருபைக்காகவும் இரக்கத்துக்காகவும் உம்மை என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கும்படி, கடைசியிலே நித்திய மோட்சபாக்கியத்தை எங்களுக்கு அளிக்கவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

4.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் எங்களைப் புத்தியுள்ள மனுஷராகச் சிருஷ்டித்து, உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து குற்றமில்லாமல் சிந்தின திரு இரத்தத்தினால் எங்களை மீட்டிரட்சித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரம்செலுத்துகிறோம். நாங்கள் உமது திருவசனத்தைச் செம்மையாய்ப் படித்து, கிறிஸ்தவர்களுக்கேற்ற நன்நடக்கையாய் நடந்து, பாக்கியமான மரணம் அடையும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

5.

கர்த்தாவாகிய பராபரனே, எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் பிதாவே, தேவரீர் உம்முடைய அளவில்லாத இரக்கத்தின்படி உமது வசனத்தை எங்களுக்குக் கொடுத்து, அதைக் கொண்டு எங்களில் உமக்கு ஒரு சபையைக் கூட்டிச் சேர்த்து வளர்த்து வருகிற உம்முடைய பிதாவடைவான தயவுக்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் உம்முடைய திவ்விய வசனத்தை நன்றியறிந்த மனதோடே ஏற்றுக்கொண்டு, எங்கள் நடக்கையை அதற்கு ஒத்ததாக்கி, விசுவாசத்திலும் பொறுதி நம்பிக்கையிலுஞ் சிநேகத்திலும் மென்மேலும் வளர்ந்து, கடைசியில் நித்திய மோட்சத்தை அடைய, தேவரீர் எங்களுக்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுக்கவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் இப்போது கிறிஸ்து மார்க்கப் போதகங்களின் ஆதிநியாயங்களை எங்களுக்குப் போதிவித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் அவைகளின்படி விசுவாசமும் தெய்வபத்தியுமுள்ளவர்களாய் நடந்து, எந்நேரமும் ஞான சந்தோஷமுள்ளவர்களாகி, கடைசியிலே எங்கள் விசுவாசத்தின் முடிவாகிய நித்திய இரட்சிப்பை அடையும்படிக்கு, நாங்கள் இப்போது கேட்ட உமது வசனத்தைத் தேவரீர் எங்கள் இருதயங்களிலே உறுதிப்படுத்தி, அந்த முடிவுபரியந்தம் எங்களிடத்தில் கலப்பின்றிக் காக்கவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின்மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---



### திருச்சபைக்காகச் செய்யுஞ் செபம்.

அன்புள்ள பரமபிதாவாகிய பராபரனே, தேவரீர் எங்களை முடிவுபரியந்தம் உமது கிருபையிலே நிலைத்திருக்கச் செய்து, எங்கள் பாவங்களை மன்னித்து, எங்களை எல்லாச் சோதனைக்கும் விலக்கிக் காப்பாற்றவும், உமது வசனத்தை விரோதிக்கும் எதிரிகள் யாவரையுந் தடுத்து, உமது திருச்சபைக்கு எல்லா இடங்களிலுஞ் சமாதானத்தை அளிக்கவும் வேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

### மெய் விசுவாசத்துக்காகச் செய்யுஞ் செபம்.

சர்வத்திறத்தும்வல்ல கர்த்தாவாகிய பராபரனே, பரம பிதாவே, நாங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் உறுதியான விசுவாசத்தையும், எங்கள் துன்மனச்சாட்சிக்குஞ் சகல பயங்கரங்களுக்கும் எதிரிடையாக உமது இரத்தத்தை நம்புந் திடநம்பிக்கையையும், உம்மையும் எல்லா மனிதரையுஞ் சிநேகிக்கும் அனலான சிநேகத்தையும், தேவரீர் எங்களுக்கு அளிக்கவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின்மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

## சமாதானத்துக்காகச் செய்யுஞ் செபங்கள்.

1.

கிருபையுள்ள கர்த்தாவாகிய பராபரனே, பரிசுத்த திடாரிக்கத்தையும் நல்ல யோசனைகளையும் சன்மார்க்கக் கிரியைகளையும் எங்களில் உண்டாக்குகிற பரம பிதாவே, எங்கள் இருதயங்கள் உம்மை அண்டிக்கொண்டு, உம்முடைய கற்பனைகளை உறுதியாய்க் கைக்கொள்ளும்படிக்கும், நாங்கள் உம்முடைய பாதுகாத்தலினால் சத்துருக்களுக்கு நீங்கலாகி, எங்கள் காலத்தை அமைதலாய்ப் பின்னிடும்படிக்கும், தேவரீர் லோகம் தரக்கூடாத சமாதானத்தை எங்களுக்குத் தந்தருளவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

பரம பிதாவே, சமாதானத்தின் பராபரனே, தேவரீர் உம்மைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகித்து, உம்மை அறிந்திருக்கிறவர்களுக்கு நித்திய சீவனையும் உமக்கு ஊழியஞ் செய்கிறவர்களுக்கு நித்திய ஆளுகையையும் அருளப் பிரியசித்தமாயிருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் உமது ஏழைப்பிள்ளைகளாகிய அடியாரை எங்கள் சத்துருக்களின் கைக்கு விலக்கிக்காத்து, அவர்கள் எங்களுக்கு விரோதமாகச் செய்யுஞ் போருக்கு நாங்கள் அஞ்சாமல், உமது அடைக்கலத்தில் பத்திரமாய்த் தங்குவதற்கு, தேவர் எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---



## ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் அடுத்த ஆசீர்வாதங்களுக்காகச் செய்யுஞ் செபங்கள்.

1.

அன்புள்ள பிதாவாகிய பராபரனே, தேவரீர் உம்மை நம்பியிருக்கிற யாவரையும் ஆதரித்துக்காப்பாற்றி வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் உம்மையல்லாமல் பரிசுத்தமும் உமக்குப் பொருந்தியதுமான எதையுஞ் செய்யக்கூடாதவர்களாயிருக்கிறதினால், தேவரீர் உமது இரக்கத்தை எங்களிடத்தில் அதிகரிக்கச் செய்து, எங்களை உமது பரிசுத்த ஆவியால் உமக்குப் பிரியமான வழியில் நடத்தி, நாங்கள் உமது நித்திய நன்மைகளை இழந்துபோகாத விதமாய் அநித்திய நன்மைகளை உமது சித்தப்படி அனுபவிப்பதற்கு, எங்களுக்குத் துணைசெய்யவேண்டுமென்று உமது நேசகுமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைவேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வத்திற்கும்வல்ல பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமதுவார்த்தையால் சகல வஸ்துக்களையுஞ் சிருஷ்டித்துப் பராமரித்துக்காப்பாற்றிவருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் உமது நித்திய வார்த்தையாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை எங்களுக்கு வெளிப்படுத்தி, அவருடைய திருவசனத்தை எங்கள் இருதயங்களில் விதைத்து, அதை ஆசீர்வதித்து வருகிறதினால் நாங்கள் பூமியின்பலனையும் இச்சீவனுக்குவேண்டிய சகல நன்மைகளையும் உம்மிடத்திலிருந்து நன்றியறிதலோடு பெற்றுக்கொண்டு, அவைகளை உமக்கு மகிமையாகவும் பிறருக்கு உதவியாகவும் கையாடும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

## கள்ளப்போதகத்தால் மோசம்போனவர்களுக்காகச் செய்யுஞ் செபம்.

சர்வத்திற்கும் வல்ல நித்திய பராபரனே, ஒருவனாகிலுங் கெட்டுப்போகாதிருக்க விரும்புகிற பரம பிதாவே, தேவரீர் பிசாசின் வஞ்சனையினாலும் தப்பறையான் போதகங்களினாலும் மோசம்போனவர்கள் மேல் இரங்கி, அவர்கள் தங்கள் மோசமான வழிகளை விட்டுவிட்டு, சத்தியத்துக்குத் திரும்பிவரும்படி, அவர்களை உம்முடைய வசனத்தின் வெளிச்சத்தினால் பிரகாசிப்பித்து, அவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கவும், கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிற எல்லாரும் இந்த மகா மேன்மையுள்ள பெயருக்கு அடாத யாவையும் விலகி, அதற்குப் பொருந்திய எல்லாவற்றையும் அறிந்து செய்யும்படி, அவர்களுக்கு ஞானத்தையும் பெலத்தையும் அளிக்கவும் வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

## சத்துருக்களுக்காகச் செய்யுஞ் செபம்.

பரம பிதாவே, சிநேகத்தையும் சமாதானத்தையும் விரும்புகிற பராபரனே, தேவரீர் எங்கள் சத்துருக்கள் எங்களுக்கு விரோதமாகச் செய்த எல்லாத்தையும் அவர்களுக்குக் கிருபையாய் மன்னித்து, எங்களை அவர்களுடைய மோசத்துக்கும் பலவந்தத்துக்கும் விலக்கமாய்க் காத்து, அவர்களையுஞ் சமாதானப்பிரியராக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---



## உபத்திரவ காலத்திலே பண்ணுஞ் செபங்கள்.

1.

கிருபையுள்ள பராபரனே, இரக்கமுள்ள பரம பிதாவே, தேவரீர் எங்களுக்கு நன்மையுண்டாக உமது திருச்சித்தத்தின்படி இம்மையில் பலவித உபத்திரவங்களை அனுபவிக்கிற எங்களுக்கு மறுமையில் நித்திய ஆறுதலையுஞ் சந்தோஷத்தையுங் கொடுப்போமென்று வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் உமது பிதாவுடைவான சித்தத்தை அறிந்து, எந்தத் துன்பத்திலும் நம்பிக்கையற்றுப் போகாமல், உமது சகாயத்துக்கு எதிர்ப்பார்த்து நித்திய மோட்சப்பாக்கியத்தை எப்போதும் நினைப்பதினால் எங்களை ஆற்றித் தேற்றிக்கொள்ளும்படி, தேவரீர் உமது பரிசுத்த ஆவியை எங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

சர்வத்திற்கும் வல்ல நித்திய பராபரனே, துக்கப்படுகிறவர்களின் ஆறுதலும் பெலவீனரின் பெலனுமாயிருக்கிற பரம பிதாவே, பலவித உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் அகப்பட்டிருக்கிற யாவரும் உம்மை நோக்கிப் பெருமூச்சுவிட்டுக் கூப்பிடும்போதெல்லாம் தேவரீர் அவர்கள் செபத்தைக் கேட்டு, ஒவ்வொருவனும் தன் இக்கட்டுக்காலத்தில் உமது சகாயத்தைக் கண்டனுபவிக்கும்படி, கிருபைசெய்ய வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

### தொத்து வியாதிக் காலத்திலே செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையும் இரக்கமுமுள்ள நித்தியபராபரனே, பரம பிதாவே, இப்பூமியில் சஞ்சரிக்கும் உமது ஏழைப் பிள்ளைகளாகிய அடியார் உமக்கு விரோதமாகச் செய்துவரும் பாவங்களினால் எங்களுக்கு நேரிட்டிருக்கிற இந்தத் தொத்து வியாதிக்கும் வேறு தண்டனைகளுக்கும் பாத்திரராயிருக்கிறோமென்று தாழ்மையாய் அறிக்கையிடுகிறோம். தேவரீர் உமது அளவற்ற இரக்கத்தை எங்களுக்குப் பாராட்டி, எங்களுக்கு உண்மையான குணப்படுதலை அளித்து, எங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து, நியாயமாய் எங்கள்மேல் வந்திருக்கிற இந்தக் கோரா இன்னலை எங்களை விட்டகற்றவும், இன்னமும் எங்களை தண்டிக்க உமக்குச் சித்தமானால், நாங்கள் உமது பிதாவடைவான சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, உமது தண்டனையைப் பொறுமையாய்ச் சகிக்கும்படியாக, எங்களுக்குக் கிருபைசெய்யவும் வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

### வறட்சிகாலத்தில் செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய பராபரனே, எல்லாத்தையும் ஆண்டுகொண்டு பராமரித்துக்காப்பாற்றி வருகிற அன்புள்ள பரம பிதாவே, பூமி உம்முடைய கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் எங்கள் சீவனுக்கு வேண்டிய கனிகளைக் கொடுக்கும்படியாகவும், நாங்கள் உமது சகல உபகாரங்களினாலும் உம்மை அறிந்து, துதிக்கும்படியாகவும், தேவரீர் உம்முடைய பிள்ளைகளாகிய எங்கள்கூப்பிடுதலைக் கிருபையாய்க் கேட்டு, இப்போது எங்களுக்குண்டாயிருக்கிற இக்கட்டை நோக்கிப்பார்த்து, பரிபூரண மழையையுஞ் செழித்த காலத்தையுந் தந்தருள வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---



### பஞ்சகாலத்தில் செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, உண்டாக்கினதெல்லாத்தையும் பராமரித்து, உம்முடைய பிள்ளைகளின் கூப்பிடுதலைக் கேட்கிற இரக்கமுள்ள பிதாவே, எங்கள் பாவங்களின் நிமித்தம் இந்தப் பஞ்ச உபத்திரவத்தினால் தண்டிக்கப்படுகிற எங்களுக்குத் தேவரீர் இரங்கி, இந்தத் தண்டனையை எங்களைவிட்டகற்றி, காலத்துக்கேற்ற சகாயங் கிடைக்கப்பண்ணி, உம்முடைய பரம ஆசீர்வாதத்தினால் பூமி தன் பலனைத் தரவும், நாங்கள் அதை உமது நாமத்தின் மகிமைக்காகவும் ஏழைகளுடைய உதவிக்காகவும் எங்களுடைய ஆறுதலுக்காகவும் அனுபவிக்கவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

### இராசாக்களுக்காகவும் உலக அதிகாரிகளுக்காகவுஞ் செய்யுஞ் செபம்.

சர்வத்திற்கும் வல்ல பராபரனே, மனிதரின் எல்லா இராச்சியங்களையும் ஆண்டு அதிகாரத்தையும் செங்கோலையும் ஏற்படுத்தின இராசாதி இராசாவே, தேவரீர் உலக அதிகாரிகளையும் அவர்களுடைய ஒழுங்கையும் கட்டளையிட்டு, ஒருவன் வெய்யிலுக்குத் தப்ப மரத்தின் நிழலில் தங்குவதுபோல், நாங்கள் அவர்கள் செங்கோலின் கீழ் அமைதலாயிருந்து, உமது திருவசனத்தைக் கேட்டு, அதின்படி செய்து நடக்க, எங்களுக்குக் கிருபைசெய்து வருகிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். நாங்கள் எல்லாத் தெய்வபத்தியிலும் இலக்கணத்திலும் அமளியற்ற அமர்ந்த சீவன்பண்ணும்படிக்கு, தேவரீர் எங்கள் அதிகாரிகளை ஆண்டு நடத்தி ஆசீர்வதித்துக் காப்பாற்றவும், எங்களுக்குச் சமாதானத்தை அளிக்கவும், உம்முடைய திருவசனமாகிய வெளிச்சத்தை எங்களிடத்தில் காக்கவும் வேண்டுமென்று உம்முடைய நேச குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

கிறிஸ்தமான சமுசாரிகளுக்காகச் செய்யுஞ் செபம்.

சர்வத்துக்கும் வல்ல பராபரனே, இரக்கமுள்ள பிதாவே, எங்கள் சபையிலுள்ள சமுசாரிகள்யாவரும் உம்முடைய சர்வவல்லமையையும் ஞானத்தையும் கிருபையையும் இரக்கத்தையும் அறிந்து, தங்கள் பிள்ளைகளையும் பணிவிடைக்காரரையும் அதுகளை அறியச் செய்து, இவர்களோடு அதுகளினால் சந்தோஷத்தையும் ஆறுதலையும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டு, கடைசியில் மெய்விசுவாசிகளாக நித்திய சீவனை அடையும்படிக்கு, தேவரீர் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று உமது நேசகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

---

கிறிஸ்தமான பிள்ளைகளுக்காகச் செய்யுஞ் செபம்.

சர்வத்துக்கும் வல்ல நித்திய பராபரனே, தயவுள்ள பிதாவே, சிறு பிள்ளைகளில் ஒருவரும் கெட்டுப்போகாதிருக்க விரும்பி, கெட்டுப்போனவர்களை இரட்சிக்க உம்முடைய நேச குமாரனை அனுப்பி, அவரால் பிள்ளைகளை உம்மண்டைக்குக் கொண்டுவரவேண்டும், ஏனெனில் உம்முடைய இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறதென்று கற்பித்தபடியால், தேவரீர் எங்கள் பிள்ளைகள் உம்முடைய வசனத்திலே சுத்தமாய் வளர்ந்து தேறும்படி, அவர்களைப் பரிசுத்த ஆவியினாலே ஆசீர்வதித்து, ஆண்டு நடத்தி, உம்முடைய பரிசுத்த தூதரைக்கொண்டு அவர்களைச் சகல மோசங்களுக்குந் தற்காத்திரட்சிக்கவேண்டுமென்று உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.



# IV.

# பண்டிகை நாட்களுக்குரிய செபங்கள்.

---

கிறிஸ்து வருகையின் நாயிறு.

1.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, சர்வத்துக்கும்வல்ல பராபரனுடைய குமாரனே, தேவரீர் உமது பரம பிதாவின் நாமத்தினாலே இராசாவாகவும், நீதிபரனாகவும், சகாயராகவும், உம்முடைய சனத்தின் பாவத்தை நீக்கி இரட்சிக்கும் ஒன்றான இரட்சகராகவும் இந்த லோகத்திலே வந்தீர். உமக்குச் சொந்தமானதிலே வந்தவராகிய உம்மை உமக்குச் சொந்தமானவர்கள் ஏற்றுக்கொள்ளாதபடியால், ஏழைப் புறச்சாதியாராகிய எங்களண்டைக்குத் திரும்பி, இன்னம் தினந்தோறும் உம்முடைய வசனத்தினாலும் ஞானதிரவியங்களினாலும் எங்களிடம் வருகிறவராயிருக்கிறீர். அன்புள்ள கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தாவீதின் குமாரனே, சகல சாதிகளாலும் இச்சிக்கப்பட்டவரே, கர்த்தருடைய நாமத்திலே வருகிற தேவரீர் இஸ்தோத்திரிக்கப்பட்டவராயிருக்கிறீர். உமக்குள்ளே எங்கள் இருதயம் மகிழ்ந்து, எங்களுக்குள்ளதெல்லாம் உம்முடைய இரட்சிப்பிலே களிகூருகிறது; ஏனெனில் நீரே வருகிறவர், உமக்கே நாங்கள் காத்திருந்தோம், வேறொருவருக்கும் நாங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. ஆகையினாலே தேவரீர் எங்களிடத்திலே தரித்திருந்து, நீர் உம்முடைய தெய்வாலயத்துக்கு வந்ததுபோல், தினந்தோறும் நவமாய் எங்கள் இருதயத்துக்குள்ளே வாரும். தேவரீர் எருசலேமுக்குட் பிரவேசிக்கும்போது, உமது சீஷப்பிள்ளைகள் உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தி, உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தினதுபோல் நாங்களும் உம்மை மகிமைப்படுத்தித் துதிக்கும்படி, உம்முடைய ஆவியினால் எங்களை எவி எழுப்பி, எங்களுக்குள் வாசம்பண்ணும். உண்மையான மேய்ப்பரே, யோவானும் அவ்நானர்க்கனும் உம்முடைய சீஷப்பிள்ளைகளும் மரணபரியந்தம் உம்மை...

தையினாலுங் கிரியையினாலும் உறுதியாய் அறிக்கையிட்டதுபோல நாங்களும் மரணம் மட்டும் உமக்கு உண்மையாயிருக்கக் கிருபைசெய்தருளும். தேவரீர் கடைசியாய் லோகத்தை நியாயந்தீர்த்து, எங்களை எல்லாத்தீமையிலுமிருந்து இரட்சிக்கும்படி திரும்ப வருவீரென்று நாங்கள் நம்புகிறபடியால், நாங்கள் இந்த எங்கள் இரட்சிப்புக்குச் சந்தோஷமாய்க் காத்திருந்து, சம்பவிக்கப்போகிறதெல்லாத்துக்கும் நாங்கள் தப்புவித்துக்கொண்டு, மனுஷனுடைய குமாரனாகிய உமக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு நாங்கள் எல்லாக்காலத்திலும் விழித்திருந்து செபம்பண்ண, உமது சொல்லிமுடியாத சிநேகத்தின் நிமித்தம் எங்களுக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி. ஆமேன்.

2.

நித்தியபராபரனே, பரம பிதாவே, நாங்கள் இன்றைக்குத் திருச்சபையின் புது வருஷத்தைச் சமாதானத்தோடு தொடங்க, தேவரீர் எங்களுக்குக் கிருபைசெய்ததற்காக உமது திருநாமத்தைப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கிறோம். உமது திருவசனமாகிய விளக்கு எங்களிடத்திலிருந்து எடுக்கப்படாமல், இற்றைவரைக்கும் எங்களிடத்தில் காக்கப்பட்டிருக்கிறதும், உம்முடைய நேச குமாரன் உயர்ந்த விலையாய் மீட்டுக்கொண்ட உமது திருச்சபைக்கு உம்முடைய மகிமையுள்ள ஐசுவரியத்திலிருந்து திவ்விய பெலனும் சீவனும் பரிசுத்த ஞானதிரவியங்கள் வழியாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதுமே உம்முடைய சுத்த தயவாயிருக்கிறது. தேவரீர் சென்ற வருஷத்தில் உமது மகா பெரிய உண்மையின்படியேயும் இரக்கத்தின்படியேயும் உமது சுவிசேஷத்தை எல்லா அறிவோடும் ஞானத்தோடும் எங்களிடத்தில் பரிபூரணமாய் வாசம்பண்ணச் செய்து, அதின் திவ்விய பலத்தால் எங்களைக் கடிந்துகொண்டு தண்டித்து, ஆற்றித்தேற்றி, உறுதிப்படுத்தி, ஊன்றக்கட்டி வந்தீர். நாங்கள் உத்தம குணப்படுதலுக்கு ஏற்ற கனிகளை மிகவுங் கொஞ்சமாய்க் கொடுத்த குற்றத்தை இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் மன்னித்து, நாங்கள் விசுவாசத்தின் கிரியையிலும் தெய்வ [illegible]லும் நவமான கருத்தையுஞ் சுறுசுறுப்பையுங் காண்பிக்க,



இன்றைக்கும் எங்களை எழுப்பி விட்டருளும். எங்களை இனிமேலும் பரம நன்மைகளில் கிறிஸ்துவுக்குள் சகல ஞான ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்தருளும். உம்முடைய திருச்சபையைக் கிருபையாய்க் காத்து, அது விர்த்தியடைய, உமது பெலனை உன்னதத்திலிருந்து அனுப்பும். உமது வசனத்தின் ஊழியரை ஞானம் பலமென்றதுகளின் ஆவியால் அபிஷேகம்பண்ணி, அவர்கள் தைரியமாய்த் தங்கள் வாயைத் திறந்து இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்க, அவர்களுக்குத் துணைசெய்தருளும். விசுவாசித்து இரட்சிக்கப்படுகிற அநேகரை எங்கள் சபையில் அநுதினமுஞ் சேர்த்து, பாவநித்திரை செய்கிறவர்களை எழுப்பி, ஞானப்பிரகாரம் மரித்தவர்களுக்கு உயிரைக்கொடுத்தருளும். ஐசுவரியவான்களாயிருக்கிறோம், எங்களுக்கு ஒன்றுந் தேவை இல்லை என்று சொல்லுகிறவர்கள் தங்கள் தரித்திரத்தையும் நிர்வாணத்தையும் அறிந்துகொள்ளப்பண்ணி, வரப்போகிற லோகத்தின் பெலன்களை ருசிபார்த்திருந்தும், அகலவிழுந்து, இந்த லோகத்தை சிநேகிக்கிறவர்களை உம்மண்டை திருப்பியருளும். தேவரீர் குணப்படுதலையும் விசுவாசத்தையும் கிருபையாய்த் துவக்கினவர்களிடத்தில் அந்தக் கிரியையை முடியவும் நடத்தி, பலவீனரைப் பலப்படுத்தி, துக்கப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றி, போராடுகிறவர்களுக்குச் செயம் அளித்து, உண்மையுள்ளவர்களைக் காப்பாற்றி, உமது ஞானமுள்ள ஆலோசனையின்படி இந்தத் திருச்சபை வருஷம் முடியும்முன் இறந்துபோகிறவர்களைப் பாக்கியமாய் மரிக்கக் கிருபைசெய்தருளும். சமாதானத்தின் பராபரனே, எங்கள் முழு ஆவியும் ஆத்துமாவும் சரீரமும் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையில் குற்றமற்றதாயிருக்கக் காக்கப்படும்படிக்கு, எங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கியருளும். எங்களை அழைத்த தேவரீர் உண்மையுள்ளவர்; நீர் அதைச் செய்கிறவருமாயிருப்பீர். உமது திருநாமத்துக்கு மகிமை உண்டாக எங்கள் செபத்தை எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் கேட்டுக் கட்டளையிட்டருளும், சுவாமி. ஆமேன்.

## கிறிஸ்து பிறந்த பண்டிகை.

1.

உன்னதங்களிலிருக்கிற கர்த்தாவாகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது ஒன்றான நேச குமாரனைச் சீர்கெட்ட மனிதசாதியின் இரட்சகராக அனுப்பும்படி அனாதியாய்த் தீர்மானித்து, காலம் நிறைவேறுதல் வந்தபோது அவரை ஒரு கன்னியாஸ்திரியின் கர்ப்பத்தில் உற்பவித்துப் பிறக்கச்செய்து, இவரைக்கொண்டு நீசப்பாவிகளாகிய எங்களை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலும் பிசாசின் வல்லமையிலுமிருந்து இரட்சித்து, உம்முடைய பிள்ளைகளும் நித்திய சீவனின் சுதந்தரருமாக்கினதற்காக, உம்மை முழு இருதயத்தினாலும் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கிறோம். உம்முடைய நேச குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவையும், இவரைக்கொண்டு பிதாவாகிய உம்மையும் அறிகிற அறிவிலே எங்களை உமது பரிசுத்த ஆவியினால் கிருபையாய்க் காப்பாற்றி, அந்த அறிவை எங்கள் உள்ளத்தில் வர்த்திக்கச் செய்யவேண்டுமென்று உமது மிகுந்த இரக்கத்தை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். நாங்கள் உமது ஒரே பேறான குமாரனின் மனுஷ அவதாரத்தினால் ஆறுதலையுஞ் சந்தோஷத்தையும் அடைந்து, மறுபடியும் பிறந்த பிள்ளைகளுக்கேற்ற கீழ்ப்படிதலோடு உமக்கென்று பிழைத்து, உமக்கு ஊழியஞ் செய்து, மறுமையில் சகல பரிசுத்த தூதரோடும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோடும் உம்மை என்றென்றைக்கும் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கும்படி, உமது ஒன்றான நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்கு அனுக்கிரகஞ்செய்தருளும், சுவாமி. ஆமேன்.

2.

உன்னதமான பராபரனுடைய குமாரனும் சுத்த கன்னியாஸ்திரியின் குமாரனுமாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவே, பிரியமான இம்மானுவேலே, எங்கள் நிர்ப்பாக்கியமான பாவ சென்மத்துக்காகத் தேவரீர் மிகுந்த இரக்கமாய்ப் பரிதபித்து, உமது பிதாவினுடைய மகிமையின் பத்திராசனத்தைவிட்டு, நிர்ப்பந்தம் நிறைந்த இந்தப் பூமியில் இறங்கி, எங்கள் மாமிசத்தையும் இரத்தத்தையும் ஏற்றுக்கொண்டதினால் எங்களை உம்முடைய தெய்வீக குணத்துக்குப் பங்காளிகளாக்கினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். ஆ, நேசமுள்ள கர்த்தரே, தயவுள்ள இம்மானுவேலே, நீர் மாமிசத்தில் வெளிப்பட்டீரென்கிற தெய்வபத்தியின் இரகசியத்தை நாங்கள் சரியாய் அறிந்து, நீர் எங்களைச் சிநேகிக்கிற உம்முடைய பெரிய சிநேகத்தையும் உம்முடைய தாழ்மையையும் தரித்திரத்தையும் எல்லாக் காலத்திலுந் தியானித்து, உமது கிருபையுள்ள பிறப்புக்காகச் சந்தோஷப்பட்டு, அதினால் வரும் ஆறுதலையும் பெலனையும் பூரணமாய்ப் பெற்றனுபவிக்க எங்களுக்குக் கிருபைசெய்தருளும். தேவரீர் எங்கள் இருதயத்தையும் வாயையுந் திறந்து, இப்போது உமது மூலமாய் எங்களுக்கு மறுபடியும் சிநேகிதரான பரிசுத்த தேவதூதர்களோடு நாங்களும் உம்மை வணங்கி, புகழ்ந்து, இஸ்தோத்திரித்து, பிதாவுக்குப் பிரியமானவராயிருக்கிற உமக்குள் நாங்களும் பிதாவுக்குப் பிரியமுள்ளவர்களாகி, கடைசியாய் நித்திய மோட்ச பாக்கியத்தில் உம்மோடிருந்து சஞ்சரிக்க அனுக்கிரகஞ்செய்யும். இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் இஸ்தோத்திரிக்கப்பட்டவரும், அவருடைய மகிமையான நாமம் இஸ்தோத்திரிக்கப்பட்டதுமாமே. அவருடைய மகிமையால் பூமியனைத்தும் நிறையப்படுவதாக. ஆமேன்.



## வருஷமுடிவின் இராத்திரி.

சர்வத்துக்கும் வல்ல பராபரனே, பரம பிதாவே, பிதாவடைவான தயவினாலும் உண்மையினாலும் இவ்வருஷ முடிவாகிய இந்நாள் வரைக்கும் உயிரோடிருந்து, ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயும் பற்பல விதமான உபகாரங்களை உமது கையிலிருந்து பெற்று அனுபவித்ததற்காக, முழு இருதயத்தாலும் உமக்குத் துதியும் இஸ்தோத்திரமுஞ் செலுத்துகிறோம். நாங்கள் உம்முடைய தயவையுஞ் சிநேகத்தையுஞ் சரியாய் அறியாமல், உம்மு[illegible]

ரங்களை அநேகவிதமாகத் துர்வகையாய்க் கையாடினோம் என்றும், நாங்கள் எங்கள் சுபாவ பலவீனத்தால் கடந்துபோன இந்த வருஷத்திலும் நினைவுகளினாலும் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, உமது நீதியுள்ள கோபத்துக்கும் தண்டனைக்கும் பாத்திரராயிருக்கிறோம் என்றும், உத்தம மனஸ்தாபத்தோடு உமக்கு அறிக்கையிட்டு, தேவரீர் எங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையுமெல்லாங் கிருபையாய் மன்னிக்கவேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம். அன்புள்ள பிதாவாகிய பராபரனே, நாங்கள் உம்முடைய சித்தத்தின்படி புது வருஷத்தைத் துவக்கப்போகிறபடியால், தேவரீர் உமது பிதாவடைவான சிநேகத்தையும் உண்மையையும் எங்கள்பேரில் புதிதாக்கி, நாங்கள் பழைய வருஷத்தோடு பழைய பாவங்கள் துர் ஆசை இச்சைகளெல்லாத்தையும் களைந்துபோட்டு, புதிய வருஷத்தோடு புதிய சீவனைத் துவக்கி, அதிலே மெய்க் கிறிஸ்தவனுக்கேற்றபடி உமக்குப் பிரியமாய் நடந்து, குணப்பட்ட புது இருதயத்தோடு உமக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களுக்குத் தாரும். கர்த்தாவாகிய பராபரனே, நாங்கள் துவக்கப்போகிற புது வருஷத்தில் எங்களை ஆசீர்வதித்து, எங்கள் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் நேரிடுஞ் சகல தீமைகளுக்கும் எங்களை விலக்கிக் காப்பாற்றியருளும். நாங்கள் இப்பூமியில் எங்கள் சீவநாட்களைப் பாக்கியமாய் முடித்து, கடைசியில் உம்மோடும் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரோடும் என்றென்றைக்கும் பிழைக்கும்படியாக, தேவரீர் எங்கள் ஒன்றான இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உம்முடைய முகத்தை எங்கள்பேரில் பிரகாசிக்கப்பண்ணி, எங்கள்பேரில் கிருபையாயிருக்கக் கடவீர்; உம்முடைய முகத்தை எங்கள் மேல் ஏறெடுத்து, இம்மையிலும் மறுமையிலும் எங்களுக்குச் சமாதானங் கட்டளையிடுவீராக, சுவாமி. ஆமேன்.

---



## வருஷப் பிறப்பின் பண்டிகை.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் எங்கள் பரதேசசஞ்சரிப்பின் காலத்தில் உம்முடைய தயவினாலே மறுபடியும் ஒரு வருஷத்தைக் கழித்து, உம்முடைய நாமத்தினால் புது வருஷத்தைத் துவக்குகிறோம். கர்த்தராகிய பராபரனே, நாங்கள் செய்த பாவங்களினால் உமது கோபாக்கினைக்கு மாத்திரம் பாத்திரராயிருந்தும், தேவரீர் இந்நாள்வரைக்கும் பிதாவடைவான பட்சத்தினால் எங்களுக்குக் காண்பித்து வருகிற தயவு சொல்லிமுடியாததாயிருக்கிறது. தேவரீர் கடந்துபோன வருஷத்தில் உமது பரிசுத்த வசனத்தையும் ஞான திரவியங்களையும் எங்களிடத்தில் சுத்தமாய்க் காப்பாற்றி, எங்களைச் சமாதான ஆளுகையின் கீழ் பிழைக்கச்செய்து, ஆகாரத்தினாலுஞ் சந்தோஷத்தினாலும் எங்கள் இருதயங்களை நிரப்பி, எங்கள் அன்றாடக பிழைப்பை எங்களுக்குக் கால்சாயிட்டு, பலவிதத் துர்வியாதிகளுக்கும் யுத்தத்தினால் உண்டாகுந் இக்கடுதிகளுக்கும் எங்களை விலக்கமாய்க் காத்து, எங்கள் வீடு வாசல்களையும் அக்கினிச் சேதம் முதலிய மோசங்களுக்கும் நீங்கலாக்கினீர். தேவரீர் எங்களுக்குச் செய்து வந்த பிதாவடைவான உபகாரங்கள் இத்தனை என்று சொல்ல ஆரால் ஆகும். நீர் எங்கள் பலவிதமான பாவங்களின் நிமித்தம் எங்களைத் தண்டித்தும், உம்முடைய கிருபையை எங்களைவிட்டு எடுத்துக்கொள்ளாதிருந்தீர். தேவரீர் எங்களுக்குக் காண்பித்த இரக்கத்துக்காக நாங்கள் உம்மைப் புகழ்ந்து இஸ்தோத்திரித்து, எங்கள் முந்தின பாவங்களை நீர் நினையாமல், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் அதுகளை எங்களுக்கு மன்னித்தருள வேண்டுமென்று தாழ்மையாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம். நாங்கள் பழைய அசுத்தத்தோடும் அக்கிரமங்களோடும் இந்தப் புது வருஷத்துக்குட்படாமல், பழைய மனுஷனைக் களைந்துபோட்டு, உமது சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட நவமான மனுஷனைத் தரித்துக்கொள்ளும்படிக்கு, எங்களை ஆண்டு நடத்தியருளும். அன்புள்ள பிதாவே, புது வருஷத்திலே எங்களுக்குப் புதிய ஆசீர்வாதங்களை அருளிச் செய்து, நவமான இருதயங்களை எங்களுக்குக் கொடுத்து, உமது பிதாவடைவான சிநேகத்

மையையும் எங்களுக்குப் புதுப்பித்து, பரிசுத்த திடாரிக்கத்தையும் உமக்கேற்ற கிரியைகளைச் செய்வதற்கான திராணியையும் எங்களுக்குக் கட்டளையிட்டு, சகல மனவருத்தத்தையும் நாங்கள் நியாயமாய் அனுபவிக்க வேண்டிய கோபாக்கினையையும் எங்களைவிட்டு விலக்கியருளும். இவ்வருஷத்திலும் உயிரோடிருக்கும் எல்லா நாட்களிலும் நாங்கள் உம்முடைய அடைக்கலத்தில் இராவிட்டால், ஒவ்வொரு நிமிஷத்திலும் பெரிதான ஆபத்தில் விழுவோம். ஆகையால், நீர் உமது பிதாவுடைவான கரத்தினால் எப்போதும் எங்களைத் தாங்கி ஆதரியும். இரக்கமுள்ள பிதாவாகிய பராபரனே, தேவரீர் எங்கள் செபத்தைக் கேட்டு, எல்லா மனிதர் பேரிலும் இரங்கி, உமது சுத்த வசனத்தை எங்களிடத்தில் காப்பாற்றி, கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் உம்முடைய வசனத்தைப் போதிக்கிற உமது ஊழியரெல்லாரையும் பரிசுத்தமாக்கி, அவர்கள் வேலைகளை சபையாரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் ஆசீர்வதி[illegible] கள்ளப்போதகத்துக்கு எங்களை விலக்கமாய்க் காத்து, சபையையும் பள்ளிக்கூடங்களையும் ஊன்றக்கட்டியருளும். உலக இராசாக்கள் அதிகாரிகள் யாவரையும் பலப்படுத்தி, விசேஷமாய் இத்தேசத்தை ஆளுகிற இங்கிலாந்து தேசத்து இராசாத்தியின் (இராசாவின்) பேரிலும் அவர்கள் குடும்பத்தார் யாவர்பேரிலும் உமது கிருபையைப் பெரிதாக்கி, அவர்கள் நல்யோசனைகளையுஞ் செய்கைகளையும் வாய்க்கப்பண்ணும். தாய்தகப்பன்மாராயிருக்கிறவர்களை ஆசீர்வதித்து, பிள்ளைகள் வீட்டார் யாவரையும் ஆண்டு நடத்தியருளும். யுத்தம் பஞ்சம் கொள்ளைநோய் முதலிய துன்பங்களுக்கும் எங்களை விலக்கமாய்க் காத்து, பிசாசின் மூர்க்கத்தை அடக்கி, உம்முடைய பரிசுத்த தூதரை எங்களுக்குக் காவலாக வைத்தருளும். எங்களுக்குக் கால சௌக்கியத்தை அளித்து, இந்த வருஷத்தை உம்முடைய நன்மைகளால் முடிசூட்டி, எங்கள் தேசத்துக்குச் சமாதானத்தையும், எங்கள் இருதயத்துக்குச் சந்தோஷத்தையும், எங்கள் சரீரத்துக்குச் சுகத்தையும், எங்கள் சபைக்கு ஒருமையையுந் தந்தருளும். எங்கள் பிழைப்பை ஆசீர்வதித்து, எங்கள் கைகளின் கிரியைகளை வாய்க்கப்பண்ணி, உண்மையாய் வேலைசெய்கிறவர்களை ஆதரியும். இன்னம் [illegible]த்திலிருக்கிறவர்களை உம்முடைய வெளிச்சத்துக்கு வர



வழைத்து, தப்பிப்போனவர்களைச் சேர்படுத்தி, பாவிகளைத் திருப்பி, தேவபத்தியுள்ளவர்களை உறுதிப்படுத்தும். எங்கள் சத்துருக்களுக்கு நல்ல புத்தியை அளித்து, எங்களோடு ஒப்புரவாகும்படி செய்து, உம்முடையவர்களைத் துன்பப்படுத்துகிற யாவரையும் மறுத்துத்தடுத்து, விதவைகளையுந் திக்கற்றவர்களையுங் காத்திரட்சித்து, ஏழைகளை ஆதரித்து, பசிதாகமுள்ளவர்களைப் போஷித்து, துரத்துண்டவர்களைக் கூட்டிச்சேர்த்து, குற்றமில்லாமல் காவல்பண்ணப்பட்டவர்களை விடுதலையாக்கி, சிறுமைப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றி, துக்கப்படுகிறவர்களைச் சந்தோஷிப்பித்து, வியாதிஸ்தரைப்பராமரித்து, ஆதரவற்றவர்களுக்கு உதவிசெய்து, நெருக்கப்படுகிற எல்லாருக்கும் ஒத்தாசையாயிருந்து, கர்ப்பவதிகளுக்குச் சந்தோஷமான பேறைக் கட்டளையிட்டு, யாத்திரையும் பயணமும்பண்ணுகிறவர்களைக் காப்பாற்றி, மரண அவஸ்தையிலிருக்கிறவர்களுக்குத் துணையாயிருந்து, சகல மனுஷருக்கும் இரங்கியருளும். தேவரீர் இவைகள் எல்லாத்தையும் உமது ஒன்றான குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபையாய்க் கட்டளையிட்டருளும், சுவாமி. ஆமேன்.

---

## மகிமைவிளங்குதலின் பண்டிகை.

சர்வத்திற்கும்வல்ல நித்திய பராபரனே, சகல நல்ல ஈவையும் குறைவற்ற சகல நல்ல வரங்களையும் உயர இருந்து இறங்கிவரப்பண்ணுகிற வெளிச்சங்களின் பிதாவே, தேவரீர் உமது ஒன்றான குமாரனும் எங்களுக்குப் பிறந்த யூதரின் இராசாவும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவைப் பூமியிலுள்ள எல்லாச் ச[illegible]யாரையும் நித்திய ஜீவனுக்கென்று பிரகாசிப்பிக்கிற பெரிய வெளிச்சமாக ஒரு நட்சத்திரத்தைக்கொண்டு கிழக்கிலுள்ள சாஸ்திரிகளுக்கு வெளிப்படுத்தி, உமது திருவசனமாகிய விடிவெள்ளியைக்கொண்டு எங்களையும் அந்தகாரத்திலும் மரண நிழலிலுமிருந்து உமது ஆச்சரியமான வெளிச்சத்துக்குக் கிருபையாய் வரவழைத்ததற்காக உமக்கு இஸ்தோத்திரமு[illegible]

செலுத்துகிறோம். எங்களைப் பாக்கியவான்களாக்குகிற இந்த வெளிச்சத்தை எங்களிலும் எங்களிடத்திலும் எங்களுக்குள்ளும் எப்போதும் பிரகாசிக்கச்செய்து, நாங்கள் எங்களுக்காகப் பிறந்த இந்த இராசாவை அறிகிற அறிவிலே நாளுக்குநாள் அதிகரித்துத் தேறி, அவரை எங்கள் கர்த்தராக அறிக்கையிட்டு, வணங்கி, மகிமைப்படுத்தி, எங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்சென்று, வெளிச்சத்தின் பிள்ளைகளாக அவருடைய வெளிச்சத்தில் நடக்கும்படி, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே எங்களைக் கிருபையாய்ப் பிரகாசிப்பித்தருள வேண்டுமென்று உம்முடைய மிகுந்த இரக்கத்தைமுன்னிட்டு உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். நாங்கள் சாகும்போது மரணப்பள்ளத்தாக்கைப் பயமின்றிச் சந்தோஷமாய்க் கடந்து, மோட்சத்துக்குள் பிரவேசித்து, அங்கே எங்கள் நித்திய பாக்கியமாகிய இயேசு கிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசித்து, சீவனுள்ளோரின் வெளிச்சத்திலும் மகிமையிலும் என்றென்றைக்கும் அவரோடிருந்து, உமக்கு இன்பமான இஸ்தோத்திரப்பாட்டுகளைப்பாட, உமது நேச குமாரனும் எங்கள் ஆண்டவரும் இராசாவுமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

2.

மகா பரம இராசாவாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் தெரிந்துகொண்ட சனமாகிய இஸ்ரவேலுக்குச் சந்தோஷமாக மாத்திரம் வராமல், புறச்சாதிகளுக்கும் ஆறுதலாக வந்து, எங்களையும் உம்முடைய கிருபைக்கும் இராச்சியத்துக்கும் பங்காளிகளாக்கி, இதை எங்களுக்கும் வெளிப்படுத்தினதற்காக உமக்குத் தாழ்மையாய் இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இந்த உமது மகா பெரிய கிருபை இரக்கத்துக்காக உம்மைத் தகுந்தபடி துதிக்க நாங்கள் எம்மாத்திரம். நாங்கள் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பான அன்னியரும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்குப் பரதேசிகளும், நம்பிக்கையில்லாதவர்களும், இந்த லோகத்தில் பராபரனற்றவர்களுமாய் இருந்தோம். ஆனால் தேவரீர் எங்களை அழைத்து வந்து, பரிசுத்தவான்களோடு ஏக ஊராரும் பராபரனுடைய வீட்டாருமாக்கி, எங்களுக்கு நியமித்த விலை



யேறப்பெற்ற இந்தக் கிருபைக்கு அத்தாட்சியாக நீர் குழந்தையாயிருந்த காலத்தில் கிழக்குச் சாஸ்திரிகளை உம்மண்டைக்கு வரவழைத்தீர். ஆ, கர்த்தாவே, நாங்கள் உமது கிருபையை அனுபவிக்கையில் உம்மைத் தப்பாமல் கண்டுபிடிக்க, உமது வசனமே நாங்கள் பின்செல்லும் நட்சத்திரமாயிருப்பதாக. எங்கள் சொந்த எண்ணங்களினால் உமது திருவசனமாகிய வெளிச்சத்துக்கும் நட்சத்திரத்துக்கும் நாங்கள் விலகிப்போனதுண்டானால், நாங்கள் அந்தத் தப்பிதமான வழிகளிலே நடவாதபடிக்கு, தேவரீர் எங்களைக் கிருபையாய்த் திருப்பியருளும். நாங்கள் இருளான இஸ்தலத்தில் பிரகாசிக்கிற வெளிச்சமாகிய உமது வசனத்தை நன்றாய்க் கவனிக்கவும், உம்முடைய வெளிச்சத்திலே உம்மைக் கண்டறிந்து, உத்தம மனத்தாழ்மை சிநேகம் கீழ்ப்படிதலிலே உம்மை வணங்கவும், எங்களையும் எங்களுக்குச் சொந்தமானயாவையும் உமக்குப் பலியாய் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கவும், எங்கள் இருதயங்களிலே வெள்ளி உதித்துப் பொழுதுவிடியப்பண்ணியருளும். அன்புள்ள இரட்சகரே, லோகமும் அதின் தம்பிரானுமாகிய உமது சத்துருக்கள் எங்களைக் கெடுக்கத் தேடி, அதினால் உம்மையே ஒடுக்க விரும்புகிறதையும் அவர்களுடைய தந்திரத்தையும் வல்லமையையும் எங்கள் பலவீனத்தையும் அறிந்திருக்கிறீர். தேவரீர் அவர்களை வெட்கப்படுத்தி, உமது அடியாரை உமக்குத் தெரிந்திருக்கிற வழிகளில் மோசத்துக்கு நீங்கலாக நடத்திக் காப்பாற்றி, இப்படியே உம்முடைய மகத்துவத்தைக் காண்பித்தருளும். அப்போது எந்தச் சத்துருவும் உம்மை மேற்கொள்ளக்கூடாதென்றும், சத்துருக்கள் அடைந்த வெட்கத்தினாலும் ஏழைகளாகிய எங்கள் கீழ்ப்படிதலினாலும் உமக்கு மிகுந்த மகிமை வந்ததென்றும், லோகமெல்லாம் கண்டு, நீரே கர்த்தர் என்பதை அறிந்துகொள்ளும். உமது நாமத்தின் மகிமையின் நிமித்தமாக இவைகளைச் செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

### பெரிய வியாழக்கிழமை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, கிருபையும் இரக்கமுமுள்ள இரட்சகரே, தேவரீர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில்

பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தி, இதிலே ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்துக்குள்ளும் இரசத்துக்குள்ளும் உம்முடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையுந் தின்று குடிக்க, பாவமுள்ள மனுஷராகிய எங்களுக்குக் கட்டளையிட்டு, விலைமதிக்கக்கூடாத எங்கள் இரட்சிப்புக்கு அச்சாரமாகிய இதினால் பாவமன்னிப்பையும் சீவனையும் மோட்சத்தையும் எங்களுக்கு உறுதிப்படுத்தி முத்திரிக்கிற இந்த உமது செய்கை மிகவும் பெரிதும் நீர் ஏற்படுத்தின இந்த ஒழுங்கு மகா பரிசுத்தமுமாயிருக்கிறதென்று நாங்கள் அறிகையிட்டு, அதுக்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். ஆ, கர்த்தாவே, நாங்கள் மிகவுங் கசப்பான சிலுவை என்கிற பாத்திரத்தை உமக்குக் குடிக்கக் கொடுத்தோம், ஆனால் தேவரீர் உமது பரிசுத்த இரத்தமாகிய மிகவும் இனிமையான பானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்து, வானத்திலிருந்து இறங்கின அப்பமாகிய உமது திருச் சரீரத்தினால் எங்களைப் போஷிப்பிக்கிறீர். நீர் இதினால் எங்களுக்குக் காண்பித்த உமது மகா பெரிய சிநேகத்துக்காக உம்மைப் போதுமானபடி துதித்து மகிமைப்படுத்தக் கூடியவன் ஆர். அன்புள்ள கர்த்தாவே, நாங்கள் அடிக்கடி ஆத்தும பசிதாகத்தோடும் பத்தியோடும் உமது பந்திக்குச் சேர்ந்து, பாவமன்னிப்புக்கென்றும் நித்திய சீவனுக்கென்றும் உமது திருச் சரீரத்தையும் இரத்தத்தையும் தின்று குடிப்பதோடு உமது கசப்பான பாடுகளையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் விசுவாசப்பத்தியாய் நினைத்து, உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தி, பரிசுத்த நடக்கையினால் எங்கள் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் உமக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கும்படிக்கு, தேவரீர் எங்களுக்குத் துணைசெய்யவேண்டுமென்று முழு இருதயத்தாலும் உம்மைக் கெஞ்சிமன்றாடுகிறோம். ஆண்டவரே, உமது இராச்சியத்தில் எங்களையும் நினைத்து, நாங்கள் கடைசியில் பரம பரதீசிலே என்றென்றைக்கும் உம்மோடிருக்கும்படிக்கு, எங்களை உம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளும், சுவாமி. ஆமேன்.

---



## பெரிய வெள்ளிக்கிழமை.

### 1.

சர்வத்திற்கும்வல்ல நித்திய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் பாவத்தினால் கெட்டுப்போன லோகத்தின்பேரில் இரங்கி, உமது ஒரே பேறான குமாரனைப் பாராமல், அவரை எல்லாருக்காகவும் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, நாங்கள் அவருக்குள் உமது நீதியாகி, சீவனையும் மோட்சானந்தத்தையும் அடையும்படிக்கு, பாவமறியாத அவரை எங்களுக்காகப் பாவமாக்கின உம்முடைய ஆச்சரியமான கிருபைக்காகவும் இரக்கத்துக்காகவும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்.

அன்புள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் அசட்டைபண்ணப்பட்டவரும் மனுஷரில் ஈனமானவரும் வேதனைகள் உள்ளவரும் பலவீனத்தை அறிந்தவருமாயிருந்தீர்; ஏனெனில் எங்களெல்லாருடைய அக்கிரமத்தையும் கர்த்தர் உமது பேரில் விழப்பண்ணினார். தேவரீர் எங்கள் பலவீனங்களை எடுத்துக்கொண்டு, எங்கள் நோவுகளைச் சுமந்து, எங்கள் மீறுதல்களின் நிமித்தங் காயப்பட்டு, எங்கள் அக்கிரமங்களின் நிமித்தம் நொறுக்கப்பட்டீர். எங்களுக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை உமதுமேல் இறங்கிற்று. உமது தழும்புகளால் குணமாகிறோம். தேவரீர் இவைகளெல்லாத்தையுஞ் சகித்து, மரணபரியந்தம், சிலுவையின் மரணபரியந்தமே, உம்முடைய பரம பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்ததற்காக உம்மை என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கிறோம். தேவரீர் மீட்டிரட்சித்த எங்கள்பேரில் இனியும் இரக்கம் வைத்து, எங்களில் ஒருவனாகிலும் கெட்டுப்போகாதபடிக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். எங்களுக்காக உம்முடைய ஆத்துமத்தைக் குற்றம்போக்கும் பலியாய் ஒப்புக்கொடுத்து, எங்கள் அக்கிரமங்களைச் சுமந்துகொண்ட தேவரீர் நாங்கள் மனந்திரும்பும்படிக்கு உமது பரிசுத்த ஆவியையும் எங்களுக்குத் தந்து, உமது அறிவினால் எங்களை நீதிமான்களாக்கியருளும். எங்கள் பாவங்களினால் உம்மைப் பிரயாசப்படுத்தி, எங்கள் அக்கிரமங்களினால் உம்மை வருத்தப்படுத்தின நாங்கள் பாவ நடக்கையினால் உம்மை மறுபடியுஞ் சிலுவையில் அறையாமலும், எங்கள் பாவங்களின் சுத்திகரிப்புக்

கென்று சிந்தின உம்முடைய திரு இரத்தத்தை மனதார அசட்டை
பண்ணுகிறதினால். மிதித்துப்போடாமலும், குணப்படாதவர்களாய்ச்
சாகாமலும் இருக்கும்படி, எங்களைக் கிருபையாய்க் காத்தருளும். நாங்
கள் நொறுங்குண்ட ஆவியோடும் நருங்குண்ட இருதயத்தோடும்
உமது பாடுகளையும் மரணத்தையுந் தினந்தோறுந் தியானித்து, உறு
தியான மெய்விசுவாசத்தினால் உமது இரத்தம் வடியுங் காயங்களில்
அடைக்கலம் புகுந்து, இதுகளைக்கொண்டு நாங்கள் சாகும் வேளையில்
நித்திய சீவனுக்குள் பிரவேசிக்க எங்களுக்குக் கிருபை செய்தருளும்.
உம்மோடு பாடனுபவிக்கிற நாங்கள் உம்மோடுகூட நித்திய மகிமையை
அடைவதற்கு உமது மாதிரியின்படி எங்கள் சிலுவையை எடுத்துக்
கொண்டு, எப்போதும் உம்மைப் பின்செல்லும்படியான பொறுமை
யுள்ள இருதயத்தை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

2.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட
பாவிகளாகிய எங்களுக்கு உம்முடைய குற்றமில்லாத பரிசுத்த பாடு
களினால் உமது பரம பிதாவினிடத்திலிருந்து கிருபையையும் நித்திய
சீவனையுஞ் சம்பாதித்த இரக்கமுள்ள இரட்சகரே, உம்முடைய சகல
பாடுகளுக்காகவும் வேதனையுள்ள மரணத்துக்காகவும், அதினால் தேவ
ரீர் எங்களுக்குக் காண்பித்த உமது பெரிய சிநேகத்துக்காகவும் உண்
மைக்காகவும் நாங்கள் உம்மை முழு இருதயத்தினாலும் இஸ்தோத்தி
ரிக்கிறோம். தேவரீர் உம்முடைய பாடுகள் மரணத்தின் நிமித்தம் எங்
களை உம்முடைய நித்திய சிநேகத்திலே காத்து, நாங்கள் இந்த விலை
யேறப்பெற்ற இரட்சிப்பையும் பெரிய உபகாரத்தையும் நன்றியறிந்த
மனதோடு உணர்ந்தறிந்து, அதுகளைப் புகழ்ந்து மகிமைப்படுத்தும்
படி, பரிசுத்த ஆவியினால் எங்களுக்குக் கிருபை செய்தருளும்.
அன்புள்ள இரட்சகரே, நாங்கள் அதினால் விசுவாசத்திலே பெலனை
யும், நம்பிக்கையிலே சந்தோஷத்தையும், உம்மைச் சிநேகிக்கிற சிநே
கத்திலே கரிசனத்தையும், பொறுமையிலே உறுதிப்பாட்டையும்,
கீழ்ப்படிதலிலே உற்சாகத்தையும் அடைந்து, எங்கள் பாவங்களுக்
குச் செத்து, நன்றியறிந்த கிறிஸ்தவர்களாக எங்கள் சீவனுள்ள நா



ளெல்லாம் உமக்கே பரிசுத்தத்திலுந் தேவபத்தியிலும் ஊழியஞ் செய்
யும்படிக்குத் துணைசெய்தருளும். உண்மையுள்ள இரட்சகரும் மீட்ப
ருமாகிய இயேசு கிறிஸ்துவே, நாங்கள் எங்களுடைய கடைசி நேரத்
திலே உம்முடைய இரத்தஞ் சிந்துதலினாலும் மரணத்தினாலும் நித்
திய மோட்சத்துக்கென்று சந்தோஷத்தையும் ஆறுதலையும் பெற்றுக்
கொள்ள எங்களுக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை.

1.

அன்புள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, [illegible]
பாவங்களின் நிமித்தஞ் சிலுவையின் மரணத்தைச் சகித்து, நாங்கள்
நீதிமான்களாவதற்கு மரித்தோரிலிருந்தெழுந்து, உமது மரணத்தி[illegible]
எங்கள் மரணத்தை நிர்மூலமாக்கி, உமது உயிர்த்தெழுதலால் நித்திய
நீதியையுஞ் சீவனையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த உமது மகா
பெரிய சிநேகத்துக்காகவும் இரக்கத்துக்காகவும் உம்மை இஸ்தோத்
திரிக்கிறோம். தேவரீர் எங்கள் நன்மைக்கென்று மரணத்தையும் நரகத்
தையும் எல்லாத்தீமைகளையும் மேற்கொண்டு, மாளாத சீவனுக்கென்று
மெய்யாகவே உயிர்த்தெழுந்து உம்முடைய மகிமைக்குள் பிரவேசித்தீ
ரென்பதையும், அதினால் நாங்களும் உமது பாடுகள் உயிர்த்தெழுத
லின் பெலத்துக்கும் பலன்களுக்கும் பங்காளிகளானோமென்பதையும்,
நாங்கள் சந்தேகப்படாமல் விசுவாசிக்கும்படிக்கு, எங்கள் விசுவா
சத்தை வர்த்திக்கப்பண்ணிப் பலப்படுத்தவேண்டுமென்று உம்மை மன்
றாடுகிறோம். உம்முடைய நாமத்திலே நாங்கள் பாவமன்னிப்பைப்
பெற்றுக்கொண்[illegible]ன சீவனிலே நடக்கிறோம். உம்முடைய நா
மத்திலே எங்கள் சரீரங்களு[illegible] கடைசி நாளில் பூமியிலிருந்தெழுந்து,
சாகாமையையும் அழியாமையையும் மகிமையையுந் தரித்துக்கொள்
ளும். ஆகையால் தேவரீர் இப்போது தங்கள் பாவங்களில் மரித்தவர்
களாகக் கிடக்கிறவர்களை ஞான சீவனுக்கென்று எழுப்பிவிட்டு, அவர்
கள் உம்முடைய சத்தத்தைக் கேட்டு உத்தம விசுவாசத்தினால் மீவத்தி

னின்றும் ஞான மரணத்தினின்றும் எழுந்திருக்க, உமது வல்லமையின் வசனத்தினாலே அவர்களை உயிர்ப்பித்தருளும். சோதனை துன்பம் துக்கங்களைச் சகித்து, சிலுவையின் கீழ்த் தவிக்கிறவர்கள் தங்களை உம்முடைய செயத்தினால் ஆற்றித்தேற்றி, தேவரீர் தங்களை எல்லாத்தீமையிலும் நிர்ப்பந்தத்திலுமிருந்து விடுதலையாக்கி, உம்முடைய இராச்சியத்திலே என்றென்றைக்கும் மகிமையாய் உயர்த்துவீரென்று நிச்சயமாய் நம்பும்படிக்கு, அவர்களை உம்முடைய மகிமையான உயிர்த்தெழுதலினாலே சந்தோஷிப்பித்தருளும். அங்கே உம்முடைய மகிமையின் இராச்சியத்தில் உம்முடையவர்களாகிய நாங்கள் எல்லாரும் எங்கள் சந்தோஷமும் வெளிச்சமுமாகிய தேவரீரைப் பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் எங்கள் கண்களால் தரிசித்து, என்றென்றைக்கும் [illegible]படிக்கு, கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

2.

சர்வவல்லமையும் இரக்கமுமுள்ள நித்திய பராபரனே, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, சகல நன்மைகளுக்கும் ஊற்றானவரே, தேவரீர் உமது ஒரேபேறான நேசகுமாரனைப் பாராமல், அவரை எங்கள் பாவத்துக்காக மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, நாங்கள் நீதிமான்களாக்கப்படுவதற்கு அவரை மூன்றாம் நாளில் உயிரோடெழுப்பினதற்காக, நிர்ப்பாக்கியமுந் தரித்திரமுமுள்ள உமது பிள்ளைகளாகிய நாங்கள் முழு இருதயத்தாலும் உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். மாறாத உண்மையுள்ள கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் நாங்கள்தானே உத்தரிக்கவேண்டிய பாடுகளுக்குள்ளாகி, எங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் உமதுபேரில் ஏற்றுக்கொண்டு, உமது கசப்பான மரணத்தினாலும் இரத்தஞ் சிந்துதலினாலும் அவைகளுக்கு உத்தரித்து, உமது சந்தோஷமுள்ள உயிர்த்தெழுதலால் மரணத்தை நிவிர்த்திபண்ணி, நீதியையுஞ் ஜீவனையும் மோட்சத்தையும் எங்களுக்குக் கிருபையாய்க் கொண்டுவந்ததற்காக நாங்கள் உம்மை இஸ்தோத்திரிக்கிறோம். ஆ, கர்த்தாவே, சொல்லிமுடியாத இந்தப் பரம நன்மைகளும் பொக்கிஷங்களும் எங்களிடத்தில் வீணாய்ப் போகாமல், நொறுங்குண்ட இருதயத்



திலே உறுதியான விசுவாசத்தினால் நாங்கள் அதுகளைப் பெற்றுக்கொண்டு என்றென்றைக்கும் அநுபவிக்க, கிருபைசெய்யவேண்டுமென்று உம்முடைய ஆராய்ந்துமுடியாத இரக்கத்தை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். உண்மையுள்ள இரட்சகரே, தேவரீர் கொடுத்த வார்த்தைப்பாட்டின்படி முழுப் பூமியிலும் அஞ்ஞான இருள்மூடிய இந்தத் தேசத்திலும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உமது திருச்சபையைச் சேர்த்து ஆதரித்தருளும். உமது அறுப்புக்கு உண்மையான வேலையாட்களை அனுப்பி, சகல பொய்ப்போதகங்களையுந் தப்பெண்ணங்களையுந் தடுத்தருளும். எங்கள் (இராசா) இராசாத்தி முதலிய கிறிஸ்தவமான அதிகாரிகளெல்லாரையும் அவர்களுக்குக் கீழான உத்தியோகஸ்தர் யாவரையும் உமது அடைக்கலத்தின் கீழ் வைத்து, அவர்களைச் சகல தீமைக்கும் விலக்கிக்காத்து ஆசீர்வதித்தருளும். தேவரீர் தாய் தகப்பன்மாருக்கும் பிள்ளைகள் பணிவிடைக்காரருக்கும் எங்களில் ஒவ்வொருவருக்கும் இரங்கி, உமது பரம ஆசீர்வாதங்களோடு எங்கள் நடுவில் வாசஞ்செய்து, பிசாசின் தந்திரங்களுக்கும் எல்லாப் பாவங்களுக்கும் பொல்லாங்குகளுக்கும் எங்களை விலக்கமாய்க் காப்பாற்றும். நிலத்தின் பலன்களை ஆசீர்வதித்து, அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களெல்லாருக்குங் கிருபையாய்த் தந்தருளும். நாங்கள் உமது மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் எங்கள் விசுவாசத்தின் முடிவாகிய ஆத்துமங்களின் இரட்சிப்பையும் நித்திய மோட்சானந்தத்தையும் அடையும்படி எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும். தேவரீர் உமது பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் மெய்த்தேவனாக அநாதியாய் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறீர், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

சர்வவல்லமையுள்ள கர்த்தரும் பிதாவுமாகிய பராபரனே, தேவரீர் உம்முடைய நேச குமாரன் பரத்துக்கேறினதினால் இந்நாளிலே

எங்களை மிகுதியுஞ் சந்தோஷிப்பித்து, எங்களுக்கு நித்திய ஆறுதலை அருளிச்செய்ததற்காக நாங்கள் உமக்கு முழு இருதயத்தினாலும் துதியும் இஸ்தோத்திரமுஞ் செலுத்துகிறோம். எங்கள் அன்புள்ள இரட்சகர்: நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்கு, நான் போய் உங்களுக்கு இஸ்தலத்தை ஆயத்தம்பண்ணி, உங்களை என்னண்டையில் சேர்த்துக்கொள்ளுவேனென்று வாக்குத்தத்தம் பண்ணி, தமது மகிமைக்குள் பிரவேசித்தாரே. நாங்கள் இதை உறுதியாய் விசுவாசித்து, இதினாலே எங்களை எல்லாக் காலத்திலும் ஆறுதல்படுத்திக் கொண்டு, உமது நேசகுமாரன் நாமத்திலே உம்மை நோக்கிக்கூப்பிட்டு, உம்மை என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கும்படி, தேவரீர் எங்களுக்குச் சகாயஞ் செய்யவேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். தேவரீர் நாங்கள் செய்த பாவங்களைப் பாராமல், எங்களுடைய ஆறுதலுக்காக உமது வலதுபாரிசத்தில் உளுக்காரப்பண்ணியிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய ஆசீர்வாதம் நிறைந்த முகத்தைப் பார்த்து, எங்கள் பாவங்களை மன்னித்து, எங்கள்பேரில் கிருபைகூர்ந்து, எங்கள் விண்ணப்பங்களைக் கேட்டருளும். எங்கள் இருதயங்கள் பாவநித்திரையை விட்டு இயேசுகிறிஸ்துவோடு நீதிக்கு எழுந்து, உம்மைச் சிநேகித்து, உற்சாகமான கீழ்ப்படிதலோடு என்றென்றைக்கும் உமக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, பரமண்டலத்திலிருந்து உம்முடைய பரிசுத்த ஆவியை எங்கள்பேரில் ஊற்றியருளும். எங்கள் பராபரனாகிய கர்த்தாவே, நாங்கள் உம்முடைய நேசகுமாரனோடும் அவரைக்கொண்டும் ஏறிப்போய், செயமாய் வெற்றி சிறந்து, ஆண்டுகொள்ளும்படி கிருபைகூர்ந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

2.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, சர்வ வல்லமையுள்ள ஆண்டவராகிய பராபரனே, தேவரீர் உம்முடைய சத்துருக்களையெல்லாஞ் செயங்கொண்டு, மகா மகத்துவத்தோடும் தேவதூதர்களின் ஆர்ப்பரிப்போடும் பரமண்டலத்துக்கேறி, உமது பிதாவின் வலதுபாரிசத்தில்



உளுக்கார்ந்திருக்கிறதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். உம்முடைய பாடுகளையும் மரணத்தையும் பாக்கியமாய் நிறைவேற்றி, உம்முடைய நித்திய மகிமைக்குள் பிரவேசித்தீர். அன்புள்ள இரட்சகரே, தேவரீர் கரையேறியிருக்கிறீர், நாங்களோ இன்னுங்கொந்தளிப்பான கடலிலிருக்கிறோம். தேவரீர் செயங்கொண்டீர், நாங்களோ இன்னும் போராடுகிறோம். எங்கள் பொக்கிஷம் எங்கேயோ, அங்கே எங்கள் இருதயங்களும் இருக்கும்படிக்கு, நாங்கள் எங்கள் இருதயங்களோடுஞ் சிந்தைகளோடும் தேவரீர் ஏறியிருக்கிற வானத்தை அண்ணாந்துபார்க்க, எங்களுக்குக் கிருபைசெய்தருளும். நாங்கள் விசுவாசத்தின் செட்டைகளாகிய கருத்தான செபத்தினாலும் பெருமூச்சுகளினாலும் எங்கள் இருதயங்களை உமக்கு நேராக உயர்த்தி, உலகக் காரியங்களை எல்லாம் எங்கள் கால்களால் மிதித்துப்போட, எங்களுக்கு உதவிசெய்தருளும். தேவரீர் உம்முடைய அவயவங்களாகிய எங்களை இந்த நிர்ப்பந்தத்தில் நிலைத்திருக்கவொட்டாமல், நாங்கள் மெய்விசுவாசத்தில் எங்கள் ஓட்டத்தை முடித்தபிற்பாடு, எங்களை உம்மண்டையில் சேர்த்துக்கொள்ளுவீரென்பதை உறுதியாய் நம்பி, எங்களை ஆற்றித் தேற்றிக்கொள்ளுகிறோம். இதற்கென்று தேவரீர் பாடுபடும் முன் உமது பிதாவை நோக்கி: பிதாவே, நான் எங்கேயிருக்கிறேனோ, அங்கே நீர் எனக்குக் கொடுத்தவர்களும் என்னுடனேகூட இருக்க வேண்டுமென்றிருக்கிறேன் என்று செபம்பண்ணிக் கேட்டீர். பின்னையும் நீர் உம்முடைய பிதாவும் எங்கள் பிதாவுமானவரண்டைக்கு ஏறிப்போய்: நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படிக்கு, நான் மறுபடியும் வந்து உங்களை என்னண்டைக்குச் சேர்த்துக்கொள்ளுவேனென்று உம்முடைய சீஷர்களுக்கும் எங்களுக்கும் வாக்குத்தத்தம் பண்ணினீர். ஆறுதல் நிறைந்த இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, சீக்கிரமாய் எங்களை உம்மண்டையில் சேர்த்துக்கொள்ளும். அன்புள்ள இரட்சகரே, நாங்கள் உட்கருத்தோடு உமதுபேரில் வாஞ்சையாயிருக்கிறோம்; நிர்ப்பந்தம் நிறைந்த இந்தப் பரதேசத்தில் இருப்பதைப் பார்க்கப் பரமண்டலமாகிய எங்கள் பிறந்தகத்திலே உம்மண்டை இருக்கிறது நல்லது. பூமிக்கடுத்த எங்கள் கூடாரங்களைப் போட்டுவிட எங்களுக்கு விருப்பம் உண்டு. பரமண்டலங்களில் எங்களுக்கு

இருக்கும் நித்திய வீட்டின்மேல் ஆசைப்பட்டு, மரணத்துக்குள்ளானது சீவனால் விழுங்கப்படுவதற்கு உம்மண்டையில் குடியிருக்க வேண்டுமென்றிருக்கிறோம். என் ஆத்துமம் சீவனுள்ள தேவனாகிய பராபரன் பேரில் தாகமாயிருக்கிறது; நான் எப்போது பிரவேசித்துப் பராபரனுடைய சந்நிதியிலே காணப்படலாமென்று தாவீது இராசாவோடு நாங்களும் அனுதினமுஞ் சொல்லுகிறோம். கர்த்தாவே, நாங்கள் பொறுமையாய்க் காத்திருக்கிறோம்; ஆனால் நீர் எங்களை உம்மண்டையில் சேர்த்துக்கொள்ள வரும்மட்டும் எங்கள் ஆவியினால் பரமண்டலத்துக்கேறி, உம்மண்டையிலே தங்கியிருக்கிறோம். எங்கள் இருதயங்களின் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாகிய தேவரீர் பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கப்பட்டவராயிருக்கிறீர், சுவாமி. ஆமேன்.

---

## பரிசுத்த ஆவியின் பண்டிகை.

சர்வத்துக்கும் வல்ல நித்திய பராபரனே, எங்கள் ஒன்றான கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, தேவரீர் பெந்தெக்கொஸ்தே நாளிலே உம்மைப் பரமண்டலங்களிலிருந்து வெளிப்படுத்தி, எருசலேமில் கூடியிருந்த அப்போஸ்தலர்பேரில் பரிசுத்த ஆவியைக் காணப்படுகிற விதமாய் ஊற்றி, அவருடைய பலத்தினாலும் கிரியைநடப்பிக்குதலினாலும் இரட்சிக்க வல்லமையுள்ள சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற அப்போஸ்தலர் முதலிய போதகர் பிரசங்க ஊழியத்தைக்கொண்டு கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட மனுஷசாதியிலிருந்து உமக்கு ஒரு நித்திய திருச்சபையைக் கூட்டிச்சேர்த்து ஸ்தாபித்து நடத்திவருகிறதற்காக, உம்முடைய கிருபைப்பிள்ளைகளாகிய நாங்கள் முழு இருதயத்தினாலும் உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். அன்புள்ள பரம பிதாவே, பரிசுத்த ஆவியானவர் எங்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்து, விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கி, புதிதாக்கி, திடப்படுத்தி, நித்திய சீவனுக்கென்று காப்பாற்றவும்,



நாங்கள் உம்மையே அறிந்து, துதித்து, மகிமைப்படுத்தவும், அவரை இன்றைக்கும் என்றைக்கும் எங்கள் இருதயங்களில் ஊற்றியருளவேண்டுமென்று உமது ஒன்றான குமாரனும் எங்கள் மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். கர்த்தாவே, உமது முகத்தைவிட்டு எங்களைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலுமிரும். உமது இரட்சிப்பின் சந்தோஷத்தை எங்களுக்குத் திரும்பக் கட்டளையிட்டு, உம்முடைய உற்சாகமான ஆவி எங்களை உம்முடைய வசனத்திலும் சத்தியத்திலும் இரட்சிப்புள்ள விசுவாசத்திலும் நிலைப்படுத்தித் தாங்கப்பண்ணும். உம்மையும் உமது வசனத்தையும் சத்தியத்தையும் விட்டுப் பைத்தியமுங் கெட்டுபோனதுமான மனதின் சிந்தனைகளுக்கும், பிசாசினுடைய வழிகளுக்கும் எங்களை நடத்தி, மோசம்போக்குகிற கள்ளத்தன ஆவிகளை மறுத்துத்தடுத்தருளும். எங்கள் தேசத்தை ஆளுகிற இங்கிலாந்து தேசத்து (இராசாவையும்) இராசாத்தியையும் கிறிஸ்தமான அதிகாரிகள் எல்லாரையும் பரிசுத்த ஆவியினாலே ஆண்டு நடத்தி, அவர்களுக்கு நீடிய ஆயுளையுஞ் சுகத்தையுஞ் சமாதானமுந் தேவபத்தியுமுள்ள ஆளுகையையுங் கொடும். திருச்சபையிலுள்ள தாய்தகப்பன்மாரும் பிள்ளைகள் வீட்டார் அனைவரும் உமக்கு முன்பாகத் தங்கள் தங்கள் அந்தஸ்தில் உமக்குப் பிரியமான நீதியிலும் பரிசுத்தத்திலுந் தேவபத்தியாய்ச் சீவனம்பண்ணி, பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால் தங்கள் சீவநாளெல்லாம் உமக்குப் பிரியஞ்செய்யும்படிக்கு, உம்முடைய கிருபையுள்ள ஆவியைக்கொண்டு அவர்களை ஆண்டு நடத்தியருளும். நாங்களெல்லாரும் உம்மை அறிவிலும், விசுவாசத்திலும், தேவபத்தியிலும், சிநேகத்திலும், [illegible], சுத்தாங்கத்திலும், உண்மையிலும் அதிகமதிகமாய் வளர்ந்து, [illegible] உறுதியாய் நிலை நின்று, எங்கள் விசுவாசத்தின் முடிவாகிய ஆத்தும இரட்சிப்பையும் மோட்சானந்தத்தையும் அடையும்படியாக, உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இவர் பிதாவாகிய உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாய்ப் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார், சுவாமி. ஆமேன்.

பரிசுத்த ஆவியாகிய பராபரனே, ஞானம் உணர்வென்றவைகளின் ஆவியும், ஆலோசனை பெலனென்றவைகளின் ஆவியும், அறிவு கர்த்தருக்குப் பயப்படுதலென்றவைகளின் ஆவியுமானவரே, துக்கப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றி, மோசம்போனவர்களைத் திருப்பி வழிநடத்தி, அறிவீனர்களை உபதேசித்து, பயப்படுகிறதும் தைரியமற்றதும் பலவீனமுள்ளதுமான இருதயங்களைத் திடப்படுத்திவருகிற ஆண்டவரே, நாங்கள் மகிழ்ச்சியுள்ள இந்தப் பண்டிகையிலே உம்மைப் பிதாவோடும் குமாரனோடுங்கூட மெய்த்தேவனைப் புகழ்ந்து துதித்து மகிமைப்படுத்துகிறோம். தேவரீர் இந்தக் கடைசிகாலத்திலும் உம்முடைய திருச்சபையை பரம கிருபையினால் பிரகாசிப்பித்து, உம்முடைய பரிசுத்த வசனத்தினாலும் ஞானதிரவியங்களினாலும் எங்களுக்குள் வல்லமையாய் உமது கிரியையை நடப்பிக்கிறதற்காக உம்மை இஸ்தோத்திரிக்கிறோம். தேவரீர் மனுஷ புத்திக[illegible]சிடையான விதமாய் இதுவரையிலும் எங்கள் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் அடுத்த பற்பல உபத்திரவங்களுக்கும் எங்களை விலக்கிப் பெலனாய்க் காப்பாற்றி, நாங்கள் அதுகளை மேற்கொள்ள எங்களுக்கு உதவிசெய்தீர். தேவரீர் உணர்வற்றதுஞ் சோம்பலுமான எங்கள் இருதயங்களை அனலாக்கி எழுப்பி, எங்கள் புத்தியையும் மனதையும் பிரகாசிப்பித்து, எங்களை எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தி, எங்கள் சரீரங்களையும் ஆத்துமங்களையும் பரிசுத்தமாக்கி, கருத்தாய்ச் செபம்பண்ணுகிறதுக்கு எங்களை ஏவிவிட்டு, எங்களுக்கு வருஞ் சகல உபத்திரவங்களிலேயும் எங்களைத் தேற்றரவுபண்ணியருளும். காய்ந்துபோன புல்லும் பூவும் மாரியினாலே பச்சையாகிறதுபோல், வறண்டுபோன எங்கள் ஆத்துமங்களும் உம்முடைய ஆறுதலினாலும் ஆசீர்வாதத்தினாலும் பெலன்கொள்ளுவதாக. எங்கள் விசுவாசம் ஒழிந்து, எங்கள் சிநேகம் குளிர்ந்து, எங்கள் நம்பிக்கை நீங்கி, எங்கள் பொறுமை தளர்ந்துபோகாமலிருக்கும்படிக்கு, எங்களைக் கிருபையாய்க் காப்பாற்றும். எந்த உபத்திரவத்திலுஞ் சோதனையிலும் எங்கள் இருதயம் வேசாறிப்போகாமல், சகல தீமையையும் பொறுமையோடும் நித்திய ஜீவனை நம்புகிற நிலைவரமான நம்பிக்கையோடுஞ் சகிக்கும்படிக்கு,



எங்களைத் திடப்படுத்தியருளும். விசேஷமாய்ப் பொல்லாத சத்துரு இடைவிடாமல் எங்களுக்கு எதிர்த்து நின்று, பாவத்தினாலுஞ் சோதனையினாலும் பராபரனைவிட்டு எங்களைப் பிரிக்கத் தேடுகிறபடியால், நாங்கள் ஒருக்காலும் அவரை விட்டுப் பிரிந்துபோகாதிருக்க, உம்முடைய பரிசுத்த வசனத்தினாலும் ஞான திரவியங்களினாலும் எங்களை அவரோடு ஐக்கியப்படுத்தி, அதில் நிலைத்திருக்கப்பண்ணியருளும். பிசாசுமுதலிய எல்லா ஞான சத்துருக்களுக்கும் எங்களை விலக்கிக் காப்பாற்றி, நாங்கள் அதுகளுக்கு விரோதமாகப் பராக்கிரமமாய்ப் போர்செய்து, உம்முடைய பலத்தினால் சகல துராசை இச்சைகளையுங் கொன்றுபோட, உம்முடைய பட்டையத்தை எங்களுக்குத் தந்தருளும். எங்கள் கடைசிப் போராட்டமாகிய மரண அவஸ்தையிலும் எங்களுக்கு உதவியாயிருந்து, களைத்த எங்கள் ஆத்துமங்களைத் திடப்படுத்தி, நாங்கள் திடமனதோடு கண்ணீரின் பள்ளத்தாக்காகிய இந்த லோகத்தைவிட்டு, பரமண்டலத்திலுள்ள நித்திய வீட்டுக்குப் போய்ச் சேரும்படிக்கு, சொல்லுக்கடங்காத பெருமூச்சுகளால் எங்களுக்காக வேண்டுதல் செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவத்தின் பண்டிகை.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, தேவரீர் பிதா குமாரன் [illegible] ஆவி என்ற மூன்று தேவாட்களாகிய ஒரே மெய்யான பராபர[illegible]கிறீரென்பதை உம்முடைய திருவசனத்தினாலே எங்களுக்கு வெளிப்படுத்தித் தெரியப்பண்ணினதற்காக உம்மை இஸ்தோத்திரிக்கிறோம். மகா பரிசுத்த திரியேக பராபரனே, தேவரீர் இந்த இரகசியத்தை விரோதிக்கிற சகல கள்ளப் போதகரையும் உம்முடைய மகத்துவத்தைத் தூஷணிக்கிற யாவரையும் உம்முடைய வல்லமையினாலே தடுத்து, உம்முடைய நித்திய சுபாவ மகிமையையுங் கிருபையுள்ள சித்தத்தையும் அறிகிற பரிசுத்த அறிவு ஒருக்காலும் எங்கள் இருதயங்

களில் அற்றுப்போகத் திருக்கப்பண்ணும். தேவரீர்தாமே உம்மை எங்களுக்குத் திரியேக பராபரனாக வெளிப்படுத்தினபடியால், நாங்கள் இந்தக் கிறிஸ்தமான மெய் விசுவாச இரகசியத்தின் அறிவிலே அசையாமல் நிலைத்திருக்கக் கிருபைசெய்தருளும். பிதா குமாரன் பரிசுத்த ஆவியாக என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கப்படுகிற திரித்துவமே, பிரிக்கப்படக் கூடாத ஏகத்துவமே, நாங்கள் ஏகத்துவத்திலே திரித்துவத்தையும், மகா பரிசுத்த திரித்துவத்திலே ஆராய்ந்து முடியாத ஏகத்துவத்தையும் வணங்கி: சேனைகளுடைய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், பூமியனைத்தும் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறதென்று பரம சேனைகளோடு நாங்களும் உம்மைப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கிறோம். பிதாவாகிய பராபரனே, உம்முடைய நித்திய சிநேகத்தினாலே எங்களைச் சந்தோஷப்படுத்தியருளும். குமாரனாகிய பராபரனே, தேவரீர் உண்டுபண்ணின நித்திய இரட்சிப்பினாலே எங்களைக் காப்பாற்றியருளும். பரிசுத்த ஆவியாகிய பராபரனே, தேவரீர் உம்முடைய நித்திய கிருபையினாலே எங்களை உயிர்ப்பித்து, தேற்றரவுபண்ணி, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குப் பரிபூரணமாய்க் கிடைக்கச் செய்தருளும். மகா பரிசுத்த திரியேக பராபரனே, தேவரீர் இப்போதும் எப்போதும் எங்கள் முடிவுபரியந்தமும் ஏழைப்பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையும் இரக்கமுமாயிருந்து, கடைசியிலே எங்களைப் பாக்கியமான உமது பரம இராச்சியத்திலே ஏற்றுக்கொண்டு, நாங்கள் எல்லாத் தேவதூதர்களோடும் தெரிந்துகொள்ளப்பட்ட எல்லாப் பரிசுத்தவான்களோடுங் கூட உம்மை முகமுகமாய்த் தரிசித்து, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உம்மைத் துதித்து இஸ்தோத்திரிக்கக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---



## மிசியோன் இஸ்தோத்திரப் பண்டிகை.

இரக்கமும் நாசீவ தயவுமுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் அஞ்ஞான தேசத்தாராகிய எங்களுக்கு இரங்கி, சீகன்பால்கு முதலிய உம்முடைய ஊழியக்காரரை எங்கள் தேசத்துக்கு அனுப்பி, அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் கொண்டு எங்களுக்குள் உமக்கு ஒரு சபையைக் கூட்டிச் சேர்த்து இதுவரைக்கும் காப்பாற்றி வருகிறதற்காக இந்தச் சந்தோஷ நாளிலே உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். கர்த்தாவே, அறுப்போ மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆனபடியால் அறுப்புக்கு எசமான் வேலையாட்களை அனுப்ப, அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்று உமது நேச குமாரன் சொன்னபடி நாங்களும் உம்மை நோக்கிப் பார்த்து, சீமை முதலிய கிறிஸ்தமான தேசங்களிலிருந்து இன்னம் உத்தம போதகரை எங்களண்டைக்கு அனுப்பவும், உம்முடைய திருச்சபை எங்கள் நடுவில் அதிகமாய்ப் பலப்படும்படியாக, எங்கள் தேசத்தாருக்குள்ளும் உம்மையும், உம்முடைய நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், அவருக்குள் தங்கள் தேசத்தாரையும் உத்தமமாய்ச் சிநேகிக்கிற உண்மையுள்ள ஊழியக்காரரையும் சாட்சிகளையும் எழுப்பவும் வேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறோம். தேவரீர் எங்களெல்லாரையுங் கிருபாகடாட்சமாய் நோக்கிப் பார்த்து, எங்கள் அவிசுவாசத்தையும் நன்றியறியாமையையும் உம்முடைய சித்தத்தைத் தடைபண்ணுகிறதெல்லாத்தையும் நீக்கிப்போட்டு, நாங்கள் உம்முடைய திருவசனத்தைக் குணப்படுகிற இருதயத்தோடும் சந்தோஷத்தோடும் கேட்டுக் காத்துக்கொள்ள அனுக்கிரகஞ் செய்யும். கர்த்தாவே, அஞ்ஞானிகளின் நடுவில் வாசமாயிருக்கிற நாங்கள் அவர்களுடைய அவபக்தி முதலியதுகளைப் பின்பற்றாமல், அதுகளை அருவருக்கப்பண்ணி, லோக சிநேகமற எங்களைச் சுத்திகரித்து, எங்கள் தேசத்தார் யாவரையும் இயேசு கிறிஸ்துவின் நிமித்தஞ் சிநேகிக்கிற சிநேகத்தால் எங்களை நிரப்பியருளும். எங்களை அந்தகாரப் பிரபுவினுடைய அதிகாரத்துக்கு நீங்கலாக்கி, உமது நேச குமாரனுடைய இராச்சியத்துக்கு உட்படுத்தி வைத்த உமக்கு மகிமையாக நாங்கள் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும், எங்கள்

சகல நடக்கைகளினாலும், உமக்குச் சித்தமானால் எங்களுக்கு வரும் பாடுகள் மரணத்தினாலுங்கூட உமக்குச் சாட்சிகொடுக்க, எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இப்படியாக உம்முடைய திருச்சபையை எங்கள் தேசமெங்கும் பரம்பப்பண்ணி, அந்தகாரத்தின் இராச்சியத்தை நிர்மூலமாக்கி, சாத்தானை எங்களுடைய கால்களின்கீழ் நசுக்கிப்போட்டு, சகல அஞ்ஞானிகளையும் உம்மை அறிகிற அறிவுக்கு வரச்செய்து, அவர்கள் இரட்சிப்பை அடைந்து, எங்களோடு உமது திருநாமத்தை மகிமைப்படுத்த அனுக்கிரகஞ் செய்யும். லோகப் பிரபுவாகிய பிசாசினுடைய வல்லமையையும் எங்கள் பலவீனத்தையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, தேவரீர் எங்கள் பலவீனத்தில் எங்கள் பலமாயிருந்து, நாங்கள் எங்கள் ஞான சத்துருக்களுக்கு விரோதமாய்ப் போர் செய்யவும் விழித்திருந்து செபம்பண்ணவும் எங்களைப் படிப்பித்து, நரகத்தின் ஒலிமுக வாசல்கள் இத்தேசத்திலுமுள்ள உம்முடைய திருச்சபையை மேற்கொள்ளக் கூடாதென்பதை உறுதியாய நம்பப் பண்ணும். அவிசுவாசமேயல்லாமல் வேறொன்றும் உமது கிருபையின் ஆலோசனையைத் தடுக்கமாட்டாதென்பதை நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இத்தேசத்தாருடைய அவிசுவாசத்தையும் மன கடினத்தையும் நீக்கிப்போட்டு, அவர்களைப் பிரகாசிப்பித்து, உம்மண்டைக்குத் திருப்பவேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். கடைசியில் உம்முடைய மகிமையின் ஆசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் நின்றிருக்கும் சகல சாதிகளிலும் கோத்திரங்களிலும் பாஷைகளிலுமுள்ள ஒருவனும் எண்ணக்கூடாத திரள் கூட்டத்தோடு நாங்களெல்லாருங்கூட இருந்து, என்றென்றைக்கும் உம்மைத் தரிசித்து, உமக்கும் ஆட்டுக்குட்டிக்குங் கனத்தையும் மகிமையையும் துதியையுஞ் செலுத்தக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

227



திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள்.

இரக்கமுள்ள நித்திய பராபரனே, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, தேவரீர் உமது ஒரேபேறான நேச குமாரனைக்கொண்டும் அவர் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர் முதலான உத்தம ஊழியரைக்கொண்டும் எங்கள் இரட்சிப்பைப் பற்றிய உம்முடைய நித்திய ஆலோசனையை எங்களுக்குத் தெரியப்பண்ணினதுமல்லாமல், உம்முடைய சபையில் கள்ளப்போதகர்கள் எழும்பி, ஏழை ஆத்துமாக்களுடைய கழுத்தின்மீது சுமக்கக் கூடாத பாரமான சுமையை வைத்து, பொய்ப்போதகங்களினால் அவர்களை மோசம்போக்கினபோது, நீர் இரக்கமாய் உம்முடைய பணிமுட்டாகிய மார்த்தீன் லுத்தரை எழுப்பி, அவரைக்கொண்டு உம்முடைய பரிசுத்த வசனத்தின் வெளிச்சத்தை மறுபடியும் உதிக்கப்பண்ணி, பாபேலின் அடிமைத்தனத்திலும் கிறிஸ்துவுக்கு எதிராளியின் வல்லமையிலுமிருந்து மீட்டிரட்சித்ததுக்காகவும், நீர் அவரைக்கொண்டு தொடங்கின மகா பெரிய கிரியையைப் பொல்லாங்கனுடைய மூர்க்கத்துக்குங் கோபத்துக்கும் எதிராக இந்நாள்வரைக்கும் பிதாவுடைவான கிருபையால் காப்பாற்றி வருகிறதுக்காகவும், உம்முடைய ஏழை மந்தைக்குச் சுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அந்த உம்முடைய வசனத்தின் மேய்ச்சலில் நடத்துகிற சாக்கிரதையுள்ள போதகரைக் கட்டளையிட்டு வருகிறதுக்காகவும், நாங்கள் வாக்கினாலும் முழுமனதினாலும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இந்தப் பெரிய உபகாரங்களுக்கு நாங்கள் பாத்திரராயிராமல், தேவரீர் எங்கள்மேல் கோபமாகி, உம்முடைய வசனமாகிய விளக்கை எங்களிடத்திலிருந்து எடுத்துப்போட்டு, எங்கள் நன்றிகேடு, வெதுவெதுப்பு முதலான துர்க்குணங்களின் நிமித்தம் உமது வசனம் அகப்படாத ஞானப் பஞ்சத்தினால் எங்களைத் தண்டிக்கிறதுக்கு மாத்திரம் பாத்திரராயிருக்கிறோம் என்று உமக்குத் தாழ்மையாய் அறிக்கையிடுகிறோம். தேவரீர் எங்கள் பாவங்களுக்குத் தக்கதாக எங்களுக்குச் செய்யாமலும், எங்கள் அக்கிரமங்களுக்குத் தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாமலும், இயேசு கிறிஸ்துவிலுள்ள உம்முடைய இரக்கத்தை முன்னிட்டு எங்கள் பாவங்களையெல்லாம் மன்னிக்கவேண்

டுமென்று கெஞ்சி மன்றாடுகிறோம். அன்புள்ள இரட்சகரே, எங்களோடேகூட இரும்; அதேனென்றால் அந்திநேரமாகி, பொழுது சாய்ந்துபோகிறது. எங்களையும் எங்கள் பின்சந்ததியாரையும் இரட்சிப்புள்ள சுவிசேஷத்தின் சுத்த போதகத்திலும், ஞான திரவியங்களின் நிதானமான கையாடுதலிலும் உறுதியாய் நிலைத்திருக்கப் பண்ணியருளும். உம்முடைய திருநாமம் எங்களிடத்தில் அர்ச்சிக்கப்படுகிறதற்கும், உம்முடைய இராச்சியம் உள்ளும் புறம்பும் எங்களிடத்தில் வருவதற்குமாக இத்தேசத்திலுள்ள உமது வாசஸ்தலங்களை இன்பமுள்ளதாக்கியருளும். உம்முடைய வசனத்தின் குமுறலுக்குப் பெலன் அளித்து, அதினால் பாவிகளை எழுப்பி, கோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் நடப்பிக்கப்படுங் கிரியையை ஆசீர்வதித்து, சிறியவர்களும் பெரியவர்களுமெல்லாம் உம்முடைய சுத்தபோதகத்தின் பாலை ருசித்து, அதினாலே பெலனடைந்து, விசுவாசத்திலே விர்த்திக்கும்படி கிருபைசெய்யும். கர்த்தாவே, எங்களோடிருந்து, சாத்தானை எங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போட்டு, கேட்டின் மகனை உமது வாயின் ஆவியினால் போக்கிவிட்டு, உமது வருகையின் பிரசன்னத்தினால் நாசம் பண்ணும். பிதாவாகிய பராபரனே, கள்ளப்போதகங்களுக்கும், பிரிவினைகளுக்கும், இடறல்களுக்கும் எங்களை விலக்கிக் காத்து, கடிதான ஓநாய்கள் உமது ஆட்டுத்தொழுத்தில் நுழைந்து, உமது ஒன்றான குமாரன் உயர்ந்த விலையாய் மீட்டுக்கொண்ட ஆத்துமாக்களாகிய உமது ஆடுகளைப் பிடித்துச் சிதறடிக்க ஒட்டாதேயும். இனிமேலும் புதியேற்பாட்டின் ஊழியஞ் செய்யத் தகுந்தவர்களாகிய உண்மையுள்ள போதகரையும் உக்கிராணக்காரரையும் எங்களுக்குள் எழுப்பி, அவர்களைக்கொண்டு உமது சத்தியவசனத்தைக் கடைசிநாள்மட்டும் எங்கள் தேசத்தாருக்குப் பிரசங்கிக்கப் பண்ணும். இதினால் நாங்களும் எங்கள் பின்சந்ததியாரும் பிரகாசிக்கப்பட்டு, வெளிச்சத்தின் பிள்ளைகளாக நித்திய சீவனுக்கென்று காக்கப்பட்டு, கடைசியில் அதுக்குள் பிரவேசிக்க அனுக்கிரகஞ் செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

229



## அறுப்புக்காக இஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.

சர்வத்திற்கும் வல்ல பராபரனே, தயவும் இரக்கமுமுள்ள பிதாவே, தேவரீர் இக்கடைசித் துன்நாட்களில் ஆத்தும போசனமாகிய உமது திருவசனத்தையும் ஞானதிரவியங்களையும் எங்களுக்குப் பரிபூரணமாய்க் கட்டளையிடுவதுமல்லாமல், எங்கள் சரீர போசனத்துக்காகவும் எங்கள் நிலங்களைக் காலமழையினால் செழிப்பாக்கி, அதுகளின் பலனைச் சேதமின்றிக் காப்பாற்றி, நாங்கள் அதை ஏற்றவேளையில் சேர்த்துக்கொள்ளும்படிக்குக் கிருபைசெய்ததற்காக முழுமனதோடும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். ஆ, கர்த்தாவே, நாங்கள் இதுகளெல்லாத்துக்கும் பாத்திரர் அல்ல; ஆனால் கீழ்ப்படியாமை நன்றிகேடு உமது ஈவுகளை வீணாக்கும் அழிம்பு முதலிய பாவங்களின் நிமித்தம் எங்களைத் தண்டித்து, உமது திருவசனத்தையுஞ் சரீரத்துக்கு வேண்டிய ஆகாரத்தையும் எங்களைவிட்டு எடுத்துப்போடப் பாத்திரராயிருக்கிறோமென்று அறிக்கையிடுகிறோம். ஆ, கர்த்தாவே, மன்னிப்பும் இரக்கமும் உம்மிடத்தில் இருக்கிறபடியால், நாங்கள் செய்த எல்லாப் பாவங்களுக்காகவும் மிகவும் மனஸ்தாபப்பட்டு, உம்முடைய கிருபாசனத்தைச் சேர்ந்து, தேவரீர் எங்கள் அபாத்திரத்தன்மையைப் பாராமல், எங்கள் குறைவையும் நிர்ப்பாக்கியத்தையும் பார்த்து, எங்களுக்கு இரங்கவேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். ஆ, நேசமுள்ள பிதாவே, எங்கள் ஆத்தும போசனமும் வானத்தின் மன்னாவுமாகிய உமது மதுரமான வசனத்தை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமல், எங்களையும் எங்கள் சந்ததியாரையும் சகல பொய்ப்போதகங்களுக்கும் விலக்கமாய்க் காப்பாற்றியருளும். ஏனென்றால், கர்த்தாவே, உம்முடைய வசனம் உண்மையானது; பரிசுத்தம் நித்தியநாளாக உம்முடைய வீட்டின் அலங்காரமாயிருக்கிறது. நாங்கள் இப்போது உம்முடைய உபகாரங்களை உமது கையிலிருந்து பெற்றுக்கொண்டபடியால், அதுகளுக்காக நாங்கள் நன்றியறிந்த மனதோடே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உம்மைப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கிறோம். கர்த்தாவே, நாங்கள் இந்த நன்

மைகளையும் உபகாரங்களையுமெல்லாம் பாவத்துக்கென்றல்ல, உமது மகிமைக்கென்றும் ஏழைச் சகோதரரின் பிரயோசனத்துக்கென்றும் உபயோகித்து, சமாதானத்தோடுஞ் சுகத்தோடும் அனுபவிக்கும்படிக்கு, உமது திவ்விய ஆசீர்வாதத்தை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆ, தயவுள்ள கர்த்தாவே, இனிமேலும் எங்கள் தேசத்தை மழையினால் செழிப்பாக்கி, எங்கள் ஆத்துமாக்களுக்குஞ் சரீரங்களுக்குந் தேவையான எல்லா நன்மைகளையும் எங்களுக்கு அருளிச்செய்யும். இப்படி நாங்கள் இந்தக் கிருபையின் காலத்தில் எங்களை மரணத்துக்கு ஆயத்தம்பண்ணி, கடைசியில் முழு லோகத்தின் முடிவாகிய அறுப்பு நாளிலே நாங்கள் கோதும்பைக்கு ஒப்பானவர்களாய் வானத்தின் களஞ்சியங்களில் சேர்க்கப்பட்டு, எல்லாப் பரிசுத்தவான்களோடுங்கூட வான அப்பத்தைப் புசித்துச் சீவ தண்ணீரைக் குடிக்கப் பாத்திரவான்களாகும்படி, தேவரீர் எங்களுக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

---

## இராப்போசன விருந்தாடிகளுக்குச் சொல்லும் புத்திமதி.

(௩௨-ம் பக்கத்தில் காண்க.)

பிரியமான இராப்போசன விருந்தாடிகளே, நீங்கள் கர்த்தருடைய பந்தியில் அவருடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் புசித்துக்குடிக்க இங்கே வந்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த மகா பரிசுத்த ஞான திரவியத்தை ஆக்கினைத் தீர்ப்புக்காக வாங்காமல், உங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக வாங்கும்படி, பின்னால் சொல்லப்படும் நாலு காரியங்களைக் கவனிக்கவேண்டியது. முதலாவது, நீங்கள் பராபரனுக்கு உண்மையாய்ப் பயந்து, உங்கள் பாவங்களை அறிந்து, அதுகளுக்காக உத்தமமாய் மனஸ்தாபப்பட்டு, பரிசுத்த ஆவியின் கிருபையால் பராபரனண்டைக்குத் திரும்பவேண்டியது. இரண்டாவது, பிதாவாகிய



பராபரன் தமது ஒன்றான குமாரனும் நமது மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்கள் பாவங்களை எல்லாம் கிருபையாய் மன்னித்து, பரிசுத்த ஆவியையும் நித்திய சீவனையும் உங்களுக்கு அளிப்பாரென்கிற சுவிசேஷ வாக்குத்தத்தத்தை நீங்கள் உறுதியாய் விசுவாசிக்கவேண்டியது. மூன்றாவது, இந்த விசுவாசத்தோடு நீங்கள் தமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரத்தையும் இரத்தத்தையும் வாங்கி, பிதாவாகிய பராபரன் தமது நேச குமாரனை உங்களுக்காக மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததின் நிமித்தம் அவரைப் புகழ்ந்து இஸ்தோத்திரித்து, அவர் தமது ஆவியைக்கொண்டு உங்களை மரணபரியந்தம் மெய்விசுவாசத்தில் நிலைத்திருக்கப்பண்ணவேண்டுமென்று அவரை மன்றாடவேண்டியது. நாலாவது, கிறிஸ்துவுக்குள் உங்களைச் சிநேகிக்கிற பராபரனுக்கு மகிமையுண்டாக நீங்கள் உங்கள் துர் நடக்கையை விட்டு, அவருக்குப் பயந்து, அவருடைய திருவசனத்தைச் சந்தோஷமாய்க் கேட்டு, இயேசுவின் நாமத்திலே அவரை நோக்கிச் செபம் செய்து, உங்களில் அவனவன் தனதன் அந்தஸ்திலே தேவபத்தியாய் நடந்து, உங்களுக்கு உண்டாகும் உபத்திரவத்திலே பொறுமையாயிருந்து, பராபரனையும் பிறத்தியாரையுஞ் சிநேகிக்கிற சிநேகத்திலே பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படிகிறோமென்கிற பிரதிக்கினையோடு பரிசுத்த இராப்போசனத்தைச் சேரவேண்டியது. நீங்கள் இப்படி செய்யும்படிக்குப் பிதாவாகிய பராபரன் தமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிசுத்த ஆவியைக்கொண்டு உங்கள் எல்லாருக்கும் கிருபைசெய்வாராக. ஆமேன்.

# V.

# தேவாராதனை துவக்கத்திலும் முடிவிலும் உபதேசி செய்யுஞ் செபங்கள்.

---

சாதாரண நாயிற்றுக் கிழமைகள்.

## 1. காலை ஆராதனை.

### a. துவக்குகிற செபம்.

நரசீவதயவும் கிருபையுமுள்ள கர்த்தாவாகிய திரியேக பராபரனே, உம்முடைய சந்நிதிக்கு முன்பாகப் பணிந்து ஆராதனைசெய்து, உம்முடைய திருவசனத்தைக் கேட்டுப் படித்து, கிருபையையும் ஆசீர்வாதத்தையும் அடையும்படிக்கு, தேவரீருடைய மேய்ச்சலின் ஆடுகளும் பிள்ளைகளுமாகிய நாங்கள் இங்கே கூடிவந்திருக்கிறோம். கர்த்தாவே, எங்களை ஆசீர்வதித்து நாங்கள் ஆத்துமபசிதாகத்தோடே உம்முடைய திருவசனத்தைக் கேட்டு, அதை நன்றுஞ் சற்குணமுமான இருதயத்திலே காத்துப் பொறுமையோடே கனி கொடுக்கும்படியாக, எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று எங்கள் ஒன்றான இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

அல்லது:

எங்களை மோட்சத்துக்கென்று உண்டாக்கின பிதாவாகிய பராபரனே, எங்களைக் கிருபையாய் மீட்டுக்கொண்ட கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவே, எங்களை மனந்திருப்பி ஆற்றித்தேற்றுகிற பரிசுத்த ஆவியே, தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்யுஞ் சத்திய போதகங்களை விசுவாசமுள்ள மனதோடே கேட்கும்படிக்கு, இங்கே கூடிவந்திருக்கிறோம். தேவரீர் எங்களைக் கிருபையாய் நோக்கிப்பார்த்து, எங்களுக்குண்டான இருளடைந்த புத்தியை நீக்கிப்போட்டு, ஞானமுள்ள புத்தியைத் தந்து, நாங்கள் கேட்கிற உம்முடைய வசனத்தின்பேரில் கவனமாயிருந்து, அதினாலே குணப்பட்டு இரட்சிப்பு அடையக் கிருபைசெய்ய வேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய்க் கெஞ்சி மன்றாடுகிறோம், சுவாமி. ஆமேன்.

### b. முடிக்கிற செபம்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனே, உமக்கு இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் கனமும் மகிமையுந் துதியும் உண்டாவ



தாக. நாங்கள் இப்போது கேட்ட உமது திருவசனம் எங்களுக்குள் நித்திய சீவனுக்கென்று திரளான கனிகளைக் கொடுக்கும்படி அநுக்கிரகஞ்செய்வீராக. தேவரீர் எங்கள் உட்படுதலையும் புறப்படுதலையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்குங் காப்பாற்றி, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்கு நித்திய ஆசீர்வாதத்தையுஞ் சமாதானத்தையுந் தந்தருளுவீராக, சுவாமி. ஆமேன்.

அல்லது:

அளவில்லாத தயவுள்ள பராபரனே, தேவரீர் சத்திய போதகங்களால் எங்களுக்கு இப்போது மோட்ச வழியைக் காட்டியருளினதற்காக உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இப்படி நீர் காட்டியருளின மோட்சவழியிலே நாங்கள் உத்தமமாய் நடந்து, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மரணபரியந்தம் உறுதியாய் விசுவாசித்து, மோட்ச இராச்சியத்தை அடைகிறதற்கு வேண்டிய கிருபையையுந் தயவையுங் கட்டளையிடவேண்டுமென்று பணிந்த மனதோடே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

---

## 2. அந்தி ஆராதனை

### a. துவக்குகிற செபம்.

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரை ஆர்ப்பரியுங்கள். கர்த்தருக்கு மகிழ்ச்சியோடே ஆராதனைசெய்து, கம்பீர சத்தத்தோடே அவர் முன்பாக வாருங்கள். கர்த்தரே பராபரனென்று அறியுங்கள். நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவருடைய சனமும் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினார். அவர் வாசல்களைத் தமக்குச் சனமும் தமது மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினோர். அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை இஸ்தோத்திரியுங்கள். ஏனெனில் கர்த்தர் நல்லவர்; அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. ஆமேன்.

அல்லது:

ஆண்டவரே, எங்களோடே தங்கியிரும்; அதேனென்றால் அந்திநேரமாகிப் பொழுது சாய்ந்துபோயிற்று.

கர்த்தர்: நீ குறைப்படாதேபோனால், உன் விளக்குத்தண்டை அதினிடத்தை விட்டுப் பேர்ப்போம் என்றார்.

ஆண்டவரே, ஆரண்டைக்குப் போவோம், உம்மில் நித்திய சீவனுடைய வசனங்கள் உண்டாயிருக்கிறதே.

அவர் நம்முடனே பேசி வேத எழுத்துக்களை நமக்குத் திறந்து சொல்லும் போது நம்முடைய இருதயம் நமக்குள் பற்றி எரிகிறதாயிருக்கவில்லையோ.

ஆண்டவரே, எங்களோடே தங்கியிரும்; அதேனென்றால் அந்திநேரமாகிப் பொழுது சாய்ந்துபோயிற்றே, சுவாமி. ஆமேன்.

### b. முடிக்கிற செபம்.

இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய வீட்டிலே நிற்கிற கர்த்தரின் ஊழி
யக்காரரே, எல்லாரும் கர்த்தரை இஸ்தோத்திரியுங்கள். உங்கள் கைகளைப் பரி
சுத்த ஸ்தலத்துக்கு நேராக எடுத்து, கர்த்தரை இஸ்தோத்திரியுங்கள். வான
த்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் உன்னைச் சீயோனிலிருந்து ஆசீர்வதிக்
கக் கடவார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே.
ஆமேன்.

அல்லது:

ஆண்டவரே, இப்போது உமது அடியானை உம்முடைய வார்த்தையின்படி
சமாதானத்துடனே அனுப்பிவிடுகிறீர்; ஏனென்றால் புறச்சாதிகளுக்குத் தெளி
வையும் உம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையையும் உண்டாக்கும்
வெளிச்சமாகத் தேவரீர் சகலசனசதளங்களுடைய முகத்துக்குமுன்பாக ஆயத்
தம்பண்ணின உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டது, சுவாமி. ஆமேன்.

---

## கிறிஸ்து வருகையின் நாயிறுகள்.

### a. துவக்குகிற செபம்.

அளவில்லாத மகிமையுள்ள பராபரனே, நரசீவதயவுள்ள பரம பிதாவே,
தேவரீர் உம்முடைய ஒன்றான குமாரனை எங்கள் இரட்சகரும் இராசாவுமாக இவ்
வுலகத்தில் அனுப்பின மட்டில்லாத கிருபைக்காகவும், அவர் தமது கிருபையின்
சகல நன்மைகளோடும் எங்களண்டைக்கு வருகிறதற்காகவும், உம்மை நமஸ்க
ரித்து வணங்கி, இந்த உச்சிதமான போதகங்களை உம்முடைய சுவிசேஷத்தினால்
கேட்கும்படிக்கு, இங்கே கூடிவந்திருக்கிறோம். ஆ, தயவுள்ள சுவாமி, நாங்கள்
எங்களண்டைக்கு வருகிற அவரை ஞானப்பாட்டுகளால் கீர்த்தனம்பண்ணி,
அவர் நாமத்திலே திடம்பிக்கையாய் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்து,
அவர் வருகையைப் பற்றிய சுவிசேஷத்தைக் கவனத்தோடும் ஆத்துமபசிதாகத்
தோடுங் கேட்டு ஏற்றுக்கொள்ள எங்களை எழுப்பிவிட்டருளும். நாங்கள் அந்தச்
சுவிசேஷ சத்தியத்தைப் பெரியபொக்கிஷமாக எண்ணி, எங்கள் இருதயங்களில்
ஸ்திரப்படுத்தி, உமக்கு மகிமையாகவும் எங்கள் கிறிஸ்துமார்க்கத்துக்குப் பாத்
திரமாகவும் நடந்துவரும்படிக்கு, பரிசுத்தஆவியைக்கொண்டு எங்களுக்கு ஒத்
தாசை செய்தருளும். எங்கள் இரட்சிப்பின் கர்த்தராகிய தேவரீருக்குள்ளே நாங்
கள் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கிறோம். உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு
இஸ்தோத்திரம் உண்டாவதாக. ஆமேன்.





### b. முடிக்கிற செபம்.

உன்னதபராபரனுடைய ஒன்றானகுமாரனும், எங்கள் இரட்சகருஞ் சகாயரு
மாக இந்த லோகத்தில்வந்த கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் லோ
கத் தோற்றத்துக்கு முன்னே உம்முடைய பிதாவினிடத்தில் உமக்கு உண்டாயி
ருந்த தெய்வமகிமையை விட்டு, இவ்வுலகத்திலே இறங்கிவந்து, பரமநன்மைகளி
னாலே எங்களை ஆசீர்வதித்தருளினீர். தேவரீர் மனுஷசாதிக்குச் செய்த இரட்சிப்
புள்ள கிருபை இன்னதென்று நாங்கள் இப்போது கேட்டுக்கொண்டு வந்தோம்.
நாங்கள் கேட்ட அருமையான சத்தியங்களை மறவாமல், நன்றியறிதலோடு அது
களை ஞாபகப்படுத்திக்கொண்டு, உத்தம கிறிஸ்தவர்களுக்கொத்தபடி வெளிச்
சத்தின் பிள்ளைகளாக நடந்து வருகிறதற்கு எங்களுக்கு ஒத்தாசைபண்ணும்.
இப்போது பிரசங்கிக்கப்பட்ட வசனத்தை நாங்கள் கவனமாய்க் கேளாமல் தப்பி
தம்பண்ணினோமேயாகில், நாங்கள் இவ்விடத்திலிருந்து புறப்படும் முன் அதை
உணர்ந்தறிந்து, அதுக்காக மன்னிப்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்
டவர்களாக எங்கள் வீடுகளுக்குப் போகும்படி தயவு செய்தருளும். எங்கள் இரட்
சிப்பின் கர்த்தாவே, உம்முடைய சமாதானம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்
மேலும் வந்து நிலைநிற்பதாக. கர்த்தருடைய நாமத்தினால் வந்திருக்கிறவருக்கு
இஸ்தோத்திரம். ஓசியுன்னா, எங்களை இரட்சித்து, எங்களுக்கு ஒத்தாசைபண்ணி
யருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் பிறந்த பண்டிகை.

### a. துவக்குகிற செபம்.

சர்வ நன்மை சுபாவமும் நரசீவ தயவுமுள்ள பராபரனே, எங்கள் கர்த்தரும்
இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, தேவரீர் பாவம் நிறைந்த லோ
கத்தை அத்தனையாய்ச் சிநேகித்து, உமது ஒன்றான குமாரனை மெய்யான மனுஷ
னாகப் பிறக்கச்செய்து, அவருக்குள் பரம நன்மைகளினாலுஞ் சகலவித ஆசீர்வா
தத்தினாலும் எங்களை ஆசீர்வதித்ததற்காக உம்மைத் துதிக்கவும் மகிமைப்படுத்த
வுங் கூடிவந்திருக்கிறோம். நாங்கள் இவ்விடத்திலே உமக்குப் பிரியமானபடி மனப்
பூர்வமாய் உமக்கு மகிமையாகப் பாடவும், எங்கள் இஸ்தோத்திரப்பலிகளை உம்மு
டைய சன்னிதிக்கு முன்பாக உத்தம கருத்தோடே செலுத்தவும், தேவரீர் இயேசு
கிறிஸ்துவைக்கொண்டு எங்களுக்குக் கட்டளைபண்ணின உச்சிதமான சுவிசேஷத்
தைக் கேட்கவும், அதை எங்களுக்கு நித்திய ஆசீர்வாதமாகப் பலிக்கப்பண்ணிக்
கொள்ளவும், பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும்.
எங்கள் இரட்சிப்பின் பராபரனே, உமக்குள்ளே நாங்கள் இன்றைக்கு அக்களிப்
பாயிருந்து, சந்தோஷப்படுவோம். மட்டில்லாத நரசீவ தயவுள்ள பரம பிதாவே,
எங்களோடே கூட இரும்; எங்களை ஆசீர்வதியும். இன்று உம்முடைய மகத்துவ
மான நாமத்தை எங்களுக்குள்ளே வெளிப்படுத்தியருளும், சுவாமி, ஆமேன்.

b. முடிக்கிற செபம்.

பரலோகத்திலிருந்து பூலோகத்தில் வந்து மெய்யான மனுஷனாகப் பிறந்த பராபரனுடைய ஒன்றான குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் தேவ மகிமையுள்ளவராயிருந்தும், உம்மைத் தாழ்த்தி ஊழியக்காரனுடைய வேஷத்தை எடுத்துக்கொண்டீர். தேவரீர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாங்கள் உம்முடைய தரித்திரத்தினாலே ஐசுவரியமுள்ளவர்களாகும்படிக்குத் தரித்திரரானீர். ஆ, தயவுள்ள இயேசுவே, பரம ஐசுவரியங்களினாலே எங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம். உம்முடைய சுவிசேஷத்தினாலே எங்களுக்கு அறிவிக்கப்பட்ட பரம நன்மை பாக்கியங்களை நாங்கள் பெற்று அனுபவித்துக்கொள்ளவும், நாங்கள் உம்மாலே ஞானமும் நீதியும் பரிசுத்தமும் பாக்கியமும் உள்ளவர்களாகவும், கிருபைசெய்தருளும். பரம சேனைகள் நீர் பிறந்த நாளிலே சந்தோஷப்பட்டதுபோல், நாங்களும் உமக்குள்ளே களிகூர்ந்து சந்தோஷப்படவும், மேய்ப்பர் உம்மை ஆசையாய்த் தேடி மகிமைப்படுத்தினதுபோல், நாங்களும் உம்மைக் கருத்தாய்த் தேடி, உம்முடைய நாமத்தைப் பிறத்தியாருக்கும் அறிவித்து மகிமைப்படுத்தவும், உம்முடைய பிறப்பின் பலனை எங்களுக்குப் பலிக்கப்பண்ணி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய சமாதானத்தை எங்களுக்குத் தந்தருளும். மனுஷனாகப் பிறந்த இரட்சகராகிய உமக்கும் உம்மை அனுப்பின பரமபிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் சதாகாலங்களாய் இஸ்தோத்திரமும் மகிமையும் உண்டாவதாக, சுவாமி. ஆமேன்.

---

## வருஷப் பிறப்பின் பண்டிகை.

a. துவக்குகிற செபம்.

சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாயிருக்கிற பராபரனே, சகல நல்ல வரங்களையுங் குறைவற்ற ஈவுகளையும் அளிக்கிற பரம பிதாவே, இவ்வருஷத்தின் முதல் நாளாகிய இன்றைக்கு நாங்கள் மனமகிழ்ச்சியோடேயுங் கம்பீரத்தோடேயும் உம்முடைய தெய்வாலயத்தில் பிரவேசித்து, தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த தயவின் ஐசுவரியத்தையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளின திரளான உபகாரங்களையும் நினைவுகூர்ந்து, அதற்காகச் சந்தோஷமுள்ள மனதோடே உம்மை நமஸ்கரித்து வணங்கித் துதிக்கிறோம். ஆ, தயவுள்ள கர்த்தாவே, நாங்கள் செய்த பாவக்குற்றங்களை மன்னித்து, புதிதான ஆவியையும் புது இருதயத்தையும் எங்களுக்குள்ளே சிருஷ்டித்து, எங்களை உம்முடைய சத்தியத்திலே நடக்கிற நவமான மனுஷர்களாக்கியருளும். தேவரீர் இன்றைக்கு உம்முடைய வசனத்தினால் எங்களில் நன்றியறிகிற மனதையும் உருக்கமான சிநேகத்தையும் உறுதியான நம்பிக்கையையும் உண்டாக்கி, இவ்வருஷத்திலே நாங்கள் ஒவ்வொரு நாளையும் உமக்கு மகிமையாகவும், எங்களுக்கு இரட்சிப்பாகவும், மற்ற மனுஷர்களுக்கு நன்மையாகவும் பின்னிடும்படிக்கு, நவமான புத்தியையும் சத்துவத்தையும் எங்களுக்குத் தந்தருளும். எங்கள் பிரார்த்தனையையுஞ் செபத்தையும் உமக்குப் பண்ணும் ஆராதனையையும் இயேசு-கிறிஸ்துவின் நிமித்தம் பிரியமாய் ஏற்றுக்கொண்டருளும், சுவாமி. ஆமேன்.



b. முடிக்கிற செபம்.

சிநேகமும் இரக்கமும் நிறைந்த பராபரனே, தேவரீர் இன்றைக்கு உம்முடைய திருவசனத்தினாலே உம்முடைய தயவை எங்களுக்கு நவமாக வெளிப்படுத்தினபடியினாலே, நாங்கள் உமக்குள்ளே பூரிப்பாகிச் சந்தோஷப்படுகிறோம். தேவரீர் இயேசுகிறிஸ்துவுக்குள் எங்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஆசீர்வாதத்தையுஞ் சமாதானத்தையும் நவமாக எங்கள்மேலும் எங்கள் பெரியோர்கள் உபகாரிகள் போதகர் சிநேகிதர்மேலும் வந்து நிலை நிற்கப்பண்ணும். இவ்வருஷத்தில் பஞ்சம் படை கொள்ளைநோய் முதலானதுகள் இல்லாமல் எங்கள் ஆத்துமமுஞ் சரீரமும் சமாதானமாய் வாழும்படிக்குத் தயவுசெய்தருளும். ஆ, சுவாமி, போன வருஷத்திலே எங்களுடைய நடுவிலிருந்த அநேகம் பேர் இம்மையில் தங்களுடைய ஓட்டத்தை முடித்து, மறுமைக்குப் போனார்கள். தேவரீர் இவ்வருஷத்திலே எங்களுக்குள்ளே ஆரை அழைத்துக்கொள்ளுவீரென்பதை அறியாத நாங்கள் புத்திமான்களாகும்படிக்கு, எங்களுடைய நாட்களை எண்ண எங்களுக்குப் படிப்பித்தருளும். நாங்கள் எங்கள் நாட்களை மாயையிலே பின்னிடாமல், ஒவ்வொரு நாளிலும் நாங்கள் இரட்சிப்புக்கென்று ஞானமுள்ளவர்களாகவும், ஒருவரை ஒருவர் தற்கரிசனமாய்ச் சிநேகிக்கிற சிநேகத்திலேயும் உம்முடைய கிருபையின் ஐக்கியத்திலேயும் நிலைநிற்கவும், இயேசு என்கிற நாமத்தினாலே நாள் கழிக்கவும் தயவுபண்ணியருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தருடைய பாடுபடுதலின் நாட்கள்.

a. துவக்குகிற செபம்.

அளவில்லாத இரக்கமுள்ள பராபரனே, பாவத்திலே விழுந்து ஆக்கினைக்குப் பாத்திரராயிருக்கிற எங்களுக்குத் தேவரீர் இரங்கி, எங்கள் பாவ நிர்ப்பந்தத்திலிருந்து எங்களை இரட்சித்து, உம்மோடே ஒப்புரவாக்கும்படிக்கு, உம்முடைய சொந்தக் குமாரனைப் பாராமல், எங்களெல்லாருக்காகவும் அவரைப் பாடுகளுக்கும் மரணத்துக்கும் ஒப்புக்கொடுத்தீர். அவர் எங்களுக்காகப் பட்ட அகோரப் பாடுகளை நாங்கள் எங்களுக்கு எழுப்புதலும் பலனுமாகத் தியானம்பண்ணி, அதுகள் எங்கள் இருதயத்திலே நன்றாய்ப் பட்டுருவும்படிக்கு, உம்முடைய வெளிச்சத்தினாலே எங்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் மனதைப் பற்றி எரியப்பண்ணும். அவருடைய பாடுகளிலே வெளியாகிற உம்முடைய கண்டிப்பான நீதியையும் அத்தோடேகூட எங்களுக்குக் காண்பிக்கப்பட்ட ஜீவ தயவையும் எங்கள் இரட்சகர் தம்முடைய பாடுகளிலே எங்களுக்குப் பாராட்டின அளவற்ற பட்சத்தையும் உணர்ந்தறிகிறதற்கான நல்ல உணர்வை எங்களுக்குள்ளே உண்டுபண்ணியருளும். நாங்கள் அவருடைய சிலுவையின் வசனத்தை எங்களுக்குச் ஜீவனுள்ள சுவிசேஷமாகக் கேட்டு, மனதிலே வைத்து, அதின் திவ்விய பலத்தினாலே எங்கள் பாவங்களை உணர்ந்து, எங்கள் இருதயம் கரைந்துருகி, அவர் எங்களுக்கு உண்டுபண்ணின குறையற்ற நீதியைப் பற்றிப்பிடித்து, உருக்கமாய் அவரைச் சிநேகித்துக்கொண்டே வருகிறதற்கு நாங்கள் மிகவும் எழுப்பப்பட, பரிசுத்த ஆவியைக் கொண்டு எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

b. முடிக்கிற செபம்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டியும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் எங்களுக்காக உம்மைப் பிதாவுக்குப் பலியிட்டு, பாவக்கேட்டிலேயிருந்து எங்களை மீட்டு இரட்சிக்க, உம்முடைய ஆத்துமத்திலேயுஞ் சரீரத்திலேயும் அத்தனை கஸ்திவேதனை அகோரமான பாடுகளைப் பட்டு, சிலுவையிலே உம்முடைய சீவனைவிட்டு மரணமடைந்தீரென்று எங்களுக்கு உம்முடைய சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தின தயவுக்காக உமக்கு இஸ்தோத்திரம். தேவரீர் எங்களுக்கு இரட்சிப்புண்டாக எத்தனை வருத்தப்பட்டுப் பிரயாசப்பட்டீரென்பதை நாங்கள் மறவாமல், எங்கள் இருதயத்திலே வைத்து, எப்போதும் நன்றியறிகிற மனதோடே தியானித்து, உம்முடைய அகோரமான பாடுகளுக்குக் காரணமாயிருந்த பாவத்துக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்க எங்களை எழுப்பிவிட்டருளும். நாங்கள் உத்தம கிறிஸ்தவர்களாக உம்மை விசுவாசித்து, உமதுபேரில் நம்பிக்கைவைத்து, அனலான சிநேகத்தினாலே உம்மை அங்கிகரித்து, உம்முடைய பாடுகளிலே காண்பித்த நல்ல மாதிரியை நாங்கள் பின்பற்றி, நாங்களும் மற்ற மனுஷர்களுக்குத் தாழ்மையையும் மெத்தனவு பொறுமை சிநேகத்தையுங் காண்பிக்கத் தயவுசெய்தருளும். இந்த உச்சிதமான புண்ணியங்களிலே நாங்கள் உமக்கு மேன்மேலுஞ் சாயலாகி, உம்மை மரணபரியந்தம் மகிமைப்படுத்தி, தேவரீர் உம்முடைய பாடுகளினாலே எங்களுக்குச் சம்பாதித்தருளின மோட்ச இராச்சியத்திலே உட்பிரவேசிக்க மிகுந்த கருத்தோடேயும் உண்மையோடேயும் பிரயாசப்பட்டுக்கொண்டே வரும்படியாக, எங்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை.

a. துவக்குகிற செபம்.

எங்களை உம்முடைய மிகுந்த இரக்கத்தின்படியே அழிவுங் கறையும் வாடுதலுமற்ற சுதந்தரத்தின் சீவனுள்ள நம்பிக்கைக்கென்று இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே மறுபடியுஞ் செனிப்பித்த பராபரனும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவுமாயிருக்கிற மகிமையுள்ள கர்த்தாவே, தேவரீர் உம்முடைய கிருபையின் ஆலோசனையையும் எங்களை இரட்சிக்கிற பெரிய இரக்கத்தையும் முற்றும் முடிய நிறைவேற்றி, உம்மையும் உம்முடைய ஒன்றான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் மகா ஆச்சரியமான பிரகாரமாக மகிமைப்படுத்தினீர். நாங்கள் இந்த நாளிலே அவருடைய உயிர்த்தெழுதலின் சந்தோஷமான சுவிசேஷத்தை அதிகக்கருத்தும் விருப்பமுமாய்க் கேட்டுத் தியானித்து, எங்களுக்கு ஆறுதலுஞ் சந்தோஷமுமாக எங்கள் மனதிலே காத்துக் கொள்ளும்படி, எங்களுக்குக் கவனத்தையும் புத்தியையும் தந்தருளும். நாங்கள் இனிப் பாவத்திலே மரித்தவர்களைப்போல் இராமல், அவரோடேகூட நவமான சீவனுக்கென்று எழுந்திருந்து, அதிலே உத்தம கிறிஸ்தவர்களாக நடக்கத் திராணியுள்ளவர்களாகி, நித்தியசீவனின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டு, அதில் உறுதிபாய்க் காக்கப்படுகிறதற்கு, பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களுக்கு உதவிசெய்தருளும், சுவாமி. ஆமேன்.



b. முடிக்கிற செபம்.

மரணத்தைச் செயங்கொண்டு வெற்றிவேந்தராக உயிரோடே எழுந்தருளின மகிமையுள்ள கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உம்முடைய மகத்துவமான உயிர்த்தெழுதலையும் அதினாலே எங்களுக்கு வருகிற சுகிர்தமான பலன்களையும் எங்களுக்கும் வெளிப்படுத்தின தயவுக்காக நாங்கள் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். உம்மைப் பத்தியோடே தேடின உம்முடைய சீஷப்பிள்ளைகள் உம்முடைய உயிர்த்தெழுதலினாலே சந்தோஷப்பட்டு, உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெற்றதுபோல், நாங்களும் உம்முடைய உயிர்த்தெழுதலின் வசனத்தினாலே எழுப்பப்படவும், எங்கள் மனது பற்றியெரியவும், எங்கள் விசுவாசம் பெலன்கொள்ளவும், எங்களுக்குள்ளே ஞான சீவனை உண்டுபண்ணியருளும். நாங்கள் உம்முடைய உயிர்த்தெழுதலினாலே ஆறுதலையுஞ் சமாதானத்தையும் அடைந்து, சாகும்வேளையிலே சீவனுள்ள இரட்சகராகிய உம்மை அண்ணாந்துபார்த்து, மோட்சத்தின் நம்பிக்கையினால் மரணத்தின் பயங்கரத்தை மேற்கொண்டு, தேவரீர் பாடுபட்டு, உம்முடைய மகிமையில் உட்பிரவேசித்ததுபோல், நாங்களும் எல்லா வருத்தங்களுக்கும் நீங்கலாகி, உம்முடைய மகிமையிலே உட்பிரவேசித்து உம்மோடே சதாகாலமாக நித்தியசீவனிலே சந்தோஷமாய் வாழுகிறதற்கு, எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

a. துவக்குகிற செபம்.

பரமண்டலங்களுக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்திலே உளுக்கார்ந்து, மகிமையினாலுங் கனத்தினாலும் முடிசூட்டப்பட்ட எங்கள் காரியக்கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் வானத்திலும் பூமியிலும் உண்டான சகல வல்லமையையும் பெற்றுக்கொண்டு, உம்முடைய இரத்தத்தினாலே உமக்குச் சொந்தமாக மீட்டுக்கொண்ட மனுஷர்களுக்கு இரட்சகரும் இராசாவுமாக்கப்பட்டிருக்கிறீரே. தேவரீர் பரத்துக்கேறின இன்றுதிருநாளில் நாங்கள் உம்முடைய மகிமையைத் தியானிக்கிறதற்கும், அதினாலே சந்தோஷப்படுகிறதற்கும், எங்களுக்குப் பரமசுவாகக் கட்டளையிட்ட உம்முடைய சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, அதினால் எங்களுக்குள்ளே பரம சிந்தையுண்டாகிறதற்கும், உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும். தேவரீர் மனுஷருக்கென்று பெற்றுக்கொண்ட வரங்களை எங்களுக்கும் அருளிச்செய்து, பரமுலவாப் பிரசாதத்தினாலும் ஆசீர்வாதத்தினாலும் எங்களைச் சந்தோஷிப்பித்தருளும், சுவாமி. ஆமேன்.

### b. முடிக்கிற செபம்.

மோட்சவாசஸ்தலங்களில் உட்பிரவேசித்து, பரமபிதாவினாலே மகத்துவத்தின் வலதுபாரிசத்தில் உயர்த்தப்பட்டிருக்கிற எங்கள் அருமையான இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் பரத்துக்கேறின உம்முடைய மகிமையைச் சுகிர்தமான சுவிசேஷத்தைக்கொண்டு எங்களுக்கு வெளிப்படுத்தின உபகாரத்துக்காக உமக்குத் துதியுங் கனமும் உண்டாவதாக. நாங்கள் இப்போது உம்முடைய மகிமையின்பேரிலே கேட்டறிந்த உச்சிதமான வசனத்தை மனதில் வைத்து, பத்திரப்படுத்தி, பரம சிந்தையோடே இவ்வுலகத்தில் நடந்து, பூமிக்கடுத்த மாயையைத் தேடாமல், எங்கள் சிரசாகிய தேவரீர் போயிருக்கிற மோட்ச வாசஸ்தலங்களிலுள்ள மேலானதுகளை உம்முடைய அவயவங்களாகிய நாங்கள் சகல கருத்துடனே நாடித் தேடிக்கொண்டே வருகிறதுக்கு எங்களை எழுப்பிவிட்டருளும். தேவரீர் உம்முடைய பிதாவண்டைக்குப் போய், அவ்விடத்திலே எங்களுக்கும் ஆயத்தப்படுத்தின வாசஸ்தலத்துக்கு நாங்கள் எங்களைப் பாவத்தினாலே அபாத்திரராக்கிக்கொள்ள ஒட்டாதேயும். எங்கள் சஞ்சரிப்பு இனிப் பரமண்டலங்களிலே இருக்கிறதற்கும், அங்கேயிருந்து மகிமையோடே வரப்போகிற தேவரீரையே நாங்கள் பொறுதி நம்பிக்கையோடு பார்த்துக்கொண்டிருக்கிறதற்கும், கடைசியாக நாங்கள் ஆத்துமத்தோடுஞ் சரீரத்தோடும் உம்முடைய மகிமையில் உட்பிரவேசிக்கிறதற்கும், எங்களுக்கு அனுக்கிரகஞ்செய்தருளும், சுவாமி. ஆமேன்.

## பரிசுத்த ஆவியின் பண்டிகை.

### a. ஆவக்குகிற செபம்.

சகல நல்ல ஈவுக்குங் குறையற்ற வரங்களுக்கும் ஊற்றாயிருக்கிற மகா தயவுள்ள பராபரனே, தேவரீர் உம்முடைய ஒன்றான குமாரன் வாக்குத்தத்தம்பண்ணின பரிசுத்த ஆவியை அனுப்பின இன்று நாளிலே உம்முடைய ஊழியக்காரரை அவருடைய வரங்களினாலே நிரப்பி, உம்முடைய வசனத்தின் பிரசங்கத்தினாலே உம்முடைய சுவிசேஷத்தை உலகமெங்கும் பரம்பிப்போகிறதற்கு அஸ்திபாரம் போட்டதுமன்றி, அஞ்ஞானிகளாயிருந்த எங்களையும் இப்போது உம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டு இற்றையில் வரைக்கும் எங்களுக்கு இரட்சிப்புள்ள அறிவைக் கட்டளைபண்ணினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். இந்த மகா உசிதமான உபகாரங்களை நாங்கள் நினைவுகூர்ந்து, இந்தத் திருநாளைக் கொண்டாட இவ்விடத்தில் கூடிவந்திருக்கிறபடியினாலே, தேவரீர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் பரிசுத்த ஆவியையும் அவருடைய வரங்களையும் எங்களுக்கு அருளிச்செய்து, நாங்கள் கேட்கும் உம்முடைய வசனத்தினாலே பிரகாசிக்கப்பட்டுப் பரிசுத்தமுள்ளவர்களாகி, அறிவு விசுவாசம் சிநேகம் நம்பிக்கையிலே பெலன்கொண்டு, இப்படி இந்தத் திருநாளை எங்களுக்கு ஆசீர்வாதமாகக் கொண்டாடுகிறதற்குக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.



### b. முடிக்கிற செபம்.

எங்கள் இரட்சிப்புக்கு அஸ்திபாரமாயிருக்கிற இரட்சகருங் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் இந்தத் திருநாளிலே உம்முடைய அப்போஸ்தலர்மேல் பரிசுத்த ஆவியை ஊற்றி, சுவிசேஷத்தின் பிரசங்கத்தினாலே அனேகரை உம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டு, பரிசுத்த ஆவியின் வரங்களினாலே அவர்களை நிறையப்பண்ணினீரே. நாங்களும் இப்போது பராபரனுடைய மகத்துவங்களைக் கேட்டுக்கொண்டு வந்தபடியினாலே, நாங்கள் உம்முடைய வசனத்தின் வல்லமையை எங்களுக்குள்ளே உணர்ந்தறிகிறதற்குக் கிருபைசெய்து, எங்களையும் பரிசுத்த ஆவியினாலும் அவருடைய வரங்களினாலும் நிரப்பியருளும். நாங்கள் அவரால் சத்தியவேதத்திலே நடத்தப்பட்டு, அவருடைய ஏவுதலினாலே பரம பிதாவை அப்பா என்று அழைத்து, பிள்ளைக்கொத்த சிந்தையோடே நித்திய சீவனுக்குப் போகிற வழியில் மரணபரியந்தம் உண்மையுஞ் சாக்கிரதையுமாய் நடந்துகொண்டே வருகிறதற்கும், இனி மோட்ச இராச்சியத்தின் சுதந்தரவாளிகளாகிறதற்கும், எங்களுக்குத் தயவுசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

## பரிசுத்த திரித்துவத்தின் பண்டிகை.

### a. ஆவக்குகிற செபம்.

சர்வ நன்மை சுபாவமுள்ள தயாபரராகிய பராபரனே, தேவரீர் எங்கள்மேலே விசேஷித்த கிருபைகூர்ந்து, உம்முடைய வசனத்தின் பிரசங்கத்தினாலே அஞ்ஞான இருளிலிருந்து எங்களை உம்முடைய சத்தியத்தின் வெளிச்சத்துக்கு வரவழைத்து, ஞானஸ்நானத்தின் வரப்பிரசாதத்தினாலே எங்களை உம்முடைய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, உம்முடைய வசனத்தை எங்களுக்கு அறிவிக்கும் உமது ஊழியக்காரரைக்கொண்டு எங்களை இரட்சிப்புக்கென்று கூப்பிடுகிற உமது கிருபையின் சத்தத்தை அடிக்கடி கேட்கிறதற்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறீரே. தேவரீர் இதுகளெல்லாத்தையும் எங்களுக்கு இலவசமாகக் கட்டளைபண்ணிக்கொண்டு வருகிறபடியினாலே, நாங்கள் இந்தப் பெரிய திரவியத்தை விசேஷித்த உபகாரமாக எண்ணிக்கொள்ளவும், இப்போது உம்முடைய விலையேறப்பெற்ற வசனத்தைக் கருத்துங் கவனமுமாய்க் கேட்டு ஏற்றுக்கொள்ளவும், எங்கள் எல்லாருக்கும் அதினாலே எழுப்புதலும் நல்ல பலனும் உண்டாகவும், எங்களுக்குக் கிருபை செய்தருளும். சத்தியமுள்ள பராபரனாகிய தேவரீரையும் தேவரீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறிகிற உயிரான அறிவு எங்களிடத்தில் உண்டாகிப் பெலன்கொள்ளவும், அதினாலே வரும் நித்திய சீவனை நாங்கள் சாக்கிரதையாய்த் தேடவும், புத்தி சொல்லுகிற போதகருக்கும் அதைக் கேட்கிற சபையாராகிய எங்களுக்கும் பரிசுத்த ஆவியைக்கொண்டு அனுக்கிரகம்பண்ணியருளும், சுவாமி. ஆமேன்.

### b. முடிக்கிற செபம்.

எங்கள் பிரதான குருவுஞ் சர்வலோக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் எங்களுக்கு இரட்சிப்பாக வெளிப்படுத்தின உச்சிதமான நியாயங்களை இப்போது நாங்கள் கேட்டுக்கொண்டு வந்தோம். நாங்கள் அதுகளைக் கேட்கிறவர்களாய் மாத்திரமிராமல், அதுகளின்படி செய்கிறவர்களாகவுமிருந்து, நித்திய சீவனுக்குப் போகும் வழியிலே அதுகளைக் கைவிளக்காகப் பிடித்துக்கொண்டு, வெளிச்சத்தின் பிள்ளைகளாக எங்கள் சீவனுள்ள நாள்மட்டும் நேராய் நடந்துகொண்டுவரும்படி, எங்களுக்குவேண்டிய புத்தியையுந் திராணியையுங் கொடுத்தருளும். நாங்கள் உம்முடைய வசனத்தின் பலத்தினாலே எங்களுக்கு வருஞ் சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் பின்வாங்காமல், உறுதியாய் நிற்கவும், நாள் வட்டத்தில் இரட்சிப்புள்ள அறிவிலேயும் விசுவாசத்திலேயும் உம்மையும் எங்களில் ஒருவர் ஒருவரையுஞ் சிநேகிக்கிற சிநேகத்திலேயும் பொறுதி நம்பிக்கையிலேயும் உமக்குப் பிரியமுள்ள சகல கிரியைகளிலேயும் மரணபரியந்தம் வளர்ந்து வர்த்தித்துப் போகும்படிக்கும், உம்முடைய மோட்ச இராச்சியத்துக்கு நாங்கள் பாத்திரமுள்ளவர்களாகும்படிக்கும், பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## செபதவ ஒருசந்தியின் நாள்.

### a. துவக்குகிற செபம்.

பரிசுத்தமும் நீதியுமுள்ள பராபரனே, நாங்கள் செய்துகொண்டுவந்த பாவங்களினாலே உம்முடைய கோபாக்கினையும் நடுத்தீர்வையும் எங்கள்மேலேவந்து விழுகிறது நியாயமாய் இருந்தும், மகா இரக்கத்தோடும் நீடியசாந்தத்தோடும் எங்களை இற்றையில்வரைக்குஞ் சகித்துக்கொண்டுவந்திருக்கிறீர். ஆ, கர்த்தாவே, நாங்கள் இம்மட்டும் அழிந்துபோகாமலிருக்கிறது உம்முடைய கிருபை. உம்முடைய இரக்கம் இன்னம் முடியவில்லை. அது ஒவ்வொரு நாளிலும் நவமானதாயிருக்கிறதென்றும், உம்முடைய உண்மை மகா பெரிதாயிருக்கிறதென்றும் நாங்கள் ஒத்துக்கொண்டு, எங்கள் பாவங்களுக்காக வெட்கப்பட்டு, உம்முடைய நீடிய சாந்தத்துக்காக ஆச்சரியப்படவேண்டியது. இப்படிப்பட்ட உம்முடைய இரக்கத்தை இனி நாங்கள் வீணாய் அனுபவிக்காமல், இன்றைக்காகிலுந் தேவரீர் எங்களை இரட்சிப்புக்கென்று கூப்பிடுகிற கிருபையின் சத்தத்தைக் கருத்தாய்க் கேட்க எங்கள் காதைத் திறந்து, எங்கள் மன அழுத்தத்தையெல்லாம் அதினாலே நொறுக்கி, நாங்கள் தாமதமில்லாமல் தீவிரமாய் உம்மண்டை திரும்புகிறதற்குப் பரிசுத்த ஆவியினாலே எங்கள் இருதயத்தையுந் தட்டி எழுப்பி, எங்களைக் குணப்படுத்தியருளும். நாங்கள் எங்கள் பாவங்களையுங் கேடுகளையும் நன்றாய் உணர்ந்தறிந்து, இனி அதுகளில் நிலைத்திராமல், இயேசு கிறிஸ்துவின் உத்திரவாத புண்ணியத்தினால் சம்பாதித்த பாவமன்னிப்பையும் இரக்கத்தையும் மெய் விசுவாசத்தினால் கருத்தாய்த் தேடிக் கண்டடைந்து, உம்முடைய ஐக்கியத்துக்குட்பட்டு, மரணபரியந்தம் அதிலே உறுதியாய் நிலைத்திருக்கும்படி எங்களுக்குத் தயவு செய்தருளும், சுவாமி. ஆமேன்.



### b. முடிக்கிற செபம்.

இரக்கமுங் கிருபையுமுள்ள பராபரனே, தேவரீர் இப்போது உம்முடைய நிலையேறப்பெற்ற வசனத்தினாலே எங்களை மறுபடியுங் குணப்படுதலுக்கென்று மகா தயவாய் எழுப்பியருளினீர். ஆ, கர்த்தாவே, இனி எங்களுக்குள்ளே ஒருவரும் பாவத் தூக்கத்திலே கிடந்துவிடாமல், நாங்கள் எல்லாரும் விழித்துக்கொண்டு, தேவரீர் இன்னம் நீட்டியிருக்கிற உம்முடைய கிருபையின் கைக்கு எங்களை ஒப்புவிக்கும்படி, எங்களுக்கு உத்தம கீழ்ப்படிதலையும் மன உற்சாகத்தையுந் தந்தருளும். நாங்கள் கிருபையின் நாளை வீணாய்ப் போக்கி, எங்கள் இரட்சிப்பைக் கருத்தாய்த் தேடாத அசதியையுஞ் சகல பாவங்களையும் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் கிருபையாய் மன்னித்தருளும். நாங்கள் இதுமுதல் எங்கள் சமாதானத்துக்கு அடுத்ததுகளை அதிகச் சாக்கிரதையாய்ச் சிந்தித்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் எங்கள் இரட்சிப்பைத் தேடி, சாகும்மட்டும் உத்தம கிறிஸ்தவர்களாக விசுவாசத்திலேயும் நற்கிரியைகளிலேயும் நடந்துகொண்டு, உம்முடைய மோட்ச இராச்சியத்துக்குப் பங்குள்ளவர்களாகும்படி, பரிசுத்த ஆவியைக்கொண்டு எங்களுக்கு வேண்டிய சகாயம்பண்ணி, எங்களை ஆசீர்வதித்து இரட்சித்துக்கொள்ளும், சுவாமி. ஆமேன்.

---

## பாவமன்னிப்புக்காகச் சொல்லுகிற விவரமான செபம்.

இரக்கமுங் கிருபையுமுள்ள பராபரனே, பாவக்குற்றங்களால் நிறைந்த ஏழைப் பாவியாகிய நான் தாழ்மையும் ஒடுக்க வணக்கமுமாய்த் தேவரீருடைய கிருபையின் ஆசனத்துக்கு முன்பாக என்னைத் தாழ்த்தி விண்ணப்பஞ் செய்ய வருகிறேன். நான் பாவ நித்திரையிலே நிர்விசாரனாயிருந்து கெட்டுப்போகாதபடிக்கு, தேவரீர்தானே பரிசுத்த ஆவியைக்கொண்டு என்னைத் தட்டி எழுப்பி விழிக்கப்பண்ணும். என் பாவங்களையும் பரிதாபமான சீர்நிருவாகங்களையும் அறியத்தக்கதாகப் புத்தியையும் வெளிச்சத்தையும் எனக்குத் தந்தருளும். என் உட்சீரையும் புறச்சீரையும் உம்முடைய வசனத்தின்படியே நான் மன வஞ்சனையில்லாமல் சோதிக்கும்போது, என் மனச்சாட்சி என்னைக் குத்தி, நான் செய்த எண்ணிமுடியாத பாவங்களை எனக்குத் தூண்டிக் காட்டுகிறது. என் மனதிலும் உள்ளிந்திரியங்களிலும் வெகு அசுத்தமான ஆசை இச்சைகளும், வயிற்றின் துக்கக் கவலை, பொருளாசை, பெருமை, நானென்கிற எண்ணமும், மேலெழுச்சி, லோக சிந்தை, வற்மம், அகங்காரம், எரிப்பு, கோபம், மற்றுமுண்டான துர்க்குணங்களும் உண்டாயிருக்கிறது. ஆ, சுவாமி, எனக்குள்ளேயிருக்கிற இந்தப் பாவ ஊற்றிலேயிருந்து வெகு கண்ணிச்சைகளும் அழுக்கான பேச்சுகளும் உமக்கு விரோதமும் மற்றவர்களுக்குத் தடுக்கலுஞ் சேதமுமான வார்த்தைகளும் புறப்படுகிறது. என் கையாலுங் காலாலும் மற்ற அவயவங்களாலும் நான் செய்த பாவங்கள் ஏராளமாயிருக்கிறது. நான் இரகசியமாகவும் பரசியமாகவுஞ் செய்த பாவங்களை மறைத்தாலும், தேவரீர் அதுகளை அறிகிறீர். எண்ணிக்கைக்குள் அடங்காத இந்தக் குற்றங்கள் நிமித்தம் என்னை நரக ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, என்றென்றைக்கும்

கடினமாய்த் தண்டிக்கிற நியாயம். நான் வெகு அநியாயங்களைச் செய்து, உமக்குச் செய்யவேண்டிய ஊழியங்களையும் விசுவாசம் சிநேகம் தேவபத்தி செபத்திலும் மெத்த அசதியாயிருந்து, உமது வசனத்தை வெகுவாய் அசட்டைபண்ணினேன். எனக்கடுத்த வேலைகளிலும் வெகு உண்மைத்தாழ்ச்சிகளைப் பண்ணிச் சோம்பலாய்த் திரிந்து, என் நாட்களை வீணாய்ப் போக்கி, என் இரட்சிப்பைக் கருத்தோடே தேடி நடப்பிக்காதிருந்தேன். பிறத்தியாரைச் சிநேகிக்க வேண்டிய சிநேகத்தையும் இரக்கத்தையுங் காண்பிக்க இல்லை. ஆகையால், பரிசுத்தமும் நீதியுமுள்ள கர்த்தாவே, கனிகொடாத மரத்தைப்போல் இருக்கிற என்னை வெட்டி அக்கினியிலே போடவேண்டியதுதான். ஆ, சுவாமி, நான் என் கண்களை உமக்கு முன்பாக ஏறெடுக்கத் துணியாமல், என் மார்பில் அடித்து: பராபரனே, பாவியாகிய என்மேல் கிருபையுள்ளவராகுமென்று பெருமூச்சுவிட்டுக் கெஞ்சுகிறேன். தேவரீர் எனக்கு இரட்சகராகக் கட்டளையிட்ட உம்முடைய ஒன்றான குமாரனைக்கொண்டு என்னோடு ஒப்பரவாக்கப்பட்ட தகப்பனானீரே. அவர் என் குற்றங்களையும் பாரச்சுமைகளையுந் தம்முடையபேரில் ஏற்றுக்கொண்டு, எனக்காகப் பிணைபட்டு, எனக்கு வரவேண்டிய கோபாக்கினைகளை எனக்குப் பதிலாய்ப் பட்டு உத்தரித்தார். அவர் என்பேரில் வரவேண்டிய உம்முடைய கோபத்தின் உக்கிரத்தைத் தமது ஆத்துமத்திலே அனுபவித்து, மரணபரியந்தந் துக்கப்பட்டு, இரத்தவேர்வை வேர்த்து, மரண அவஸ்தையானார். அவர் பிடிக்கப்பட்டுக் கட்டுண்டு, நியாயமில்லாமல் குற்றவாளியாக்கப்பட்டு, வெகு நிந்தை தூஷணங்களைப் பொறுமையாய்ச் சகித்து, முண்முடி சூட்டப்பட்டு, வெகுவான அடிகளையும் பட்டார். அவர் சிலுவையில் அறையுண்டு, வானத்துக்கும் பூமிக்கும் நடுவாகத் தொங்கி, ஐந்துகாயப்பட்டு, தமது இரத்தத்தை யெல்லாஞ் சிந்தி, மரணமடைந்து, இப்படி என்னை மீட்கும்பொருளாகத் தமது சீவனைவிட்டார். அவர் பட்ட இந்தப் பாடுகள் மரணத்தையும் பார்த்து, அவர் இன்னம் எனக்காக உமது வலதுபாரிசத்திலிருந்து மன்றாடுகிற மன்றாட்டையுங் கேட்டு, என் பாவங்களை எல்லாம் மன்னித்து, என்னை உம்முடைய பிள்ளையாகச் சேர்த்துக்கொண்டருளும். ஆ, பிதாவே, எனக்குச் சுத்தமுள்ள இருதயத்தைச் சிருஷ்டித்து, என்னிடத்திலுண்டான பாவ இச்சைகளைக் கீழ்ப்படுத்தி, உம்முடையபேரிலே நினைவும் பத்தியுமாயிருக்கிற சிந்தையை எனக்குத் தந்தருளும். நான் இனிச் சோதிக்கப்பட்டால், நான் பாவத்துக்குச் சம்மதிக்காமல், அதை வெறுக்கும்படியான பலத்தைக் கொடுத்தருளும். தேவரீர்தானே பாவத்தின் வல்லமையை என்னிலே நிர்மூலியாக்கி, நான் என் மனச்சாட்சியைக் கண்மணியைப்போலே காக்கப் பரிசுத்த ஆவியினால் என்னை ஏவி எழுப்பிவிட்டருளும். என் பலவீனத்துக்கு ஒத்தாசையாக வந்து, நான் இடறிவிழுந்தால், என்னை முற்றிலுந் தள்ளாமல், என்னை அதட்டி, உமது கிருபையின் கரத்தால் என்னைக் கைதூக்கி எடுத்தருளும். நான் உம்மை அறிகிற அறிவிலுங் கிருபையிலும் வளர்ந்து, விசுவாசத்திலுஞ் சிநேகத்திலும் வர்த்தித்து, என் ஆத்தும ஈடேற்றத்தைத் தேடுகிறதில் சாக்கிரதையாயிருக்க எனக்குக் கிருபை செய்தருளும். பிறத்தியாருக்கு மெத்தனவையும் எதிராளிகளுக்குப் பொறுமையையுங் காண்பிக்க, என் இரட்சகர் மாதிரிக்கு என்னைச் சாயலாக்கும். எனக்கு உபத்திரவம் வந்தால், நான் முறுமுறுக்காமல், அதைச் சகித்து, உம்முடைய பாக்கியமான ஐக்கியத்தை விட்டு விலகாதிருக்க என்னை



உறுதிப்படுத்தி, ஆற்றித் தேற்றியருளும். நான் சாகும்வேளை எனக்குத் தெரியாதபடியினாலே, நான் எப்போதும் விழித்துக்கொண்டு செபம் பண்ணுகிறதிலே இடைவிடாதிருந்து, கலக்கமில்லாமல் என் ஆத்துமாவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்து, இந்த லோகத்தைவிட்டு மோட்ச இராச்சியத்திலே சேர்ந்து, நித்திய சீவனின் சுதந்தரத்தை அடையும்படிக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

# VI.

# தவசு சங்கீதங்கள்.

---

## ௬. சங்கீதம்.

எண்ணரம்புக் கின்னரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

உ. கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.

௩. என்மேல் இரங்கும், கர்த்தாவே; ஏனெனில், நான் பெலனற்றிருக்கிறேன். என்னைக் குணமாக்கும், கர்த்தாவே; ஏனெனில் என் எலும்புகள் கலங்கி இருக்கிறது.

௪. என் ஆத்துமம் மிகவும் கலங்கி இருக்கிறது, கர்த்தாவே, நீர் எந்தமட்டும் இரங்காதிருப்பீர்.

௫. திரும்பும், கர்த்தாவே, என் ஆத்துமத்தை விடுவியும். உம்முடைய கிருபையின் நிமித்தம் என்னை இரட்சியும்.

௬. ஏனென்றால் மரணத்தில் உம்மை நினைவுகூருவதில்லை; பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் ஆர்.

௭. என் பெருமூச்சுகளால் இளைத்தேன். இராமுழுதும் என் மெத்தையை மிகவும் ஈரிக்கப்பண்ணி, என் கண்ணீரால் என் கட்டிலை நனைக்கிறேன்.

௮. என் கண் குழி சலிப்பினால் விழுந்துபோயிற்று, என் சத்துருக்கள் அனைவர் நிமித்தந் திரைந்துபோயிற்று.

௯. அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லாரும் என்னை விட்டகன்று போங்கள்; ஏனென்றால் கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.

௰. கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் செபத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்.

௰௧. என் பகைஞர் எல்லாரும் வெட்கி, மிகவும் கலங்கிப் போவார்கள். அவர்கள் பின்னாகத் திரும்பி, அசுப்பிலே வெட்கப்படுவார்கள்.

## ௩௨. சங்கீதம்.

தாவீதின் போதக சங்கீதம்.

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டு, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.



உ. எவன் மேல் கர்த்தர் அவன் அக்கிரமத்தைச் சுமத்தாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடு இல்லாதிருக்கிறதோ, அந்த மனுஷன் பாக்கியவான்.

௩. நான் அடக்கிவைத்தமட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.

௪. ஏனெனில் இரவும் பகலும் என் மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகாலவறட்சிகளைப் போல் வறண்டுபோயிற்று. சேலா.

௫. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன், அப்போது தேவரீர் என் பாவத்தின் அக்கிரமத்தை மன்னித்தீர். சேலா.

௬. இதுக்காகச் சகாயங் கிடைக்குங் காலத்திலே சகல சன்மார்க்கனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வான்; அப்போது வெகு தண்ணீர்களுடைய வெள்ளம் வந்தும், அவனைச் சேராது.

௭. தேவரீர் எனக்கு மறைவிடமாயிருந்து, இக்கட்டுக்கு என்னை விலக்கிக் காத்து விடுவித்தலின் கெம்பீரங்களால் என்னைச் சூழ்ந்துகொள்ளுகிறீர். சேலா.

௮. உனக்கு நாம் புத்தி படிப்பித்து, நீ நடக்கவேண்டிய வழியில் உன்னைப் போதித்து, உன்மேல் வைத்த நம்முடைய கண்ணினால் உனக்கு ஆலோசனை கொடுப்போம்.

௯. உன் கிட்ட சேராவிட்டால், வாராலுங் கடிவாளத்தாலும் வாய்கட்டப்படவேண்டிய குதிரையைப் போலவும் உணர்வற்ற கோவேறு கழுதையைப் போலவும் இராதேயுங்கள்.

௰. ஆகாதவனுக்கு அநேகம் வேதனைகள் உண்டாம்; ஆனால் கர்த்தரை நம்பி இருக்கிறவனைக் கிருபை சூழ்ந்துகொள்ளும்.

௰௧. நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மை இருதயத்தாரே, நீங்கள் அனைவரும் கெம்பீரியுங்கள்.

## ௩௮. சங்கீதம்

நினைப்பூட்டுதலாகப் பாடின தாவீதின் சங்கீதம்.

உ. கர்த்தாவே, உம்முடைய கடுமையில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.

௩. ஏனெனில் உம்முடைய அம்புகள் எனக்குட்பட்டது, உமது கை என்மேல் இறங்கிற்று.

௪. உமது சினத்தால் என் மாமிசத்திலே ஆரோக்கியம் இல்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சமாதானம் இல்லை.

௫. ஏனெனில் என் அக்கிரமங்கள் என் தலையின்மேல் ஏறி, பாரச் சுமையைப்போல் எனக்கு மிஞ்சின பாரமாயிற்று.

௬. என் பைத்தியத்தினால் என் புண்கள் நாற்றமெடுத்து அழுகிப்போயிற்று.

௭. மிகுதியாகவும் மடங்கி ஒடுங்கினேன், நாள் தோறுங் கரிகறுத்துத் திரிகிறேன்.

௮. ஏனெனில் என் குடல்கள் வெட்டையால் நிறைந்திருக்கிறது. என் மாமிசத்திலே ஆரோக்கியம் இல்லை.

முதலாம் பங்கு.

௯. மிருதியாகவே பெலனற்றுப்போய் அலைசடிப்புட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினாலே கதறுகிறேன்.

௰. ஆண்டவரே, உமக்கு முன்பாக என் ஏங்கல் எல்லாம் இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைக்கப்படவில்லை.

௰௧. என் இருதயம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னைவிட்டு என் கண்களுடைய வெளிச்சந் தானும் என்னில் இல்லாதே போயிற்று.

௰௨. என் சிநேகிதரும் என் தோழமாரும் என் வாதைக்கு எதிரே நின்றிருந்து, என்னைச் சேர்ந்தவர்கள் தூரமாய் நிற்கிறார்கள்.

௰௩. என் பிராணனை வாங்கப் பார்க்கிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்; எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் கேடுபாடுகளைப் பேசி, நித்தங் கபடுகளைச் சிந்திக்கிறார்கள்.

௰௪. நானோவெனில் செவிடனைப்போலே கேளாதவனாகவும், தன் வாயைத் திறவாத ஊமையனைப் போலவும் இருக்கிறேன்.

௰௫. கேளாமலும் தன் வாயில் மறு உத்தரவுகள் இல்லாமலும் இருக்கிற மனுஷனைப்போல் ஆனேன்.

௰௬. அதேதென்றால், கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்; என் பராபரனாகிய ஆண்டவரே, தேவரீர் மறு உத்தரவு கொடுப்பீர்.

௰௭. ஏனெனில் என் நிமித்தம் சந்தோஷப்படாதிருப்பார்களாக என்றேன்; என் கால் தள்ளாடும்போது என்மேல் பெருமைப்படுவார்களே.

௰௮. ஏனெனில் நான் தள்ளம்பாற இனமானவன்; என் நோவு எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது.

௰௯. ஏனென்றால் என் அக்கிரமத்தை அறிக்கையிட்டு, என் பாவத்தின் நிமித்தம் விசாரப்பட்டிருக்கிறேன்.

௨௰. ஆனால் என் சத்துருக்கள் வாழ்ந்து பலத்திருக்கிறார்கள். முகாந்தரம் இல்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் பெருத்திருக்கிறார்கள்.

௨௰௧. நன்மைக்குத் தீமை சரிக்கட்டுகிறவர்கள், நான் நன்மையைப் பின்பற்றுகிறபடியால், என்னை விரோதிக்கிறார்கள்.

௨௰௨. கர்த்தாவே! என்னைக் கைவிடாதேயும்; என் பராபரனே, எனக்குத் தூரமாய் இராதேயும்.

௨௰௩. என் இரட்சிப்பாகிய ஆண்டவரே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.

## ௫௧. சங்கீதம்.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

௨. பத்சேபாளிடத்தில் பிரவேசித்திருந்த அவனண்டைக்கு நாத்தான் தீர்க்கதரிசி வந்தபோது அவன் பாடினது.

௩. பராபரனே, உம்முடைய கிருபையின்படி எனக்கு இரங்கி, உமது மிகுந்த இரக்கங்களின்படியே என் மீறுதல்கள் நீங்கி என்னைச் சுத்திகரியும்.

௪. என் அக்கிரமம் நீங்க என்னை மிகவும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.



௫. ஏனெனில் என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்போதும் எனக்குமுன்பாக நிற்கிறது.

௬. தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவத்தை நடப்பித்து, உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேனென்கிறதை நீர் உம்முடைய வசனங்களில் நீதி விளங்கவும் உமது நியாயத்தீர்ப்பில் சுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன்.

௭. இதோ, துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்திலே கர்ப்பந்தரித்தாள்.

௮. இதோ, உள்ளத்தில் உண்மை இருக்க நீர் விரும்புகிறீர்; இரகசியத்திலே ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீராக.

௯. நான் சுத்தமாவதற்கு நீர் ஈசோப்பால் என்னைப் பாவமறப் பண்ணி, நான் உறைந்த மழையிலும் வெண்மையாவதற்கு என்னைக் கழுவுவீராக.

௰. எனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கப் பண்ணும்; அப்போது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

௰௧. என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் மீறுதல்களையெல்லாம் நீக்கும்.

௰௨. சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும், பராபரனே, நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும்.

௰௩. உம்முடைய முகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

௰௪. உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் திரும்பக் கட்டளையிடும்; உற்சாகமான ஆவி என்னைத் தாங்கட்டும்.

௰௫. அப்போது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மண்டைக்குத் திரும்புவார்கள்.

௰௬. என் இரட்சிப்பின் தேவனாகிய பராபரனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடுவியும், அப்போது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரித்துப் பாடும்.

௰௭. ஆண்டவரே, என் உதடுகளைத் திறவும், அப்போது என் வாய் உம்முடைய துதியை அறிவிக்கும்.

௰௮. ஏனெனில் பலியை விரும்பீர், மற்றப்படி அதைச் செலுத்துவேன். சர்வாங்க தகனபலி உமக்குப் பிரியமானதல்ல.

௰௯. பராபரனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; பராபரனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைப் புறக்கணியீர்.

௨௰. சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மை செய்யும், எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

௨௰௧. அப்போது சருவாங்கதகனமும் முழுத் தகனமுமான நீதியின் பலிகளுக்குப் பிரியப்படுவீர்; அப்போது உம்முடைய பீடத்தின்மேலே காளைகளைப் பலியிடுவார்கள்.

## ௱௨. சங்கீதம்.

சிறுமையானவன் தொய்ந்து, கர்த்தருக்கு முன்பாகத் தன் நெஞ்சுதலை ஊற்றிச் செய்யும் விண்ணப்பம்.

௨. கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்; என் கூப்பிடுதல் உம்மண்டைக்குச் சேருவதாக.

௩. எனக்கு நெருக்கம் உண்டாகிய நாளிலே உமது முகத்தை எனக்கு மறைக்காதேயும்; உமது செவியை என்னண்டைக்குச் சாயும்; நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும்.

௪. ஏனெனில் என் நாட்கள் புகையைப்போல் பறிந்தது; என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல் எரியுண்டது.

௫. என் இருதயம் ஒரு பூண்டைப்போலே வெட்டுண்டு உலர்ந்தது; ஆகையால் என் அப்பத்தைப் புசிக்க மறக்கிறேன்.

௬. என் பெருமூச்சின் சத்தத்தினால் என் எலும்புகள் என் மாமிசத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது.

௭. வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழுந் தலங்களில் தங்கிய ஆந்தையைப்போல் ஆனேன்.

௮. நான் நித்திரையில்லாமல் வீட்டின் மேல் தனித்திருக்குங் குருவியைப்போல் இருக்கிறேன்.

௯. நாள்தோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள்; எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டுகிறவர்கள் என்பேரில் ஆணையிடுகிறார்கள்.

௰. ஏனெனில் உமது சினத்தாலும் உமது கடுங் கோபத்தாலும் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களை அழுகையோடே கலக்கிறேன்.

௰௧. ஏனெனில் என்னைத் தூக்கித் தாழத் தள்ளினீர்.

௰௨. என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலானது. நான் ஒரு பூண்டைப்போல் உலருகிறேன்.

௰௩. ஆனால், கர்த்தாவே, தேவரீர் என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

௰௪. தேவரீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரங்குவீராக; ஏனெனில் அதின் மேல் தயவாகிறதற்குக் காலமாம், அதேனென்றால் அதுக்காகக் குறித்த நேரம் வந்தது.

௰௫. ஏனென்றால் உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் ஆசையை வைத்து, அதின் மண்ணுக்குப் பரதபிக்கிறார்கள்.

௰௬. கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்பட்டு,

௰௭. சகாயமற்றவனுடைய விண்ணப்பத்தை அசட்டை பண்ணாமல், அவர்கள் செபத்தை நோக்கிப் பார்க்கும்போது,

௰௮. சாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள இராசாக்களெல்லாம் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்.

௰௯. இது பின்சந்ததிக்கு எழுதப்படும்.

௨௰. கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும்,



௨௧. தம்முடைய பரிசுத்த உயரத்திலிருந்துபார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேலே கண்ணோக்கினார் என்கிறதின் நிமித்தஞ் சிருஷ்டிக்கப்படப்போகிற சனம் கர்த்தரைத் துதிக்கும்.

௨௨. கர்த்தருக்கு ஆராதனை செய்யச் சனசதளங்களும் இராச்சியங்களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளுகையில்,

௨௩. சீயோனிலே கர்த்தருடைய நாமத்தையும் எருசலேமிலே அவருடைய துதியையும் விவரிப்பார்கள்.

௨௪. என் பெலனையோ வழியிலே ஒடுக்கி, என் நாட்களைக் குறுக்குகிறார்.

௨௫. என் பராபரனே, என்னை என் ஆயுசின் பாதியில் எடுத்துக்கொள்ளாதேயும் என்கிறேன். உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறைகளாக இருக்கும்.

௨௬. பூருவத்திலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கைகளின் கிரியையாய் இருக்கிறது.

௨௭. அதுகள் அழிந்து போகும், நீரோ நிலை நிற்பீர்; அதுகளெல்லாம் வஸ்திரம்போலப் பழசாய்ப் போகும், அதுகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர்.

௨௮. நீரோவென்றால் இருக்கிற பிரகாரமாக இருக்கிறீர்; உம்முடைய வருஷங்கள் முடிந்துபோவதில்லை.

௨௯. உமது அடியாரின் பிள்ளைகள் நிலைகொண்டிருப்பார்கள். அவர்கள் வித்து உமக்கு முன்பாக உறுதிப்படும்.

## ௱௩௰. சங்கீதம்.

படிகளின்மேல் நின்று பாடினது.

கர்த்தாவே, தாழ்வுகளிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

௨. ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்; உம்முடைய செவிகள் என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குக் கவனித்திருக்கக் கடவது.

௩. கர்த்தாவே, அக்கிரமங்களை நோக்கிக் கொண்டிருந்தீரானால், ஆர் நிலை நிற்பான், ஆண்டவரே.

௪. ஆனால் உமக்குப் பயப்படும்படிக்கு, மன்னிப்புத் தேவரீரிடத்தில் இருக்கிறது.

௫. கர்த்தருக்குக் காத்திருக்கிறேன், என் ஆத்துமம் காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பி இருக்கிறேன்.

௬. எப்போது விடியுமென்று விடியுங்காலத்துக்குக் காத்திருக்கிற சாமக்காரரைப் பார்க்கிலும் என் ஆத்துமம் ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

௭. இஸ்ரவேல் கர்த்தரை நம்பக் கடவது. ஏனெனில் கர்த்தரிடத்திலே கிருபையும் அவரிடத்திலே திரளான மீட்பும் இருக்கிறது.

௮. அவர் இஸ்ரவேலை அதின் அக்கிரமங்களுக்கெல்லாம் நீங்கலாக்கி மீட்பார்.

## ௱௪௩. சங்கீதம்.

*தாவீதின் சங்கீதம்.*

கர்த்தாவே, என் செபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும்; நீர் உம்முடைய உண்மையின்படியும் உம்முடைய நீதியின்படியும் எனக்கு மறுவுத்தரவு அருளிச்செய்து,

௨. உமது அடியானோடே நியாயத்தீர்ப்புக்குட் பிரவேசியாதேயும்; ஏனெனில் சீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்ல.

௩. ஏனென்றால் சத்துரு என் ஆத்துமத்தைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கிப்போட்டு, என்னைச் சதாகாலமாய் மரித்துக்கிடக்கிறவர்களில் இருக்கிறதுபோலே இருளில் இருக்கப்பண்ணுகிறான்.

௪. ஆகையால் என் ஆவி என்னில் தியங்கும், என் இருதயம் எனக்குள் திடுக்கிடும்.

௫. பூருவ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளை எல்லாம் தியானிக்கிறேன், உமது கரங்களின் கிரியைகளை யோசிக்கிறேன்.

௬. என் கைகளை உமக்கு நேராய் விரிக்கிறேன்; என் ஆத்துமம் வறண்ட நிலத்தைப்போல் உம்முடைய மேல் தாகமாயிருக்கிறது. சேலா.

௭. கர்த்தாவே, சீக்கிரமாய் என் செபத்தைக் கேளும்; என் ஆவி தொய்ந்துபோகும். நான் குழியிலே இறங்குகிறவர்களுக்கு ஒத்துப்போகாதபடிக்கு, உம்முடைய முகத்தை எனக்கு மறைக்காதிரும்.

௮. காலமே உமது கிருபையை என்னைக் கேட்கப்பண்ணும்; ஏனெனில் உம்மை நம்பியிருக்கிறேன். நான் நடக்கவேண்டிய வழியை எனக்கு அறிவியும்; ஏனெனில் உம்மண்டைக்கு என் ஆத்துமத்தை உயர்த்துகிறேன்.

௯. கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்; உம்மிடத்தில் ஒதுங்குகிறேன்.

௰. உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும்; ஏனெனில் தேவரீர் என் பராபரன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

௰௧. கர்த்தாவே, உமது நாமத்தின் நிமித்தமாக என்னை உயிர்ப்பியும்; நீர் உம்முடைய நீதியின்படி என் ஆத்துமத்தை இடுக்கத்துக்கு நீங்கலாக்கிவிட்டு,

௰௨. உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களைச் சங்கரித்து, என் ஆத்துமத்தை இடுக்கப்படுத்துகிற யாவரையும் அழியும்; ஏனெனில் நான் உமது அடியான்.

# AGENDA.

## PARS SECUNDA.

இரண்டாம் பங்கு.

# திருச்செய்கைகள் முறைமை.

# I.

# ORDINATIO.

# குருப்பட்டங் கொடுக்கும் முறைமை.

---

### I.

தேவாராதனையில் பிரசங்கத்துக்குப் பின் சபை எக-ம், அல்லது அச-ம் பிரார்த்தனையைப் பாடும். அதைப் பாடுகையில் பட்டங்கொடுக்கிற குருவும், அதிலே உதவி செய்கிற குருமாரும், பட்டம்பெறப் போகிறவனும் (வர்களும்) பீடத்துக்கு வருவார்கள்.

### II.

பிரார்த்தனை பாடினபின், பட்டங்கொடுக்கிற குரு (பீடத்துக்குத் திரும்பி) ஓதுவது:

சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும், பராபரனே.

சபை:

நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதிதாய் உண்டாக்கும்.

குரு:

அப்போது பாதகருக்கு உமது வழியை உபதேசிப்பேன். (அல்லேலூயா.)

சபை:

பாவிகள் உம்மண்டைக்குத் திரும்புவார்கள். (அல்லேலூயா.)

குரு சபையை நோக்கி:

பிரார்த்தித்துக் கொள்ளக் கடவோம்.

அவர் பீடத்துக்குத் திரும்பி ஓதுவது:

சர்வ வல்லமையும் தயவுமுள்ள பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது திருவசனத்தைச் சுத்தமாய்ப் பிரசங்கிக்கும் உண்மையுள்ள வேலையாட்களை உம்முடைய அறுப்புக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ள, உமது நேச குமாரனைக்கொண்டு எங்களுக்குக் கற்பித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். உம்முடைய திருச்சபை சீர்படுவதற்கும், பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அவர் ஊழியராகிய நாங்கள் மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், தேவரீர் எங்களுக்கும், நீர் உம்முடைய அறுப்புக்கு அழைத்திருக்கிற இந்த உமது ஊழியனு (ரு) க்கும் பரிசுத்த ஆவியைப் பூரணமாய் அளித்து, இரட்சிப்புக்கான உம்முடைய திருவசனத்தை எங்கள் இருதயத்திலும் வாயிலும் வைத்து, நாங்கள் அதைச் சகல தைரியத்தோடும் பிரசங்கித்து, எங்கள் ஊழியத்தைத் தெய்வபத்தியுள்ள நடக்கையினால் அலங்கரிக்கும்படியாக, எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று உமது ஒன்றான குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

## III.

பட்டங்கொடுக்கிறவர் தாம் தெரிந்துகொண்ட வேத வாக்கியத்தின் பேரில் பட்டம் பெறுகிறவனு (ர்களு) க்கும் சபையாருக்கும் தெய்வ ஊழியத்தின் ஸ்தாபகம், அதின் மேன்மை, அதற்குரிய வாக்குத்தத்தங்கள் என்றவைகளைப் பற்றிப் புத்திப் பிரசங்கஞ் செய்து, சபையாரையும் பட்டம் பெறுகிறவனை (வர்களை) யும் ஜெபத்துக்கு ஏவின பின், அவர் பட்டம் பெறுகிறவனை (வர்களை) நோக்கிச் சொல்வது:

சகோதரனே (ர்களே), பராபரனுடைய வசனம் எல்லாக் காரியங்களையும் பரிசுத்தமாக்குகிறதினால், நாம் முந்தித் தெய்வ ஊழியத்தின் ஸ்தாபகத்தையும், அதுக்கடுத்த கடமைகளையும், அதின் பெலனையும், அதுக்குரிய வாக்குத்தத்தங்களையும், அதினால் உண்டாகும் நன்மைகளையும் குறித்துச் சத்திய வேதத்திலே எழுதியிருக்கிறதை வாசிக்கக் கேட்போமாக.



அர்ச்சியசிஷ்ட யோவான் ௨௰-ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளில் தம்முடைய சீஷரை நோக்கி: உங்களுக்குச் சமாதானம்; பிதா என்னை அனுப்பினதுபோல், நானும் உங்களை அனுப்புகிறேனென்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்த ஆவியை வாங்குங்கள். எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது; எவர்கள் பாவங்களைச் சுமத்தி வைக்கிறீர்களோ, அவர்கள்மேல் அவைகள் சுமத்தி வைக்கப்பட்டிருக்கிறதென்றார்.

அர்ச்சியசிஷ்ட மாற்கு ௰௬-ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி அவர் தம்முடைய சீஷருக்கு: நீங்கள் லோகமெங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கற்பித்தார்.

அர்ச்சியசிஷ்ட மத்தேயு ௨௮-ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி அவர் தம்முடைய சீஷர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையும் சீஷராக்க, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள, அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோகமுடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேனென்று திருவுளம்பற்றினார்.

மேலும் அர்ச்சியசிஷ்ட பவுல் அப்போஸ்தலன் ௧ தீமோத்தேயு ௩-ம் அதிகாரத்தில்: ஒருவன் கண்காணிப்பை விரும்பினால், நல்ல வேலையை விரும்புகிறானென்கிறது உண்மையான வார்த்தை. கண்காணியோவெனில் குற்றச்சாட்டில்லாதவனும், ஒரே பெண்சாதியின் புருஷனும், விழித்திருக்கிறவனும், சொஸ்த புத்திமானும், இலக்கணனும், பரதேசிகள் சிநேகிதனும், போதகச் சமர்த்தனுமாயிருந்து, மதுபானப் பிரியன், வெட்டனவுக்காரன், இலச்சையான ஆதாயக்காரனுமாயிராமல், சாந்தனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையற்றவனும், தன் சொந்த வீட்டுக்கு நல்முதலாளியும், பிள்ளைகளை எல்லாச்

சீரோடுங் கீழ்ப்படியப் பண்ணிக்கொண்டவனுமாயிருக்க வேண்டியது.
ஒருவன் தன் சொந்த வீட்டுக்கு முதலாளியாயிருக்க அறியாதிருந்தா
னேயாகில், பராபரனுடைய சபையை எப்படி விசாரிப்பான். அவன்
உப்பிப்போய், பிசாசு விழுந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, புதியவ
னாயிருக்கவும் வேண்டாம். அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியி
லும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுமாயி
ருக்க வேண்டுமென்கிறான்.

கடைசியாக, பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையின் மூப்ப
ருக்குச் சொன்னதும், அப்போஸ்தலர் நடபடி ௨0-ம் அதிகாரத்தில்
எழுதியிருக்கிறதுமான புத்திமதிகளைக் கேட்போமாக. அதாவது: நீங்
கள் உங்கள்மேலும், பராபரன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்
பாதித்துக்கொண்ட அவருடைய சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த
ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை அனைத்தின் மேலும்
கவனிப்பாயிருங்கள். ஏனெனில் நான் போன பிற்பாடு மந்தையைத்
தப்பவிடாத கடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வருமென்கிறதை
நான் அறிவேன். உங்களில் தானும் தங்களைப் பின்செல்லச் சீஷரைப்
போதிக்கிறதற்காக மாறுபாடானதுகளைப் பேசுகிற மனுஷர் எழும்பு
வார்கள். ஆனபடியினாலே நீங்கள் விழித்திருந்து, நான் மூன்று வரு
ஷமாய் இரவும் பகலும் அவனவனுக்குக் கண்ணீர்களுடனே புத்தி
சொல்ல ஓயாதிருந்தேனென்று நினைவுகூர்ந்திருங்கள் என்கிறான்.

சகோதரனே (ரர்களே), சுவிசேஷத்தின் ஸ்தானாபதிகளும் மூப்
பருமாக அழைக்கப்பட்டிருக்கிற நாமெல்லாரும் செய்யவேண்டிய
தென்ன என்பதைத் தேவவசனத்தைக் கொண்டு அறிந்திருக்கிறீர் (றீர்
கள்). பராபரன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை
நாம் சுத்த தேவவசனத்தினாலே மேய்க்கிறவர்களாகவும், அதை ஓநாய்க
ளுக்கும் அமார்க்கங்களுக்கும் எதிராகக் காக்கும்படி விழித்திருக்கிற
வர்களாகவும் இருக்க வேண்டும். ஆதலால் அப்போஸ்தலன் இதை
நல்லவேலை என்கிறான். இதைச் செய்ய அழைக்கப்படுகிறவர்களாகிய
நாம் எல்லா விஷயங்களிலும் சுத்தமும் யோக்கியமுமாய்ச் சீவனம் பண்
ணி, நமது சமுசாரம் பிள்ளைகள் வீட்டார் யாவரையும் நமது கிறிஸ்த
மான அழைப்புக்கு ஏற்றபடி ஆண்டு நடத்தவும் வேண்டும்.



## IV.

அப்போது பட்டங்கொடுக்கிற குரு பட்டம் பெறுகிறவனை (வர்களில் ஒவ்வொரு
வனையும்) நோக்கிச் சொல்வது:

சகோதரனாகிய N. N., இருதயங்களை அறிந்திருக்கிற பராபர
னுக்கு முன்பாகவும், இங்கே கூடியிருக்கிற சாட்சிகளுக்கு முன்பாகவும்
நான் உம்மைக் கேட்கிறேன்:

நீர் இப்போது வாசிக்கக் கேட்ட பராபரனுடைய வசனத்தின்ப
டியேயும், அதற்குப் பொருந்திய சுத்த போதகத்தைக் கைக்கொள்ளு
கிற சுவிசேஷ லுத்தரன் சபையின் விசுவாசஅறிக்கை முறைமைக
ளின்படியேயும், தேவ ஊழியத்தை உண்மையாய்ச் செய்ய, கர்த்தரு
டைய சந்நிதியில் வார்த்தைப்பாடு கொடுக்கிறீரோ.

விடை: வார்த்தைப்பாடு கொடுக்கிறேன்; கர்த்தர் எனக்குச் சகா
யஞ் செய்வாராக.

## V.

பட்டங்கொடுக்கிற குரு பட்டம் பெறுகிறவனை (வர்களை) ப் பார்த்துச் சொல்வது:

பிரிய சகோதரனே (ரர்களே), கர்த்தர் தமது ஊழியரிடத்திலும்
உக்கிராணக்காரரிடத்திலும் தேடுவது உண்மை தான். நீர் (நீங்கள்)
மூந்தி நமது ஆலோசனைச்சங்கத்தாருக்கு முன்பாகவும், இப்போது
திருச்சபைக்கு முன்பாகவும், தேவசந்நிதியில் கர்த்தருக்கும் அவர்
திருச்சபைக்கும் உண்மையுள்ளவராய் (வர்களாய்) இருக்க வார்த்தைப்
பாடு கொடுத்தீர் (தீர்கள். இதை முன்னிட்டு நாங்கள் இப்போது
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இட்ட கட்டளையின்படியேயும், அவர்
தமது சபைக்குக் கொடுத்த அதிகாரத்தின்படியேயும், தேவ ஊழியத்
தை உமக்கு (உங்களுக்கு) க் கையளித்து, அதின் கடமைகளையும்,
அதுக்குரிய வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் கர்த்தரு
டைய நாமத்தினால் உமது (உங்கள்) பேரில் வைக்கிறோம்.

## VI.

*அப்போது பட்டம் பெறுகிறவன் (வர்கள்) முழங்காலிலிருப்பான் (ர்கள்). உதவிசெய்கிற மற்றக் குருமார் பட்டம் பெறுகிறவன் (ர்கள்) தலையின்மேல் கைகளை வைத்து நிற்பார்கள். பட்டங்கொடுக்கிற குரு பட்டம் பெறுகிற ஒவ்வொருவன் தலையின்மேலுங் கையை வைத்துச் சொல்வது:*

சகோதரனே, நமது பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்து இட்ட கட்டளையின்படியேயும், அப்போஸ்தல முறைமையின்படியேயும், நாங்கள் இப்போது செபத்தோடு எங்கள் கைகளை உமது தலையில் வைத்து, பிதா குமாரன பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே உமக்குப் பரிசுத்த குருப்பட்டத்தைக் கொடுக்கிறோம். தேவவசனத்தை உண்மையாய்ப் போதித்து, ஞான திரவியங்களைக் கிறிஸ்துவின் கட்டளைப்படி பரிமாறும் தேவ ஊழியத்துக்கென்றும், தேவ இரகசியங்களின் உக்கிராண விசாரிப்புக்கென்றும் உம்மை நியமித்து, ஆசீர்வதித்து, அபிஷேகம்பண்ணி, அனுப்புகிறோம்.

*மற்றக் குருக்கள் சொல்வது:* ஆமேன்.

## VII.

*பட்டங்கொடுக்கிற குரு இன்னஞ் சொல்வது:*

செபஞ் செய்வோமாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

இரக்கமுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் உமது நேசகுமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு:



அறுப்போ மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எசமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப, அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்று எங்களுக்குக் கற்பித்தீர். உம்முடைய இந்தக் கற்பனையை முன்னிட்டு நாங்கள் உம்மை அண்ணாந்துபார்த்து, உம்முடைய வசனத்தின் ஊழியத்துக்காக அழைக்கப்பட்டிருக்கிற எங்களோடு உம்முடைய இந்த ஊழியனுக்கும் (ருக்கும்) பரிசுத்த ஆவியைப் பூரணமாய் அளிக்கவும், உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதற்கும், உம்முடைய இராச்சியம் பரம்புகிறதற்கும், உம்முடைய சித்தம் நிறைவேறுகிறதற்கும், எங்களை உம்முடைய சுவிசேஷகரின் திரளான சேனையாக்கி, பிசாசு லோகம் மாமிசமென்றவைகளுக்கு எதிரிடையாக எங்களை உண்மையுள்ளவர்களாயிருக்கச் செய்து உறுதிப்படுத்தவும், முழு இருதயத்தோடும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்தத் தேசத்திலுள்ள அஞ்ஞான இருளும் அருவருப்புகளும், கிறிஸ்துவின் எதிராளிகளினுடைய பொய்களும், அவர்களால் எழும்புந் துன்பங்களும் நாளளவில் நீங்கிப்போகவும், உம்முடைய நாமத்தின் மகிமையும் உம்முடைய சுவிசேஷ சத்தியமும் அதிகமாய்ப் பரம்பவும், எங்கள் ஊழியத்தை ஆசீர்வதித்தருளும். ஆ, கர்த்தாவே, தேவரீர் வாக்குத்தத்தம் பண்ணினபடி எங்கள் செபத்தைக் கேட்டு, எங்கள் ஊழியம் உம்முடைய மகிமைக்கென்றும், அநேக ஆத்துமங்களின் இரட்சிப்புக்கென்றும் பலிக்கும்படிக்கு, உமது நேசகுமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி.

*மற்றக் குருக்கள் சொல்வது:* ஆமேன்.

## VIII.

*பட்டங் கொடுக்கிற குருவும் மற்றக் குருக்களும் பட்டம் பெற்றவன் (வர்கள்) தலையின்மேல வைத்திருந்த கைகளை எடுத்துப் போடுவார்கள்.*

*பட்டங்கொடுத்தவர் சொல்வது:*

நீர் (நீங்கள்) இப்போது போய், உமக்கு (உங்களுக்கு) ஒப்புக்கொடுக்கப்படும் பராபரனுடைய மந்தையைக் கட்டாயத்தினால் அல்ல,

மனப்பூர்வத்தினாலும், இலச்சையான ஆதாயப் பிரியத்தினால் அல்ல, உற்சாகமான மனதினாலும், சுதந்தரங்களை ஆண்டு கொள்ளுகிறவராக (வர்களாக) அல்ல, மந்தைக்கு மாதிரியாகவும் கண்காணித்துமேயும் (யுங்கள்). அப்போது பிரதான மேய்ப்பர் வெளிப்படுகையில், வாடாத கிரீடத்தைப் பெறுவீர் (வீர்கள்).

நீர் (நீங்கள்) வெகு கனிகளைக் கொடுக்கக் கர்த்தர் உம்மை (உங்களை) ஆசீர்வதிக்கக் கடவார். ஆமென்.

## IX.

கடைசியாகப் பட்டங் கொடுப்பதில் உதவி செய்த குருக்கள் ஒவ்வொருவரும் தான் ஆருடைய தலையில் கையை வைத்திருந்தாரோ, அவருக்கு வாழ்த்துதலாக ஒரு வேதவாக்கியத்தைச் சொல்லுவார்.

## X.

அப்போது பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்படும் ஆராதனை துவக்கும்.

(கூ௰-ம் பக்கம் காண்க.)

---



# II.

# INSTALLATIO

# ஒரு குருவுக்கு ஒரு சபையின் விசாரணையை ஒப்புக்கொடுக்கும் முறைமை.

---

## I.

நமது சபையின் மேல்விசாரணைக்கர்த்தராகிய ஆலோசனைச்சங்கத்தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக இருக்கிறவர் ஒரு குருவுக்கு ஓர் சபையை ஒப்புக்கொடுக்குஞ் சமாசாரம் அச்சபையாருக்குச் சில நாட்களுக்குமுன் தெரிவிக்கப்படும்.

## II.

பொது ஆராதனையில் விசுவாசப்பிரமாணத்தை அறிக்கையிட்ட பின் சபையார் இந்தச் சமயத்திற்கேற்ற எகூ. அம். கூகூ௬-ம் ஞானப்பாட்டுகளிலொன்றில் சில கவிகளைப் பாடுவார்கள். அவர்கள் பாடுகையில் விசாரணைக்கர்த்தர் பீடத்துக்கு முன்வந்து நிற்பார்; சபைக்கு நியமிக்கப்படப்போகிற குருவும் அவரோடே சபையின் மூப்பரும் பீடத்தருகில் வந்து நிற்பார்கள்.

## III.

விசாரணைக்கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட வேதவாக்கியத்தின் மூலமாய்க் குரு சபையாருக்கும், சபையார குருவுக்குஞ் செய்யவேண்டிய கடமைகளின் பேரில் பிரசங்கிப்பார்.

அதற்குப் பின் அவர் குருவை நோக்கிச் சொல்வது:

பிரிய சகோதரனாகிய N. N. ஐயரே, நான் தேவசன்னிதியிலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் உம்மைக் கேட்கிறேன்: நீர் இந்தச்

சபையிலும் இந்த வட்டத்திலுள்ள அஞ்ஞானிகளிடத்திலும் செய்ய வேண்டிய சுவிசேஷப் பிரசங்கியின் ஊழியத்தை ஒப்புக்கொண்டு, நீர் குருஅபிஷேகம் பெற்றுக்கொண்டபோது பராபரனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டின் படியேயும், நீர் கடைசி நாளில் பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன் நின்று அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதை நினைத்தறிகிற அறிவின் படியேயும், எல்லா விஷயங்களிலும் இந்த ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்ற மனதாயிருக்கிறீரோ.

குரு: ஆம், மனதாயிருக்கிறேன்.

## IV.

விசாரணைக்கர்த்தர் சபைக்குப் பதிலாகப் பீடத்தருகில் நின்றிருக்கிற சபையின் மூப்பரைப் பார்த்துச் சொல்வது:

நமது இந்தச் சகோதரன் இந்தச் சபையைப் பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தேவ வசனத்தாலும் ஞான திரவியங்களினாலும் மேய்ப்பேனென்று வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறதினால், நான் இந்தச் சபைக்குப் பதிலாக இங்கே நின்றிருக்கிற உங்களை கேட்கிறேன்: நீங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய இவரைக் கர்த்தருடைய நாமத்தில் உங்கள் மேய்ப்பனாக ஏற்றுக்கொண்டு, இவர் இந்தச் சபையை நித்திய சீவ வழியில் நடத்தும்படிக்கு, இவருக்குத் தெய்வபயத்தோடுங் கிறிஸ்துவின் சிநேகத்தோடும் உதவி செய்யவும், அதற்காக உங்களில் ஒவ்வொருவனுந் தன் தன் விசேஷித்த அழைப்பின்படியே இவருக்கு உற்சாகமாய்க் கீழ்ப்படிந்திருக்கவும் மனதாயிருக்கிறீர்களா.

சபையின் மூப்பர்: ஆம், மனதாயிருக்கிறோம்.

## V.

விசாரணைக்கர்த்தர் குருவை நோக்கிச் சொல்வது:

நான் இப்போது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் இந்தச் சபையின் விசாரணையை உமக்கும், உம்மை இந்தச் சபைக்குங் கையளிக்கிறேன். நீர் கிறிஸ்துவின் ஊழியனாகிய உண்மையுள்ள மேய்ப்பனுக்கேற்றபடியேயும், நீர் கடைசி நாளில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்துக்குமுன் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதை நினைத்தறிகிற அறிவின்படியேயும், உம்முடைய விசாரணைக்குள்ளான சபையைத் தெய்வபத்தியாயும் சுறுசுறுப்பு உண்மையாயும் விசாரிக்க உமக்குப் புத்தி சொல்லுகிறேன். கர்த்தராகிய கிறிஸ்து இயேசு உம்முடைய ஆவியோடிருப்பாராக. ஆமேன்.



## VI.

விசாரணைக்கர்த்தர் சபையை நோக்கிச் சொல்வது

பிரிய சபையாரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவனோ என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறானென்கிறார். ஆகலால் நீங்கள் கிறிஸ்துவின் கட்டளைப்படியேயும், அவர் சபையின் ஒழுங்குப்படியேயும், தேவ ஊழியனாக அழைக்கப்பட்டும், உங்களிடத்துக்கு அனுப்பப்பட்டுமிருக்கிற இந்த N. N. ஐயரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, அவரை உங்கள் போதகரும் மேய்ப்பருமாகச் சிநேகித்துச் சங்கித்து, உங்கள் ஆத்தும இரட்சிப்புக்கென்று கர்த்தரின் சுத்த வசனத்தையும் ஞான திரவியங்களையும் இவரிடத்தில் சாக்கிரதையாய்த் தேடவும், இவர் தமது பரிசுத்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு யாதொரு தடையையுஞ் செய்யாமல், உங்களாலானமட்டும் இவருக்குத் துணையாயிருக்கவும் வேண்டுமென்பதை நான் கர்த்தருடைய நாமத்தினால் உங்களைக் கேட்கிறேன். கர்த்தர் அதற்காக உங்களுக்குத் துணைசெய்து, தேவ ஊழியனாகிய இவர் உங்களிடத்தில் செய்யும் வேலையால் அனேக நற்கனிகள் உண்டாகக் கிருபை செய்யக் கடவார்.

இப்போது நாம் எல்லாரும் செபம் பண்ணுவோமாக.

கிருபையுள்ள பராபரனே, கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிய பிரசங்கத்தின் பைத்தியத்தினால் அதை விசுவாசிக்கிற யாவரையும் இரட்சிக்க எங்களுக்கு வார்த்தைப்பாடு கொடுத்த சர்வவல்லமையுள்ள பிதாவே, தேவரீர் புதிய ஏற்பாட்டின் பாக்கியமான ஊழியத்துக்கு

அழைத்திருக்கிற இந்த உம்முடைய ஊழியன் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து தமது திரு இரத்தத்தால் சம்பாதித்து மீட்டுக்கொண்ட உமது பிரியமுள்ள சபையை இரட்சிப்புக்கான கலப்பற்ற உம்முடைய திருவசனத்தைக்கொண்டு உமக்குப் பிரியமாக மேய்த்து, தெய்வபத்தியுள்ள நடக்கையினால் அதற்கு மாதிரியாயிருக்கும்படிக்கும், இவர் உமது இராச்சியத்துக்கு விர்த்தியுண்டாக உமது சுவிசேஷத்தை அஞ்ஞானிகளுக்கு உண்மையாய்ப் பிரசங்கிக்கும்படிக்கும், தேவரீர் உமது ஆவியையுங் கிருபையையும் இவருக்குப் பூரணமாய்க் கொடுக்கவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை முழு இருதயத்தாலும் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

## VII.

விசாரணைக்கர்த்தர் எழுந்து குருவை நோக்கிச் சொல்வது:

நீர் வெகு கனிகளைக் கொடுத்து, உம்மையும் உம்மைக் கேட்கிறவர்களையும் இரட்சிக்கும்படிக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

## VIII.

சபையார் பிரசங்கத்துக்கடுத்த ஞானப்பாட்டைப் பாடின பின்பு சபையின் விசாரணையை ஒப்புக்கொண்ட குரு பிரசங்கிப்பார்.

---



# III.

# BAPTISMUS.

# ஞானஸ்நான முறைமை.

---

## I.

## சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை.

கவனிப்பு. ௧. பிள்ளை பிறந்த ஒரு மாதத்திற்குள் ஞானஸ்நானம் பெறுவது தகுதி.

கவனிப்பு. ௨. பிள்ளைக்கு ஞானத்தாய்தகப்பமாராக நமது சபையாரில் இரண்டு மூன்றுபேர் நியமிக்கப்பட வேண்டியது.

கவனிப்பு. ௩. பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் அவஸ்தையில் தவிர மற்றச் சமயங்களில் கோவிலில் கொடுக்க வேண்டியது.

கவனிப்பு. ௪. ஞானஸ்நானம் ஆராதனை வேளையில் கொடுப்பது ஒழுங்காயினும், அதை ஆராதனையில்லாத சமயங்களிலுங் கொடுக்கலாம்.

ஆராதனை இல்லாத சமயத்தில் ஞானஸ்நானங் கொடுக்கும்போது குரு சொல்வது:

நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்திலுள்ளது.

சகல சமயங்களிலும் குரு கேட்பது:

இந்தப் பிள்ளை வீட்டிலே ஞானஸ்நானம் பெற்றதுண்டா.

இல்லை என்று சொல்லப்பட்டால்,

குரு சொல்வது:

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் சேர்ந்து, அவர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையுஞ் சீஷராக்கி, பிதா குமா

ரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோக முடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேனென்றும், நீங்கள் லோகமெங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்றுந் திருவுளம்பற்றினார்.

ஆராதனையில்லாத சமயத்தில் குரு ஒரு சிறிய பிரசங்கத்தையாயது, பின்வரும் புத்திமதியை யாவது சொல்லலாம்.

பிரியமானவர்களே, நாம் எல்லாரும் ஆதாமின் மூலமாய்ப் பாவத்தில் பிறந்து, சுபாவத்தின்படி கோபத்தின் மக்களாயிருக்கிறோமென்றும், பராபரனுடைய ஒன்றான குமாரனாகிய நம்முடையநாதர் இயேசு கிறிஸ்து அந்தப் பாவத்தினின்று நம்மை இரட்சியாவிட்டால், நாம் பராபரனுக்கு ஏற்றிருக்கக் கூடாமல், என்றென்றைக்குஞ் சபிக்கப்பட்டு, நித்திய கோபாக்கினையில் கெட்டுப்போகவேண்டுமென்றும், நாம் நாள்தோறும் தேவ வசனத்தினாலே கேட்டறிகிறதுமன்றி, அநுபவத்தினாலும் பரிட்சையினாலும் சீவனிலும் மரணத்திலுங் கண்டறிகிறோம். ஆனதால் நம்மைப் போல் தன் சென்ம சுபாவத்தில் தானே பாவத்தால் அசுத்தப்பட்டுக் கெட்டுப்போன இந்தப் பிள்ளையும் பராபரனுக்கு ஏற்றிருக்கக் கூடாமல், கிறிஸ்துவையன்றி நித்திய மரணத்திலுங் கோபாக்கினையிலும் நிலைத்திருக்கவேண்டுமென்றும், மறுபடியும் பிறந்தாலொழிய, இதுவும் பராபரனுடைய இராச்சியத்தைக் காணக் கூடாததினால், இதற்கும் இரட்சிப்பும் மறுசெனனமுந் தேவையாயிருக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம். இரக்கங்களின் பிதாவாகிய பராபரனோவென்றால் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைச் சர்வலோகத்தாருக்கும் வாக்குத்தத்தம்பண்ணி அனுப்பினார். ஆகையால் வளர்ந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல, சிறு பிள்ளைகளுக்கும் இரங்கி, அவரைக் கொடுத்தார். அப்படியே இவரும்: மனிதனுடைய குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தாரென்று சொல்லி,



சர்வலோகத்தின் பாவத்தையுஞ் சுமந்து தீர்த்தார். ஆகலால் வளர்ந்தவர்களை மாத்திரம் அல்ல, பிள்ளைகளையுந் தேடி, பாவத்திலும் மரணத்திலுங் கோபாக்கினையிலுமிருந்து மீட்டிரட்சித்தார். மேலும் நேசமுள்ள இரட்சகர் உலகத்திலே தங்கியிருந்தபோது, குழந்தைகள் தம்மண்டை வரக் கட்டளையிட்டு, வானராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையதாயிருக்கிறதென்று சொல்லி, அவர்களைப் பட்சமாய் அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்தார். அந்தப்படியே அவர் இப்போதும் எப்போதும் பிள்ளைகளுடைய நேசராயிருந்து, எல்லாருக்கும் அவசியமான மறுசெனன முழுக்காகிய ஞானஸ்நானத்தை வளர்ந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல, அவர்களுக்குங் கட்டளையிட்டிருக்கிறார். இவை எல்லாவற்றையும் அறிந்து, கனபத்தியான செபத்தோடு இந்தப் பரிசுத்த கிருபையின் எத்தனத்தைச் சேர்ந்து, இந்தக் குழந்தையை அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக. பராபரனே விண்ணப்பங்களின் ஆவியை நமது இருதயங்களில் அனுப்பி, நாம் இந்தப் பிள்ளைக்காகச் செய்யுஞ் செபத்தை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தங் கேட்டருளுவாராக.

ஞானஸ்நானம் ஆராதனையிலே கொடுக்கப்படும்போது குரு சொல்வது:

கர்த்தருடைய இந்தக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வாக்குத்தத்தத்தை நம்பி, நாம் இப்போது இந்தப் பிள்ளையை ஞானஸ்நானத்தின் வழியாய் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக. பராபரனே விண்ணப்பங்களின் ஆவியை நமது இருதயங்களில் அனுப்பி, நாம் இந்தப் பிள்ளைக்காகச் செய்யுஞ் செபத்தை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தங் கேட்டருளுவாராக.

குரு சிலுவையின் அடையாளத்தைப் பிள்ளையின் நெற்றியிலும் மார்பிலும் வரைந்து சொல்வது:

பிள்ளையே, நீ சிலுவையின் அடையாளத்தை உன் (✝) நெற்றியிலேயும், (✝) மார்பிலேயும் ஏற்றுக்கொள்வாயாக.

குரு சொல்வது:

மன்றாடுவோமாக.

சர்வத்திற்தும்வல்ல நித்திய பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, உம்முடைய ஞானஸ்நான வரப்பிரசாதத்தைத் தேடி, ஞான மறு பிறப்பினால் உண்டாகும் உம்முடைய நித்திய கிருபையை ஆசித்துக்கேட்கிற இந்தப் பிள்ளைக்காக நாங்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம்: இதை ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே. கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்போது கண்டுபிடிப்பீர்கள்; தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படுமென்று தேவரீர் சொன்னீரே. ஆதலால் கேட்கிற இதுக்கு உம்முடைய வரத்தைத் தந்து, தட்டுகிற இதுக்குக் கதவைத் திறந்து, இது இந்தப் பரம ஸ்நானத்தின் நித்திய ஆசீர்வாதத்தையும் உம்முடைய வாக்குத்தத்தமாகிய கிருபையின் இராச்சியத்தையும் அடைவதற்குத் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு கிருபைசெய்தருளும், சுவாமி.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு சொல்வது:

இன்னும் மன்றாடுவோமாக.

சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, தேவரீர் சலப்பிரளயத்தில் விசுவாசியாத உலகத்தை உமது கண்டிப்பான நீதியின்படியே அழித்து, விசுவாசமுள்ள நோவாமுதலிய எட்டு ஆத்துமாக்களை உமது மிகுந்த இரக்கத்தின்படி தற்காத்திரட்சித்தீர். அப்படியே சிவந்த சமுத்திரத்தில் கடினமனதுள்ள பார்வோனையும் அவனுடைய எல்லாச் சேனைகளையும் அமிழ்த்திப்போட்டு, உம்முடைய சனமாகிய இஸ்ரவேலைக் கால்நனையாமல் அதின் நடுவாக அழைத்துக்கொண்டுபோனீர். இவைகளினால் வருங்காலத்து ஞானஸ்நானத்தை முன் குறித்துக் காட்டினீர். கடைசியாக உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தினால் யோர்தான் முதலிய சலங்களையும் ஆரோக்கியமான சலப்பிரளயமாகவும் பாவங்களை நீக்கிப்



பூரணமாய்க் கழுவுகிற முழுக்காகவும் நியமித்துப் பரிசுத்தமாக்கினீர். இப்படி செய்த உமது அளவற்ற இரக்கத்தை முன்னிட்டுத் தேவரீர் இந்தப் பிள்ளையைக் கிருபாகடாட்சமாய் நோக்கிப்பார்த்து, ஆதாமிலிருந்து இதினிடத்தில் பரம்பின சென்மபாவமுஞ் செய்யுங் கர்மபாவமுமெல்லாம் ஆரோக்கியமான இந்தச் சலப்பிரளயத்தினால் அமிழ்ந்தியழியும்படிக்கும், இது அவிசுவாசிகளுடைய கூட்டத்தை விட்டுப் பரிசுத்த சபையின் பேழையில் சேர்ந்து தற்காக்கப்படும்படிக்கும், எந்நேரமும் ஆவியில் அனலாகி, நம்பிக்கையிலே சந்தோஷப்பட்டு, உமது நாமத்துக்கு ஊழியஞ்செய்யும்படிக்கும், கடைசியாய் உம்முடைய எல்லா விசுவாசிகளோடும் உமது வாக்குத்தத்தங்களின்படி நித்திய சீவனை அடையப் பாத்திரமாகும்படிக்கும், பரிசுத்த ஆவியைக்கொண்டு இந்தப் பிள்ளைக்கு மெய்யான விசுவாசத்தை அருளிச்செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு சொல்வது.

பரிசுத்த மாற்கு பத்தாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்கக் கடவோம். இயேசு குழந்தைகளைத் தொடுகிறதற்காக, அவைகளை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். சீஷர்களோ கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, தாங்கலடைந்து, அவர்களைப் பார்த்து: பிள்ளைகள் என்னண்டையில் வருகிறதற்குத் தடைபண்ணாமல், இடங்கொடுங்கள். ஏனெனில் பராபரனுடைய இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறது. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், எவனாகிலுங் குழந்தையைப்போலே பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால், அதற்குட் பிரவேசிக்க மாட்டானென்று சொல்லி, அவைகளை அணைத்துக்கொண்டு, அவைகள்மேல் கைகளை வைத்து, அவைகளை ஆசீர்வதித்தார்.

இப்போது இந்தக் குழந்தையும் அந்த ஆசீர்வாதத்தை அடையும்படிக்கு, இதை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவந்த நாம் தெய்வபத்தியாய்க் கர்த்தருடைய செபத்தைச் செபிக்கிறதினால் இதுக்கு உதவி செய்யக் கடவோம்.

குரு பிள்ளையினுடைய சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

குரு பிள்ளையை நோக்கிச் சொல்வது:

கர்த்தர் உன் உட்படுதலையும் புறப்படுதலையும் இதுமுதல் என்றென்றைக்குங் காக்கக் கடவார்.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு ஞானத்தாய்தகப்பன்மாரை நோக்கிச் சொல்வது:

பிரியமானவர்களே, கர்த்தர் நமது செபத்தைக் கேட்டு, ஞானஸ்நானத்தினாலே இந்தப் பிள்ளைக்குத் தம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறாரென்று நாம் அறிந்து விசுவாசிக்கிறபடியால், நான் இப்போது இந்தப் பிள்ளையை நோக்கிக் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் அதின் நாமத்திலே மறுமொழி சொல்வீர்களாக.

குரு கேட்கும்

வினா: பிள்ளையே, நீ பிசாசை விட்டுவிடுகிறாயா.



ஞானத்தாய்தகப்பன்மார் சொல்லும்

விடை: விட்டுவிடுகிறேன்.

வினா: அதின் எல்லாக் கிரியைகளையும் விட்டுவிடுகிறாயா.

விடை: விட்டுவிடுகிறேன்.

வினா: அதின் எல்லா ஆடம்பரத்தையும் விட்டுவிடுகிறாயா.

விடை: விட்டுவிடுகிறேன்.

வினா: பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறாயா.

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறாயா.

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து, கன்னிமரியாளிடத்தினின்று பிறந்து, பொந்தியு பிலாத்து என்கிறவனாகீழ்ப் பாடுபட்டு, சிலுவையிலறையுண்டு, மரித்தடக்கப்பட்டாரென்றும், பாதாளங்களில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினாரென்றும், பரமண்டலங்களுக்கேறி, சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலிருக்கிறாரென்றும், அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவாரென்றும் விசுவாசிக்கிறாயா.

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறாயா.

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: பொதுவான பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், மாமிச உயிர்த்தெழுதலும், நித்திய சீவனும் உண்டென்று விசுவாசிக்கிறாயா.

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: நீ இப்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதாயிருக்கிறாயா.

விடை: மனதாயிருக்கிறேன்.

குரு கேட்பது:

"இந்தப் பிள்ளைக்கு இடவேண்டிய பேரென்ன.

உபதேசி சொல்வது: (கிறிஸ்தியான்.)

குரு பிள்ளையினுடைய சிரசின்மேல் மூன்றுமுறை தண்ணீர் வார்க்கையில் சொல்வது:

(கிறிஸ்தியானே,) நான் உன்னைப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பண்ணுவிக்கிறேன்.

குரு பிள்ளையினுடைய சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

சர்வத்திற்கும் வல்ல பராபரனும் நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர் தண்ணீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் இப்போது உன்னை மறுபடியுஞ் செனிப்பித்து, உன் பாவங்களை எல்லாம் உனக்கு மன்னித்தாரே. அவர் தம்முடைய இஷ்டப்பிரசாதத்தினால் உன்னை நித்திய சீவனுக்கென்று திடப்படுத்திக் காக்கக் கடவார். ஆமேன். சமாதானம் உன்னோடிருக்கக் கடவது.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு ஞானத்தாய்தகப்பன்மாரை நோக்கிச் சொல்வது:

கிறிஸ்துவுக்குள் சிநேகிக்கப்பட்டவர்களே, இந்தப் பிள்ளை இப்போது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதற்கு நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள். மேலும் இந்தக் குழந்தை இப்போது ஞானஸ்நானத்தினால் எப்படி கிறிஸ்துவுக்குள் பொருத்த வைக்கப்பட்டிருக்கிறதோ, அப்படி இது அவரில் நிலைத்திருந்து, அவருக்குள் வளரும்படிக்கு, இதின் ஞானத்தாய்தகப்பன்மாராகிய நீங்கள் இதுக்காகக் கருத்தாய்ச் செபம்பண்ணக் கடவீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்களென்று சொன்னபடியால், இது கிறிஸ்தமான நமது சுத்த உபதேசத்தைக் கற்றுக்கொள்ளும்படிக்கு, இதின் தாய்தகப்பன்மாரோடு நீங்களுங் கவலைப்பட்டு, இது விரகறியாததற்கு முன் இதின் தாய்தகப்பன்மார் இறந்துபோனால், இது கிறிஸ்தமான பிள்ளையாய் வளரும்படி, நீங்கள் பிரயாசப்படவேண்டும். பராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு இஸ்தோத்திரம். சமாதானம் உங்களோடிருக்கக் கடவது.



உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

கவனிப்பு. ஆராதனையின் நடுவில் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டால், இப்படி முடியும். ஆனால் அது ஆராதனையின் கடைசியிலாவது, ஆராதனையில்லாத சமயங்களிலாவது கொடுக்கப்பட்டால், ஒரு ஞானப்பாட்டின் இரண்டொரு கவியைச் சபை பாடின பிறகு, குரு பீடத்துக்குப் போய், ஞானஸ்நானத்தைப்பற்றிய ஒரு சுருக்கச் செபத்தை ஓதி, ஆராதனையின் முடிவில் செய்கிறதுபோல ஆசீர்வாதத்தைக் கூறி முடிக்கலாம்.

ஞானஸ்நானத்தைக் குறித்துச் செய்யுஞ் செபம்.

சர்வ வல்லமையும் இரக்கமுமுள்ள பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது திருச்சபையைக் கிருபையாய்த் தற்காத்து, அதைத் தினமும் விர்த்திக்கப்பண்ணி, இந்தப் பிள்ளையையும் பரிசுத்த ஞானஸ்நானத்தினால் மறுபடியுஞ் செனிப்பித்து, இதை உமது நேசகுமாரனும் எங்கள் ஒன்றான இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பொருத்தவைத்து, உமது பிள்ளையும் பரம பொக்கிஷங்களின் சுதந்தரவாளியுமாக்கினதற்காக உம்மைத் துதித்து இஸ்தோத்திரிக்கிறோம். தேவரீர் பரிசுத்த ஞானஸ்நானத்தினால் உம்மிடம் வரவழைத்துச் சேர்த்துக்கொண்ட எங்களையும், எல்லாச் சபையாரையும், விசேஷமாக இப்போது ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட இந்தப் பிள்ளையையும் தயவாய் நோக்கிப்பார்த்து, நாங்கள் பெற்றுக்கொண்ட பரம பாக்கியத்திலே எங்களைக் கிருபையாய்க் காப்பாற்றி, கடைசியில் நாங்கள் எல்

லாப் பரிசுத்தவான்களோடும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரம சுதந்தரத்தை அடையும்படிக்கு அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

2.

## பிள்ளைக்கு அவஸ்தை ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை.

கவனிப்பு. க. அவஸ்தை ஞானஸ்நானம் பிராண மோசத்திலிருக்கிற பிள்ளைக்குக் குரு சமீபமாயிராவிட்டால், உபதேசியாலாவது, பிள்ளையின் தகப்பனாலாவது, வேறொரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவளாலாவது கொடுக்கப்படும்.

கவனிப்பு. உ. அதைக் கொடுக்கும்போது, கூடுமானால், விரதரிந்த இரண்டு கிறிஸ்தவர்கள் சாட்சியாகக் கூடவிருக்கவேண்டும்.

கவனிப்பு. ௩. பிள்ளை பிழைத்திருந்தால், குரு அவஸ்தை ஞானஸ்நானத்தைத் திடப்படுத்தும்படிக்கு, அதைக் கூடிய சீக்கிரங் கோவிலுக்குக் கொண்டுவரவேண்டியது.

ஞானஸ்நானங் கொடுக்கிறவன் சொல்வது:

கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய இரக்கத்தின் நிமித்தம் இந்தக் குழந்தையை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும், சுவாமி. ஆமேன்.

பிற்பாடு அவன் பிள்ளையினுடைய சிரசின்மேல் மூன்றுமுறை தண்ணீர் வார்க்கையில் சொல்வது:

(கிறிஸ்தியானே,) நான் உன்னைப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பண்ணுவிக்கிறேன். ஆமேன்.

முடிவில் அவன் சொல்வது: செபம் பண்ணுவோமாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கு என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.



3.

## பிள்ளை பெற்ற அவஸ்தை ஞானஸ்நானத்தைத் தெய்வாலயத்தில் திடப்படுத்தும் முறைமை.

குரு ஞானஸ்நானத் தொட்டியருகில் வந்து நின்று பிள்ளையைக் கொண்டுவந்தவர்களைக் கேட்பது:

வினா: இந்தப் பிள்ளை வீட்டிலே ஞானஸ்நானம் பெற்றதுண்டா.
விடை: பெற்றதுண்டு.

வினா: இதற்கு ஞானஸ்நானங் கொடுத்ததார்.
விடை: (இன்னான்.)

வினா: அப்போது கூடவிருந்த சாட்சிகள் யார்.
விடை: (இன்னின்னார்.)

வினா: இந்தப் பிள்ளைக்குக் கொடுத்த பேரென்ன.
விடை: (கிறிஸ்தியான்.)

வினா: இது தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றதா.
விடை: ஆம்.

வினா: பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதா.
விடை: ஆம்.

கவனிப்பு. இந்த இரண்டு கடைசிக் கேள்விகளுக்குத் தகுதியும் நிச்சயமுமான உத்தரவு கொடுக்கப்படாவிட்டால், குரு அந்தக் குழந்தைக்கு ஞானஸ்நானத்தைக் கொடுக்கவேண்டியது.

குரு சொல்வது:

இந்தப் பிள்ளை தண்ணீரினாலும், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றபடியினாலே, இது இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி சரியாய் ஞானஸ்நானம் பெற்றதென்று அறிவித்து, இதை கிறிஸ்தமான சபையின் அவயவமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். திரியேக பராபரனே இதைத் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையில் திடப்படுத்தி, நித்திய சீவனுக்கென்று காக்கக்கடவார்.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு:

பரிசுத்த மாற்கு பத்தாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்கக் கடவோம். இயேசு குழந்தைகளைத் தொடுகிறதற்காக அவைகளை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். சீஷர்களோ கொண்டுவந்தவர்களை உதம்பினார்கள். இயேசு அதைக் கண்டு தாங்கலடைந்து, அவர்களைப் பார்த்து: பிள்ளைகள் என்னண்டையில் வருகிறதற்குத் தடைபண்ணாமல், இடங்கொடுங்கள்; ஏனெனில் பராபரனுடைய இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறது. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், எவனாகிலுங் குழந்தையைப் போல் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால், அதுக்குட் பிரவேசிக்க மாட்டானென்று சொல்லி, அவைகளை அணைத்துக்கொண்டு, அவைகள்மேல் கைகளைவைத்து, அவைகளை ஆசீர்வதித்தார்.

இந்தக் குழந்தையும் அந்த ஆசீர்வாதத்தை ஞானஸ்நானத்தின் வழியாய்ப் பெற்றுக்கொண்டிருக்கிறதே. இது அதில் நிலைத்திருக்கும்படிக்கு, நாம் தெய்வ பத்தியாய்க் கர்த்தருடைய செபத்தைச் செபிக்கிறதினால் இதுக்கு உதவிசெய்யக் கடவோம்.

குரு பிள்ளையினுடைய சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.



சர்வத்திற்கும் வல்ல பராபரனும் நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர் தண்ணீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் உன்னை மறுபடியுஞ் செனிப்பித்து, உன் பாவங்களை எல்லாம் உனக்கு மன்னித்தாரே. அவர் தம்முடைய இஷ்டப்பிரசாதத்தினால் உன்னை நித்திய சீவனுக்கென்று திடப்படுத்திக் காக்கக் கடவார். ஆமேன். சமாதானம் உன்னோடிருக்கக் கடவது.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு ஞானத்தாய்தகப்பன்மாரை நோக்கிச் சொல்வது:

கிறிஸ்துவுக்குள் சிநேகிக்கப்பட்டவர்களே, இந்தப் பிள்ளை பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதற்கு நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள். மேலும் இந்தக் குழந்தை ஞானஸ்நானத்தில் எப்படி கிறிஸ்துவுக்குள் பொருதவைக்கப்பட்டிருக்கிறதோ, அப்படி இது அவரில் நிலைத்திருந்து அவருக்குள் வளரும்படிக்கு, இதின் ஞானத்தாய்தகப்பன்மாராகிய நீங்கள் இதுக்காகக் கருத்தாய்ச் செபம் பண்ணக் கடவீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள் என்று சொன்னபடியால், இது கிறிஸ்தமான நமது சுத்த உபதேசத்தைக் கற்றுக்கொள்ளும்படிக்கு, இதின் தாய்தகப்பன்மாரோடு நீங்களுங் கவலைப்பட்டு, இது விரகறியாததற்குமுன் இதின் தாய்தகப்பன்மார் இறந்துபோனால், இது கிறிஸ்தமான பிள்ளையாய் வளரும்படி, நீங்கள் பிரயாசப்படவேண்

டும். பராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு இஸ்தோத்திரம். சமாதானம் உங்களோடிருக்கக் கடவது.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

கவனிப்பு. அவஸ்தை ஞானஸ்நானத்தைக் குரு தாமே கொடுத்திருந்தால், அதைக் கோவிலில் திடப்படுத்துவது அவசியம் அல்ல. வழக்கம் முதலிய யாதொரு முகாந்தரத்தின் நிமித்தம் அது கோவிலில் திடப்படுத்தப்பட வேண்டுமானால், மேற்சொல்லிய முறைமையின் துவக்கத்தில் கேட்கப்படுகிற கேள்விகளுக்குப் பதிலாகக் குரு சொல்வது:

பிரியமான சபையாரே, இந்தப் பிள்ளை அவஸ்தையில் என்னால் ஞானஸ்நானம் பண்ணுவிக்கப்பட்டு, தண்ணீரினாலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலுங் கர்த்தருடைய கட்டளையின்படி சரியாய் ஞானஸ்நானம் பெற்றதென்று இங்கே கர்த்தருக்கு முன்பாகவும் உங்களுக்குமுன்பாகவுஞ் சாட்சிகொடுத்து, இப்போது இதை வெளியரங்கமாய்க் கிறிஸ்தமான சபையின் அவயவமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். திரியேக பராபரனே இதைத் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையில் திடப்படுத்தி, நித்திய சீவனுக்கென்று காக்கக் கடவார்.

இதற்குப் பிற்பாடு மேற்சொல்லிய முறைமையின்படி தொடர்ந்து முடிக்கப்படும்.

---

4.

## விரகறிந்தவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை.

குரு ஞானஸ்நானத் தொட்டியருகே வந்து நின்று ஞானஸ்நானம் பெற வந்திருக்கிறவர்களை ஞானோபதேசக்குறிப்பிடத்தில் சோதிப்பார்.

பிறகு அவர் சபையைநோக்கிச் சொல்வது:

பிரியமான சபையாரே, அஞ்ஞான மார்க்கத்தில் பிறந்து வளர்ந்த இவன் (இவள், இவர்கள்) நித்திய இரட்சிப்பைத் தேடி,



அதற்கென்று நமது ஞானோபதேசத்தைப் படித்து, இப்போது உங்களெல்லாருக்கு முன்பாகவும் அதை அறிக்கையிட்டு, அஞ்ஞான மார்க்கத்தை அகற்றினான் (னாள், னார்கள்). ஆதலால் இவன் (இவள், இவர்கள்) ஞானஸ்நானம் பெறுகிறதற்கு யாதொரு தடையுங் காணோம். ஏனெனில் இப்படிப்பட்டவர்களுக்காகக் கர்த்தர் ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டு, அதினாலே இரட்சிப்பை வாக்குத்தத்தம்பண்ணுகிறார். இந்தக் கட்டளையையும் வாக்குத்தத்தத்தையுங் கேட்போமாக:

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் சேர்ந்து, அவர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையுஞ் சீஷராக்க, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோக முடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேனென்றும், நீங்கள் லோகம் எங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்றுந் திருவுளம்பற்றினார்.

குரு ஞானஸ்நானம் பெற வந்திருக்கிற ஒவ்வொருவனின் நெற்றியிலும் மார்பிலும் சிலுவையின் அடையாளத்தை வரைந்து சொல்வது:

நீ சிலுவையின் அடையாளத்தை உன் (†) நெற்றியிலேயும் உன் (†) மார்பிலேயும் ஏற்றுக்கொள்வாயாக.

குரு சொல்வது:

மன்றாடுவோமாக.

சர்வத்திற்கும் வல்ல நித்திய பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, உம்முடைய ஞானஸ்நான வரப்பிர

சாதத்தைத் தேடி, ஞான மறுபிறப்பினால் உண்டாகும் உம்முடைய நித்திய கிருபையை ஆசித்துக் கேட்கிற இவனுக்காக (இவளுக்காக, இவர்களுக்காக) நாங்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். இவனை (இவளை, இவர்களை) ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே. கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்போது கண்டுபிடிப்பீர்கள்; தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படுமென்று சொன்னீரே. ஆகலால் கேட்கிற இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு) உம்முடைய வரத்தைத் தந்து, தட்டுகிற இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு)க் கதவை திறந்து, இவன் (இவள், இவர்கள்) இந்தப் பரமஸ்நானத்தின் நித்திய ஆசீர்வாதத்தையும் உம்முடைய வாக்குத்தத்தமாகிய கிருபையின் இராச்சியத்தையும் அடைவதற்கு, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு கிருபை செய்தருளும், சுவாமி.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: **ஆமேன்.**

குரு சொல்வது:

இன்னும் மன்றாடுவோமாக.

சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, தேவரீர் சலப்பிரளயத்தில் விசுவாசியாத உலகத்தை உமது கண்டிப்பான நீதியின்படியே அழித்து, விசுவாசமுள்ள நோவா முதலிய எட்டு ஆத்துமாக்களை உமது மிகுந்த இரக்கத்தின்படி தற்காத்திரட்சித்தீர். அப்படியே சிவந்த சமுத்திரத்தில் கடினமனதுள்ள பார்வோனையும் அவனுடைய எல்லாச் சேனைகளையும் அமிழ்த்திப்போட்டு, உம்முடைய சனமாகிய இஸ்ரவேலைக் கால்நனையாமல் அதின் நடுவாக அழைத்துக்கொண்டு போனீர். இவைகளினால் வருங்காலத்து ஞானஸ்நானத்தை முன் குறித்துக் காட்டினீர். கடைசியாக உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தினால் யோர்தான் முதலிய சலங்களையும் ஆரோக்கியமான சலப்பிரளயமாகவும் பாவங்களை நீக்கிப் பூரணமாய்க் கழுவுகிற முழுக்காகவும் நியமித்துப் பரிசுத்தமாக்கினீர். இப்படி செய்த உமது அளவற்ற இரக்கத்தை முன்னிட்டுத் தேவரீர் இவனை (இவளை, இவர்களை)க் கிருபாகடாட்ச



மாய் நோக்கிப் பார்த்து, ஆகாயமிலிருந்து இவன் (இவள், இவர்கள்) இடத்தில் பரம்பின ஜென்மபாவமுஞ் செய்யுங் கர்மபாவமுமெல்லாம் ஆரோக்கியமான இந்தச் சலப்பிரளயத்தினால் அமிழ்ந்தியழியும்படிக்கும், இவன் (இவள், இவர்கள்) அவிசுவாசிகளுடைய கூட்டத்தை விட்டு, பரிசுத்த சபையின் பேழையில் சேர்ந்து தற்காக்கப்படும்படிக்கும், எந்நேரமும் ஆவியில் அனலாகி, நம்பிக்கையிலே சந்தோஷப்பட்டு, உமது நாமத்துக்கு ஊழியஞ் செய்யும்படிக்கும், கடைசியாய் உம்முடைய எல்லா விசுவாசிகளோடும் உமது வாக்குத்தத்தங்களின்படி நித்திய சீவனை அடையப் பாத்திரமாகும்படிக்கும், பரிசுத்த ஆவியைக்கொண்டு இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு) மெய்யான விசுவாசத்தை அருளிச்செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: **ஆமேன்.**

ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்குள் சிறு பிள்ளைகள் இருந்தால், குரு வாசிப்பது:

பரிசுத்த மாற்கு பத்தாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்கக் கடவோம். இயேசு குழந்தைகளைத் தொடுகிறதற்காக அவைகளை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். சீஷர்களோ கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, தாங்கலடைந்து, அவர்களைப் பார்த்து: பிள்ளைகள் என்னண்டையில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்; ஏனெனில் பராபரனுடைய இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறது. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், எவனாகிலுங் குழந்தையைப் போல் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால், அதுக்குட்பிரவேசிக்க மாட்டானென்று சொல்லி, அவைகளை அணைத்துக்கொண்டு, அவைகள்மேல் கைகளை வைத்து, அவைகளை ஆசீர்வதித்தார்.

குரு ஞானஸ்நானம் பெற வந்திருக்கிறவர்களுடைய சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலே தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

குரு ஞானஸ்நானம் பெறுகிறவர்களை நோக்கிச் சொல்வது:

கர்த்தர் உன் (உங்கள்) உட்படுதலையும் புறப்படுதலையும் இது முதல் என்றென்றைக்குங் காக்கக் கடவார்.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு அவர்களைக் கேட்பது:

வினா: நீ (நீங்கள்) பிசாசை விட்டுவிடுகிறாயா (விடுகிறீர்களா).

விடை: விட்டுவிடுகிறேன்.

வினா: அதின் எல்லாக் கிரியைகளையும் விட்டுவிடுகிறாயா (விடுகிறீர்களா).

விடை: விட்டுவிடுகிறேன்.

வினா: அதின் எல்லா ஆடம்பரத்தையும் விட்டுவிடுகிறாயா (விடுகிறீர்களா).

விடை: விட்டுவிடுகிறேன்.



வினா: பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து, கன்னிமரியாளிடத்தினின்று பிறந்து, பொந்தியுப்பிலாத்து என்கிறவன் கீழ்ப் பாடுபட்டு, சிலுவையிலறையுண்டு, மரித்தடக்கப்பட்டாரென்றும், பாதாளங்களில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினாரென்றும், பரமண்டலங்களுக்கேறி, சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலிருக்கிறாரென்றும், அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவாரென்றும் விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: பொதுவான பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், மாமிச உயிர்த்தெழுதலும், நித்திய சீவனும் உண்டென்று விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

வினா: நீ (நீங்கள்) இப்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதாயிருக்கிறாயா (மனதாயிருக்கிறீர்களா).

விடை: மனதாயிருக்கிறேன்.

குரு கேட்பது:

இவனுக்கு (இவளுக்கு, இதற்கு) இடவேண்டிய பேரென்ன.

உபதேசி சொல்வது: (கிறிஸ்தியான்.)

குரு ஞானஸ்நானம் பெறுகிறவன்மேல் மூன்று முறை தண்ணீர் வார்க்கையில் சொல்வது

(கிறிஸ்தியானே,) நான் உன்னைப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பண்ணுவிக்கிறேன்.

குரு ஞானஸ்நானம் பெற்றவனுடைய சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

சர்வத்திற்கும் வல்ல பராபரனும் நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர் தண்ணீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் இப்போது உன்னை மறுபடியுஞ் செனிப்பித்து, உன் பாவங்களை எல்லாம் உனக்கு மன்னித்தாரே. அவர் தம்முடைய இஷ்டப்பிரசாதத்தினால் உன்னை நித்திய சீவனுக்கென்று திடப்படுத்திக் காக்கக் கடவார்.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு ஞானஸ்நானம் பெற்றவனுக்கு (வளுக்கு, வர்களுக்கு) ச் சொல்வது:

கர்த்தருக்குள் பிரியமானவனே (வளே, வர்களே), நீ (நீங்கள்) இப்போது ஞானஸ்நானத்தின் வழியாய்க் கிறிஸ்தமான மெய்ச் சபையில் சேர்ந்து, பராபரனுக்குப் பிரியமான பிள்ளையாக (களாக) அவருடைய உடன்படிக்கைக்குட்பட்டபடியினாலே, நீ (நீங்கள்) உன் (உங்கள்) பராபரனாகிய கர்த்தருக்கு இன்று கொடுத்த வார்த்தைப்பாட்டை நினைத்து, இனிமேல் அவருக்கேற்ற பரிசுத்த நடக்கையால் அவருக்கு ஊழியஞ் செய்து, தெய்வ வசனத்தைக் கவனமாய்க் கேட்டு, கர்த்தருடைய பரிசுத்த இராப்போசனத்தைப் பத்தி விசுவாசமாக வாங்கி, மெய் விசுவாசத்தில் தரித்துத் திடன்கொண்டு, எல்லாத்திலும் மெய்க் கிறிஸ்தவர்களுக்கேற்ற சீராய் நடக்கவேண்டுமென்று பராபரனுடைய நாமத்தினால் உனக்கு (உங்களுக்கு)ப் புத்தி சொல்லுகிறேன். நீ (நீங்கள்) நாளுக்கு நாள் பராபரனுடைய கிருபையிலும் இயேசு கிறிஸ்து



வை அறிகிற அறிவிலும் வளர்ந்து, எல்லா நற்கிரியைகளிலுங் கனிதந்து, வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரப் பங்குக்கு உன்னை (உங்களை) ஏற்றவனா (வளா, வர்களா) க்கின பரம பிதாவை எந்நேரமுந் துதிக்கும்படிக்கு, அவர்தாமே உனக்கு (உங்களுக்குத்) தமது ஆவியையுங் கிருபையையும் இயேசு கிறிஸ்துவின் நிமித்தங் கொடுக்கக் கடவார்.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

குரு சாட்சிக்காரரை நோக்கிச் சொல்வது:

கர்த்தருக்குள் பிரியமானவர்களே, இவன் (இவள், இவர்கள்) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதற்கு நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள். மேலும் இவன் (இவள், இவர்கள்) கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்துக்கொண்டு நம்மோடொத்த கிறிஸ்தவனா (வளா, வர்களா) னதினால், நீங்களும் சபையார் யாவரும் இவனை (இவளை, இவர்களை)க் கிறிஸ்துவுக்குள் சகோதரனாக (சகோதரியாக, தரர்களாக) ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவர்களுக்கொத்த தவ்விய தாக்ஷணைகளையெல்லாம் இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு)க் காட்டி வர வேண்டியது. இவன் (இவள், இவர்கள்) இப்போது ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவுக்குள் எப்படி பொருதவைக்கப்பட்டிருக்கிறானோ (ளோ, ர்களோ), அப்படி அவரிடத்தில் எப்போதும் நிலைத்திருக்க நீங்கள் இவனுக்காக (இவளுக்காக, இவர்களுக்காக)க் கருத்தாய்ச் செபம்பண்ணி, இவன் (இவள், இவர்கள்) கிறிஸ்துமார்க்க அறிவில் வர்த்திக்க உங்களாலானமட்டுங் கவலைப்படுவீர்களாக. பராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு இஸ்தோத்திரம். சமாதானம் உங்களோடிருக்கக் கடவது.

உபதேசியுஞ் சாட்சிகளுஞ் சொல்வது: ஆமேன்.

---

# IV.

# RECEPTIO.

# வேறு சபைகளிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை.

---

கவனிப்பு. க. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு, தான் இருக்கிற சபையை விட்டு, வேறு சபையின் ஐக்கியத்தைச் சேர உரிமையுள்ளவனாயிருக்கிறான்.

கவனிப்பு. உ. நம்முடைய சபையின் விசுவாசத்தை முழு இருதயத்தோடும் அறிக்கையிட்டு, அதின் ஐக்கியத்தைத் தேடுகிறவர்களை அதில் ஏற்றுக்கொள்ள நமது சபைக்கு அதிகாரம் உண்டு.

கவனிப்பு. ங. ஒருவன் நமது சபையின் ஐக்கியத்தை மனப்பூர்வமாயும் உறுதியான மனதோடும் அல்ல, வேறுமுகாந்தரங்களின் நிமித்தம் அதைத் தேடினால், அப்படிப்பட்டவன் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டான்.

கவனிப்பு. ச. நமது சபையின் ஐக்கியத்தைச் சேர உண்மையாய் விரும்புகிற ஒவ்வொருவனும் நமது சபையின் போதகத்திலே சரியாய் உபதேசிக்கப்பட்டு, அவன் அதை அறிந்து, தாராளமாய் அறிக்கையிட்டு, சபையின் முறைமைகளுக்கும் ஒழுங்குகளுக்குங் கீழ்ப்படிந்திருப்பேனென்று வாக்குக்கொடுத்தால், அவன் ஏற்றுக்கொள்ளப்படுவான்.

1.

## ரோமான் சபையிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை.

குரு பீடத்துக்குமுன் நின்று, ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகப் பீடத்தருகிலே வந்து நின்றிருக்கிறவர்களை ஞான உபதேசக்குறிப்பிடத்தில் சோதிப்பார்.

பிறகு அவர் சபையை நோக்கிச் சொல்வது:

பிரியமான சபையாரே, இவன் (இவள், இவர்கள) ரோமான் சபையைவிட்டுச் சுவிசேஷக லுத்தரன் சபையைச் சேரவேண்டுமென்று தனது (தங்கள்) விருப்பத்தைத் தகுந்தபடி தெரிவித்ததுமன்றி,



நமது சபை கைக்கொள்ளும் இரட்சிப்பின் சுத்த ஞான உபதேசத்தைப் படித்தறிந்து அதற்கு விரோதமான ரோமான் சபையின் தப்பறையான போதகங்களை விட்டுவிட்டு, சுவிசேஷத்துக்கேற்ற உத்தம விசுவாசத்தை அநுசரித்துக்கொண்டு அறிக்கையிடுகிறான் (றாள், றார்கள்). ஆகலால் இவனை (இவளை, இவர்களை) நமது சபையில் ஏற்றுக்கொள்ள யாதொரு தடையையுங் காணோம். இவன் (இவள், இவர்கள்) கபடற்ற மனதோடு நமது சபையில் சேர்ந்து, அதின் நல்ல அறிக்கையைத் தன் (தங்கள்) இரட்சிப்புக்கென்று கைக்கொண்டு, அதற்கேற்ற பரிசுத்த நடக்கையால் முடிவுபரியந்தம் பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு, அவரே இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு)க் கிருபைசெய்யக் கடவார்.

குரு ஏற்றுக்கொள்ளப்படுகிறவனை (வளை, வர்களை) நோக்கிச் சொல்வது:

பிரியமானவனே (வளே, வர்களே), நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை நோக்கி: நீங்கள் என் வசனத்தில் நிலைத்திருந்தால், மெய்யாய் என் சீஷராயிருக்கிறீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையுமாக்குமென்று திருவுளம்பற்றினாரே. இதின்படி நீயும் (நீங்களும்) சகல பாவ அடிமைத்தனத்திற்கும் நீங்கலாகிச் சுவிசேஷத்தின் விடுதலையில் நிலைத்திருக்கும்படிக்கு, தெய்வ வசனத்தில் இரட்சிப்புள்ள சத்தியத்தை உத்தமமாய் அங்கிகரித்துக் கைக்கொள்ளவேண்டும். ஆதலால் நான் இப்போது பராபரனுடைய சந்நிதிக்கு முன்பாகவும் இந்தச் சபைக்கு முன்பாகவும் உன்னை (உங்களை)க் கேட்கிற கேள்விகளுக்குக் கபடற்ற மனதோடே உத்தரவு சொல்லுவாயாக (வீர்களாக).

க-வது: பரிசுத்தவான்களின் புண்ணியத்தினாலும் அல்ல, நமது சுய புண்ணியத்தினாலும் அல்ல, நமது ஒன்றான இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினால் மாத்திரம் விசுவாசத்தைக்கொண்டே இரட்சிப்பு அடைகிறோமென்று விசுவாசிக்கிறாயா (றீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

௨-வது: நமது விசுவாசத்துக்கும் நடக்கைக்குமடுத்த காரியங்களில் நாம் பாப்புவின் கட்டளைக்கு அல்ல, பராபரனுடைய பரிசுத்த வசனத்துக்கு மாத்திரங் கீழ்ப்படிய வேண்டுமென்று விசுவாசிக்கிறாயா (றீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

௩-வது: நீ (நீங்கள்) இனி ரோமான் சபையின் பூசை முதலிய ஆராதனைகளுக்கு விலகியிருக்கவும், சுவிசேஷத்துக்கு விரோதமான சடங்குகள் யாவையும் விட்டுவிட்டு, நமது சுவிசேஷக லுத்தரன் சபையின் ஒழுங்குப்படி நடக்கவும் வாக்குக் கொடுக்கிறாயா (றீர்களா).

விடை: வாக்குக் கொடுக்கிறேன்.

௪-வது: நீ (நீங்கள்) நமது சுவிசேஷக லுத்தரன் சபையிலே மரணபரியந்தம் நிலைத்திருந்து, விசுவாசத்திலுந் தெய்வபத்தியிலும் மென்மேலும் வளரும்படிக்குப் பிரயாசப்பட வாக்குத்தத்தம் பண்ணுகிறாயா (றீர்களா).

விடை: வாக்குத்தத்தம்பண்ணுகிறேன்.

ஏற்றுக்கொள்ளப்படுகிறவன் (வள், வர்கள்) முழங்காற்படியிட்டிருக்கையில், குரு அவன் (வள், வர்கள்) தலைமீது கையை வைத்துச் சொல்வது:

இந்த உன் (உங்கள்) அறிக்கையையும் வார்த்தைப்பாட்டையும் முன்னிட்டு என் அதிகாரத்தின்படி உன்னை (உங்களை)ச் சுவிசேஷக லுத்தரன் சபையிலே பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

குரு ஏற்றுக்கொள்ளப்பட்டவனை (வளை, வர்களை) நோக்கிச் சொல்வது:

ஒருவனும் உன் (உங்கள்) கிரீடத்தை வாங்காதபடிக்கு, உனக்கு (உங்களுக்கு) உள்ளதைப் பிடித்துக்கொண்டிரு (ருங்கள்). உன்னை (உங்களை) அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அதைச் செய்கிற



வருமாயிருப்பார். ஆமேன். கர்த்தருடைய சமாதானம் உன்னோ (உங்களோ)டிருப்பதாக.

உபதேசி சொல்வது: ஆமேன்.

---

## 2

## ரெபோர்மீர்த்தர் சபைகளிலிருந்து வருகிறவர்களை நமது சபையில் ஏற்றுக்கொள்ளும் முறைமை.

குரு பீடத்துக்குமுன் நின்று ஏற்றுக்கொள்ளப்படுகிறவனை (வளை, வர்களை) ஞானோபதேசக் குறிப்பிடத்தில் சோதிப்பார்.

பிறகு அவர் சபையை நோக்கிச் சொல்வது:

பிரியமான சபையாரே, இவன் (இவள், இவர்கள்) ரெபோர் மீர்த்தர் கொள்கைக்கடுத்த தன் (தங்கள்) சபையைவிட்டு, சுவிசேஷக லுத்தரன் சபையைச் சேரவேண்டுமென்கிற தன் (தங்கள்) விருப்பத் தைத் தகுந்தபடி தெரிவித்ததுமன்றி, நமது சபை கைக்கொள்ளுஞ் சுத்த உபதேசத்தைப் படித்தறிந்து, அதற்கு விரோதமான தன் (தங் கள்) சபையின் தப்பறையான போதகங்களை விட்டுவிட்டு, சுவிசேஷத் துக்கேற்ற சுத்த விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு அறிக்கையிடுகிறவனா (வளா, வர்களா) யிருக்கிறான் (றாள், றார்கள்). ஆனதால் இவனை (இவளை, இவர்களை) நமது சபையில் ஏற்றுக்கொள்ள யாதொருதடை யையுங் காணோம். இவன் (இவள், இவர்கள்) கபடற்ற மனதோடு நமது சபையில் சேர்ந்து, அதின் நல்ல அறிக்கையை தன் (தங்கள்) இரட்சிப்புக்கென்று கைக்கொண்டு, அதற்கேற்ற பரிசுத்த நடக்கையால் முடிவுபரியந்தம் பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு, அவரே இவனுக்கு (இவளுக்கு, இவர்களுக்கு)க் கிருபை செய்யக் கடவார்.

குரு ஏற்றுக்கொள்ளப்படுகிறவனை (வளை, வர்களை) நோக்கிச் சொல்வது:

பிரியமானவனே (வளே, வர்களே), நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை நோக்கி: நீங்கள் என் வசனத்தில் நிலைத்திருந்தால், மெய்யாய் என் சீஷராயிருக்கிறீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையுமாக்குமென்று திருவுளம்பற்றினாரே. இதின்படி நீயும் (நீங்களும்) சகல பாவ அடிமைத்தனத்துக்கும் நீங்கலாகி, சுவிசேஷத்தின் விடுதலையில் நிலைத்திருக்கும்படிக்கு, தெய்வ வசனத்தின் இரட்சிப்புள்ள சத்தியத்தை உத்தமமாய் அங்கிகரித்துக் கைக்கொள்ளவேண்டும். ஆதலால் நான் இப்போது பராபரனுடைய சன்னிதிக்கு முன்பாகவும் இந்தச் சபைக்கு முன்பாகவும் உன்னை (உங்களை)க் கேட்கிற கேள்விகளுக்குக் கபடற்ற மனதோடே உத்தரவு சொல்வாயாக (வீர்களாக).

௧-வது: பரிசுத்த ஆவியானவர் தெய்வவசனத்தினாலும் பரிசுத்த சாக்கிரமெந்துகளாலுங் கொடுக்கப்பட்டு, இந்தக் கிருபையின் எத்தனங்களைக் கொண்டு இரட்சிப்பின் கிரியையை நடப்பிக்கிறாரென்று விசுவாசிக்கிறாயா (றீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

௨-வது: பரிசுத்த இராப்போசனத்திலே ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்தோடும் இரசத்தோடுங் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் இராப்போசனத்தை வாங்குகிற எல்லாருக்கும் மெய்யாகவே கொடுக்கப்படுகிறதென்றும், எல்லாராலுந் தின்று குடிக்கப்படுகிறதென்றும் விசுவாசித்து அறிக்கையிடுகிறாயா (றீர்களா).

விடை: அறிக்கையிடுகிறேன்.

௩-வது: நீ (நீங்கள்) இனி பரிசுத்த இராப்போசனத்தை நமது சுவிசேஷக லுத்தரன் சபையிலேயன்றி வேறெந்தச் சபையிலும் வாங்காதிருக்கவும், இந்த நமது சபையின் ஒழுங்குப்படி நடக்கவும் வாக்குக்கொடுக்கிறாயா (றீர்களா).

விடை: வாக்குக்கொடுக்கிறேன்.



௪-வது: நீ (நீங்கள்) நமது சுவிசேஷக லுத்தரன் சபையிலே மரணபரியந்தம் நிலைத்திருந்து, விசுவாசத்திலுந் தெய்வ பத்தியிலும் மென்மேலும் வளரும்படி பிரயாசப்பட வாக்குக்கொடுக்கிறாயா (றீர்களா).

விடை: வாக்குக்கொடுக்கிறேன்.

ஏற்றுக்கொள்ளப்படுகிறவன் (வள், வர்கள்) முழங்காற்படியிட்டிருக்கையில், குரு அவன் (வள், வர்கள்) தலை மீதில் கையை வைத்துச் சொல்வது:

இந்த உன் (உங்கள்) அறிக்கையையும் வார்த்தைப்பாட்டையும் முன்னிட்டு என் ஆதிக்கத்தின்படி உன்னை (உங்களை)ப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் சுவிசேஷக லுத்தரன் சபையில் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

குரு ஏற்றுக்கொள்ளப்பட்டவனை (வளை, வர்களை) நோக்கிச் சொல்வது:

ஒருவனும் உன் (உங்கள்) கிரீடத்தை வாங்காதபடிக்கு, உனக்கு (உங்களுக்கு) உள்ளதைப் பிடித்துக்கொண்டிரு (ருங்கள்). உன்னை (உங்களை) அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அதைச் செய்கிறவருமாயிருப்பார். ஆமென். கர்த்தருடைய சமாதானம் உன்னோடே (உங்களோ)டிருப்பதாக.

உபதேசி சொல்வது: ஆமென்.

# V.

# CONFIRMATIO.

# திடப்படுத்தும் முறைமை.

கவனிப்பு. க. திடப்படுத்தல் பொதுவான ஆராதனையில் நடந்தால், அது விசுவாசப்பிரமாணத்தை அறிக்கையிட்டபின்பு துவக்கமாகும். (வேண்டுமானால் அது பிரசங்கத்திற்குப்பின் நடப்பிக்கப்படலாம்).

கவனிப்பு. உ. திடப்படுத்தல் பொதுவான ஆராதனையில்லாத சமயத்தில் செய்யப்பட்டால், சபை அதின் துவக்கத்தில் எக. ஆம்-ம் ஞானப்பாட்டில் சில கவிகளைப் பாடும்.

*திடப்படுத்தப்படும் பிள்ளைகள் பீடத்துக்கருகில் வந்து வரிசையாய் நிற்பார்கள். அப்போது பீடத்திற்குமுன் நிற்கிற குரு சபையாருக்குச் சுருக்கமாய்ப் பிரசங்கிப்பார், அல்லது அதற்குப் பதிலாகப் பின்வரும் வார்த்தைகளைச் சொல்வார்.*

கர்த்தருக்குள் சிநேகிக்கப்பட்ட சபையாரே, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் பிறந்த எட்டாம் நாள் மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி சுன்னத்துப்பண்ணப்பட்டார். அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது அவர் முதல்விசை பஸ்கா பண்டிகையைக் கொண்டாடிப் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசிக்க யோசேப்பு மரியாளோடு எருசலேமுக்குப் போயேறினார். அவர் அந்தப் பண்டிகை முடிந்தபின் தெய்வாலயத்திலிருந்து தாம் தெய்வ வசனத்தில் பெற்றிருந்த ஆச்சரியமான அறிவைத் தமது சனத்தின் போதகருக்கும் தம்மைக் கேட்கிறயாவருக்கும் விளங்கப்பண்ணி, தாம் தேவ குமாரனென்பதை வெளியரங்கமாய் அறிக்கையிட்டார். அவர் இவைகளினால் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் முன்மாதிரியானார். நமது இந்தப் பிள்ளைகள் மறுசெனன முழுக்கினால் கிறிஸ்துவுக்குள் பராபரனுடைய பிள்ளைகளாகும்படிக்கு, இவர்கள் பிறந்த சில காலத்திற்குப் பின் இவர்களை ஞானஸ்நானத்திற்குக் கொண்டுவந்தோம். இவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து, அவரைப்போல் ஞானத்திலும் வளர்த்தியிலும் அதிகப்படும்படியாக இவர்களுக்கு ஞானோபதேசத்தைப்



போதிக்கக் கவலையாயிருந்தோம். ஆதலால் கர்த்தராகிய இயேசு பன்
னிரண்டாம் வயதில் பஸ்கா பண்டிகையை ஆசரித்ததுபோல், இந்தப்
பிள்ளைகள் புதிய ஏற்பாட்டின் பஸ்கா போசனமாகிய பரிசுத்த இராப்
போசனத்தில் பங்கடையும்படிக்கு, தெய்வ கிருபையால் அறிவில்
தேறினவர்களாயிருக்கிறார்களென்று நம்பியிருக்கிறோம். அவர்கள்
தங்களைத் தாங்களே சோதித்தறியக் கூடியவர்களாகும்படிக்கு, தெய்வ
வசனத்தைப் படித்து, அவருடைய திருச்சித்தத்தை அறிந்திருக்கி
றார்கள். இது உங்களுக்கு விளங்கும்படியாகவும், இந்தப் பிள்ளைகள்
தங்களை ஞானஸ்நானத்தினால் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட
இயேசு கிறிஸ்துவைக் குறித்து நல்ல அறிக்கைபண்ணும்படியாக
வும், நான் இப்போது அவர்களை நமது ஞானோபதேசக் குறிப்பிடத்
தின் போதகத்தில் சோதித்துக் கேட்கப் போகிறேன்.

*குரு திடப்படுத்தப்படும் பிள்ளைகளை ஞானோபதேசக் குறிப்பிடத்தில் சோதிப்பார். அப்போது அவர் தெரிந்துகொண்ட ஒரு வேதவாக்கியத்தை முன்னிட்டுத் திடப்படுத்தப்படுகிற பிள்ளைகளுக்குப் புத்தி பிரசங்கத்தைச் செய்வார், அல்லது அவர்களுக்குப் பின்வரும் புத்தி வார்த்தைகளைச் சொல்வார்.*

பிரியமான பிள்ளைகளே, கர்த்தர் உங்களிடத்தில் பெரியவை
களைச் செய்தார். தமது உடன்படிக்கையைக் காக்கிற உண்மையுள்ள
பராபரனாகிய அவர் உங்களை ஞானஸ்நானத்தால் தமது பிள்ளை
களாக்கி, சிறுவயதில் உங்கள் சரீரத்துக்குஞ் சீவனுக்கும் யாதொரு
மோசமுஞ் சேதமும் நேரிடாதிருக்க உங்களைக் காப்பாற்றி, திடப்படுத்
தலுக்குப் போந்த வயதாகும்படி கிருபைசெய்தார். அவர் உங்
கள் பெற்றார் முதலியவர்களைக் கொண்டும் தமது ஊழியராகிய உங்கள்
போதகரைக் கொண்டும் உங்களைக் கிறிஸ்தமான பிள்ளைகளாக வளரச்
செய்து, தமது திருவசனத்தை உங்களுக்குப் போதிப்பித்திருக்கிறார்.
நீங்கள் அதினால் உங்களைப் பற்றிய பராபரனுடைய நல்ல சித்தத்திற்
கும் பிசாசு லோகம் மாமிசமென்றவைகளின் துர்ச்சித்தத்திற்கும் உண்
டாயிருக்கிற வித்தியாசம் இன்னதென்பதை அறிந்திருக்கிறீர்கள்.
அர்ச்சியசிஷ்ட யோவான் உங்களைப் போலொத்த பிள்ளைகளுக்குச்
சொல்லும் வார்த்தைகளை இப்போது கவனமாய்க் கேளுங்கள். அவன்:

பிள்ளைகளே, பிதாவை அறிந்திருக்கிறீர்களென்று உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பெலவான்களாயிருக்கிறீர்களென்றும் தெய்வ வசனம் உங்களில் தரித்திருக்கிறதென்றும் உங்களுக்கு எழுதினேன். லோகத்தையாகிலும் லோகத்திலுள்ளதுகளையாகிலுஞ் சிநேகியாதிருங்கள். ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால், அவனில் பிதாவின் சிநேகமில்லை. லோகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைநிற்கிறானென்றான். பிள்ளைகளே, நாங்கள் இன்றைக்கு இந்தத் தெய்வ வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறோம். அப்போஸ்தலர் எழுதிவைத்ததும் நாங்கள் உங்களுக்குப் போதித்ததுமான தெய்வ வசனத்தைக் கொண்டு நீங்கள் உங்களை ஞானஸ்நானத்தில் மறுபடியுஞ் செனிப்பித்த பிதாவையும், தமது திரு இரத்தத்தால் உங்களைச் சுத்திகரித்த குமாரனையும், உங்களைப் பரிசுத்தமாக்கின பரிசுத்த ஆவியையும் அறிந்திருக்கிறீர்கள். அன்புள்ள பரம பிதா தம்மையும் தமது கிருபையின் ஆலோசனையையும் உங்களுக்கு விளங்கப் பண்ணினார். அவர் இப்போது இதிலும் அதிகமான கிருபையை உங்களுக்குச் செய்து, பரிசுத்த இராப்போசனத்தில் தமது குமாரனும் உங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரத்தால் உங்களைப் போஷிப்பித்து, புது உடன்படிக்கையின் திரு இரத்தத்தால் உங்கள் தாகத்தைத் தீர்க்க மனதாயிருக்கிறார். நீங்கள் உங்களைச் சோதித்தறிந்து, கிறிஸ்துவை அறிக்கை பண்ணும்படிக்கு, தெய்வ வசனத்தை உங்களுக்குப் போதித்திருக்கிறோம். நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது உங்கள் ஞானத்தாய்தகப்பன்மார் உங்கள் நாமத்தில் பிசாசையும் அதின் எல்லாக் கிரியைகளையும் ஆடம்பரத்தையும் விட்டுவிட வார்த்தைப்பாடு கொடுத்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள். நீங்கள் இப்போது உங்கள் வாயினால் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைக் கொடுக்க வேண்டும். கர்த்தர் உங்களுக்காகத் தமது பந்தியை ஆயத்தப்படுத்தி: என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை இளைப்பாற்றுவேனென்று சொல்லுகிறார். அவர் தமது கிருபையை உங்களிடத்தில் உண்மையாய்க் காத்து, உங்கள் இளவயதின் பாவங்களுக்குத் தக்கதை உங்களுக்குச் செய்யாமல், அவைகளை மன்னித்து, உங்களைச் சுத்த தயவினால் தம்மண்டையில் இழுத்துக்கொண்டார். நீங்கள் உங்கள் இரட்சகரின் வார்த்தையைக் காத்து, அவருடைய திருச்சரீர இரத்தத்தின் ஐக்கியத்தைத் தேடி, அவர் திருச்சித்தத்தின்படி செய்வதற்கு உங்கள் இருதயங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் இதைக் கருத்தாய் ஆசித்துத் தெய்வ பலத்தால் நிறைவேற்றும்படிக்கு, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குத் துணைசெய்வாராக. ஆமேன்.



குறிப்பு. வேண்டுமானால் சபையார் இங்கே ஓர் ஞானப்பாட்டில் சில கவிகளைப் பாடலாம்.

௧௩ திடப்படுத்தப்படும் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்வது:

பிரியமான பிள்ளைகளே, நான் இப்போது பராபரனுக்குமுன்பாகவும் இந்தச் சபைக்கு முன்பாகவும் உங்களைக் கேட்குங் கேள்விகளுக்கு நீங்கள் உண்மையான மனதோடு மறுமொழி சொல்வீர்களாக.

௧-வது: பிசாசையும் அதின் எல்லாக் கிரியைகளையும் அதின் எல்லா ஆடம்பரத்தையும் விட்டுவிடுகிறாயா (விடுகிறீர்களா).

விடை: விட்டுவிடுகிறேன்.

௨-வது: ஞானஸ்நானத்தினால் உன்னை (உங்களை) மறுசெனனமாய்ச் செனிப்பித்து, நீதிமான் (கள்) ஆக்கி, பரிசுத்தப்படுத்தின பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரனை விசுவாசிக்கிறாயா (விசுவாசிக்கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

௩-வது: பரிசுத்த இராப்போசனத்தில் திருச்சபையாரோடு நீ (நீங்கள்) கர்த்தருடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்க ஆசிக்கிறாயா (ஆசிக்கிறீர்களா).

விடை: ஆசிக்கிறேன்.

௬-வது தெய்வ வசனத்தைச் சுத்தமாய்ப் போதித்து, பரிசுத்த ஞான திரவியங்களைச் சரியாய்ப் பரிமாறுகிற சுவிசேஷக லுத்தரன் சபையில் உன் (உங்கள்) மரணபரியந்தம் நிலைத்திருந்து, கர்த்தருக்கு உண்மையாய் ஊழியஞ் செய்ய வாக்குக்கொடுக்கிறாயா (கொடுக்கிறீர்களா).

விடை: கொடுக்கிறேன்.

*பிள்ளைகள் பீடத்தைச் சுற்றி முழங்காற்படியிட்டிருக்கையில், குரு ஒவ்வொரு பிள்ளையின் தலையின்மேலும் தன் கையை வைத்து, அதை அதின் ஞான ஸ்நானப் பேரால் அழைத்துச் சொல்வது:*

(கிறிஸ்தியானே) நீ பரிசுத்த இராப்போசனத்தில் கிறிஸ்துவின் திருச்சரீரத்திலும் திருஇரத்தத்திலும் பங்கடையும்படிக்கு, நான் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே உன்னை ஆசீர்வதித்துத் திடப்படுத்துகிறேன். பிதாவாகிய பராபரன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் தமது வசனத்தினாலும் ஞானதிரவியங்களினாலும் பரிசுத்த ஆவியின் ஈவை உன்னில் வர்த்திக்கச் செய்வாராக. ஆமேன்.

கவனிப்பு. வேண்டுமானால் குரு ஒவ்வொரு பிள்ளையையுந் திடப்படுத்தினபின் அதற்குத் தகுந்த ஒரு வேதவாக்கியத்தைச் சொல்லலாம்.

குரு திடப்படுத்தப்பட்ட பிள்ளைகளெல்லாரையும் பார்த்துச் சொல்வது:

உங்களை எங்களோடு கிறிஸ்துவுக்குள் திடப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணுகிறவர் பராபரன். அவர் நம்மை முத்திரை போட்டவரும் நமது இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தைக் கொடுத்தவருமாமே. உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்மட்டாக முடிய நடத்தி வரக் கடவார். ஆமேன்.

அல்லது:

உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்மட்டாக முடிய நடத்தி வரக் கடவார். ஆமேன்.



குரு சொல்வது:

செபஞ் செய்வோமாக.

சர்வ வல்லமையும் இரக்கமுமுள்ள பராபரனே, நன்மையானயாவையும் எங்களில் உண்டாக்கி முடிய நடத்திவருகிற பரமபிதாவே, தேவரீர் இந்தப் பிள்ளைகளை உமது திருச்சபைக்குள்ளாக்கி, இவர்களை ஞானஸ்நானத்தால் மறுசெனனமாய்ச் செனிப்பித்ததற்காகவும், இவர்கள் உமது கிருபையையும் உமது ஒன்றான குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள இரட்சிப்பையும் அறிந்து, இந்தத் திருச்சபைக்கு முன் அதை அறிக்கையிடும்படிக்கு அவர்களைப் பிரகாசிப்பித்ததற்காகவும், உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். தேவரீர் இவர்களில் துவக்கின இந்தக்கிரியையை முடிய நடத்தியருளும். இவர்கள் மாமிச இச்சையாலாவது பொய்ப்போதகத்தாலாவது தாங்கள் அறிந்த சத்தியத்தை விட்டுத் தவறிப்போகாமல், உமது சுத்தச் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, உமது திருச்சபையின் ஐக்கியத்திலும் மெய்யான விசுவாசத்திலும் முடிவுபரியந்தம் உறுதியாய் நிலைத்திருக்கும்படிக்கு, உமது பரிசுத்த ஆவியை இவர்களுக்கு அதிகமதிகமாய்க் கொடுத்தருளும். இவர்கள் உமக்குப் பிரியமான பிள்ளைகளாகி, உமது ஒன்றான குமாரனும் எங்கள் தலைவருமாகிய கிறிஸ்துவுக்குள் மெய்யான ஞானத்திலும் நீதியிலும் பரிசுத்தத்திலும் மென்மேலும் வளர்ந்து, கிறிஸ்துவின் நிறைவான வளர்த்தியின் அளவாய்த் தேறின புருஷராகும்படிக்கும், இவர்கள் ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் எங்கள் கர்த்தராகிய உமது நேச குமாரனையும் பரிசுத்த ஆவியையும் நாளுக்கு நாள் அதிகம்திகமாய் அறிந்து, கருத்தாய்ச் சிநேகித்து, மற்றவர்களுக்கு முன்பாக வார்த்தைகளாலும் நடக்கையினாலுந் தைரியமாய் அறிக்கையிட்டுப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கும்படிக்கும், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு இவர்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்மு

டைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

அல்லது:

பரம பிதாவாகிய பராபரனே, தேவரீர் உமது இராச்சியத்தின் இரகசியங்களை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினதுபோல், இந்தப் பிள்ளைகளுக்கும் இரங்கி, உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையுஞ் சுவிசேஷ சத்தியத்தையும் இருதயத்தில் விசுவாசித்து, வாயினால் அறிக்கையிடுவதற்குத் தகுதியான அறிவை அடையும்படி, இவர்களுக்கு ஒத்தாசை செய்ததற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இந்தப் பிள்ளைகள் மெய் விசுவாசத்திலுந் தெய்வ பக்தியிலும் பொறுமை நம்பிக்கையிலும் இரட்சிப்புக்கான அறிவிலும் நாளுக்கு நாள் அதிகமதிகமாய்த் தேறி, உமது பரிசுத்த நாமத்தின் மகிமைக்கென்று திரளான விசுவாச கனிகளைக் கொடுத்து, உமது கிருபையில் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு, தேவரீர் பரிசுத்த ஆவியைக்கொண்டு இவர்கள் இருதயங்களையுஞ் சிந்தனைகளையும் மென்மேலும் பிரகாசிப்பித்து, உறுதிப்படுத்த வேண்டுமென்று உம்மை மிகுந்த கருத்தோடு வேண்டிக்கொள்ளுகிறோம். கடைசிநாளில் இந்தப் பிள்ளைகளும் நீதியின் கிரீடத்தைப் பெறும்படிக்கு, அவர்கள் உயிரோடிருக்கும் நாள் எல்லாம் நல்ல போராட்டத்தைப் போராடி முடியச் செயமடைகிறதற்கு, இயேசு கிறிஸ்துவைக் கொண்டு இவர்களைப் பலப்படுத்தியருளும். இவர் உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார். ஆமேன்.





பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

*பொதுவான ஆராதனையில் பிள்ளைகள் திடப்படுத்தப்பட்டால், குரு பிள்ளைகளை நோக்கிச் சொல்வது:*

**கர்த்தாவின் சமாதானம் உங்களோடிருப்பதாக. ஆமேன்.**

*அப்போது பிள்ளைகள் தங்கள் இடங்களுக்குப் போவார்கள். சபையார் பிரசங்கத்திற்கடுத்த ஞானப்பாட்டைப் பாடுவார்கள்.*

*பொதுவான ஆராதனையில்லாத சமயத்தில் பிள்ளைகள் திடப்படுத்தப்பட்டால், சபையார் இங்கே எக-ம் அல்லது அ௰-ம் ஞானப்பாட்டில் இரண்டொரு கவிகளைப் பாடுவார்கள்.*

குரு சபையை நோக்கி ஓதுவது:

**கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.**

சபை:

**அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.**

குரு:

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்கு (†) சமாதானங் கட்டளையிடக் கடவார்.

சபை:

**ஆமேன். ஆமேன். ஆமேன்.**

# VI.

# CONFESSIO.

# பாவசங்கீர்த்தன முறைமை.

கவனிப்பு. க. பாவசங்கீர்த்தனத்துக்கு வருகிற ஒவ்வொருவன் தலையின்மேலும் குரு கையை வைத்து; அவன் பாவங்களை மன்னிக்கவேண்டியதென்கிற நமது சபையின் ஒழுங்கைக் காப்பாற்றி வரவேண்டியது. எவர்களுக்குப் பாவமன்னிப்பை அறிவிக்கக் கூடாதோ, அவர்களுக்கு இராப்போசனத்தைக் கொடுக்கவுங் கூடாது.

கவனிப்பு. உ. குரு பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்படுவதை அறிவிக்கும்போது, அவர் தங்கள் பாவங்களைத் தனித்து அறிக்கையிட விரும்புஞ் சபையாருக்கு அப்படிச் செய்ய இடங்கொடுக்கப்படுமென்பதைத் தெரிவிக்கலாம்.

கவனிப்பு. ங. பாவசங்கீர்த்தனத்திற்குமுன் ஆயத்த ஆராதனை இருந்தால், அதற்கு வருஞ் சபையாருக்குத் திறவுகோல் என்னும் அதிகாரம் பரிசுத்த இராப்போசனம் முதலியவைகளைக் குறித்து உபதேசிப்பது தகுதியாம். பரிசுத்த இராப்போசனத்தை வாங்க விரும்புகிறயாவரும் பாவசங்கீர்த்தனத்துக்குமுன் தங்கள் பேரைக் குருவுக்குத் தெரிவிக்க வேண்டியது.

கவனிப்பு. ச. நமது சபையைச் சேர்ந்த ஒரு சேகரத்திலுள்ள ஒருவன் இன்னொரு சேகரத்தில் இராப்போசனம் வாங்க விரும்பினால், அவன் தன் குருவின் நற்சாட்சிப் பத்திரத்தைத் தனக்கு இராப்போசனங்கொடுக்குங் குருவுக்குக் காண்பிப்பது தகுதி. காண்பியாவிட்டால், இராப்போசனம் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கக் கூடாது.

கவனிப்பு. ரு. கூடுமானால் பாவசங்கீர்த்தனம் பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்படும் நாளுக்குமுன் செய்யப்படும்.

சபையார் பாவசங்கீர்த்தனத்தைப் பற்றிய ஒரு ஞானப்பாட்டில் சில கவிகளைப் பாடினபிறகு, உபதேசி தவக சங்கீதங்களில் (உ௱சய-ம் பக்கத்தில் பார்) ஒன்றையும், பாவமன்னிப்புக்காகச் சொல்லுகிற விவரமான செபத்தையும் (உ௱கூஎ-ம் பக்கத்தில் பார்), கர்த்தருடைய செபத்தையும் வாசிப்பான். அதற்குப்பின் சபையார் ஞானப்பாட்டில் இரண்டு மூன்று கவிகளைப் பாடுவார்கள். அப்போது குரு பீடத்துக்கு வருவார். பாவசங்கீர்த்தனத்தைச் செருகிறவர்களெல்லாரும் எழுந்து, பீடத்துக்குச் சமீபமாய் வந்து நிற்கையில், குரு அவர்களை நோக்கிப் பாவமன்னிப்பின் பேரில் பிரசங்கிப்பார், அல்லது பின்வரும் புத்தி பிரசங்கங்களிலே ஒன்றை வாசிப்பார்.



௧

1.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தருடைய பந்திக்குச் சேர்ந்து, அவருடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்க விரும்புகிறபடியால், நீங்கள் அவைகளைப் பாத்திரமாய் வாங்கும்படி கவலையாயிருக்க உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். இப்படி செய்யும்படிக்கு நீங்கள் பின்வரும் மூன்று காரியங்களைக் கவனிக்க வேண்டியது.

முதலாவது, நீங்கள் பாவத்தில் உற்பவித்துப் பிறந்ததுமல்லாமல், நினைவுகள் வார்த்தைகள் கிரியைகளினால் இரகசியமும் வெளியரங்கமுமாய்ப் பலவிதப் பாவங்களையும் அக்கிரமங்களையுஞ் செய்தீர்களென்று அறிந்து அறிக்கையிட்டு, நீங்கள் இவைகளை அற்பமாக எண்ணாமல், இவைகளால் பராபரனுடைய கோபத்துக்கும், இம்மையிலும் மறுமையிலும் அவருடைய ஆக்கினைத்தீர்ப்புக்கும் பாத்திரராயிருக்கிறீர்களென்று ஒப்புக்கொள்ள வேண்டியது. மேலும் நீங்கள் உங்களைக் கிறிஸ்துவுக்குள் சிநேகித்த பராபரனுக்குப் பிரியமான நன்றியறிதலைச் செலுத்தாமல், அவருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்து, அதினால் அவரைக் கோபப்படுத்தினதற்காக உத்தமமாய் மனஸ்தாபப்பட வேண்டியது.

இரண்டாவது, உங்கள் நற்கிரியைகளும் புண்ணியங்களும் உங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் நீக்கி, தெய்வ கிருபையை உங்களுக்குச் சம்பாதிக்கக் கூடாதென்றும், பராபரனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்த பாடுகளினாலும் மரணத்தினாலும் உங்கள் பாவங்களுக்காக ஈடுசெலுத்தி, பாவமன்னிப்புக்காகச் சிந்தின தம்முடைய திரு இரத்தத்தினால் உங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரிக்கிறாரென்றும் ஒத்துக்கொள்ளவேண்டும். நீங்கள் உங்கள் ஒன்றான இரட்சகராகிய இவர்பேரில் உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து, பரம பிதாவை நோக்கிப் பெருமூச்சுவிட்டு, அவர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து, உங்கள் அக்கிரமங்களையெல்லாம் மூடி, உங்கள் ஆத்தும இரட்சிப்புக்குத் தடையா

யிருக்கிற யாவையும் நீக்கி, உங்களை இரட்சிக்கும்படி அவரைக் கெஞ்சி மன்றாட வேண்டியது.

மூன்றாவது, தெய்வ கிருபையினாலும் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினாலும் நீங்கள் உங்கள் பாவ வழிகளை விட்டுச் சீர்படுவதற்கு முழு இருதயத்தினாலும் பிரயாசப்பட வேண்டியது. உங்கள் சகோதரர்பேரில் உங்களுக்கு இருக்கும் கோபத்தையும் வர்மத்தையும் நீங்கள் விட்டுவிட்டு, அவர்கள் உங்களுக்குச் செய்திருக்கிற குற்றங்களை அவர்களுக்கு மனப்பூர்வமாய் மன்னித்து, நீங்கள் பரிசுத்த இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கும்படி, பராபரன் பாவங்களையும் அக்கிரமங்களையும் மன்னித்து, உங்களுக்குத் தமது பரிசுத்த ஆவியைக் கொடுக்க வேண்டும் என்று அவரைக் கெஞ்சி மன்றாடுங்கள். பராபரனே இதற்காக இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்களுக்குக் கிருபை செய்வாராக. ஆமேன்.

2.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் சிநேகிக்கப்பட்டவர்களே, நீங்கள் உங்கள் பாவக்குற்றங்களிலிருந்து நீங்கி, நன்மனச்சாட்சியையும் பாவமன்னிப்பையும் பெற்று, பரிசுத்த இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கும்படிக்கு, இப்போது பாவசங்கீர்த்தனத்திலே தெய்வ வசனத்தினால் உபதேசிக்கப்பட்டு, நல்ல புத்தியையும் ஆறுதலையும் அடைகிறதற்காகக் கூடி வந்திருக்கிறபடியால், நீங்கள் பின் சொல்லப்படும் மூன்று காரியங்களைக் கவனிக்க வேண்டியது:

முதலாவது, பாவமன்னிப்புக்கூறுதல் „ நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சபிக்கப்பட்ட பாவிகளாகிய நம்மைத் தமது ஊழியர் உரைக்கிற சுவிசேஷ வார்த்தையைக்கொண்டு பாவத்திலும் தெய்வ கோபத்திலும் பிசாசின் வல்லமையிலுமிருந்து விடுவிக்கும் அவருடைய சர்வவல்லமையுள்ள திவ்விய சத்தமாயிருக்கிறதென்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது. அதைப்பற்றி அவர் தமது சீஷர்களை நோக்கி: பிதா என்னை அனுப்பினதுபோல், நானும்



உங்களை அனுப்புகிறேன். பரிசுத்த ஆவியை வாங்குங்கள்; எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் பூமியில் எதுகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அதுகள் வானத்தில் கட்டவிழ்க்கப்பட்டதாயிருக்குமென்றார். ஆகையால் பாவமன்னிப்புக்கூறுதல் இரட்சிப்புக்கான தெய்வ பெலனும் பொக்கிஷமுமாயிருக்கிறது. இதினால் கிறிஸ்து உங்களில் ஒவ்வொருவனையும் பார்த்து: என் மகனே, என் மகளே, உன் பாவங்களெல்லாம் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று உறுதியாய் விசுவாசி; சமாதானத்தோடே போ என்கிறார்.

இரண்டாவது, பரிசுத்த இராப்போசனம் தேவ குமாரனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் கட்டளையிட்டதின்படி கிறிஸ்தவர்களாகிய நாம் அப்பத்துக்குள்ளும் திராட்ச இரசத்துக்குள்ளும் தின்று குடிக்கிற அவருடைய மெய்யான திருச்சரீரமும் திருஇரத்தமுமாயிருக்கிறதென்றும், நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவுக்குள் பிழைத்து, அவருடைய ஆவியினாலும் பெலத்தினாலும் நித்திய சீவனுக்கென்று காக்கப்பட்டு, கடைசி நாளில் உயிரோடெழுப்பப்படும்படிக்கு, பாவமன்னிப்பைக் குறித்த நமது விசுவாசம் பெலப்படவும், நாம் கிறிஸ்துவோடு ஒரே சரீரமும் அவருடைய சரீரத்தின் அவயவங்களுமாகவும், நமக்காக மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட அவருடைய சரீரத்தைத் தின்று, நம்முடைய பாவங்களுக்காகச் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தைக் குடிக்கிறோமென்றும், நாம் அறிந்து உறுதியாய் விசுவாசிக்க வேண்டியது. இப்படிக்கொத்த விலையேறப்பெற்றதும் சீவனும் அருமையுமுள்ள பரம பொக்கிஷம் பரிசுத்த இராப்போசனத்திலே நமக்குத் தந்தருளப்படுகிறது.

மூன்றாவது, நாம் பராபரனுடைய மகா உயர்ந்த ஈவுகளாகிய பாவமன்னிப்புக்கூறுதலையும், ஞான திரவியமாகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் பாத்திரமாய் வாங்குவது மிகவும் அவசியமாயிருக்கிறதென்பதை அறிந்துகொள்ள வேண்டியது. ஏனெனில் கர்த்தராகிய பராபரன்தாமே அப்போஸ்தலனாகிய

301



பவுலைக்கொண்டு: அபாத்திரனாய் இந்த அப்பத்திலே புசித்து, இந்தப் பாத்திரத்திலே குடிக்கிறவன் தனக்குத்தானே நியாயத்தீர்ப்பையும் மரணத்தையும் நித்திய ஆக்கினையையும் புசித்துக் குடிக்கிறானென்று சொல்லுகிறார். மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் பராபரன் இந்தப்பாவத்தின் நிமித்தம் அனேகரை வியாதியினாலும் சரீரப் பலவீனத்தினாலும் வேறு வாதைகளினாலுந் தண்டித்து, அகால மரணத்தினால் எடுத்துக்கொண்டாரென்றும், ஆகையால் பரிசுத்த இராப்போசனத்தைச் சேரப்போகிற ஒவ்வொருவனுந் தன்னைத்தானே சோதித்தறிந்து, இப்படியே இந்த அப்பத்திலே புசித்து, இந்தப் பாத்திரத்திலே குடிக்கக் கடவானென்றும் நம்மைப் போதித்துப் புத்தி சொல்லுகிறான். மனிதன் தன் பாவக்கேட்டை உணர்ந்தறிந்து, அதுக்காக உத்தமமாய் மனஸ்தாபப்பட்டு, தெய்வ கோபத்துக்கும் நியாயத் தீர்ப்புக்கும் பயந்து, நமது ஒன்றான மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே மாத்திரம் குணப்படுகிற இருதயத்தோடு பாவமன்னிப்பைத் தேடி, பராபரனுடைய கிருபையையும் பரிசுத்த ஆவியையுஞ் சுத்த தயவினாலே பெற்றுக்கொள்ளுகிற மெய்யான மனஸ்தாபமே இந்தச் சோதித்தறிதலாயிருக்கிறது. ஏழை மனிதராகிய நமக்குள் ஆக்கினையும் பாவமுமேயொழிய, பராபரனுக்கு முன்பாகச் செல்லும் நீதி இராதபடியால், கிறிஸ்து நமது மத்தியஸ்தராகி, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நமது எல்லாப் பாவங்களுக்காகவும் ஈடு செலுத்தி, பாவமன்னிப்பை நமக்குச் சம்பாதித்தார். இது அவருடைய நாமத்தின்பேரில் விசுவாசிக்கிற எல்லாருக்குஞ் சுவிசேஷத்தைக்கொண்டு அறிவிக்கப்படுகிறது. இந்த விசுவாசம் நமக்குள்ளிருந்தால், இயேசு கிறிஸ்துவின் ஆவியினால் நவமாய்ப் பிறந்த புதிய இருதயம் இருக்கும். இது குணப்படுதலுக்கேற்ற உத்தம கனிகளைத் தந்து, பாவத்துக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்து, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அவருடைய கற்பனைகளின்படியே பராபரனுக்கு ஊழியஞ் செய்கிறது. நாம் தினந்தோறும் துராசையினாலும் நினைவுகளினாலும் வார்த்தைகளினாலுங் கிரியைகளினாலும் பராபரனுக்கும் பிறத்தியாருக்கும் விரோதமாகக் கொடிய பாவங்களைச் செய்து, ஆக்கினைக்கு மாத்திரம் பாத்திரராயிருக்கிறபடியால், நீங்கள்



பரிசுத்த ஆவியின் துணையினால் உத்தம மனஸ்தாபம் அடைந்து, பரிசுத்த இராப்போசனத்தை மாயத்தினாலாவது வழக்கத்தினாலாவது அல்ல, உண்மையான விசுவாசத்தோடும் ஞானபசிதாகத்தோடுஞ் சேருவதற்கு, கர்த்தர் பரிசுத்த ஆவியை உங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று அவரைக் கெஞ்சி மன்றாடும்படி, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். தெய்வ பயம் உங்கள் இருதயங்களில் இருப்பதாக. உங்கள் பாவங்களுக்கு மரித்து, உங்கள் இரட்சிப்புக்காக உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின்பேரில் உங்கள் ஆறுதலையெல்லாம் வைத்து, பராபரனையும் பிறரையும் உண்மையாய்ச் சிநேகித்து, உங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தவர்களுக்கு மன்னித்து, நீங்கள் கோபப்படுத்தினவர்களோடு ஒப்பரவாகி, சகலவிதமான பாவங்களையுந் துர்க்குணத்தையும் அநியாயங்களையுங் களைந்துபோடப் பிரயாசப்படுங்கள். அப்போது நீங்கள் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு சரீரத்தின்படியேயும் ஆத்துமத்தின்படியேயுங் கிருபையையும் பெலனையும் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளுவீர்கள். இதெல்லாத்தையுங் கிருபையுள்ள கர்த்தர் உங்களனைவருக்குந் தந்தருளுவாராக. ஆமேன்.

குரு பிரசங்கத்தை முடித்த பின்பு, அல்லது இந்தப் புத்தி பிரசங்கங்களில் ஒன்றை வாசித்த பின்பு, அவர் பாவசங்கீர்த்தனத்துக்கு வந்தவர்களை நோக்கிச் சொல்வது:

கிறிஸ்துவுக்குள் சிநேகிக்கப்பட்டவர்களே, நீங்கள் தெய்வ வசனத்தைக் கேட்டதினால், இப்போது அவருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி, மனஸ்தாபமும் விசுவாசமுமுள்ள இருதயத்தோடு உங்கள் பாவங்களை அவருக்கு அறிக்கையிடுங்கள்.

பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்கள் பீடத்தைச் சுற்றிலும் முழங்காற்படியிடுவார்கள். அவர்களிலொருவன் அல்லது உபதேசி முழங்காற்படியிட்டிருக்கிறவர்களோடுஞ் சொல்வது:

இரக்கமுள்ள பராபரனே, ஏழைப்பாவியாகிய நான் உமக்கு முன்பாக விழுந்து, உம்முடைய கிருபையையும் பொறுமையையுந் தேட வருகிறேன். நான் மனதினாலும் வாக்கினாலும், நடக்கையினா

னும் வெகுவிதமான பாவக்குற்றங்களைப் பண்ணினேனென்று மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறேன். ஆ, தயவுள்ள சுவாமி, நியாயமாயிருக்கிறபடி என்னை நரகத்திலே தள்ளாதேயும். தேவரீர் என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் பார்த்து, நான் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து, என்னை இரட்சியும். நான் திரும்பப் பாவத்திற்குச் சோதிக்கப்பட்டால், அதற்குச் சம்மதியாமல், அதை அருவருக்கவும், உமக்குப் பிரியமான பிள்ளையாய் நடக்கவும், பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குப் புத்தியையும் பலத்தையுந் தந்தருளும். இனி நான் சாகும் வேளையிலே உம்முடைய மோட்ச இராச்சியத்தில் சேருவதற்கு, என்னை ஆயத்தம்பண்ணியருளும், சுவாமி. ஆமேன்.

குரு அவர்களை நோக்கிச் சொல்வது:

பராபரன் உன் (உங்கள்) பேரில் கிருபையாயிருந்து, உன் (உங்கள்) விசுவாசத்தைப் பெலப்படுத்தக் கடவார். ஆமேன்.

குரு கேட்பது:

நான் அறிவிக்கிற பாவமன்னிப்பு பராபரனுடையதென்று விசுவாசிக்கிறாயா (கிறீர்களா).

விடை: விசுவாசிக்கிறேன்.

குரு சொல்வது:

உன் (உங்கள்) விசுவாசத்தின்படி உனக்கு (உங்களுக்கு) ஆகக்கடவது.

அவர் பாவசங்கீர்த்தனம்பண்ணும் ஒவ்வொருவனுடைய தலையின்மேலுங் கையை வைத்துச் சொல்வது:

நான் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் உன் பாவங்களை உனக்கு மன்னிக்கிறேன்.



அல்லது:

நான் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் உனக்குப் பாவமன்னிப்பை அறிவிக்கிறேன்.

பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டவன் சொல்வது:

ஆமேன்.

குரு பாவசங்கீர்த்தனஞ் செய்ய முழங்காற்படியிட்டிருக்குஞ் சபையாரின் வரிசையிலுள்ள முந்தினவன் தவிர மற்றவர்களுக்கு: பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் உன் பாவங்களை உனக்கு மன்னிக்கிறேன்; அல்லது, உனக்குப் பாவமன்னிப்பை அறிவிக்கிறேன் என்று சுருக்கமாய் உரைத்தால் போதும்.

குரு பாவமன்னிப்பைப் பெற்றவர்களை வாழ்த்திச் சொல்வது:

கர்த்தரின் சமாதானத்தோடு போய், இனி பாவஞ் செய்யாதிருப்பாயாக (பீர்களாக).

அல்லது:

கர்த்தாவின் சமாதானம் உன்னோடு (உங்களோடு) இருப்பதாக. ஆமேன்.

முந்தின வரிசை எழுந்துபோனபின் பீடத்தருகில் முழங்காலிலிருக்கும் யாவருக்குங் குரு முற்கூறிய பிரகாரஞ் செய்வார். அதற்குப்பின் சபையார் ஞானப் பாட்டில் இன்னம் இரண்டொரு கவிகளைப் பாடுவார்கள். அப்படி ஆராதனை முடிக்கும்.

வேண்டுமானால் ஆராதனையைப் பின் சொல்லப்படும் முறைமையாய் முடிக்கலாம்.

குரு பீடத்திற்குமுன் நின்று சபையை நோக்கி ஓதுவது:

பிரார்த்தித்துக்கொள்ளக்கடவோம்.

அவர் பீடத்துக்குத்திரும்பி ஓதுவது:

சர்வத்திற்கும் வல்ல நித்திய பராபரனே, நாங்கள் உமக்கு விரோதமாக மிகுதியாய்ப் பாவங்களைச் செய்து, உமது நித்திய கோ

பாக்கினைக்குப் பாத்திரராயிருந்தும், தேவரீர் உமது ஒன்றான குமாரனை லோகத்தின் பாவங்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, இவர் சகல பாவிகளுக்காகவுஞ் சம்பாதித்த பாவமன்னிப்பும் நித்திய சீவனும் எங்களுக்குக் கிடைத்ததென்று எங்களை நிச்சயப்படுத்தினதற்காக உம்மை முழு இருதயத்தினாலும் இஸ்தோத்திரிக்கிறோம். நாங்கள் இனிப் பாவஞ் செய்யாதபடிக்கு, எச்சரிக்கையாயிருக்க எங்களைக் காத்து, உமக்கு ஏற்ற நீதியிலும் பரிசுத்தத்திலும் ஆவியின் பெலத்தை எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று உமது நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.

குரு சபையை நோக்கி ஓதுவது:

கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:

அவர் உமதாவியோடுமிருக்கக் கடவார்.

குரு:

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (†) சமாதானங் கட்டளையிடக் கடவார்.

சபை:

ஆமேன். ஆமேன். ஆமேன்.



# VII.

# COPULATIO.

# விவாக முறைமை.

## 1.

## a.) விவாக அறிக்கை கூறுதல்.

கவனிப்பு. விவாகம் செய்விக்கும்முன் மூன்று விசை தெய்வாராதனையில் விவாக அறிக்கை கூற வேண்டியது.

குரு பிரசங்கத்தை முடித்த பின்பு சபையாரைச் செபத்துக்கு எழுப்பிவிடும்போது, அவர் இதை அறிவிப்பார்:

தெய்வதயவினால் (கிறிஸ்தியானும் மரியாளும்) சமுசாரமார்க்கத்தில் உட்பட வேண்டுமென்றிருக்கிறார்கள். இந்தச்செயதி அறிவிக்கப்படுகிறது முதலாம் (இத்தோடு இரண்டாம், மூன்றாம்) விசையாயிற்று. இவர்கள் விவாகம் முடியக் கூடாதென்பதற்கு உங்களில் யாதொருவன் ஒருதடையை அறிந்திருந்தால், அவன் அதை ஏற்கனவே அறிவிக்கக் கடவான். ஏற்கனவே சொல்லாதவன் பேசாதிருக்கக் கடவான். பராபரன் அவர்களுக்குத் தமது கிருபையையும் ஆசீர்வாதத்தையும் அளித்து, அவர்கள் இந்தச் சமுசாரமார்க்கத்தை விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கொத்தபடி தொடங்கவும், இதிலே தெய்வபத்தியும் பரிசுத்தமுமாக வாழவும், தங்கள் ஆத்தும ஈடேற்றத்தோடு இதை முடிக்கவுங் கிருபைபண்ணக் கடவார். ஆமேன்.

# b.) விவாகஞ் செய்விக்கும் முறைமை.

சபையார் ஒரு ஞானப்பாட்டில் சில கவிகளைப் பாடினபிறகு மணவாளனும் மணவாளியுஞ் சாட்சிகளுடன் வந்து பீடத்திற்கு முன் நிற்பார்கள். வேண்டுமானல் குரு சுருக்கப் பிரசங்கமொன்றைச் செய்து, அவர்களுக்குச் சகல பாக்கியமுங் கிடைக்க வாழ்த்துவார்.

குரு மணவாளனை நோக்கிச் சொல்வது:

(கிறிஸ்தியானே), நான் உன்னைப் பராபரனுக்கும் இந்தச் சாட்சிகளுக்கும் முன்பாகக் கேட்கிறேன்.

முதலாவது, நீ இங்கே உன் அருகில் நிற்கிற (மரியாளை) பராபரனுக்கு முன்பாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும் உன் பெண்சாதியாக ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறாயோ.

விடை: மனதாயிருக்கிறேன்.

இரண்டாவது, சர்வத்திற்கும் வல்ல பராபரனுக்குப் பொருந்தினபடி நீ நன்மையிலுந் தீமையிலும இவளோடு கூட வாழ்ந்து, இவளை ஒருக்காலும் விட்டுப்பிரியாமல், நல்ல புருஷன் தன் நிதானமான பெண்சாதிக்குச் செய்யத் தக்கதைச் செய்வாயோ.

விடை: செய்வேன்.

இதற்குப்பின் குரு மணவாளியையும் நோக்கிச் சொல்வது:

(மரியாளே), இந்தப்படி நான் உன்னையுங் கேட்கிறேன்.

முதலாவது, நீ இங்கே உன் அருகில் நிற்கிற (கிறிஸ்தியானை) பராபரனுக்கு முன்பாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும் உன் புருஷனாக ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறாயோ.

விடை: மனதாயிருக்கிறேன்.

315



இரண்டாவது, சர்வத்திற்கும் வல்ல பராபரனுக்குப் பொருந்தினபடி நீ நன்மையிலுந் தீமையிலும் இவனோடு கூட வாழ்ந்து, இவனை ஒருக்காலும் விட்டுப்பிரியாமல், நல்ல மனைவி தன் நிதானமான புருஷனுக்குச் செய்யத் தக்கதைச் செய்வாயோ.

விடை: செய்வேன்.

தரு சொல்வது:

இப்போது உண்மைக்கு அத்தாட்சியாக நீங்கள் ஒருவருக்கொருவர் வலது கை கொடுத்துக்கொள்ளுங்கள்.

அவர்கள் கைகொடுத்துக்கொண்டு நிற்கையில், குரு தன் கையை அவர்கள் கைகளின் மேல் வைத்துச் சொல்வது:

நீங்கள் பரிசுத்த சமுசாரமார்க்கத்தில் ஒருமையாய் வாழ்வதற்கு முன்னமே சம்மதித்து, இப்போது, அதைப் பராபரனுக்கு முன்பாகவும் இந்தச் சபைக்கு முன்பாகவும் வெளியரங்கமாய்த் தெரிவித்து, ஒருவருக்கொருவர் வலது கையைக் கொடுத்துக்கொண்டதினாலே, நீங்கள் மெய்விவாகம் முடிந்தவர்களென்று பராபரனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் பிதா/குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அறிவிக்கிறேன். பராபரன் இணைத்ததை மனிதன் பிரிக்கவே கூடாது.

இதற்குப்பின் மணவாளன் மணவாளிக்குத் தாலி கட்டுவான்.

பின்னுங் குரு அவர்களை நோக்கிச் சொல்வது:

இப்போது நீங்கள் பராபரனுடைய நாமத்தினாலே சமுசார மார்க்கத்துக்குட்பட்டபடியால், அதைப் பற்றிய தெய்வவசனத்தைக் கேட்பீர்களாக.

முதலாவது, பராபரன் இந்த மார்க்கத்தை ஏற்படுத்தினதைக் குறித்துச் சொல்லியிருக்கிற தெய்வவசனத்தைக் கேட்கக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட மோசே முதலாம் ஆகமம் இரண்டாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறதாவது: பராபரனாகிய கர்த்தர் மனிதன் ஒண்டியாயிருக்கிறது நல்லதல்ல; அவனுக்கு முன் இருக்க ஒரு துணையை அவனுக்கு உண்டாக்குவோமென்றார். அப்போது பராபரனாகிய கர்த்தர் மனிதன்மேல் அசந்த நித்திரையை விழப் பண்ணி, அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். பின்னும் பராபரனாகிய கர்த்தர் மனிதனிடத்தில் எடுத்த விலாவெலும்பை இஸ்திரியாக உண்டுபண்ணி, அவளை மனிதனண்டைக்குக் கூட்டிவந்தார். அப்போது மனிதன் சொன்னது: இப்போது இவள் என் எலும்பில் எலும்பும் என் மாமிசத்தில் மாமிசமுமாயிருக்கிறாள். இவள் மனுஷனிடத்தில் எடுக்கப்பட்டதினால் மனுஷி என்னப்படுவாளென்றான். இதின் நிமித்தம் புருஷன் தன் தகப்பனையுந் தன் தாயையும் விட்டு, தன் பெண்சாதியோடு இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்கள் என்றார்.

இரண்டாவது, நீங்கள் இந்தச் சமுசாரமார்க்கத்தில் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டியதின்னதென்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிற தெய்வ கற்பனையைக் கேட்கக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம் ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதாவது: புருஷரே, உங்கள் பெண்சாதிகளைச் சிநேகியுங்கள். அப்படியே கிறிஸ்துவுந் திருச்சபையைச் சிநேகித்து, அதைப் பரிசுத்தமாக்கி, வசனத்தோடுகூடிய தண்ணீர் முழுக்கினாலே சுத்திகரிப்பதற்கும், கறைதிரை முதலானவைகளில் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் மிகையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அந்தப்படியே புருஷர் தங்கள் பெண்சாதிகளைத் தங்கள் சரீரங்களைப்போல் சிநேகிக்கக் கடவார்கள். தன் பெண்சாதியைச் சிநேகிக்கிறவன் தன்னைத்தான் சிநேகிக்கிறான். ஏனெனில் ஒருவனும் ஒருக்காலுந் தன் சதையைப் பகைத்தவனாயிராமல், கர்த்தர் திருச்சபைக்குச் செய்கிறதுபோல், அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.



பெண்சாதிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல் உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து திருச்சபைக்குத் தலையும் சரீரத்துக்கு இரட்சகருமாயிருக்கிறதுபோல், புருஷன் பெண்சாதிக்குத் தலையாயிருக்கிறான். ஆகையால் திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல், பெண்சாதிகளும் தங்களுடைய புருஷருக்கு எல்லாவற்றிலுங் கீழ்ப்படிய வேண்டும் என்றான்.

மூன்றாவது, பராபரன் இந்தச் சமுசாரமார்க்கத்துக்குக் கட்டளையிட்ட துன்பம் இன்னதென்று கேட்கக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட மோசே முதலாம் ஆகமம் மூன்றாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறதாவது: பராபரனாகிய கர்த்தர் இஸ்திரியுடனே: நீ கர்ப்பவதியாயிருக்கும் வருத்தத்தை மிகவும் பெருகப் பண்ணுவோம்; நீ வேதனையோடே பிள்ளைகளைப் பெறுவாய் என்றும், உன்னுடைய இச்சை உன் புருஷனுக்குக் கீழாயிருப்பதாக; அவன் உன்னை ஆளக் கடவானென்றுஞ் சொன்னார். பின்பு ஆதாமுடனே அவர் சொன்னது: நீ உன் பெண்சாதியின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, புசியாயாக என்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தஞ் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். நிலத்தின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமிக்குள் திரும்பும்மட்டும் உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாய். அதேனெனில் அதில் எடுக்கப்பட்டாய். நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்குத் திரும்புவாயென்றார்.

நாலாவது, உங்களுக்கு ஆறுதலாகச் சொல்லியிருக்கிறதைக் கேட்டு, உங்கள் சமுசாரமார்க்கம் பராபரனுக்குப் பிரியமும் அவரால் ஆசீர்வதிக்கப்பட்டதுமாயிருக்கிறதென்பதை அறிந்து நம்பக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட மோசே எழுதின முதலாம் ஆகமம் முதலாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதாவது: பராபரன் மனிதனைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார். பராபரனுடைய சாயலாக அவனைச் சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். அப்போது பராபரன் அவர்களை ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரம்பப் பண்ணி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாசத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமா[illegible] மிருக சீவன்களையும் ஆண்டுகொள்ளுங்களென்றார். அப்போது பராபரன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். இதோ, மிகவும் நன்றாயிருந்தது. அப்படியே சமுசாரமார்க்கத்தைக் குறித்து சாலொமோனும்: பெண்சாதியைக் கண்டடைகிறவன் நல்ல காரியத்தைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயவைப் பெறுகிறானென்று சொல்லியிருக்கிறான்.

குரு சொல்வது:

செபஞ் செய்வோமாக.

கர்த்தாவாகிய பராபரனே, தேவரீர் ஆண் பெண் இருவரையுஞ் சிருஷ்டித்து, அவர்களைச் சமுசாரமார்க்கத்திற்குக் குறித்து, வயிற்றின் கனியினால் அவர்களை ஆசீர்வதித்து, இதைக்கொண்டு உம்முடைய நேசகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய மனைவியாகிய திருச்சபைக்கும் உண்டாயிருக்கிற பரம இரகசியத்தை அடையாளமாகக் காட்டியருளினீர். தேவரீர் ஏற்படுத்தின இந்தச் சமுசாரமார்க்கத்திற்கும், இதற்குக் கட்டளையிட்ட ஆசீர்வாதத்திற்கும் யாதொரு அவகேடாகிலும் அழிவென்கிலும் வராதபடிக்கு, அதைக் காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்று எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

குரு அவர்கள் சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக.



உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

குரு:

கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:

அவர் உமதாவியோடுமிருக்கக் கடவார்.

குரு:

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (✝) சமாதானங் கட்டளையிடக் கடவார். ஆமேன்.

---

## 2.

# அஞ்ஞானத்தைவிட்டுக் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்த சமுசாரிகளுடைய விவாகத்தை ஆசீர்வதிக்கும் முறைமை.

*இப்படிப்பட்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றவுடனே பீடத்துக்கு முன் வந்து நிற்பார்கள்.*

குரு பீடத்தில் நின்று அவர்களை நோக்கிச் சொல்வது:

கிறிஸ்துவுக்குள் சிநேகிக்கப்பட்டவர்களே, நீங்கள் கிறிஸ்தமான திருச்சபையில் உட்படும் முன்னமே உங்கள் விவாகம் முடிந்திருக்கிறது. இப்போது நீங்கள் திருச்சபையில் உட்பட்டதினால், நீங்கள் நல்ல சமுசாரிகளுக்கொத்தபடி உங்கள் ஆயுசுள்ளமட்டும் இணைபிரியாமல் வாழ வேண்டுமென்பதை அறிந்திருக்கிறீர்கள். உங்கள் சமுசாரமார்க்கத்திற்குத் தெய்வ ஆசீர்வாதம் உண்டாகும்படி விசுவாசமாய்ச் செபம்பண்ண இங்கே கூடிவந்திருக்கிறோம். நீங்கள் இப்போது பராபரனுடைய சனமாயிருக்கிறபடியால், இனி நல்ல சமுசாரிகளாக நலம் வந்தாலும் இளப்பம் வந்தாலும் இவைகளை நீங்கள் இருவரும் அனுபவித்து, ஒருவரையொருவர் ஒருக்காலும் விட்டுப் பிரியாமல் கூடிவாழ்வது உங்கள் கடமையாயிருக்கிறது.

நீங்கள் பராபரனுடைய ஒத்தாசையைமுன்னிட்டு இப்படி செய்வீர்களா.

விடை: செய்வோம்.

குரு சொல்வது:

நீங்கள் இப்போது, கிறிஸ்தமான சமுசாரிகளாயிருக்கிறபடியால்,

முதலாவது, பராபரன் இந்தமார்க்கத்தை ஏற்படுத்தினதைக் குறித்துச் சொல்லியிருக்கிற தெய்வ வசனத்தைக் கேட்கக் கடவீர்கள்.



அர்ச்சியசிஷ்ட மோசே முதலாம் ஆகமம் இரண்டாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறதாவது: பராபரனாகிய கர்த்தர் மனிதன் ஒண்டியாயிருக்கிறது நல்லதல்ல. அவனுக்கு முன்பாக இருக்க ஒரு துணையை உண்டாக்குவோமென்றார். அப்போது பராபரனாகிய கர்த்தர் மனிதன்மேல் அசந்த நித்திரையை விழப் பண்ணி, அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். பின்னும் பராபரனாகிய கர்த்தர் மனிதனிடத்தில் எடுத்த விலாவெலும்பை இஸ்திரியாக உண்டுபண்ணி, அவளை மனிதனண்டைக்குக் கூட்டிவந்தார். அப்போது மனிதன் சொன்னது: இவள் இப்போது என் எலும்பில் எலும்பும் என் மாமிசத்தில் மாமிசமுமாயிருக்கிறாள். இவள் மனுஷனிடத்தில் எடுக்கப்பட்டதினால் மனுஷி என்னப்படுவாளென்றான். இதின் நிமித்தம் புருஷன் தன் தகப்பனையுந் தன் தாயையும் விட்டு, தன் பெண்சாதியோடு இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்களென்றார்.

இரண்டாவது, நீங்கள் இந்தச் சமுசாரமார்க்கத்தில் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டியதைப் பற்றிச் சொல்லியிருக்கிற தெய்வ கற்பனையைக் கேட்கக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம் ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதாவது: புருஷரே, உங்கள் பெண்சாதிகளைச் சிநேகியுங்கள். அப்படியே கிறிஸ்துவுந் திருச்சபையைச் சிநேகித்து, அதைப் பரிசுத்தமாக்கி, வசனத்தோடு கூடிய தண்ணீர் முழுக்கினாலே சுத்திகரிப்பதற்கும், கறை திரை முதலானவைகளில் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் மிகையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும், தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அந்தப்படியே புருஷர் தங்கள் பெண்சாதிகளைத் தங்கள் சரீரங்களைப்போல் சிநேகிக்கக் கடவார்கள். தன் பெண்சாதியைச் சிநேகிக்கிறவன் தன்னைத்தானே சிநேகிக்கிறான். ஏனெனில் ஒருவனும் ஒருக்காலுந் தன் சதையைப் பகைத்தவனாயிரா

மல்; கர்த்தர் திருச்சபைக்குஞ் செய்கிறதுபோல் அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.

பெண்சாதிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல் உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து திருச்சபைக்குத் தலையுஞ் சரீரத்துக்கு இரட்சகருமாயிருக்கிறதுபோல், புருஷன் பெண்சாதிக்குத் தலையாயிருக்கிறான். ஆகையால் திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல், பெண்சாதிகளும் தங்களுடைய புருஷருக்கு எல்லாவற்றிலுங் கீழ்ப்படிய வேண்டும் என்றான்.

மூன்றாவது, பராபரன் இந்தச் சமுசாரமார்க்கத்துக்குக் கட்டளையிட்ட துன்பம் இன்னதென்று கேட்கக் கடவீர்கள்.

அர்ச்சியசிஷ்ட மோசே முதலாம் ஆகமம் மூன்றும் அதிகாரத்தில் எழுதியிருக்கிறதாவது: பராபரனாகிய கர்த்தர் ஸ்திரீயுடனே: நீ கர்ப்பவதியாயிருக்கும் வருத்தத்தை மிகவும் பெருகப் பண்ணுவோம். நீ வேதனையோடே பிள்ளைகளைப் பெறுவாய் என்றும், உன்னுடைய இச்சை உன் புருஷனுக்குக் கீழாயிருப்பதாக, அவன் உன்னை ஆளக் கடவானென்றுஞ் சொன்னார். பின்பு ஆதாமுடனே அவர் சொன்னது: நீ உன் பெண்சாதியின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, புசியாயாக என்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தஞ் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளுங் குருக்கும் முளைப்பிக்கும். நிலத்தின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமிக்குள் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாய். அதேனென்றால் அதில் எடுக்கப்பட்டாய். நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்குத் திரும்புவாயென்றார்.

நாலாவது, உங்களுக்கு ஆறுதலாகச் சொல்லியிருக்கிறதைக் கேட்டு, உங்கள் சமுசாரமார்க்கம் பராபரனுக்குப் பிரியமும் அவரால் ஆசீர்வதிக்கப்பட்டதுமாயிருக்கிறதென்பதை அறிந்து நம்பக் கடவீர்கள்.



அர்ச்சியசிஷ்ட மோசே எழுதின முதலாம் ஆகமம் முதலாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதாவது: பராபரன் மனிதனைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார். பராபரனுடைய சாயலாக அவனைச் சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். அப்போது பராபரன் அவர்களை ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரம்பப் பண்ணி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாசத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகசீவன்களையும் ஆண்டுகொள்ளுங்களென்றார். அப்போது பராபரன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்; இதோ, மிகவும் நன்றாயிருந்தது. அப்படியே சமுசாரமார்க்கத்தைக் குறித்து சாலொமோனும்: பெண்சாதியைக் கண்டடைகிறவன் நல்ல காரியத்தைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயவைப் பெறுகிறானென்று சொல்லியிருக்கிறான்.

௩௩ சொல்வது:

செபஞ் செய்வோமாக.

கர்த்தாவாகிய பராபரனே, தேவரீர் ஆண் பெண் இருவரையுஞ் சிருஷ்டித்து, அவர்களைச் சமுசாரமார்க்கத்திற்குக் குறித்து, வயிற்றின் கனியினால் அவர்களை ஆசீர்வதித்து, இதைக்கொண்டு உம்முடைய நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய மனைவியாகிய திருச்சபைக்கும் உண்டாயிருக்கிற பரம இரகசியத்தை அடையாளமாகக் காட்டியருளினீர். தேவரீர் ஏற்படுத்தின இந்தச் சமுசாரமார்க்கத்திற்கும், இதற்குக் கட்டளையிட்ட ஆசீர்வாதத்திற்கும் யாதொரு அவகேடாகிலும் அழிவென்கிலும் வராதபடிக்கு, அதைக் காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்று எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

௩௪ அவர்கள் சிரசின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்மு

டைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலே யுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

இது போது ஆராதனையில் நடந்தால், குரு அவர்களை நோக்கிச் சொல்வது:

கர்த்தருடைய சமாதானம் உங்களோடிருப்பதாக.

சபை: ஆமேன்.

ஆராதனையில்லாத வேறு சமயத்தில் நடந்தால், குரு அவர்களை நோக்கிச் சொல்வது

கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை:

அவர் உமதாவியோடுமிருக்கக் கடவார்.

குரு:

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேலே பிரகாசிக்கப்பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (†) சமாதானங் கட்டளையிடக் கடவார். ஆமேன்.

# VIII.

# பிரசவித்த இஸ்திரிக்காகத் தெய்வாலயத்தில் செலுத்தும் இஸ்தோத்திர முறைமை.

## 1.

குரு பிரசங்கத்தை முடித்துச் சபையாரைச் செபத்துக்கு எழுப்பிவிடும் இடத்தில் சொல்லலாம்:

(இன்னின்னானுடைய) பெண்சாதி பிரசவித்து, இன்று தெய்வாலயத்திற்கு வந்தவளுக்காகச் சபையார் செபம்பண்ண வேண்டுமென்கிற செய்தி அறிவிக்கப்படுகிறது. அவள் அடைந்த தெய்வ சகாயத்தை நன்றியறிந்த மனதோடே நினைத்து, பராபரனுக்கு இஸ்தோத்திரம்பண்ண, அவர் அவளுக்குக் கிருபைசெய்து, அவளை ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயும் பலப்படுத்தி, இப்போதும் எப்போதும் ஆசீர்வதிக்கக் கடவார். ஆமேன்.

## 2.

குரு பீடத்தில் ஆசீர்வாதங் கூறினபின் பிரசவித்த இஸ்திரி இரண்டொரு பெண் பிள்ளைகளுடன் பீடத்தண்டை வந்து நிற்பாள்.

குரு அவளை நோக்கிச் சொல்வது:

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமானவளே, இரக்கமுள்ள கர்த்தர் உனக்குச் செய்த பெரிய சகாயத்திற்காக நீ அவருக்கு நன்றியறிந்த மனதோடு இஸ்தோத்திரஞ் செலுத்த, இங்கே அவருடைய திருச்சந்நிதிக்கு முன்பாக வந்திருக்கிறாய். அவர் உன்னோடிருந்து, உன் ஏங்கலைக் கேட்டு, உனக்குச் சகாயஞ்செய்து, உனக்கு நல்ல பிரச

225



வத்தைக் கட்டளையிட்டு, உன் பிள்ளையைப் பாக்கியமானதும் பெலப்படுத்தி ... க்கைக்கென்று பரிசுத்த ஞானஸ்நானத்தினால் மறுபடியுஞ் ஜெனிப்பித்தார். ஆதலால் நீ கர்த்தரைத் துதித்து, அவருடைய எல்லாச் சனத்திற்கு முன்பாக அவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்துவாயாக.

ஞான சங்கீதங்களின் புஸ்தகம் ௱௰௬-ஞ் சங்கீதத்தை வாசிக்கக் கேட்கக் கடவோம்.

கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பங்களையுங் கேட்டது எனக்குப் பிரியம். ஏனென்றால் அவர் தமது செவியை என்னண்டை சாய்த்தார்; ஆகையால் என் நாட்களுள்ள மட்டும் அவரை நோக்கிக் கூப்பிடுவேன். மரணத்தின் கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டு, நரகத்தின் இடுக்கண்கள் என்னைப் பிடித்தது. இக்கட்டையுஞ் சஞ்சலத்தையும் அடைந்தேன். ஆனால், ஆ கர்த்தாவே, என் ஆத்துமத்தை விடுவியுமென்று கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக் கூப்பிட்டேன். கர்த்தர் இரக்கமும் நீதியுமுள்ளவர்; நம்முடைய பராபரன் மனவுருக்கமானவர். கர்த்தர் பேதைகளைக் காக்கிறார். நான் சிறுகிப்போனேன்; ஆனால் என்னை இரட்சித்தார். என் ஆத்துமமே, உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு; ஏனெனில் கர்த்தர் உனக்கு நன்மைசெய்தார். அதேனென்றால் என் ஆத்துமத்தை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்குந் தப்புவித்தீர். கர்த்தருக்கு முன்பாகச் சீவனுள்ளோருடைய தேசத்திலே நடப்பேன். விசுவாசித்தேன், ஆகையாலே பேசுகிறேன். நான் மிகுதியும் ஒடுக்கப்பட்டிருந்தேன். எந்த மனுஷனும் பொய்யனென்று நான் என் துன்பத்தின் துரிதத்திலே சொன்னேன். கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்ன ஈட்டைச் செலுத்துவேன். இரட்சிப்புகளின் பாத்திரத்தை வாங்கி, கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக் கூப்பிடுவேன். கர்த்தருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்; ஆம், அவருடைய எல்லாச் சனத்துக்கும் முன்பாகத் தானே. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. ஆ, கர்த்தாவே, நான் உம்முடைய ஊழியக்காரன், நான் உமது அடியாளின் பிள்ளையாகிய உம்முடைய ஊழியக்காரன்; என் கட்டுகளை அவிழ்த்



தீர். உமக்குத் துதியின் பலியைப் பலியிட்டு, கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக் கூப்பிடுவேன். கர்த்தருடைய வீட்டின் பிரகாரங்களிலும், எருசலேமே, உன் நடுவிலும் நான் கர்த்தருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்; ஆம், அவருடைய எல்லாச் சனத்திற்கும் முன்பாகத் தானே. அல்லேலூயா.

அல்லது:

௱௨௭-ஞ் சங்கீதத்தை வாசிக்கக் கேட்போமாக.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்கள் விருதாவாய் அதில் உழைக்கிறார்கள். கர்த்தர் பட்டணத்தைக் காக்காராகில், சாமக்காரன் விருதாவாய் விழித்திருக்கிறான். நீங்கள் இருட்டோடெழுந்து, நேரப்பட வேலையில் தரித்து, வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது விருதா; தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார். இதோ, பிள்ளைகள் கர்த்தர் அளிக்கிற சுதந்தரமும் கர்ப்பத்தின் கனி அவரால் வரும் பலனுமாயிருக்கிறது. வாலவயது குமாரர் பெலவானுடைய கையிலுள்ள அம்புகளுக்குச் சரி. தன் அம்பறாத்தூணியை அதுகளால் நிரப்பின புருஷன் பாக்கியவான். கூச்சமில்லாமல் சத்துருக்களோடே ஒலிமுகவாசலிலே பேசுவார்கள்.

வாசித்தபின் தரு சொல்வது:

செபம் பண்ணக் கடவோம்,

சர்வவல்லமையும் இரக்கமுமுள்ள பராபரனே, பரம பிதாவே, தேவரீர் இந்த உம்முடைய அடியாளோடிருந்து, இவளை ஆபத்தினின்று இரட்சித்து, இவளுக்கு நல்ல பிரசவத்தைக் கட்டளையிட்டு, இவள் பிள்ளையை ஞானஸ்நானத்தினாலே மறுபடியுஞ் ஜெனிப்பித்து, அதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியைத் தந்தருளினதற்காக, நாங்கள் முழு மனதினாலும் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். கர்த்தாவே, இந்த உமது அடியாளின்மேல் இனியும் இரங்கி, இவளைச் சகல மோசங்களுக்கும் மறைத்துத் தற்காத்து இரட்சித்து, உமது ஆவியினாலே பெலப்படுத்தி, உமது நாமத்திற்கு மகிமையாகவும் இவள் ஆத்துமத்திற்கு இரட்சிப்பாகவும் இவளை உமது கிருபையிலே காப்

பாற்ற வேண்டுமென்று [illegible] நம்முடைய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி. ஆமேன்.

தரு இஸ்திரீயின் தலையின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பிதாவாகிய பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உன்னோடிருக்கக் கடவது. ஆமேன்.

---

## 3.

### பிள்ளை மரித்ததானால் செய்யும் இஸ்தோத்திர முறைமை.

தரு பிரசவித்த இஸ்திரீயை நோக்கிச் சொல்வது:

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமானவளே, கர்த்தராகிய பராபரன் தமது கிருபையுள்ள சித்தத்தின்படி உனக்குத் துக்கத்தை வரப்பண்ணி, உன் பிள்ளையை இந்த நிர்ப்பாக்கியமான லோகத்திலிருந்து தம்மண்டைக்கு அழைத்துக்கொண்டும், அவர் உன்னைப் பிரசவ வேதனையிலிருந்து இரட்சித்து, இதுவரையில் கிருபையாய்க் காப்பாற்றினதற்காக நீ அவருக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தக் கடனாளியாயிருக்



கிறாய். ஆனாலும் அவர் உனக்குத் தம்முடைய பரிசுத்த ஆவியினால் இந்த உபத்திரவத்திலே ஆற்றித்தேற்றி, உனக்குப் பொறுமையைக் கொடுத்து, உன்னை ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் பலப்படுத்தி, இனிமேல் உன்னை எல்லாப் பொல்லாங்குகளுக்கும் பிதாவடைவாய்த் தற்காத்திரட்சிக்க, நீ அவரை முழு இருதயத்தோடுங் கெஞ்சி மன்றாட வேண்டும்.

௱௰௬-ம் சங்கீதத்தை வாசிக்கக் கேட்போமாக.

(௫௱௰அ-ம் பக்கத்தில் பார்).

அதை வாசித்தபின்பு அவர் சொல்வது:

செபம் பண்ணக் கடவோம்.

கர்த்தாவாகிய பராபரனே, பரம பிதாவே, தேவரீர் இந்த உம்முடைய அடியாளோடிருந்து, இவளை ஆபத்தினின்று உண்மையுள்ள சகாயராக இரட்சித்து, இவளை உம்முடைய சர்வவல்லமையுள்ள கையினால் தாங்கி, இரக்கமுள்ள இரட்சகராக இவளுடைய சீவகாலத்தை இம்மட்டுங் காப்பாற்றினதற்காக உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அன்புள்ள பிதாவே, இவள் உம்முடைய ஆலோசனையையுஞ் சித்தத்தையும் நன்றாய் அறிந்து, மனதார அங்கிகரித்து, நீர் இவளுடைய பிள்ளையை இந்த நிர்ப்பாக்கியமான லோகத்திலிருந்து உம்முடைய பாக்கியமான இராச்சியத்துக்கு அழைத்துக்கொண்டீரென்று உறுதியாய் நம்பி, பரிசுத்த யோபோடு: கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் இஸ்தோத்திரிக்கப்படக் கடவதென்று சொல்லும்படிக்கு, இவளை உம்முடைய பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பித்து ஆண்டு நடத்த வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். இந்த எங்கள் சகோதரி தனக்கு நேரிட்ட உபத்திரவத்தினால் பூமியிலுள்ள எல்லாத்தையும் உம்முடைய நிமித்தம் மனதார வெறுக்க ஏவப்பட்டு, அழிவற்ற நித்திய பொக்கிஷமாகிய உம்மையே அண்டிக்கொள்ளும்படி, உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இவளுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

குரு அவனுடைய தலையின்மேல் கையை வைத்துச் சொல்வது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கு என்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பிதாவாகிய பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உன்னோடிருக்கக் கடவது. ஆமேன.

---

329

# IX.

# வியாதிக்காரருக்குப் பரிசுத்த இராப்போசனத்தைப் பரிமாறும் முறைமை.

---

கவனிப்பு. ௧. நோயாளி இருக்கும் அறையில் தகுதியான ஒரு மேசை வெள்ளை வஸ்திரத்தினால் மூடி ஆயத்தப்பட்டிருக்கவேண்டும். அதின்பேரில் குரு பரிசுத்த நற்கருணைப் பாத்திரங்களை வைப்பார்.

கவனிப்பு. ௨. நோயாளிக்குத் தகுந்த புத்தியும் இராப்போசனத்தின்பேரில் ஆசையும் உண்டோ என்பதை அறியும்படி குரு முதல் நோயாளியுடன் பேச வேண்டும்.

கவனிப்பு. ௩. தகுந்த புத்தியில்லாதவர்களுக்கும் கடைசி மூச்சுடையவர்களுக்கும் இராப்போசனத்தைக் கொடுக்கக் கூடாது. ஆனால் பராபரன் அவர்களுக்கு இரங்கி. அவர்கள் பாவங்களை மன்னித்து, அவர்களுக்கு நித்திய பாக்கியத்தை அருளிச்செய்ய வேண்டுமென்று அப்படிக்கொத்தவர்களுக்காகச் செபம்பண்ண வேண்டும். (௩௨௮-ம் பக்கத்தில் அடங்கிய செபங்களைப் பார்).

கவனிப்பு. ௪. நோயாளி அதிகப் பலவீனமும் சாகச் சமீபமுமாயிருந்தால், குரு கர்த்தருடைய செபத்தைச் சொல்லி, அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதித்து, பரிசுத்த இராப்போசனத்தைப் பரிமாறி, சிலுவையில் அறையுண்டு மரித்து முதலிய வார்த்தைகளைச் சொல்வது போதும்.

குரு நோயாளி இருக்கும் வீட்டுக்குள் பிரவேசிக்கையில், இந்த வீட்டுக்குச் சமாதானமென்று சொல்லி நோயாளியின் ஆத்தும நிலைமையைப் பற்றி அவனோடு பேசிப் புத்தி சொல்லுவார். இதற்குப்பின் அவர் ஒரு தவசு சங்கீதத்தை வாசித்து, சுருக்கமான பிரசங்கம் பண்ணலாம். அப்போது பாவசங்கீர்த்தனம் நடக்கும். இதற்குப்பின் குரு பரிசுத்த இராப்போசனத்துக்கடுத்த காரியங்களை ஆயத்தப்படுத்தி, நோயாளியையும் அவனோடிருக்கிறவர்களையும் நோக்கிச் சொல்வது:

பிரியமானவர்களே, நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து: இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தில் எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேனென்றும், நீங்கள் என் நாமத்தில் எதையாகிலுங் கேட்டால், அதை நான் செய்வேனென்றும் வாக்குத்தத்தம் பண்ணினாரே. வியாதியாயிருக்கிற இந்

தச் சகோதரன் (ரி) தேவாலயத்திலே கர்த்தருடைய திருச் சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் வாங்கக் கூடாதிருக்கிறபடியினால், நாம் இயேசு கிறிஸ்துவினுடைய திரு வசனத்தை நம்பி, இவ்விடத்திலே தானே அவருடைய பரிசுத்த இராப்போசனத்தை ஆசரிக்கவும், இந்தச் சகோதரனை (ரியை) அதற்குப் பங்காளியாக்கவுங் கிருபையையும் ஆசீர்வாதத்தையும் நமக்குக் கட்டளையிடுவாராக. ஆமேன்.

குரு நோயாளியை நோக்கிச் சொல்வது:

பிரியமான சகோதரனே (ரியே), நீ இப்போது கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கப்போகிறபடியால், நீ அதைப் பாத்திரமும் பிரயோசனமுமாக வாங்கும்படி விசுவசிக்க வேண்டியதுஞ் செய்ய வேண்டியதும் இன்னதென்பதைக் குறித்து உனக்குப் புத்தி சொல்லுகிறேன்.

இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறதென்றும், இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறதென்றுங் கிறிஸ்து திருவுளம்பற்றின மரணசாதன வார்த்தைகளை நீ நிச்சயமும் நிலைவரமுமாக நம்பி, கிறிஸ்துவே இந்த ஞானதிரவியத்தில் கூடவிருந்து, தமது திருச் சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் இத்தோடு அளிக்கிறாரென்றும், அவர் தமது திருச் சரீரமுந் திரு இரத்தமுமாகிய நிச்சயமான அச்சாரத்தினால் பாவமன்னிப்பை உனக்கு உறுதிப்படுத்துகிறாரென்றுஞ் சந்தேகப்படாமல் விசுவாசிக்கக் கடவாய்.

நீங்கள் இதை வாங்கித் தின்னுங்களென்றும், இதிலே எல்லாருங் குடியுங்களென்றும், என்னை நினைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்களென்றுங் கிறிஸ்து இட்ட கட்டளையின்படி செய்யக் கடவாய்.

நமது அன்புள்ள இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இப்போது தமது சகல பரிபூரண ஆசீர்வாதங்களோடும் உன்னண்டைக்கு வருகிறபடியால், நீ அவருடைய கிருபையின்பேரில் பசிதாகமுள்ளவனாய் (ளாய்) என்னோடு செபஞ் செய்வாயாக.



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் என் வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவான் அல்லவே. நானும் பாத்திரமுள்ளவனாகிறதற்கு உமது சகாயம் எனக்குத் தேவை. உம்முடைய கிருபை என் வாஞ்சை. இப்போதுந் தேவரீர் அபாத்திரனாகிய என்னை இப்பந்திக்கு வரவழைக்கிறீர். நான் இந்த ஞானதிரவியத்திலே தின்று குடிக்கும் உமது திருச்சரீரத்தினாலுந் திரு இரத்தத்தினாலும் எனக்குப் பாவமன்னிப்புண்டென்று வாக்குத்தத்தம்பண்ணுகிறீர். இந்த உமது இன்பமான வார்த்தைகளைக் கேட்டேன். இவைகளை நம்பும் நம்பிக்கையைக்கொண்டல்லாமல் வேறெந்த நம்பிக்கையைக்கொண்டும் நான் வர இல்லை. ஆ, நேசமுள்ள கர்த்தரே, உமது வசனமுந் திவ்விய வாக்குத்தத்தமும் உண்மையானதென்பதை அறிந்திருக்கிறேன். அதைக் குறித்துச் சந்தேகப்படாமல், அதையே நம்பி, உமது பந்தியில் புசித்துக் குடிப்பேன். உமது வார்த்தையின்படி எனக்காகக் கடவது. ஆமேன்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, அடியார்மேல் இரங்கும்.
பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, அடியார்மேல் இரங்கும்.
பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி, நீர் சமாதானம் தாரும்.
ஆமேன்.

குரு அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதித்துச் சொல்வது:

நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் அப்பத்தை எடுத்துக்கொண்டு இஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் இதை வாங்கித் தின்னுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய (✝) சரீரமாயிருக்கிறது. இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்களென்று திருவுளம்பற்றினார்.

பின்னையும் அந்தப்படியே இராப்போசனம் பண்ணினபின்பு அவர் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, இஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றினதாவது: இதிலே எல்லாரும் குடியுங்கள், இந்தப்பாத்திரம் பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய (✝) இரத்தத்தில் புதிய ஏற்பாடாயிருக்கிறது. இதை நீங்கள் குடிக்கும்போதெல்லாம் என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்களென்று திருவுளம்பற்றினார்.

குரு நோயாளியை நோக்கிச் சொல்வது:

கர்த்தாவின் சமாதானம் உன்னோடிருப்பதாக.

குரு ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்தைக் கொடுக்கையில் சொல்வது:

இது இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான திருச் சரீரமாயிருக்கிறது.

குரு ஆசீர்வதிக்கப்பட்ட இரசத்தைக் கொடுக்கையில் சொல்வது:

இது இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான திரு இரத்தமாயிருக்கிறது.

சிலுவையில் அறையுண்டு, மரித்து உயிர்த்தெழுந்தருளின இயேசு கிறிஸ்து உன் பாவங்களுக்காக உத்தரவாதம்பண்ணி, ஈடு செலுத்தின திரவியங்களாகிய தம்முடைய திருச் சரீரத்தையுந் திரு





இரத்தத்தையும் இப்போது உனக்குத் தின்கவுங் குடிக்கவுங் கொடுத்தாரே. இதுகளைக்கொண்டு அவர் உன்னை மெய்யான விசுவாசத்திலே நித்திய சீவனுக்கென்று திடப்படுத்திக் காக்கக் கடவார். ஆமென்.

பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.

சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, உமது நேச குமாரனாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் திருச் சரீரமுந் திரு இரத்தமுமாகிய இந்த ஆரோக்கிய தெய்வப்பிரசாதங்களினாலே தேவரீர் எங்கள் பசிதாகத்தைத் தீர்த்ததற்காக உம்மை இஸ்தோத்திரிக்கிறோம். தேவரீரைப் பற்றுந் திட விசுவாசத்துக்கென்றும் நாங்கள் ஒருவரை ஒருவர் சிநேகிக்கும் அன்பான சிநேகத்துக்கென்றும் இதை எங்களுக்குப் பலிக்கப்பண்ணவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்; சுவாமி. ஆமென்.

குரு:

கர்த்தரானவர் உன்னோடிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (✝) சமாதானங் கட்டளையிடக் கடவார். ஆமென்.

இராப்போசன பாத்திரங்களை எடுத்து வைத்தபின், வியாதிக்காரனுக்குப் பிரியமிருந்தால், குரு ௯௯. ௱௩. ௱௪௯. முதலிய சங்கீதங்களிலொன்றை வாசித்துச சில புத்திமதிகளைச் சொல்லலாம்.

குரு வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போகையில் வியாதிக்காரனை நோக்கிச் சொல்வது:

நெருக்கப்படுகிற நாளிலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடு; அவர் உன்னைக் கேட்டு விடுவிப்பார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்குங் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்

தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். கொஞ்சக்காலம் பாடுபடுகிற நம்மைக் கிறிஸ்து இயேசுவுக்குள் தம்முடைய நித்திய மகிமைக்கு அழைத்த எல்லாக் கிருபையினுடைய பராபரன் உன்னைச் சீர்பொருந்தப்பண்ணி, உறுதியாக்கி, திடத்தி, அஸ்திபாரப்படுத்தக் கடவார். அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாயிருக்கக் கடவது. ஆமேன்.

அல்லது:

ஆதலால் உன்னைப் பராபரனுடைய கிருபைக்கும் இரக்கத்துக்குங் கையளித்து விடுகிறேன். நீ படுகிற வருத்தத்தை அவர் லேசுவாக்கி, உனக்குத் தவறாத பொறுமையைக் கொடுத்து, உன் நம்பிக்கையை அசையாமல் நிலைநிற்கப்பண்ணி, உன்பேரில் தமது சமாதானம் இப்போதும் என்றென்றைக்குமிருக்கக் கிருபை செய்வாராக. ஆமேன்.

## நோயாளிகளும் மரண அவஸ்தைப்படுகிறவர்களும், அவர்களுக்காக மற்றவர்களும் செய்யத் தகுந்த செபங்கள்.

### நோயாளி தெய்வசித்தத்துக்குக் கீழடங்கச் செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையும் நீதியுமுள்ள நித்திய பராபரனே, இந்த வியாதி உமது சித்தத்தின்படி எனக்கு வந்திருக்கிறதையும், தேவரீர் இதைக்கொண்டு என் பாவங்களின் நிமித்தம் என்னை விசாரிக்கிறீரென்பதையும் நான் நன்றாய் அறிந்து நம்பும்படிக்கு, பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குக் கிருபைசெய்தருளும். என் தலையிலுள்ள ஒரு மயிரும் உம்முடைய சித்தமின்றிக் கீழே விழாதபடியால், உம்முடைய சித்தமின்றி என் சரீரம் இந்த வியாதியால் வாதிக்கப்படமாட்டாது.



நான் கிறிஸ்தவர்களுக்கு அடாதவிதமாய் முறையிடாமலும், உமது சித்தத்துக்கு விரோதமான ஏதுக்களைக்கொண்டு என் வியாதியை நீக்கிக்கொள்ள வகைதேடாமலும் இருக்கும்படியாக, இதை எனக்குத் தெரியப்படுத்தியருளும். நீர் இந்த வியாதியை நீக்கிப்போடுவது எனக்குப் பிரயோசனமும் உமக்குப் பிரியமுமாயிருந்தால், நீர் இதை என்னை விட்டு நீக்கிப்போடுவீரென்பதை நான் உறுதியாய் நம்பி, நீர் எனக்குச் சகாயம்பண்ணும் நேரத்துக்கு அ[illegible]தலாய் எதிர்பார்த்திருக்க, உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக்[illegible]கொண்டு, எனக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

### நோயாளி கர்த்தர் தன் வியாதியை லேசாக்கி நீக்கிப்போடச் செய்யுஞ் செபம்.

உண்மையும் நரசீவதயவுமுள்ள பராபரனே, தேவரீர் செபம் பண்ண எங்களுக்குக் கற்பித்து, நாங்கள் இயேசுவின் நாமத்தில் கேட்கும் யாவையும் எங்களுக்குக் கொடுக்க வாக்குத்தத்தம் அளித்தீர். நீர் என்னைச் சுகமாக்கி, பலப்படுத்தி, என் நோயை லேசாக்கி, அதை நீக்கிப்போடவேண்டுமென்று நான் முழு இருதயத்தினாலும் வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி செய்வது உமக்கு அரிது அல்ல என்பதை நீர் எசெக்கியா, யோபு முதலியவர்களுக்குச் செய்ததைக்கொண்டு தெரிவித்திருக்கிறீர். ஆ, கர்த்தாவே, எந்தமட்டும் என் சரீர உபத்திரவத்திலே சஞ்சலத்தை வைப்பேன். உமது உக்கிரத்தில் என்னைத் தண்டியாமல், என்பேரில் கிருபையுள்ளவராகும். நான் இன்னம் இந்த லோகத்தில் உமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தி, மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யக் கிருபை தந்தருளும். பாவியாகிய நான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறது எனக்குப் பிரயோசனம் உண்டாகுமோ உண்டாகாதோ என்பது எனக்குத் தெரியாததினால், நான் எல்லாத்தையும் உம்முடைய சித்தத்துக்கு ஒப்புவிக்கிறேன். உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரத்தை என்னைவிட்டு நீங்கப்பண்ணும்; எனக்கோ அல்ல, உமக்குச் சித்தமாயிருக்கிறபடி ஆகக் கடவது. கர்த்தாவே, இந்த என் வியாதிக்குப் பாக்கியமான முடிவு கிடைக்க வேண்டுமென்று மாத்திரங் கெஞ்சிமன்றாடுகிறேன். இதற்காக என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தங் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

## 3.

### நோயாளி தன் வியாதியில் பொறுமையாயிருக்கச் செய்யுஞ் செபம்.

உண்மையும் நீதியுமுள்ள நித்திய பராபரனே, நீர் இந்த வியாதியைக் கொண்டு என் பாவத்துக்காக என்னைத் தண்டிக்க, நான் பாத்திரனாயிருக்கிறேன் என்பதை அறிக்கையிடுகிறேன். உமது தண்டனையின் நிமித்தம் பொறுமையற்றவர்களாகி, உமக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களைத் தேவரீர் பயங்கர தண்டனைக்குள்ளாக்கினீரென்பதை நான் அறிந்து, பொறுமையாயிருக்க விரும்புகிறேன். பரமண்டலங்களிலிருக்கிற அன்புள்ள பிதாவே, இந்த வியாதியால் எனக்கு உண்டாயிருக்கிற வருத்தம் எவ்வளவென்பது உமக்குத் தெரியும். பரிசுத்த யோபு தனக்கு வந்திருந்த வியாதியைப் பொறுமையாய்ச் சகிக்கக் கூடாதிருக்க, ஏழைப்பாவியாகிய நான் என் சுயசத்தியினால் இந்த வியாதியைப் பொறுமையாய்ச் சகிப்பதெப்படி. என் பராபரனும் ஆண்டவருமாகிய தேவரீர் எனக்குச் சகாயம்பண்ண உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். நீர் எனக்குத் துணையாயிருந்து, உமது பரிசுத்த ஆவியால் என்னைத் தாங்கியருளும். பரிசுத்த இரத்தச் சாட்சிகள் அகோர வேதனைகளை அநுபவித்தும், உமது பலத்தினால் விசுவாசத்திலும் பொறுமையிலும், உமது நாமத்தை அறிக்கையிட்டு வணங்குதலிலும் உறுதியாயிருந்ததுபோல், நானும் என் சிலுவையைப் பொறுமையாய்ச் சுமந்து, மெய்க் கிறிஸ்தவர்களுக்கான தைரியத்தோடு போராட என்னைப் பலப்படுத்தியருளும். நான் என் பலவீனத்தினால் பாவஞ் செய்தால், நீர் அதை எனக்கு ஆக்கினையாகப் பலிக்கப்பண்ணாமல், மன்னிக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், சுவாமி. ஆமேன்.

---

### நோயாளி தன் ஆயுளின் நாட்களை அதிகப்படுத்தச் செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, எசேக்கியா இராசா கண்ணீரோடு உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது, அவன் ஆயுளின் நாட்களை அதிகப்படுத்தினீர். ஆகையால் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற தேவரீர் நான் பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, உமது இரக்கத்தினால் கிருபையையும் பாவமன்னிப்பையும் பெற்றுக்கொள்ளும்படி, உமக்குச் சித்தமானால் என் நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், சுவாமி. ஆமேன்.

---



## 5.

### நோயாளி தான் இரட்சிக்கப்படவும், தன்னைக் கர்த்தருடைய சித்தத்துக்கு முழுவதும் ஒப்புக்கொடுக்கவும் செய்யுஞ் செபம்.

சர்வவல்லமையுள்ள பராபரனே, தேவரீர் நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு; நாம் உன்னை விடுவிப்போம்; அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாயென்று கற்பித்தபடியால், நான் இந்த என்னுடைய இக்கட்டில் உம்மை நோக்கி: ஏழையாகிய என்னைக் கைவிடாதிருக்க வேண்டுமென்று உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையாய்க் கெஞ்சிக் கூப்பிடுகிறேன். இந்த என்னுடைய வியாதி மரணத்துக்கானதாயிராவிட்டால், நீர் என்னிடத்தில் காண்பித்த உம்முடைய வல்லமையையும் பெலத்தையும் அறிவித்து மகிமைப்படுத்தும்படிக்கு, உம்முடைய இரக்கத்தின் நிமித்தம் எனக்குச் சகாயஞ் செய்து, என்னைச் சுகமாக்கியருளும். ஆனால் நான் இந்த அழுகையின் பள்ளத்தாக்கிலும் நிற்பாக்கியத்திலுஞ் சீவிப்பதைப்பார்க்க இந்த வியாதியினால் மரிப்பது எனக்குப் பிரயோசனமாயிருந்தால், பரம பிதாவே, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. நான் எப்போதும் நன்மையாயிருக்கிற உம்முடைய சித்தத்துக்கு என்னை முற்றிலுங் கையளிக்கக் கிருபை செய்தருளும். என் மரணம்மட்டும் என்னைக் கிறிஸ்தமான உத்தம விசுவாசத்திலும் மெய்யான அறிவிலும் உறுதியாய்க் காப்பாற்றியருளும். நான் உம்மை விட்டுப்பிரிக்கப்பட ஒட்டாமல், என் ஆத்துமாவை உம்முடைய நேச குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு உமது நித்திய இராச்சியத்தில் ஏற்றுக்கொண்டருளும், சுவாமி. ஆமேன்.

---

## 6.

### நோயாளி தீன் திடவிசுவாசமுள்ளவனாகி, பாக்கியமான மரணமடையச் செய்யுஞ் செபம்.

சர்வத்துக்கும் வல்ல நித்திய பராபரனே, தேவரீர் மனவுருக்கமும் இரக்கமும் நீண்ட சாந்தமும் மகா கிருபையுமுள்ளவரும், அக்கிரமத்தையும் பாவத்தை

யும் மன்னிக்கிறவருமாயிருக்கிறீர். நீர் என் பாவங்களை எல்லாங் கிருபையாய் மன்னித்து, எனக்கு நேரிடும் எல்லாச் சோதனையிலும் என் ஆத்துமத்தைப் பலப்படுத்தியருள, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். கர்த்தாவே, நீர் எனக்குத் துணையாக வந்து, என் விசுவாசம் தளராமலும், என் நம்பிக்கை குறையாமலும், என் சிநேகம் குளிர்ந்துபோகாமலும், என் பலவீனம் மரண பயங்கரத்தால் அமிழ்ந்திப்போகாமலுமிருக்கும்படி எனக்கு உதவி செய்தருளும். என் சீவ ஓட்டம் முடியும்போது, நான் சிமெயோனைப்போல்: ஆண்டவரே, இப்போது உமது அடியானைச் சமாதானத்துடன் அனுப்பிவிடுகிறீர்; ஏனெனில் தேவரீர் சகல சனசதனங்களுடைய முகத்துக்குமுன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டதென்று சொல்ல, எனக்குக் கிருபை செய்தருளும். நான் இந்த இரட்சகரை விசுவாசிக்கிறேன், இவரையே நம்பியிருக்கிறேன். எனக்குத் துணையும் பெலனுமாயிருக்கிற கர்த்தாவே, என்னை வெட்கப்பட ஒட்டாதேயும். தேவரீர் என்னைக் கிருபாகடாட்சமாக நோக்கிப்பார்த்து, தமது பாடுகளினாலும் மரணத்தினாலும் எனக்கு நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்த என் இரட்சகரும் உம்முடைய நேச குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு உம்முடைய பிதாவடைவான தயவை எனக்குக் காண்பித்தருளும், சுவாமி. ஆமேன்.

---

### 7.

### நோயாளி தான் மரண அவஸ்தையிலிருக்கும்போது செய்யுஞ் செபம்.

a.

அன்புள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றாமல், கோபாக்கினைக்குப் பாத்திரனாயிருந்து, மரணத்துக்கும் நரகத்துக்கும் அஞ்சுகிறேன். ஆனால் தேவரீர் லோக இரட்சிப்புக்காகச் செய்து முடித்த கிரியைகளை எல்லாம் எனக்குப் பலிக்கப்பண்ணினீரென்பதைச் சுவிசேஷத்தைக்கொண்டு அறிந்து நிச்சயித்திருக்கிறேன். நீர் பொய் பேசுகிறவர் அல்ல, உம்முடைய வார்த்தைப்பாடுகள் யாவையும் நிச்சயமாய் நிறைவேற்றுவீர். இதை எனக்கு உறுதிப்படுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றேன். அதின்பேரிலே நம்பிக்கைவைக்கிறேன். என் இரட்சகராகிய உமக்குச் சித்தமானால், நான் சந்தோஷமாய் மரிப்பேன். தேவரீர் எனக்குச் சீவன், சாவு எனக்கு ஆதாயம். ஆமேன்.

---



b.

சீவனிலும் மரணத்திலும் என் ஒன்றான ஆறுதலாயிருக்கிற சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, பெரியதாயிருக்கும் என் சஞ்சலத்தையும் வருத்தத்தையும் பார்த்து, உமது கிருபையுள்ள வார்த்தைப்பாட்டின்படி என்னை இரட்சித்தருளும். பெலவீனனாகிய நான் என் ஞான சத்துருக்களுக்கு விரோதமாகப் பராக்கிரமமாய்ப் போராடி, விசுவாசத் தைரியத்தினால் மரண பயங்கரத்தை மேற்கொள்ளும்படி எனக்குத் துணைசெய்தருளும். என் விசுவாசக் கண்கள் எப்போதுந் திறந்தபடியிருந்து உம்மைப் பார்க்கப் பண்ணியருளும். என் பேச்சு விழுந்துபோகும்போது, என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சமாதானத்தில் என் இருதயத்தை முத்திரித்துக் காப்பாற்றி, என் உள்ளத்தை அவருடைய பலத்தால் பலப்படுத்தியருளும். நான் மாளும் போது, தேவரீர் உமது மோட்சத்தின் ருசியை எனக்குத் தந்து, என்னை மரணப்பள்ளத்தாக்கின் வழியாய் உமது நித்திய பரதீசிலே பிரவேசிக்கப்பண்ணவும், நான் அங்கே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லாரோடும் உம்மை என்றென்றைக்கும் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கவும் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

### 8.

### மரண அவஸ்தையிலிருக்கிற நோயாளிக்காகச் செய்யுஞ் செபம்.

a.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் மாத்திரம் மோட்சத்தின் வாசலாயிருக்கிறீர். உம்மால் உட்பிரவேசிக்கிறவனெல்லாம் இரட்சிக்கப்படுவான். நீர் மரண அவஸ்தையிலிருக்கிற இவனுக்கு (இவளுக்கு) உமது மோட்ச வாசலைத் திறந்து, இவனை (இவளை) எல்லாப் பாவப் பயங்கரங்களுக்கும், பிசாசின் வல்லமைக்கும் மோசதந்திரங்களுக்கும் விலக்கி இரட்சிக்க வேண்டுமென்று முழு மனதோடும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். கர்த்தாவே, இவன் (இவள்) இருண்ட பள்ளத்தாக்கிலும் மரண நிழலிலுந் தப்பிக் கெட்டுப்போகாதபடி இவனுக்கு (இவளுக்கு)த் துணைசெய்து, உண்மையுள்ள மேய்ப்பராகக் காணாமல்போன ஆடாகிய இந்த ஊழியக்காரனை (காரியை) ஏற்றுக்கொண்டு, இவனுடைய (இவளுடைய) இருதயத்தில் உமது வசனத்தைப் பிரகாசிக்கச் செய்து, இந்த அவஸ்தையில் இவனோ (இவளோ)டிருந்து, உம்முடைய இரட்

சிப்பை இவனுக்கு (இவளுக்கு)க் காண்பித்தருளும். இவன் (இவள்) மெய் விசுவாசத்தின் ஆறுதலைவிட்டுவிடாதிருக்கச் செய்து, இவன் (இவள்) ஆத்துமத்தை எந்தவித வாதையும் அணுகாதிருக்க அதை உமது கைகளில் ஏற்றுக்கொண்டு, கூட்டையாய்க் காத்து, இவனுக்கு (இவளுக்கு) நித்திய சீவனையுங் கொடுத்தருளும், சுவாமி. ஆமேன்.

---

ட.

எங்கள் பிதாவாகிய பராபரனே, உமது பிள்ளையான இவன் (இவள்) பரதேசமாகிய இவ்வுலகைவிட்டு, தன் வருத்தமான பிரயாணத்தைமுடிக்கும் பாக்கியமான காலம் வந்திருக்கிறது. இவன் (இவள்) தன் பிறந்தக தேசமாகிய மோட்ச ஊருக்குப் போகும் வழியில் தப்பிப்போகாமல், உம்மண்டையில் சேரப் பண்ணியருளும். இவன் (இவள்) ஆத்துமா இப்போது அழிவுள்ள சரீரமாகிய தன் வீட்டிலிருந்து புறப்படச் சமீபமாயிருக்கிறது. உமது பரிசுத்த தூதர் அதை ஏற்றுக்கொண்டு போய், ஆபிரகாமின் மடியில் விடக் கட்டளையிட்டருளும். இப்போது இவன் (இவள்) விசுவாசம் முடிவடையும். இவன் (இவள்) நித்திய பாக்கியத்திற்கென்று உம்மைத் தரிசிக்க, இவனை (இவளை) உமது மகிமையின் இராச்சியத்தில் பிரவேசிக்கப்பண்ணும். உண்மையுள்ள மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவே, உமது பிரிய ஆடாகிய இவனை (இவளை) இப்போது இந்த வனாந்தரத்திலிருந்து மகா இன்பமான உமது பரதீசில் உம்மண்டை சேர்த்துக்கொள்ளும். பரிசுத்த ஆவியாகிய பராபரனே, தேவரீர் நவமான பரிசுத்த சீவனுக்கென்று மறுபடியுஞ் செனிப்பித்திருக்கிற இந்த ஆத்துமாவை இப்போது நித்திய ஆறுதலால் ...யித்தேற்றித் திடப்படுத்தி, நித்திய சீவனுக்கென்று உயிர்ப்பித்தருளும். ஆமேன்.

---

9.

சாகச் சமீபமாயிருக்கிறவனை ஆசீர்வதித்தல்.

a.

பிரிய ஆத்துமாவே, தம்முடைய சாயலின்படி உன்னை உண்டாக்கின பிதாவாகிய பராபரன் உன்னை ஆசீர்வதிக்கக் கடவார். விலையேறப்பெற்ற தமது





திரு இரத்தத்தால் உன்னை மீட்டுக்கொண்ட குமாரனாகிய பராபரன் உன்னை ஆசீர்வதிக்கக் கடவார். உன்னைத் தமது தெய்வாலயமாக்கிக்கொண்டு பரிசுத்தப்படுத்தின பரிசுத்த ஆவியாகிய பராபரன் உன்னை ஆசீர்வதிக்கக் கடவார். கிருபையும் இரக்கமுமுள்ள பராபரன் இயேசு கிறிஸ்துவின் அகோரப்பாடுகள் மரணத்தின் பெலத்தினாலும் தமது பரிசுத்த தூதர்களின் ஊழியத்தினாலும் உன்னை உன் பிறந்தக தேசத்திற்குக் கொண்டுபோய, ஆபிரகாமின் மடியில் வைத்து, தெரிந்துகொள்ளப்பட்ட சகல பரிசுத்தவான்களோடும் விவரிப்புக்கு எட்டாத பாக்கியத்தையும் மகிமையையும் அனுபவிக்கச் செய்வாராக. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன்னைக் காப்பாற்றும்படிக்கு உன்னண்டையிலும், உன்னை உயிர்ப்பிக்கும்படிக்கு உனக்குள்ளும், உன்னை உன் நித்திய பிறந்தக தேசத்திற்கு வழி நடத்தும்படிக்கு உனக்கு முன்பாகவும், உன்னைத் தாங்கும்படிக்கு உன்னைச் சுற்றிலும், உன்னை நித்திய ஆசீர்வாதத்தால் ஆசீர்வதிக்கும்படிக்கு உனக்கு மேலாகவும் இருக்கக் கடவார். இவர் பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார். ஆமேன்.

---

b.

பிரியமான கிறிஸ்தவனே (ளே), நீ கர்த்தரின் நாமத்தில் போவாயாக. கர்த்தர் தரித்திரனாகிய லாசருவின் ஆத்துமத்துக்குச் செய்ததுபோல் உன் ஆத்துமாவையுந் தமது பரிசுத்த தூதரைக்கொண்டு உன் நித்திய பிறந்தக தேசத்திற்கு வழிநடத்துவாராக. கடைசிநாளிலோ உன் சரீரத்திற்கும் பாக்கியமான உயிர்த்தெழுதலை அளிக்கக் கடவார். ஆமேன்.

ப்பா

# X.

# SEPULTURA.

# அடக்கம்பண்ணுதலின் முறைமை.

கவனிப்பு. க. இந்த முறைமையின் முதலாம் பங்கு தெய்வாலயத்திலாவது துக்கவீட்டிலாவது செய்யப்படத் தக்கது. இவ்விரண்டு ஸ்தலங்களிலும் அது செய்யப்படாதபடிக்கு விசேஷித்த தடையிருந்தால், பிரேதக் குழியருகில் செய்யப்பட வேண்டும். இரண்டாம் பங்கு பிரேதக் குழியருகில் மாத்திரஞ் செய்யப்படத் தக்கது.

கவனிப்பு. உ. பிரேதத்தைக் கொண்டுவருகிற சபையார் துக்க வீட்டிலிருந்து தெய்வாலயத்திற்கும், அதிலிருந்து கல்லறைத் தோட்டத்திற்கும், அல்லது துக்க வீட்டிலிருந்து நேராய்க் கல்லறைத் தோட்டத்துக்கும் போகும்போது, மரணத்தின்பேரிலும் உயிர்த்தெழுதலின் பேரிலுமுள்ள ஞானப்பாட்டுகளைப் பாடுவது மிகவுந் தகுதியாயிருக்கும்.

## 1.

## துக்கவீட்டில் அல்லது கோவிலில் செய்யும் முறைமை.

இதினபின் சொல்லப்படும் வாக்கியங்களிலொன்றை குரு ஓதுவார்; (உபதேசி அடக்கம் பண்ணினால் அதை வாசிப்பார்;) சபையார் அதற்கருகிலுள்ள வாக்கியத்தைப் பாடுவார்கள், அல்லது சொல்லுவார்கள். இந்த வாக்கியங்களில் 1. 2. பிள்ளைகளுக்கும், 3-6. வளர்ந்தவர்களுக்கும், 7. 8. வயதுசென்றவர்களுக்கும் கையாடலாம்.

குரு: கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்.

சபை: கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது.



2.

குரு: எல்லா மாமிசமும் புல்லைப்போலும் அதின் மேன்மை எல்லாம் வெளியின் பூவைப்போலும் இருக்கிறது.

சபை: புல் உலர்ந்து, பூ உதிரும்; நம்து பராபரனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்.

3.

குரு: ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல்,

சபை: கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

4.

குரு: பாவத்தின் சம்பளம் மரணம்.

சபை: பராபரனுடைய கிருபை வரமோவெனில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வரும் நித்திய சீவன்.

5.

குரு: மரணமே, உன் கூர் எங்கே; பாதாளமே, உன் செயம் எங்கே.

சபை: இயேசு கிறிஸ்துவினாலே நமக்குச் செயங்கொடுத்த பராபரனுக்கு இஸ்தோத்திரம்.

6.

குரு: நானே உயிர்த்தெழுதலுஞ் சீவனுமாயிருக்கிறேன்.

சபை: என்பேரில் விசுவாசிக்கிறவன் மரித்தும், பிழைப்பான்.

7.

குரு: கிறிஸ்து எனக்குச் சீவன்.

சபை: சாவு எனக்கு ஆதாயம்.

8.

குரு: ஆண்டவரே, இப்போது உமது அடியானைச் சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறீர்.

சபை: ஏனெனில் உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டது.

குரு ஓதுவது அல்லது சொல்வது:

ஜீவனின் நடுவிலே சாவினால் சூழப்பட்டிருக்கிறோம். ஆண்டவரே, நாங்கள் எங்கள் பாவங்களால் கோபப்படுத்தின தேவரீரிடத்தில் அல்லாமல் ஆரிடத்தில் சகாயந் தேடுவோம். பரிசுத்த பரிசுத்த பரிசுத்தரே, வல்லமையுள்ள தேவனும் இரக்கமுள்ள இரட்சகருமாகிய அநாதி பராபரனே, நாங்கள் மரணக்கொடுமையில் அழிய வொட்டாதேயும்.

மரணத்தின் நடுவிலே நரக நடுக்கத்தால் பிடிபடுகிறோம். ஆண்டவரே, எங்கள் இருதயங்களின் அந்தரங்கங்களை எல்லாம் அறிந்து நியாயந்தீர்க்கிற தேவரீரிடத்தில் அல்லாமல் ஆரிடத்தில் இரக்கந் தேடுவோம். பரிசுத்த பரிசுத்த பரிசுத்தரே, வல்லமையுள்ள தேவனும் இரக்கமுள்ள இரட்சகருமாகிய அநாதி பராபரனே, நாங்கள் நித்திய மரணத்தில் கெட்டுப்போக வொட்டாதேயும்.

நரக அச்சத்தின் நடுவிலே எங்கள் பாவங்களால் நெருக்கப்படுகிறோம். ஆண்டவரே, எங்களுக்காக இரத்தஞ் சிந்தி மீட்புண்டாக்கின தேவரீரிடத்தில் அல்லாமல் ஆரிடத்தில் ஒதுக்கந் தேடுவோம். பரிசுத்த பரிசுத்த பரிசுத்தரே, வல்லமையுள்ள தேவனும் இரக்கமுள்ள இரட்சகருமாகிய அநாதி பராபரனே, நாங்கள் மெய் விசுவாசத்தின் ஆறுதலை விட்டுப் பின்வாங்க வொட்டாதேயும்.

சபை பாடுவது:

கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கிரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கிரங்கும்.

(மேற்சொன்ன துயர செபத்திற்குப் பதிலாகக் குரு சபையை வாழ்த்தி ஓதலாம்:

கர்த்தரானவர் உங்களோடிருக்கக் கடவார்.

சபை: அவர் உமதாவியோடும் இருக்கக் கடவார்.



குரு:

பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உயிர்த்தெழுதலுஞ் ஜீவனுமாயிருந்து, மரணத்தைச் செயித்து, எங்களுக்கு நித்திய நீதியையும் பரிசுத்தத்தையும் மோட்சானந்தத்தையுஞ் சம்பாதித்ததற்காக உமக்கு இஸ்தோத்திரம். மரித்தோரிலிருந்து மகிமையோடெழுந்தருளின தேவரீர் எங்களுக்குப் பாக்கியமான உயிர்த்தெழுதலை அளித்து, எங்கள் பிறந்தக தேசமாகிய பரம பரதீசில் உம்மண்டை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம், சுவாமி.

சபை: ஆமேன்.)

குரு சபையை நோக்கிச் சொல்வது:

நமது இருதயங்களை உயர்த்தி, நமது கிறிஸ்தமான விசுவாசத்தையும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும் அறிக்கையிடுவோமாக.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து, கன்னிமரியாளிடத்தினின்று பிறந்து, பொந்தியுப்பிலாத்து என்கிறவன் கீழ்ப்பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்தடக்கப்பட்டார். பாதாளங்களில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். பரமண்டலங்களுக்கேறி, சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலிருக்கிறார். அவ்விடத்திலிருந்து ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், மாமிச உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

*சபையார்: என் ஜீவன் கிறிஸ்துவே என்கிற ஞானப்பாட்டை, அல்லது வேறொரு ஞானப்பாட்டைப் பாடினபின், குரு சுருக்கமாய்ப் பிரசங்கிப்பார். அல்லது பின்னாக வரும் புத்தி பிரசங்கங்களிலொன்று வாசிக்கப்படும்.*

விரகறியாதவர்களின் அடக்கத்தில் சொல்லும் புத்தி பிரசங்கம்.

பிரிய சகோதரரே, நம்மைப்போல் நம்முடைய பிள்ளைகளும் பாடும் சாவுமாகிய பாவத்தின் சம்பளத்தை அடைகிறார்களென்பது வேதத்தினால் விளங்குகிறதுமல்லாமல், பிரத்தியட்சமாயும் இருக்கிறது. நாம் அவர்கள் நிர்ப்பாக்கியத்தை நினைத்து, அவர்கள் மரணத்தினால் துக்கப்பட்டு அழுகிறோம். ஆகிலும் அவர்கள் யாதொரு புண்ணியத்தினாலும் அல்ல, ஞானஸ்நானத்தில் இலவசமான கிருபையால் பெற்றுக்கொண்ட நித்திய சீவனில் அநுபவிக்கப் போகிற அவர்களின் இரட்சிப்பையும் நினைத்துக்கொள்ளுகிறோம். நாம் வான இராச்சியம் அவர்களுடையதாயிருக்கிறதென்பதை அறிந்து, திட நம்பிக்கையோடும் இஸ்தோத்திரத்தோடும் விசுவாசித்து, நமது துக்கத்தை நீக்கி ஆறுதல் அடைகிறோம். அவர்கள் தங்கள் குறுகின ஓட்டத்திற்குப் பின் நித்திய சீவனின் மகிமையான கிரீடத்தையும், சுருக்கப் போராட்டத்திற்குப் பின் முடியாத செயத்தையும் பெற்றுக்கொண்டார்கள். பள்ளிக்கூடமில்லாமல் நித்திய ஞானத்திற்கும், பிரசங்கமில்லாமல் பராபரனுடைய மகிமையைத் தரிசிக்குதலுக்கும், கொஞ்சத் துன்பங்களின் வழியாய் நித்திய சந்தோஷங்களுக்கும் பங்காளராகப் பராபரனண்டை போயிருக்கிறார்கள். அவர்கள் சரீரமும் நம்பிக்கையிலே படுத்திருந்து, கடைசிநாளில் சீவனுக்கென்று எழுந்திருக்கும். ஆதலால் அவர்கள் சகல மோசங்களுக்கும் நீங்கலாகப் பத்திரமாய்க் காக்கப்படுகிற பிள்ளைகளாயிருந்து இரட்சிப்பு அடைவோமென்கிற சந்தேகத்துக்கு நீங்கி, பூமியிலுள்ள பிள்ளைகளைப் பார்க்கிலுந் தேவ பராமரிப்புக்குள்ளாகி, கவலையற்றவர்களாயிருக்கிறார்கள். ஆம், அநேக பிரயாசங்களின் வழியாய் நித்திய சீவனுக்குப் போக வேண்டிய நம்மெல்லாரையும் பார்க்க அவர்களே பாக்கியவான்கள். ஆகையால் நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போலானாலொழிய, வான இராச்சியத்துக்குள் பிரவேசிக்க மாட்டீர்களென்று கர்த்தர் எப்படி சொன்னாரோ, அப்படி நம்மில் ஒவ்வொருவனும்: என் முடிவு அவர்கள் முடிவைப்போல் இருக்கக் கடவதென்று சொல்லுவானாக.



மன்றாடுவோமாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல், பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல், நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும். எங்களைச் சோதனைக்குட்பிரவேசிக்கப் பண்ணாதிரும்; ஆனாலோ தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும். அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமேன்.

b.

விரகறிந்தவர்களின் அடக்கத்தில் சொல்லும் புத்தி பிரசங்கம்.

பிரியமானவர்களே, நிலைநிற்கிற பட்டணம் நமக்கு இங்கே இல்லை என்றும், நாம் ஒவ்வொரு நிமிஷத்திலும் மரணத்திற்கு எதிர்பார்த்திருக்க வேண்டுமென்றும் அனேகத் திருஷ்டாந்தங்களினாலே நினைப்பூட்டப்படுகிறோம். ஆனால் பராபரன் நம்மை எந்நேரத்தில் அழைக்கிறாரோ, அந்நேரத்தில் நாம் அவருக்குப் பயப்படுகிற பயத்திலும் மெய் விசுவாசத்திலும் உத்தம சிநேகத்திலுங் கண்டுபிடிக்கப்படுவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருந்து, பாவங்களை விட்டுவிட்டு, பரிசுத்தமாகுதலையல்லாமல் ஒருவனுங் கர்த்தரைத் தரிசிக்கக் கூடாதபடியால், இதைப் பின் தொடர வேண்டும். ஆகையால் நாம் பராபரனுக்குப் பயப்படுகிற பயத்தை விட்டு, பாவத்துக்குட்படப் [illegible] சத்துருவினாலும், நமது மாமிசத்தினாலும் இடைவிடாமல் இழுக்கப்படுகிறபடியால், பராபரன் தம்முடைய ஆவியினாலே நம்மைப் பிரகாசிப்பித்து, சீர்பொருந்தப் பண்ணி, திடத்தி, அஸ்திபாரப்படுத்த வேண்டுமென்று கருத்தாய்ச் செபம்பண்ணுவது மிகவும் அவசரமாயிருக்கிறது. நாம் புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் மணவாளனைப் புறக்கணித்ததுபோல் செய்யாமல், தீவட்டிகளோடுகூட எண்ணெயையுங் கொண்டுபோன புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளைப்போல் கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு நல்மனச்சாட்சியோடு காத்திருந்து, மெய் விசுவாசத்தையும் நல்மனச்சாட்சியையும் உடையவர்களாய் அவரைச் சந்தித்து, அவரால் நித்திய சீவனைப் பெற்றுக்கொள்வதற்குச் செபம்பண்ணுவோமாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, மு.

குரு கூறுவது:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருக்கக் கடவது.

நீயோ முடிவு வருமட்டும் போயிரு. ஏனெனில் நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய். ஆமேன்.

உ

# பிரேதக்குழியருகில் செய்யும் முறைமை.

சவம் பிரேதக்குழியருகில் சரியாய் வைக்கப்பட்டபின்

குரு சொல்வது:

சர்வத்திற்கும் வல்ல பராபரன் நமது பிரிய சகோதரனுடைய (சகோதரியுடைய, பிள்ளையினுடைய) ஆத்துமாவைத் தம்மிடத்திற்கு அழைத்துக்கொள்ளச் சித்தமானார். ஆகையால் நாம் இப்போது இவனுடைய (இவளுடைய, இதினுடைய) சரீரத்தை அடக்கஞ்செய்து, மண்ணோடு மண்ணையும் ஆளோடு ஆளையுஞ் சாம்பலோடே சாம்பலையும் வைத்து, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமக்கு எல்லாவற்றையுங் கீழ்ப்படுத்திக்கொள்ள வல்லமையான தம்முடைய பலத்தின்படியே நம்முடைய தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவாரென்கிற உறுதியும் திடமுமான நம்பிக்கையிலே இதை இந்த உத்தான தோட்டத்தில் உயிர்த்தெழுதலுக்கென்று புதைக்கக் கடவோம்.

349



அப்போது சவம் குழியில் வைக்கப்படும். அது வைக்கப்பட்டபின்பு குரு அதின்பேரில் மூன்று விசை மண் போடுகையில் சொல்வது:

மண்ணில் எடுக்கப்பட்டாய்.
மண்ணோடு மண்ணாய்ப் போவாய்.
மண்ணிலிருந்து உயிரோடெழுந்திருப்பாய்.

உபதேசியுஞ் சபையுஞ் சொல்வது:

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

குரு சொல்வது:

பரிசுத்த பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதல் நிருபம் நாலாம் அதிகாரம் பதின்மூன்றும் வசனந் தொடங்கி, பதினெட்டாம் வசனம் வரையில் எழுதியிருக்கிற நிருப வாக்கியமாவது:

சகோதரரே, நித்திரையடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்ற மற்றவர்களைப்போல் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. ஏனென்றால் இயேசு மரித்துத் திரும்ப எழுந்திருந்ததை நாம் விசுவாசிக்கக்கொள்ள, இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் பராபரன் அவரோடுகூட அந்தப் பிரகாரமாகக் கொண்டுபோவார். ஏனெனில் கர்த்தருடைய வருகையில் உயிரோடே மீதியான நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை என்று கர்த்தருடைய வார்த்தையாய் உங்களுக்குச் சொல்லுகிறோம். அதேனென்றால் கர்த்தர்தாமே ஆர்ப்பரிப்போடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் பராபரனுடைய எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்குவார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முந்தி எழுந்திருப்பார்கள். பிற்பாடு உயிரோடே மீதியான நாம் அவர்களோடேகூட ஏகமாய்க் கர்த்தருக்கு ஆகாசத்தில் எதிர்கொண்டுபோக மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்படியே எப்போதுங் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால் உங்களை ஒருவருக்கொருவர் இந்த வார்த்தைகளால் தேற்றுங்கள்.

## பிரார்த்தித்துக்கொள்ளக் கடவோம்.

சர்வத்திற்கும் வல்ல அநாதி பராபரனே, பரமபிதாவே, கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த எங்களுடையவர்களின் நிமித்தம் நாங்கள் அதிகத் துக்கப்பட வேண்டியதில்லை என்று தேவரீர் பரிசுத்த பவுல் அப்போஸ்தலனைக்கொண்டு எங்களுக்குப் போதித்து, எங்களை ஆற்றித்தேற்றினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உம்முடைய குமாரனாகிய எங்கள் நாதர் இயேசு கிறிஸ்து திரும்ப வருகையில் மரித்த எல்லா விசுவாசிகளோடுங்கூட நாங்களும் நித்திய மோட்சானந்தத்திலே தப்பாமல் சேர கர்த்தராகிய அவரைக்கொண்டு எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்பேரில் கிருபையாயிருக்கக் கடவார்.

கர்த்தரானவர் தம்முடைய திருமுகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் (†) சமாதானங் கட்டளையிடக் கடவார்.

உபதேசியுஞ் சபையுஞ் சொல்வது: ஆமேன்.

(உபதேசி அடக்கம்பண்ணினால், அவன் சொல்லும் ஆசீர்வாதம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் பிதாவாகிய பராபரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் நம்மனைவரோடுங் கூட இருக்கக் கடவது. ஆமேன்.)

சபை பாடுவது:

க. இப்போதுத்தான பூமியில்
விதைத்தபின் நாம்-போகையில்:
இவ்வண்ணமாகச் சாகிறோம்
என்றெண்ணமாகக் கடவோம்.

உ. சாவில் சகாயர் ஒருவர்;
பேய் பாவம் சாபம் வென்றவர்.
அவர் விலா அடைக்கலம்.
அவருக்கென்றும் ஸ்தோத்திரம்.

Printed by Joh. Kabis, at the Evang. Luth. Mission Press. Tranquebar. 1878.